
# செம்பியன் தமிழவேள்

(வரலாற்றுப் புதினம்)



புலவர், பொறிஞர் சி. செந்தமிழ்ச்சேய்

# செம்பியன் தமிழவேள்

(வரலாற்றுப் புதினம்)

புலவர் - பொறிஞர்.

**சி. செந்தமிழ்ச்சேய்.,** இ.பொறி., இ.இல.

மின்வாரிய

தமிழார்வலர் தமிழ்ப்பணி அறக்கட்டளை,

கடலூர்.

## நூல் குறிப்பு

நூல் : செம்பியன் தமிழவேள்.
பொருள் : வரலாற்றுப் புதினம்.
ஆக்கியோன் : சி. செந்தமிழ்ச்சேய்.
முதற் பதிப்பு : 10.12.1997.

உரிமை : ஆசிரியருக்கு.
பக்கம் : 302 + xvi
தாள் : 13.7 சேசசாயி
எழுத்து : 11 புள்ளி.
**விலை : உருபா:**

**கிடைக்குமிடம் : 'சேயகம்'**
49, துரைசாமிநகர்,
கடலூர் - 607 001.

அமைப்பும் அச்சும்:
சபாநாயகம் அச்சகம்,
73-A, கீழ ரத வீதி,
சிதம்பரம் - 608 001. ✆ : 23040
யுனைடட் பைண்ட் கிராபிக்ஸ்,
101-D, ராயப்பேட்டை நெடுஞ்சாலை,
லஸ், மயிலாப்பூர்,
சென்னை - 600 004. ✆ : 4984693

## அணிந்துரை

தமிழ் இலக்கியப் புதிய வரலாற்றில் ஒரு புதுவரவாக "செம்பியன் தமிழவேள்" என்ற இந்த இனிய நூல் மலர்ந்துள்ளது. என் இனிய நண்பரும், மின் வாரிய மேற்பார்வைப் பொறியாளரும், கவிஞருமாகிய புலவர். பொறிஞர் திரு சி. செந்தமிழ்ச்சேய், பி.இ., பி.லிட்., அவர்கள் கற்பனையில் உருவான வரலாற்றுப் புதினம் இது.

இருபதாம் நூற்றாண்டு உரைநடை, கவிதையை வெற்றிகண்டு எழுச்சி பெற்ற புதுமைமிக்கது. இந்த நூற்றாண்டின் தொடக்கம் முதலே சிறுகதைகளும், புதினங்களும் ஏராளமாகத் தமிழிற்கு வளம் சேர்க்கத் தொடங்கின. பழைய சங்ககால அகப் புறத் தன்னுணர்ச்சிப் பாடல்கள் உரைநடை வடிவில் சிறுகதை களாயின. தொடர்நிலைச் செய்யுள்கள் புதினங்களாக உருக் கொண்டன. ஓரளவு தமிழ் கற்றாரும் படித்து மகிழச் சிறுகதைகளும், புதினங்களும் பாட்டை அமைத்தன. பண்டிதர்கள் மடியில் தவழ்ந்த தமிழ், பாமரர்கள் கையில் விழுந்தது. படிப்போர் தொகை பல்கியது. அறிவுத்தேட்டம் தமிழர்களைப் பற்றிக் கொண்டது.

வார, பருவ, மாத இதழ்கள் சிறுகதைகளையும், புதினங்களையும் வாரி வழங்கத் தொடங்கின. ஆங்கிலக் கல்விபெற்றவர்களால் தொடங்கப்பட்ட இந்தப்படைப்பு முயற்சி வரலாற்றுப் புதினங்கள் பிறந்த காலத்தில், தமிழ் மண்ணில் கால் ஊன்றியது. சேரர், சோழர், பாண்டியர், பல்லவர், நாயக்கர் வரலாற்றுச் சிறுசிறு நிகழ்வுகள் கற்பனைப் புனைவோடு வரலாற்றுப் புதினங்களாக மலர்ந்து தமிழ் மணம் பரப்பின. இந் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இத்தகைய வரலாற்றுப் புதினங் களில் திளைப்பதைத் தமிழகம் ஒரு சுகமாகக் கருதி மகிழ்ந்தது.

கல்கி, அகிலன், நா. பார்த்தசாரதி, சாண்டில்யன், செகசிற்பியன், கோவி. மணிசேகரன் முதலியோர் வரலாற்றுப் பின் புலத்தோடு, அமர காவியங்களாகிய பல வரலாற்றுப் புதினங்களை வழங்கினர். இதன்பின், புதினங்களில் உள்ளீடு மாறி, சமூக நிகழ்வுகளை மையமாக்கி மலர்ந்தன. இன்று, புதினங்களும், சிறுகதைகளும் தமிழ் மக்களால் இதழ்களில் புறந்தள்ளப்பட்டன.

*அரைப்பக்கக் கதைகளும், துணுக்குகளும் மட்டுமே தமிழர் ரசனையாகிவிட்ட அவலம், இலக்கிய வரலாற்றில் ஒரு தொய்வை உருவாக்கிவிட்டது.*

*இதழ்களின் வழி வாராது, தனித்துச் சிறுகதைத் தொகுதி களும், புதினங்களும் இன்றும் வெளியாகிக்கொண்டுள்ளன. ஆயின், அவற்றின் உள்ளீட்டில் ஒரு கம்பீரமோ, பெருந்தன்மையோ காணப்படவில்லை. இந்த வறுமையைத் தவிர்க்க வந்த நன்மருந்தாக இன்று செம்பியன் தமிழவேள் மலர்ந்து மணம்பரப்ப உள்ளது.*

*பாண்டியர்களும், பல்லவர்களும் இடையறாது நிகழ்த்திய போர்களால் பழையாறைப் பகுதியில் ஒடுங்கிக் கிடந்த சோழர்கள் புதிய எழுச்சிப் பெற்றனர்.*

*வரலாற்று ஆசிரியர் திரு கே.ஏ. நீலகண்ட சாத்திரி தமது சோழர் வரலாறு என்ற ஆங்கில நூலில்,*

*''தெள்ளாற்றுப் போரில் தோற்ற ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லவன், குடமுக்கில் பல்லவனை எதிர்த்தான். சில இடங்களில் பல்லவன் வென்றான்; சில இடங்களில் பாண்டியன் வென்றான்.*

*''இறுதியில் கி.பி. 880இல் ஸ்ரீமாறன் இரண்டாம் வரகுணன் திருப்புறம்பியத்தில் பல்லவனை எதிர்த்தான். நிருபதுங்க வர்மனுக்குப் பதிலாக அவன் மகனான அபராசிதவர்மன் தன் பாட்டனான கங்க அரசன் பிருதிவீபதியுடன் போருக்கு வந்தான். விசயாலய சோழன் மகனான ஆதித்த சோழன் பல்லவனுக்கு உதவி செய்தான். போர் மிகக் கடுமையாக நடைபெற்றது. இரண்டாம் வரகுணன் முற்றிலும் முறியடிக்கப்பட்டான். இத்தோல்வியால் பாண்டியர் பலம் நிலை தளர்ந்தது. ஆதித்த சோழன் பல்லவனது பெருமதிப்புக்குரிய வனானான். சில ஆண்டுகளுக்குப் பிறகு ஆதித்த சோழன் அபராசிதவர்மனைக் கொன்று பல்லவ நாட்டைக் கைப்பற்றிச் சோழப் பேரரசனானான். ''*

*- (கே.ஏ. நீலகண்டசாத்திரி சோழன் வரலாறு,*
*இரண்டாம் பதிப்பு, பக்கம் - 113)*

இந்தப் போர்மேகம் சூழ்ந்த காலப் பகுதியில் "செம்பியன் தமிழவேள்" புதினத்திற்கான களத்தை நூலாசிரியர் தேர்வு செய்கிறார். அவரது கதைக்கருவுக்கு வடிவம் தர உதவியது ஒரு சிறு கல்வெட்டுச்செய்தி.

"தொண்டைநாடு பரவின சோழன் பல்யானைக் கோக்கண்டனாயின இராசகேசரிவதனனாலும், சேரமான் கோத்தாணுரவியாலும் தவிசும், சாமரையும் சிவிகையும், திமிலையும், கோயிலும், போனகமும், காளமும், களிற்று நிறையும், செம்பியன் தமிழவேள் என்னும் குலப்பெயரும் பெற்ற விக்கியண்ணன் தேவியான கடம்பமாதேவி திருநெய்த்தானத்து மாதேவர்க்கு ஒரு நந்தாவிளக்கினுக்குக் கொடுத்த ஆடு நூறு"

(தென் இந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 3, எண் 89)

இக்கல்வெட்டுத் தந்த உளற்றத்தால் விக்கியண்ணன் கதைத் தலைவனாக உருக்கொண்டுள்ளான். அவன் பெற்ற குலப்பெயர் புதினத்தின் தலைப்பாக நிலை கொண்டது.

இந்தப் புதினத்தின் கதை மாந்தரில் பலர் கல்வெட்டுகளில் இடம்பெற்ற வரலாற்று மாந்தர்கள். ஒரு சிறு கல்வெட்டு, ஆசிரியரின் சிந்தனையைப் பெரிதும் ஆட்கொண்டு ஒரு வரலாற்றுப் புதினமாக மலரச் செய்துள்ளது.

ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்குமுன், நூலாசிரியரும் நானும் கும்பகோணத்தை அடுத்த திருப்புறம்பியத்திற்கு நேரில் சென்று, அங்கே உள்ள கங்கஅரசன் பிருதிவிபதியின் நடுகல்லையும், பிற வரலாற்றுச் சின்னங்களையும் நேரில் கண்டு வந்தோம். அன்று தொடங்கி நூலாசிரியரால் தரவுகள் திரட்டப்பட்டு இவ்வழகிய வரலாற்றுப் புதினம் உருக்கொண்டு எழுந்துள்ளது.

வரலாற்றுப் புதினங்களில் நம்மோடு வாழ்பவர்களாகக் கதை மாந்தரைப் புனைவது என்பது ஒரு அரியகலை. அதனை நூலாசிரியர் திறம்படக் கையாண்டுள்ளார். விக்கியண்ணன் என்னும் பெருவீரனும், கடம்பமாதேவி என்னும் எழிலரசியும் நம்

நெஞ்சில் நீங்கா இடம் பெற்று நிற்கின்றனர். சிறுசிறு பாத்திரப் புனைவிலும்கூட ஆசிரியர் காட்டியிருக்கும் கைவண்ணம் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

நல்ல தமிழில் இப்புதினம் எழுதப்பட்டுள்ளது. அது ஆசிரியரின் தமிழ்க் கல்வியால் விளைந்த செம்மாப்பு. பாத்திரங்களுக்கு இடையேயான உரையாடல்களில் ஆசிரியரின் திறம் வியப்பூட்டுகிறது. தமிழினம் மீது ஆசிரியர் கொண்ட பற்றுறுதியும் தமிழ்மீது கொண்ட தணியாத காதலும் தொடும் இடங்களில் எல்லாம் தேன் பிலிற்றுகின்றன. வீரம், காதல், அச்சம், பெருமிதம் போன்ற சுவைகள் நன்கு வெளிக்கொணர்ந்து இனங் காட்டப்பட்டுள்ளன. புதினத்தின் நிறைவுப் பகுதியில் நூலாசிரியரின் எண்ணங்கள் இலைமறை காயாக இனங்காட்டப்பட்டுள்ளன.

தமிழர்கள் இலக்கியத்தாகம் என்றும் வற்றாதது. வரலாற்றுப் புதினங்கள் மிகுந்த உணர்வுடன் எழுதப்படுபவை. தமிழுக்கு அழகும், பெருமையும் சேர்க்கும் ஒரு அழகிய மூலதனமாகவே செம்பியன் தமிழவேளை நான் நெஞ்சார இனங்கண்டு போற்றுகின்றேன். காலம் இந்த வரலாற்றுப் பெட்டகத்துக்கு உரிய இடத்தை நிச்சயம் வழங்கும் என்று திடமாக நம்புகிறேன்.

செம்பியன் தமிழவேள் என்ற இந்த அரிய வரலாற்றுப் புதினத்தைத் தமிழுக்கு வழங்கி, இலக்கிய வட்டத்தில் தனக்கென்று ஒரு சிம்மாசனம் அமைத்துக் கொண்ட நண்பர் திரு. செந்தமிழ்ச்சேய் அவர்களுக்கு என் பாராட்டுகள். தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் சார்பாக நல்வாழ்த்துகள்.

இவ்வரிய கலைப் பெட்டகத்தைத் தமிழகம் ஏற்றுப் போற்றும் என்பது ஒரு தலை.

15.11.97, **முனைவர். இரா. செல்வக்கணபதி.**

மயிலாடுதுறை - 609 001.

# ஆய்வுரை

தமிழ்நாட்டின் வரலாற்றைக் கழக இலக்கியங்கள் மூலம் அறியமுடிகிறது. அவை தமிழ் மண்ணில் நடந்த போர்களைப் பற்றியும் கூறுகின்றன. தமிழ் மண்ணில் நடந்த போர்கள் - தமிழ்நாட்டின் வரலாற்று மாற்றம், பண்பாட்டு மாற்றம், அரசியல் மாற்றங்களுக்கு வழி கோலியதை உணர்த்துகின்றன.

கி.பி. 9ஆம் நூற்றாண்டில் விசயாலய சோழன் தன் காலத்திற்கு முன்பிருந்த சோழராட்சியைத் தமிழ் மண்ணில் கால் ஊன்றிட தொண்ணூற்றாறு விழுப்புண்களைத் தன் மார்பில் பெற்றான். அவன் காலத்தில் தஞ்சையைத் தலைநகராகக் கொண்ட சோழராட்சி (கி.பி 848-881) மீண்டும் உருவாயிற்று. இவன் மகன் முதலாம் ஆதித்தன். தந்தையின் காலத்திலேயே பட்டம் சூட்டிக் கொண்டான். இதற்குக் காரணம் விசயாலயனின் முதுமையே. முதல் ஆதித்தனின் காலம் கி.பி. 871-907 ஆகும். முதலாம் ஆதித்தன் காலத்தில் சோழர் ஆட்சி தொண்டை மண்டலம்வரைப் பரவியிருந்தது.

சோழநாட்டில் திருவையாற்றுக்கு அருகில் உள்ளது திருநெய்த்தானம் என்ற ஊர். இவ்வூரைத் தில்லைத்தானம் எனவும் குறிப்பிடுவர். ‘சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி’ என்ற புறநானூற்றுப் (10) பாடல் வரி சோழர் குடியினர் பண்டுதொட்டு இப்பகுதியில் வாழ்ந்ததைத் தெரிவிக்கிறது.

இந்தத் திருநெய்தானத்துச் (திருநெய்தலங்கானம்) சிவன் கோயில் கல்வெட்டு (தெ.க. தொகுதி: III - எண். 89) ஆசிரியரின் சிந்தனைக்கு - கருவாகி - கருவளர்த்துச் ‘செம்பியன் தமிழவேள்’ என்ற புதினமாக உருவாயிற்று. இதுபோன்ற சிந்தனைகள் இந்த மண்ணின் வரலாற்று மீது வளர்ந்தால் தமிழ் மண்ணின் சிறப்பை உணர்வோம். இந்தப் புதினம் இதற்கான பாதையை அமைத்துக் கொடுத்துள்ளது.

திருநெய்தானத்துக் ‘கல்வெட்டில் இறுதிவரி ‘ஒரு நந்தா விளக்கினுக்கு கொடுத்த ஆடுநூறு’ என்று உள்ளது. இந்த வரியின்

செய்தியை மேலும் ஆராயப்படும்போது செம்பியன் தமிழவேள் என்ற சிறப்புப் பெயருக்குரிய விக்கியண்ணன் என்பானைப்பற்றிய தெளிவான வரலாற்றை உணரமுடியும். ஆசிரியர் விக்கியண்ணனின் தனிச்சிறப்பை இப்புதினத்தில் தன் தனித்தமிழ் நடையின் மூலம் உணர்த்தி உள்ளார்.

திருப்புறம்பியத்தில் நடந்த போர் சோழராட்சிக்கு வலிமையைச் சேர்த்தது. இதற்கு விக்கியண்ணனின் உத்தியும், போராற்றலும் என்பதைக் கதையின் ஊடே விளக்கிச் சொல்லும் பாங்கு வியப்பை அளிக்கிறது. இந்தத் திருப்புறம்பியத்துப் போரைப் பற்றிப் படித்துத் தெரிந்தவர்களுக்கு இப்புதினம் மனத்திரையில் ஒரு நிழற்படத்தை உருவாக்கி, அவர்களைச் சோழர்காலத்திற்குக் கொண்டு செல்வதோடு தஞ்சாவூர், வல்லம், வழியாகவும், மணியாற்றிலும் நடக்கச் செய்து விடுகிறதை உணர்வார்கள். நானும் உணர்கிறேன்.

கடம்பர் (கதம்பர்) என்ற பெயர் ஒருவகைக் குடியினரைக் குறிக்கும். கதம்பம் - வெண் கடம்பு மரத்தைக் குறிக்கும். கதம்பம் - கடம்பம் என ஆகும். தற்போதுள்ள மைசூர் மாநிலத்தின் சிமோகா மாவட்டத்தின் பெரும் பகுதி கதம்ப நாடாயிருந்தது என்பர். கதம்ப நாடு அழிந்து சாளுக்கியப் பேரரசு உருவாயிற்று. சோழ அரசர்களின் மனைவியர் மற்றும் மகளார்களின் பெயர்கள் 'மாதேவி' என்று முடிவனவாக உள்ளன. கடம்பமாதேவி என்று கொண்ட சோழ மகளிரை அறியமுடியவில்லை. திருநெய்த்தானத்துக் கல்வெட்டு கூறும் கடம்பமாதேவியை அறியச் செய்துள்ள முயற்சியை ஏற்காமல் இருக்க முடியாது.

விக்கியண்ணனின் மூலம், வீர மறவருக்கு உள்ள வலிமையையும், உணர்வையும் காட்டி, பலகீனத்தையும் உணர்த்தியுள்ளது மகிழ்வுக்குரியது. இவன் மூலம் புறநானூற்று வீரப்பண்பையும், மாந்தர் தம் மறஉணர்வையும், நாட்டுணர்வையும் சுட்டிக் காட்டப்படுகின்றன.

ஆசிரியர் கடம்பமாதேவியின் மூலம் நாட்டு உணர்வின் மீதும், அரசியல் மீதும் பெண்களுக்குக் கருத்தாக்கம் உண்டானால் தான் ஒரு நாட்டின் உயர்வும் வளமும் பெருகும் என்பதை உணர்த்துகிறார்.

வரலாற்றுக் கூறுகளிலிருந்து தமிழர் பண்பாட்டின் வரலாறாக, நாட்டு உணர்வுத் தன்மைக்கு மாற்றிய சிந்தனையைப் பெண்ணுக் குரியதாகக் காட்டும் போக்கு, புதுமையான உத்தி. மேலும் பெண் வழிக் குமுகாயத்தில் பெண் அறிவு, மேன்மை, ஆற்றல், மறஉணர்வு எச்சங்களை இப்புதினத்தின் மூலம் அறிவுறுத்தப்படுவதை உணர்கிறேன்.

இந்தப் புதினம் கற்பனைகளுக்கு முதன்மை அளிக்கா திருப்பது புதுமையானது. அதேபோல் வரலாறு என்பது கதைச் சொல்லல் முறையானது அன்று. மண்ணின் வளம், மக்களின் பண்பாடு, வாழ்க்கை, உணர்வு, நெறி, ஒழுக்கம் என்பதை மரபு சார்ந்ததாக உணரச் செய்ய வேண்டும். இதனை வரலாற்றுப் போக்காக அமைத்துக் கூறாமல், உளவியல், மாந்தவியல் மூலம் ஆசிரியர் உணரச் செய்துள்ளது தனிசிறப்பாகும்.

நடை, கதை அமைப்பு, கதைப்போக்கு வாசிக்க ஆர்வத்தைத் தூண்டுகிறது. கற்பனை வளம், காதலின் வலிமை, கடமையுணர்வு, அன்பு, உணர்வு, உணர்ச்சி, ஆகியவற்றை உணர்த்தும் முறை மொழியோடும், பண்பாட்டோடும், இணைந்து வளரவேண்டும் என்ற வேட்கையை இப்புதினத்தின் மூலம் ஆசிரியர் உணர்த்துவது மனதைக் கனக்கச் செய்கிறது. இம் முயற்சியை வரலாற்று ஆர்வலர்கள் ஏற்பார்கள் என எண்ணுகிறேன். இன்னும் இதுபோன்ற பல படைப்புகளை ஆசிரியர் ஈந்து இம் மண்ணுக்குப் புகழ்சேர்த்திட வேண்டுமெனப் பாராட்டி மகிழ்கிறேன்.

12.6.96, அனந்தபுரம் **கோ. கிருட்டிணமூர்த்தி.**

கடலூர்.

# இன்னுரை

சோழர்களுக்கே உரிய **'செம்பியன் தமிழவேள்'** விருதை, ஆதித்த சோழன் சேரநாட்டு வீரனாகிய விக்கியண்ணனுக்குக் கொடுத்து மகிழ்ந்த வீரவரலாறு மிகச்சுவையானதும் புதுமையானதும் கூட! ஆதித்தசோழனைப் பாராட்டத்தான் வேண்டும்.

சிறந்த வரலாற்றுப்புதினம் 'செம்பியன் தமிழவேள்' எனில் அது மிகையன்று. அற்புதமான தமிழ்நடை! அதிசயத்தக்க கதைப்பிணைப்பு! நூற்றுக்கு எண்பது விழுக்காடு வரலாற்றை ஒட்டியே செல்லும் பாங்கு! இவையனைத்தும் புதினத்திற்கு வெற்றிப்பாதை வகுத்துக் கொடுத்துள்ளன. சிறந்த கவிஞர் என்பதைக் காட்டிலும் சிறந்த வரலாற்று நாவலாசிரியர்கள் வரிசையில் நிமிர்ந்து நிற்கக்கூடிய சிறப்பை இவ்வாசிரியர் (இந்நூல் வெளிவந்ததும்) நிச்சயம் பெறுவார்.

கதை சொல்லியுள்ள விதமும் கையாண்டுள்ள உத்திகளும் படிக்கப்படிக்க அதிசயிக்க வைக்கின்றன.

ஆழ்ந்த சிந்தனை ஆற்றலினால் கதை மாந்தர்கள் ஒவ்வொருவரும் தங்களின் பாத்திரத் தன்மையைத் தக்கவைத்து ஒளிவீசுகின்றனர்.

திருநெய்த்தானத்துக் கல்வெட்டு இப்படியொரு வீரனை (விக்கியண்ணனை) இக்கதையின் மூலம் உலகிற்களிக்குமா! என்ற வியப்பு வரலாற்றார்வலர்களிடையே எழுவதும் நிலைத்து நிற்பதும் திண்ணம்தான்.

பழைய வரலாற்றின் புதிய வெளிப்பாடு, எவரும் இதுநாள்வரைத் தொட்டிடாத கதையின் நாயகன் வித்தியாசமானவன்; மிக்க வலுவானவன்.

அத்தியாயத் தொடக்கத்தின் முதலிலும் உள்ளும் இலக்கியப் பாக்களின் அணிவகுப்பு, உவமைகள், பழமொழிகள் இவையாவும் பளிச்செனத் தோன்றி ஒளிவீசுகின்றன.

கதையினுள் கருத்துவிதைகள் ஆங்காங்கே ஊன்றப் பெற்றுள்ளன. செழித்து விளையும்; சீர்புகழ் சேர்க்கும். வாழிய!

பண்ணுருட்டி,
5.8.96.

அன்பன்,
கவிஞர். **தமிழரசன்.**

## என்னுரை

*இவ்வரலாற்றுப் புதினத்திற்கு மூலம் திருநெய்தானத்துக் கல்வெட்டொன்றில் காணப்பட்ட ஒரு சிறு செய்தியே. சிறு தீப்பொறி ஒப்ப அச்செய்தி சிந்தனையைப் பெருக்கியதன் விளைவே இப் புதினமாகும்.*

*'ஆதித்த சோழனாலும் சேரமான் கோத்தாணு இரவியாலும் பல சிறப்புகள் செய்யப்பட்டுச்* ***செம்பியன் தமிழவேள்*** *என்ற குலப்பெயர் பெற்றவன் விக்கியண்ணன். விக்கியண்ணனின் தேவி கடம்பமாதேவி'.*

*கல்வெட்டுச் செய்தி இவ்வளவே.*

*செம்பியன் என்பது சோழர்குலச் சிறப்புப் பெயர். எனவே இந்தச் சிறப்புப்பெயரை ஆதித்தசோழன் விக்கியண்ணனுக்குச் சூட்டிப் பெருமைப்படுத்தினான் என்றால், விக்கியண்ணன் ஏதோ பெரும் பயனுள்ள உதவியைச் சோழனுக்குச் செய்திருக்க வேண்டும். ஆனால், விக்கியண்ணன் செய்த அந்த வியக்கத்தகு பேருதவி என்னவென்று தெரியவில்லை. சிந்தனை எழுந்தது.*

*ஆதித்தசோழனுடன் இணைந்து சேரமான் கோத்தாணு இரவியும் விக்கியண்ணனுக்கு இந்தச் சிறப்புகளை அளித்துள்ளான்; அதன் காரணம் என்ன? விக்கியண்ணன் சேரநாட்டைச் சேர்ந்த வீரனாக இருந்திருக்கக் கூடுமோ?*

*விக்கியண்ணனின் தேவி கடம்பமாதேவி. கதம்பமாதேவி என்ற பெயரே கடம்பமாதேவியாக மருவிற்றிருக்குமோ? கதம்ப மரபினருக்கும் பல்லவருக்கும் மணவுறவு உண்டே! 'கதம்பர்*

மரபுக்கே சிரோமணியாக விளங்கிய அரசனின் மகளான அக்கள நிம்மதி என்பவளைத் தந்திவர்மன் மணந்து கொண்டான்' என்று பட்டயங்கள் பகர்கின்றனவே! சிந்தனை விரிந்தது.

பாண்டியரின் ஆட்சியும் பல்லவர் ஆட்சியும் சோழ மண்டலத்தில் ஒருங்கே ஒழிவதற்கும் ஏறக்குறைய 650 ஆண்டு களாய் அடங்கிக் கிடந்த சோழராட்சி மீண்டும் நிலைபெறுவதற்குக் காரணமாய், தமிழக வரலாற்றில் குறித்தற்குரிய நிகழ்ச்சியாய் அமைந்தது திரும்புறம்பியப் பெரும்போர். அப்பெரும்போரில் அரும் பெரும் ஆற்றலைக் காட்டியவனாயிப்பானோ விக்கியண்ணன்? அதற்கு நன்றி பாராட்டி ஆதித்த சோழன் சேரமன்னனுடன் இணைந்திருந்து விக்கியண்ணனுக்குச் 'செம்பியன் தமிழவேள்' என்ற குலப்பெயரைச் சூட்டிச் சிறப்புச் செய்திருப்பானோ? சிந்தனை மேலும் மேலும் விரிந்தது.

ஏன் இப்படி இருக்கக்கூடாது என்ற கேள்விக்கு எழுந்த விடையே இப்புதினம். இருபத்தாறு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது இன்றே நண்பர்கள் தூண்டுதலால் அச்சில் வருகிறது.

என்னுடை கடைப்பிள்ளைக்குச் 'செம்பியன் தமிழவேள்' என்ற பெயர் என்னால் இடப்பட்டுப் பத்தொன்பது ஆண்டுகளாய் வழங்கி வருகிறதென்பதும் அவனின் இருபதாம் ஆண்டு பிறந்தநாளான 10.12.97 இந்நூலை வெளியிடுவதும் இந்நூலிலே நான் கொண்டுள்ள ஈடுபாடு எத்துணை என்பதைத் தெளிவுறுத்தும்.

அணிந்துரை அளித்துள்ள என் அன்பிற்கும் மதிப்பிற்கும் என்றும் உரிய என்னாசான் **பேராசிரியர் இரா. செல்வக்கணபதி** அவர்களுக்கு என்றும் நன்றியுடையேன்.

ஏட்டுப்படியைத் திருத்தும் பொறுப்பை ஏற்ற புதுச்சேரி வரலாற்றுச் சங்க உறுப்பினர் அனந்தபுரம். கிருட்டிணமூர்த்தி அவர்கள் ஓர் அரிய ஆய்வுரையையும் பண்ணுருட்டி கவிஞர். தமிழரசன் அவர்கள் ஓர் இன்னுரையையும் நான் கேட்காமலேயே இணைத்து அனுப்பி இருந்தனர். அவர்கள் செய்யாமற் செய்த உதவிக்குக் கடப்பாடு உடையவனாவேன்.

இப்புதினத்தைச் சிறந்த முறையில் அச்சில் கொண்டுவர உதவிய அச்சக உரிமையாளர் கௌதமசங்கர் அவர்களுக்கும் அவரின் துணைவியாருக்கும் நன்றி பாராட்டுகிறேன்.

அட்டை ஓவியத்தை என் உள்ளக் குறிப்பிற்கொப்ப வரைந்தளித்த ஓவியர் சேது அவர்களுக்கும் நன்றியுடைய வனாவேன்.

இப்புதினம் வெளிவரத் தங்கள் பணிகளுக்குமிடையே பேருதவிபுரிந்த பொறிஞர். கோவிந்தராசன், பொறிஞர். இராமானுசம், திரு. கோபால், மற்றும் பயன்தூக்காது உடன் பல்லாற்றாலும் ஊக்கமளித்து ஆக்கம் பெருக்கிடும் அன்பு நண்பர்கள் அனைவர்க்கும் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

**சி. செந்தமிழ்ச்சேய்.**

*10.12.97,*
*"சேயகம்",*
*49, துரைசாமிநகர்,*
*கடலூர் - 607 001.*

# கதைக்கான மூலக்கரு

(திருநெய்த்தானத்துக் கல்வெட்டு)

"தொண்டைநாடு பரவின சோழன் பல்யானைக் கோக்கண்டனாயின இராசகேசரிவதனனாலுஞ் சேரமான் கோத்தாணு இரவியாலுந் தவிசும் சாமரையும் சிவிகையும் திமிலையும் கோயிலும் போனகமும் காளமும் களிற்று நிரையும் செம்பியன் தமிழவேள் என்னும் குலப்பெயரும் பெற்ற விக்கியண்ணன் தேவியான கடம்பமாதேவி திருநெய்த்தானத்து மாதேவர்க்கு ஒரு நந்தாவிளக்கினுக்குக் கொடுத்த ஆடு நூறு".

(தெ. இ. கல்வெட்டுகள் - தொகுதி III. எண். 89)

# கதை மாந்தர்

## வரலாற்றில் வாழ்பவர்:

| | | |
|---|---|---|
| **விக்கியண்ணன்** | : | சேர நாட்டுப் படைமறவன் |
| **விசயாலயன்** | : | சோழ அரசன் |
| **கடம்பமாதேவி** | : | சோழ இளவரசி |
| **ஆதித்தன்** | : | சோழ இளவரசன் |
| **அபராசிதன்** | : | பல்லவ இளவரசன் |
| **பராந்தகன்** | : | பாண்டிய இளவல் |
| **பிருதுவிபதி** | : | கங்க அரசன் – அபராசிதனின் பாட்டன் |
| **மாதேவி** | : | நற்குணப் பேரெழிலாரின் மகள் |
| **முத்தரையன்** | : | சிற்றரசன் – வல்லத்தைத் தலைநகராகக் கொண்டவன் |
| **கச்சியாண்டான்** | : | பல்லவர் படைத்தலைவன் |
| **நக்கன்புள்ளன்** | : | பாண்டியர் படைத்தலைவன் |

## கற்பனை மாந்தர்:

| | | |
|---|---|---|
| **வண்டார்குழலி** | : | ஆடலரசி |
| **நற்குணப்பேரெழிலார்** | : | சோழ அரசின் தலைமை அமைச்சர் |
| **செங்கண்ணன்** | : | சோழரின் அனைத்துப் படைகளுக்கும் தலைவன் |
| **கடியநெடுவேட்டுவன்** | : | சோழரின் காவற்படைத் தலைவன் |
| **பல்லவரையன்** | : | சோழரின் குதிரைப்படைத் தலைவன் |
| **சேந்தன்கீரன்** | : | சோழரின் ஒற்றர் படைத்தலைவன் |
| **பொலன்மார்பர்** | : | சோழரின் பழையாறைப் படைத்தலைவன் |
| **செந்தாமரை** | : | வண்டார்குழலியின் பணிப்பெண் |

# 1. பகலில் வெளிவந்த பால்நிலவு

*"வான்பொய்ப்பினும் தான்பொய்யா*
*மலைத்தலைய கடற்காவிரி*
*புனல்பரந்து பொன்கொழிக்கும்"*

பொய்யில் புலவர் மெய்யுரை ஒப்பப் பொன்னியாறு, கரைகளின் இருமருங்கும் காடுகள் நிறைந்துகாண, வஞ்சியர் கூந்தல் வகிடினைப்போல அழகு மயமான அந்த அமைதியான சூழலில், சுற்றிச் சுழன்றும் தன்னகத்துப்பட்ட பொருள்களைப் பற்றிப் படர்ந்தும் வெற்றிச் சிரிப்போடு விரைந்து கொண்டிருந்த தன்மை, கரையில் விரைந்து சென்றுகொண்டிருந்த அந்த வீரனின் கருத்தை ஆட்கொள்ளாமைக்குக் காரணம் ஏதோ இருக்கத்தான் வேண்டும்.

'சோழ வளநாடு சோறுடைத்து' என்பது எத்தனை உண்மையான வாய்மொழி! கொல்லும் கோடையிலும் சற்றும் குறைவின்றி நிறைவோடு நீர் பரவுமேயாயின் பொட்டல் வெளியுமன்றோ பொன்விளையும் பூவுலகமாக மாறக்கூடும்! அதிலும் சோழ வளநாட்டைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? வற்றாத வளங்கொழிக்கும் காவிரியாற்றால் வானுயர வளர்ந்திருப் பவை கமுகும் தெங்கும் மட்டுமா? வஞ்சியர் மென்தொடைபோல் செழிப்போடு வளர்ந்திருக்கும் வாழைத்தோட்டங்கள்; அவர்தம் வாய்ச்சுவைக்கு உவமை இஃதெனக் கவிஞர்களால் காட்டப்பெறும் கரும்புக் கூட்டங்கள்; கன்னியுடல் அமைப்பால் காளையர்தம் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் அரிவையர்தம் மெல்லிடை போல் அசைந்தாடும் நெற்பயிர்கள்; இன்னும் எத்தனையோ!

மாரியென வளங்கொழிக்கும் காவிரியாற்றால் அன்றோ சோழர்கள் வளவர்கள் என்ற பெயர்பெற்றுச் சிறந்தனர். 'நெல்லுடையான் நீர்நாடர் கோ' என்றும் 'வளவனாயினும் அளவறிந்து உண்', என்றும் வாய்மொழிகள் தோன்றக் காரணமாய் வாய்த்தது காவிரியன்றோ! வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்! காரணம், சோழவளநாட்டின் சோற்று வளம் அன்றோ!

உள்ளத்தால் அந்த வீரன் எல்லாரையும்போல் ஒப்பற்ற கவிஞன்தான்; அவனாலும் அந்த அழகு குலுங்கும் அமைதியான சூழலை விரும்பிச்சுவைத்து மகிழக் கூடும்; ஆனாலும், அவன் குதிரையை வெகுவிரைவாகச் செலுத்திக் கொண்டிருந்தான். மாங்கிளைகளின் மறைவிலிருந்துகொண்டு மனதைக் கவரும் வண்ணம் குரலெழுப்பிக் கொண்டிருந்த குயில்களின் இன்னோசையை அவன் கேட்கவே செய்தான்; ஆனால், அந்த இசையை இருந்து கேட்டு இன்புற்றுச் செல்லும் நிலைமையில் அவன் அப்போது இருக்கவில்லை. அதனாலேயே புரவியை மேலும் விரைவுபடுத்திக்கொண்டிருந்தான்.

அரபு நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்ந்த குதிரை அது. அதனுடைய விரைவின்முன் வேறெந்தக் குதிரையும் எதிர்நிற்க முடியாது என்பதைச் சேரநாட்டு மக்கள் நன்கறிவர். தொண்டித் துறைமுகத்தில் வந்திறங்கிய கடந்த ஓராண்டு காலத்தில் அந்தக் காளையைத் தவிர வேறு யாரையும் அக்குதிரை சுமந்தது கிடையாது. தன்னை உரிமை கொண்டவன் தன்னுடைய தரத்தை நன்கு அறிந்திருப்பதனாலேயே, தன்னைப் பொன்போல் போற்றிக் காக்கின்றான் என்பதைப் புரிந்துகொண்டதனாலோ என்னவோ, அப்புரவி அவன் எண்ணத்திற்கேற்ப எப்பொழுதும் இயங்கி வந்துள்ளது. ஆனால், அன்றோ அவன் மீண்டும் மீண்டும் குதிரையை விரைவுபடுத்திக் கொண்டிருந்தான். ஏற்கனவே நெடுந்தூரம் பயணத்தால் நிலைதளர்ந்திருந்தபோதிலும் அக்குதிரை, அவன் எண்ணத்திற்கொப்ப வேகமாக இயங்கியது.

சோழவளநாட்டில் நுழையும்போதே இப்படியொரு சூழ்ச்சியை அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. மூன்று நாள்களுக்கு முன்னர் வரைத் தான் சோழநாட்டிற்குச் செல்லவேண்டியிருக்கும் என்று கருதியவன் இல்லை. திடீரென்று மன்னரிடமிருந்து அந்த இரவு அழைப்புவந்தபோது, அவன் திகைப்படைந்தான். மாலையில் அன்றோ அவன் மன்னரைச் சந்தித்துவிட்டு வந்திருந்தான்; அதற்குள் அழைப்பு அனுப்ப வேண்டிய அலுவல் என்னவாக இருக்கக் கூடும்? அந்த அழைப்பும் குறிப்பிட்ட அன்று இரவா வரவேண்டும்!

விரைந்து சென்றுகொண்டிருந்த அந்த வேளையிலும், அன்றைய இரவைப்பற்றி எண்ணிப்பார்க்க அந்தக்காளைக்கு வேதனையாய் இருந்தது. இன்னும் சிலநாழிகைகள் கழிந்து அழைப்பு வந்திருக்கக் கூடாதா? எல்லாமே வீண்! இரண்டு திங்களாய் அவன் எண்ணியலைந்த இன்பப்பெட்டகம் கைக்குக் கிட்டியபோதா அந்த இடையூறு ஏற்படவேண்டும்? ஆனால், மன்னரின் அழைப்பு மாவீரனுக்கு எல்லாவற்றிலும் மிகப்பெரிய தன்றோ? அவன்தான் என்ன செய்வான்? தன்னையே வெறுத்துக் கொண்டு தாளாக் காமம் தனலாக உடலை வாட்ட, அந்த அழகு மயிலைவிட்டு அகலும்போதுகூட, வேற்றுநாட்டிற்குத்தான் விரைந்து செல்லவேண்டியிருக்கும் என்ற எண்ணம் அவனுக்கு எழவில்லை. மாறாக, மன்னரைப் பார்த்த பின்னர் மங்கையின் மார்பைப் பெறலாம் என மனதிற்குச் சொல்லிக் கொண்டன்றோ விரைந்து சென்றான்!

அவள்தான் எத்தனை அழகு! ‘அணங்கு கொல்? ஆய்மயில் கொல்? கனங்குழை மாதர்கொல்? மாலும் என் நெஞ்சு’ என்பதற்கேற்ப மயக்கத்தைத் தோற்றுவிக்கும் எழில்தோற்றமன்றோ அவள் தோற்றம்! வெறும் போர்வீரனாகமட்டும் அவன் இருந்திருப்பானேயாகில், அவளழகால் அவ்வளவு பாதிக்கப் பட்டிருக்கமாட்டான். அவன் ஒரு கவிஞன்; அதனால்தான், அவள் உருவை முதலில் கண்டபோது, புற உணர்ச்சிக்கு அடிமை யானதோடு, உள்ளத்தையும் அவளிடம் பறிகொடுத்தான். அவன் வீரனாக மட்டுமே இருந்திருப்பானேல், விழியினை வேலென்று சொல்லி வியந்திருப்பானே அன்றி, அவ்விழி வேலென்றால் நிலத்தினை நோக்கும் இயல்பினை உடையதாய் இருப்பதேன் என்று யாரும் கேட்டிருப்பின், விடையறியாதவனாய் விழித் திருப்பான். கவிதை உள்ளம் வாய்த்தவன் என்ற காரணத்தால், கண்களின் கூர்மைக்கு வேலொக்கும்; அமைப்பிற்குக் கயலொக்கும்; அசைவிற்கு மானொக்கும் என்று பிரித்துப்பிரித்துப் பலவாறாக உவமித்துத் தனக்குள்ளே மகிழ்வுற்றான். அம்மகிழ்ச்சி நிறைவுபெறும் நிலைமையிலா அழிவு வரவேண்டும்!

மன்னரை அவன் அடைந்தபோதே, அவரின் அழைப்பின் இன்றியமையாமையை அவன் அறிந்துகொண்டான். மதியமைச்சர், படைத்தலைவர் மற்றும் பல உயர் அலுவலர்கள் மன்னருடன்

அமர்ந்திருந்தனர். அவனுக்காகவே அப்போது அனைவரும் காத்துக்கொண்டிருந்தனர் என்பது அவனைக் கண்டதும் அரசர் பேசத் தொடங்கியதிலிருந்து அவன் புரிந்துகொண்டான்.

விக்கியண்ணன், உங்கள் வீரத்திலும் அறிவாற்றலிலும் எனக்கு எப்போதுமே நம்பிக்கையுண்டு என்பதை நீங்களே அறிவீர். அமைச்சருக்கோ இன்னும் இங்குள்ளவர்களுக்கோ நான் உங்களிடத்துக் கொண்ட நம்பிக்கையில் எந்த முரண்பாடும் இல்லை. அதனால்தான் இந்த அரும்பெரும் பொறுப்பை உங்களிடம் ஒப்படைக்கிறேன். அந்தப் பொறுப்பை நிறைவேற்று வதில் உயிரே போகலாம். வீரர் தாங்கள்! அதைப்பற்றி எண்ணியும் பார்க்கமாட்டீர்கள் என்பதையும் நான் அறிவேன். இருந்தும் எச்சரிக்க வேண்டியது என் பொறுப்பாக இருக்கிறது.

"சோழமன்னர் விசயாலயர் என்தந்தைக்கு இணையானவர்; இளமைத்தொட்டுப் போர்க் களத்தையே பொழுதுபோக்குக் கிடமாகக் கொண்டவர்; அடங்கிக் கிடந்த சோழவரசை மீண்டும் தன்காலத்திலேயே தனியரசாக நிலை நிறுத்திக் கரிகால் பெருவளத்தானின் பின்னோன் இவனென்று புலவர் பெருமக்களால் போற்றி ஏற்றத்தகும் புகழிற்காகவே தன் வாழ்நாள்கள் முழுவதையும் ஒப்படைத்துக் கொண்டவர். அவ்வீரச் செம்மல் விசயாலயரிடம் உங்களை இப்போது அனுப்பி வைக்கிறேன். தூதுவராக அன்று; அவர்க்குத் தொண்டாற்றும் தோழராக! போரில் தோள்கொடுக்கும் துணைவராக! விசயாலரை நானாகவே நினைத்துக் கொள்ளுங்கள். உடலில் வலிகுன்றிய வயதான இன்றும் விசயாலயர் உள்ளத்தால் இளைஞரே. அவர் பலகால் எண்ணி முயன்றுவரும் ஆசைகள் நிறைவேறாதவரை, அவர் தன்முயற்சிகளை நிறுத்திக் கொள்ளப் போவதில்லை. அம் முயற்சிகள் வெற்றிபெறவே உங்களை என்னிடமிருந்து அனுப்பி வைக்கிறேன்.

"விக்கியண்ணன், உங்கள் வீரமும் அறிவுத்திறனும் சோழநாட்டிற்குத் தேவை. உயிரை வீண் போராட்டத்தில் இரை யாக்கிவிடாதீர். அறிவை மிகுதியாகப் பயன்படுத்துங்கள். வாளின் வலிமையைவிட அறிவின் வலிமை மிகப்பெரிது! இளமை விளையாட்டுகள் இன்னும் உங்களைவிட்டு விலகவில்லை என்பது எனக்குத் தெரியும். நீங்கள் சோழநாட்டில் எப்படி நடந்துகொள்ள

வேண்டுமென்று நான் சொல்ல வேண்டியதில்லை. இன்னும் இரண்டு நாழிகைக்குள் ஓலையொன்று உங்களிடம் ஒப்படைக்கப் படும். சோழமன்னர், பாண்டியர்க்கும் பல்லவர்க்கும் முத்தரை யர்க்கும் ஈடுகொடுக்க இயலாத நிலையில் இருக்கிறார்; இளவரசர் ஆதித்தரோ இன்னும் உடலாலும் உள்ளத்தாலும் உரமடைய வேண்டியவராய் உள்ளார். நீங்கள் உடன் புறப்பட்டுச் செல்லுங்கள்."

மன்னர் ஆணைக்கு மறுப்பென்றும் கூறியறியா விக்கியண்ணன் வேறுவழியின்றி அப்பொழுதே புறப்பட்டு விட்டான். புத்தம் புதிய பொலிவோடு நாள்மலரொத்த அந்தப்பூவை பரத்தையர் சேரியிலே அவனுக்காகத் தன்னுடைய அழகை யெல்லாம் தாங்கிக்கொண்டு எதிர்பார்த்தபடி அந்த இரவு காத்துக் கொண்டிருப்பதை அவனால் எளிதில் மறக்கமுடியவில்லை. என்றாலும், அரசரின் ஓலையைப் பெற்ற அக்கணமே அவன் சோழநாட்டிற்குப் புறப்பட்டுவிட்டான்.

வழிப்பயணத்திலே எந்தவித இடையூறும் இருக்கவில்லை. இடையிடையே சிறிது ஓய்வெடுத்துக் கொண்டான். அவன் ஓய்வெடுத்துக் கொண்டான் என்பதும் அத்தனை பொருத்த மில்லை. அவனின் உடல் சுமையைத் தாங்கிக்கொண்டு அவனின் உள்ளக்குறிப்புணர்ந்து விரைந்த குதிரையின் பொருட்டே ஆங்காங்கே சிறிது ஓய்வெடுத்துக்கொண்டான். இல்லையெனில் காலைப்பொழுதே அவன் தஞ்சையை அடைந்திருக்கக்கூடும்.

அவன் அப்படித் தங்கித்தங்கிப் பயணம் செய்தது பெரிதும் நன்மை பயப்பதாய் முடிந்தது. அதனால் அன்றோ சோழநாட்டு எதிரிகளின் சூழ்ச்சியை அறிந்துகொள்ளும் வாய்ப்பு அவனுக்கு ஏற்பட்டது.

உச்சிவெய்யில் உடலை வாட்டவே, சற்று ஓய்வுபெறுவோம் என்று மரநிழலில் ஒதுங்கவன்றோ அந்த வஞ்சகர்களின் பேச்சை அவனால் கேட்கமுடிந்தது. தொடர்ந்து பயணத்தை மேற் கொண்டிருந்த விக்கியண்ணனுக்குத் தஞ்சை இன்னும் சில கற்கள் தூரமே உள்ளது என்பதை வழியில் உழவர்கள் சிலரிடம் கேட்டதன் மூலம் தெரிந்துகொண்டிருந்தான். எப்படியும் இருள்படர்வதற்குச் சில நாழிகைகளுக்கு முன்னரே தஞ்சைநகரை அடைந்துவிடலாம்

என்ற தன்னம்பிக்கையில் ஓய்வெடுத்துக் கொண்டான். அப்பொழுதுதான் அந்தக் கொடியவர்களின் திட்டத்தைத் தற்செயலாய் அவன் தெரிந்துகொள்ள நேர்ந்தது.

அப்பப்பா! எப்பேர்பட்ட கொடியவர்கள் அவர்கள்! நேருக்கு நேர் நின்று போரிட்டு வெல்லமுடியாத வீணர்களின் செயலன்றோ அவர்களின் திட்டம்! சோழநாட்டு அரசகுடியினருக்கு இப்படியும் ஓர் இடையூறா? பெண்ணொருத்தியை அழிக்கவே இந்தத்திட்ட மென்றால், மன்னரையும் இளவரசரையும் அழிக்க அவர்கள் என்னதான் செய்யமாட்டார்கள்? யாராக இருக்கமுடியும் அந்தப் பெண்? பெண்புலி என்றன்றோ பேசிக்கொண்டனர்; ஒருவேளை விசயாலய சோழமன்னருக்கு மகளொருத்தியும் உண்டோ?

விக்கியண்ணனின் சிந்தனையோட்டம் சட்டென்று தடை பட்டது. தீயவர்களின் சூழ்ச்சியைத் தான் தலையிட்டுத் தகர்த் தெறிய வேண்டுமென்று நடந்தவைகளை எண்ணியாய்ந்தபடி கருத்தைப் பறக்கவிட்டு விரைந்துகொண்டிருந்த விக்கியண்ணன் குதிரை எவ்வித எச்சரிக்கையுமின்றித் திடீரென்று நிலைத்து நிற்கவே திடுக்கிட்டுப் போனான். குதிரை திடீரென்று நின்றதால் எண்ணங்களின் பிடியிலிருந்து விடுபட்ட விக்கியண்ணன், எதிரே சுற்றி நின்றுகொண்டிருந்தவர்களைப் பார்க்க வியப்பெய்தினான் என்றால், தனக்கு நேராக மரநிழலில் நின்றுகொண்டிருந்த மதிமுகத்தாளைக் கண்டபோது மயக்கமே அடைந்தான் என்றே சொல்லவேண்டும்.

அவள் பெண்தானா? இல்லை, பகலில் வெளிவந்த பால் நிலவா? அவன் மனம் அந்தப் பெண்ணழகால் பெரிதும் அலைகழிக்கப் பெற்று ஒருநிலையில் அமையாது உழன்று கொண்டிருந்தது.

## 2. பொங்கித் துடித்த புத்துணர்வு

*"கருத்தடங்கண் வண்டாகச் செவ்வாய் தளிரா*
*அரும்பிவர் மென்முலை தொத்தாப் - பெரும்பணைத்தோள்*
*பெண்தகைப் பொலிந்த பூங்கொடி*
*கண்டேம் காண்டலும் களித்தஎம் கண்ணே."*

'சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலாவும் ஆசினியும் அசோகும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலோடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றையும் பிணியவிழந்து, பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகைசிறந்து, வண்டறைந்து தேனார்ந்து வரிக்குயில்கள் இசைபாட, தண்தென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழிலன் நடுவன், எழிலெலாம் ஒருங்கமைந்த பொழிலே இவளென அந்த இளமாது நின்றிருந்த இயல்பு, விக்கியண்ணனின் எண்ணத்தை வீழ்த்தி வெற்றி கொள்ளவே, சுற்றிக் கைகளில் வாள்களுடன் நின்றிருந்த வீரர்களை அவன் கவனிக்கக் கூடவில்லை; அவன் எண்ணமெல்லாம் அவளின் அமைப்பிலேயே அடங்கிவிட்டிருந்தது.

கண்களின் அழகுதாம் என்னே! அக்கருவிழிகளுக்கு வண்டு களைத் தவிர ஒப்புமையாகக் காட்ட இயன்றவை வேறுமுண்டோ? அந்தக் கருமைநிறமும் சிலவினாடிகளும் நிலைக்காது அங்கு மிங்கும் சுழலும் சுறுசுறுப்பும் அவனை நிலைத்தடுமாற அல்லவோ செய்தன. அவளின் செவ்வாய் மென்மைக்கும் தண்மைக்கும் தளிரே ஈடுகொடுக்கக்கூடும். அவளின் திரண்டெழும் மார்பகங்களுக்குத் தேரின் அமைப்பே ஒக்குமெனினும் அவைகளின் அழகிற்கும் இளமைத்திரட்சிக்கும் பூங்கொத்தே முற்றிலும் உவமிக்கப் பொருந்துவதாகும். மூங்கிலொத்த தோளாலும் பெண்மைத் தன்மையாலும் அழகுபெற்ற மலர்க்கொடி போல்வாளாகிய அந்த மாதினைக் கண்டவுடன் அன்றோ அவன் கண்கள் மகிழ்ச்சி அடைவனவாயின; அப்படியாயின், அவளின் அழகின் திறம்தான் என்னே!

விக்கியண்ணன் தன்னை மறந்தான்; தான் இருக்குமிடத்தை மறந்தான். சிறிதுநேரம் முன்வரை எவளைப் பிரிந்து வரவேண்டி நேர்ந்ததற்காக ஏங்கி வாடினானோ அந்தச் சேரநாட்டுக் கணிகையையும் மறந்தான்; எதற்காகக் குதிரையை விரைந்து விரட்டிக் கொண்டு வந்தானோ, அந்த வஞ்சகர்களின் கொலைத் திட்டத்தை முறியடிக்கவேண்டிய தன் முடிவையும் மறந்தான். அவன் நினைவில் அப்போது நின்றவை எல்லாம், எதிரே நின்றிருந்த எழிற்சிலையின் இனிய கருவிழிகள்தாம்.

சிலையா அவள்? இல்லவே இல்லை! சிற்பியும் சிந்தித்தறியாப் பொற்றிரு மேனியள் அன்றோ அவள்! அவள் அசைந்து அவனை நோக்கி அடியெடுத்து வைத்தபோதே விக்கியண்ணன் கற்பனை உலகத்திலிருந்து விடுபட்டுத் தன்னிலையைக் கண்டான். கைகளில் வாளுடன் நெருங்கிய வீரர்களைக் கண்டு அவன் கவலை கொள்ளவில்லை. எத்தனை வீரர்கள் எதிர் நின்றாலும் தனியொருவனாய்த் தன்னால் ஈடுகொடுக்க முடியும் என்ற தன்னம்பிக்கை அவனுக்கு இருந்தது. தன்னம்பிக்கையன்றோ வீரர்களின் தனிப்பெருஞ்சொத்து.

விக்கியண்ணன் அந்த வேல்விழியாளை வைத்த கண் அசையாமல் நோக்கினான். அவன் அடுத்த வினாடியே சிந்தனைக்கு ஆளானான்.

அவள் நின்ற தோற்றம் அவனுக்குப் பெண்புலியை நினைவூட்டியது. கால்கள் திடமாகத் தரையில் ஊன்றி நிலைத்து நிற்க, அந்தக் கன்னி சிறிது தன்னுடலைப் பின்பக்கம் சாய்த்தபடி கையொன்றை இடையில் பொருத்திக்கொண்டு, பெண்மைக்கே உரிய தடுமாற்றம் சிறிதுமின்றி அவன் கண்களை எதிர்த்து நோக்கிய திண்மை விக்கியண்ணனுக்குப் பெண்புலியை நினைவுபடுத்தவே, இரண்டு நாழிகைகளுக்கு முன்னர்த்தான் தற்செயலாய் அறிய நேர்ந்த வஞ்சகம் உடன் நினைவிற்கு வந்தது.

உண்மைதான்! இவளைத்தான் அந்தக் கொடியவர்கள் பெண்புலியென்று குறிப்பிட்டிருக்க வேண்டும். இவள் யாராக இருக்கக்கூடும்? இவள்தான் அந்த அழகியா? இவளைக் கொல்வதால் யாருக்கு என்ன பயன் இருக்கமுடியும்? அரசியலில் இவளொருத்தியை அழித்துவிடுவதால், எப்படிப்பட்ட மாற்றத்தை இவள் எதிரிகள் எதிர்பார்க்கிறார்கள்?

விக்கியண்ணனின் எண்ணம் பலவாறு அலைந்தும் தெளிவு பெறாமல் குழம்பியது. அந்த நிலையில் தான் என்ன செய்யமுடியும் என்பதை அவன் மனம் ஆராய்ந்தது. அவன் கண்களோ சுற்றுப் புறத்தை ஆராய்ந்தன.

இங்கு எங்கோ ஒரு கொடியவன் ஒளிந்திருக்கிறான். மற்றவன் துணையோடு திரும்பி வரும்வரை இந்தப் பெண்ணைக் கண்காணித்துவரவேண்டுமென்றன்றோ கட்டளை? காலமோ விரைந்து கடந்து கொண்டிருக்கிறது. பகைவர்கள் பலரும் ஒருங்கேவரின் இவளைக் காப்பாற்ற இயலாமல் போகக்கூடும். அதற்குள் ஏதேனும் அவன் செய்தாக வேண்டும். இந்தப் பெண்ணோ, இவளின் வீரர்களோ அவன் பேச்சைக் கேட்பார்கள் என்பது நிச்சயமில்லை. இவர்களுடைய பார்வை அவனை எதிரியென்றே எண்ணுவதாகக் காட்டுகிறது. இந்த நிலையில் அவன் என்ன செய்தால் இந்தப் பெண்ணைக் காப்பாற்றமுடியும்?

விக்கியண்ணனின் எண்ணம் பட்டென்று தடைபட்டது. அவன் கண்கள் நிலைத்து நின்றன. அசைகிறதே அந்தப் புதர்; ஏன்? ஐயய்யோ! வஞ்ச நெஞ்சினனன்றோ அங்கே மறைந்திருக்கிறான்! கைகளிலே வில்லும் நாணும்! கொடுமதியாளன் தான்கொண்ட கொள்கையை முடித்துக் கொள்ள முடிவெடுத்துவிட்டானோ?

விக்கியண்ணன் அடுத்து நிகழ இருப்பதை எண்ணி அச்சமுற்றான். எதிரே நின்ற அவள், அந்த நேரத்திலா தனக்கு நிகழ இருக்கும் கொடுமையை அறியாதவளாய் அவனை நோக்கிப் பேசவேண்டும்!

"யார் நீங்கள்? இடையிலே என்ன ஓலை?"

வேறு சமயமாய் இருந்திருப்பின் அவளின் குரல் இனிமைக்குக் குயிலோடும் குழலோசையோடும் ஒப்பிட்டு உணர்ந்து உவந்திருப்பான். ஆனால், அப்போதைய நிலையில் எதையும் இருந்து எண்ணிப்பார்க்கும் நிலையில் அவன் இல்லை. அவன் எண்ணத்தை அந்தப் பெண்ணுக்கு நேரவிருக்கும் இடையூறே முற்றும் அப்போது ஆட்கொண்டிருந்தது.

ஒருசில வினாடிகள் நீட்டித்திருந்தால்கூட விக்கியண்ணனால் அந்தப் பெண்ணைக் காப்பாற்றி இருக்கமுடியாது. எந்தவினாடியும் வில்லிலிருந்து விடுபட்டு அவளைக் கொன்றிருக்கக்கூடும் நாணேற்றப்பட்டு அணியமாய் இருந்த அம்பு! என்ன ஓலை இடையிலே என்ற அந்த ஏந்திழையின் கேள்வியால் தன்

உணர்வின்றி இடையிலிருந்த ஓலைக்காய்க் கையைக் கொண்டு சென்ற விக்கியண்ணன் கண்ணிமைக்கும் நேரமும் தயக்கங் காட்ட வில்லை. இடையிருந்த எறிவாளை, எதிரே நிற்பவள் மீதுபடுமோ என்ற எவ்விதத் தயக்கமுமின்றி அவளின் பின்புறமிருந்த புதர்நோக்கி விரைவாக எறியாதிருந்திருப்பானேயாகில், அவளின் அழகுப் பொன்னுடல் அடுத்த வினாடி அம்புபட்டு மண்மீது விழுந்து அழிந்துபட்டிருக்கும்!

இடையிலிருந்த ஓலைக்காகக் கையைக் கொண்டு சென்றவன் எதிர்பாராவண்ணம் எறிவாளைப்பற்றித் தன்னைப் பார்த்து எறிந்ததைக் கண்ட அந்தப் பெண்ணும் அவளைச் சார்ந்த வீரர்களும் அச்சத்தால் ஒருகணம் அப்படியே உறைந்து நின்றனர். அடுத்தகணம் பெரிதும் வியப்பிற்கே ஆளானார்கள்.

குறுவாள் அவளை நோக்கி எறியப்பட்டாலும் அவள்மீது படாது தலைக்கும் சற்றுமேலாய் விரைந்து புதரிடை மறைந்த அதே நேரம், வேதனையால் எழுந்த 'ஆஅஅ'வென்ற ஒலியும் அதைத் தொடர்ந்து புதரினின்றும் விரைந்த அம்பொன்று இலக்கின்றி விழுந்ததையும் கண்ட அந்த வேல்விழியாள் பெரிதும் குழப்பமடைந்து ஏதும் செய்வதறியாது இருந்த இடத்திலேயே பதுமையென நின்றாள். அங்குச் சிலவினாடிகளில் நிகழ்ந்துவிட்ட செயல்களால், அவளைப்போலவே குழப்பமடைந்திருந்த அவளுடைய வீரர்கள், குழப்பத்தினின்றும் முதலில் விடுபட்ட காரணத்தால், நிலைமையை ஆராய்ந்து தெளிந்தறியும் பொருட்டுப் புதரினை அணுகினர். அதற்காகவே காத்திருந்ததைப்போல் விக்கியண்ணன் தன் குதிரையைச் செலுத்தினான்.

குதிரை எழுப்பிய குளம்போசையால் திரும்பிப் பார்த்த அந்தத் தேரனையாள், குதிரை தன்னைக் குறிவைத்து நேராய் வருவதைக்கண்டு அதன் வழியினின்றும் விலக அசைந்தாள். ஆனால், அவளின் விரைவு போதுமானதாக இல்லை.

என்ன நடந்தது என்று யாரும் புரிந்துகொள்ளுமுன் குழந்தையைத் தாங்குவான்போல் அவளின் கொடியுடலைத் தாங்கிக் குதிரைமீது கொண்டானோ இல்லையோ, குதிரை அவனுடைய ஒப்புதலையும் கேட்காது காற்றாய்ப் பறந்தது. குதிரை

மட்டுமா அப்படிப் பறந்தது? அந்தக்குமரியின் உணர்வுமன்றோ கொடிகட்டிப் பறந்தது.

## 3. இளவரசி கடம்பமாதேவி

*"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி*
*காமஞ் செப்பாது கண்டது மொழிமோ*
*பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்*
*செறியெயிற்று அரிவை கூந்தலின்*
*நறியவும் உளவோ நீயறியும் பூவே."*

பாண்டியனின் பரிசிலைப் பெறும்பொருட்டுப் படைக்கப் பட்ட இப்பாடலிலே பொருட்குற்றம் உண்டென்று வாதிட்ட பொய்யில் புலவர் நக்கீரர்பால் விக்கியண்ணனுக்கு வருத்தம் வந்தது. உலகத்தையே ஆக்கி அளிக்கும் ஆண்டவனுக்கா அணங்கு களிடம் பட்டறிவில்லாதிருக்கும்? முழுமுதற்கடவுள் என்று சைவர் களால் வணங்கப்பெறும் சிவபெருமான் தான்வேறு, தலைவி வேறு என்ற பாகுபாடு இல்லாதவராய் உமையவளைத் தன்னுடலின் ஒரு பாகத்திலேயே நிலைநிறுத்திக் கொண்டுள்ளவர்! போதாதற்கு, கங்கையென்னும் கருவிழியாளைத் தன் தலையிலேயே தாங்கி யுள்ளவர். அப்படிப்பட்ட ஆழ்ந்தகன்ற பட்டறிவு உள்ள ஆண்டவன் அரிவையர் கூந்தல் நறியது என்றுரைத்தால் அதைக்குற்றமென்று மறுக்க நக்கீரருக்கு எத்துணைத் துணிச்சல் இருந்திருக்க வேண்டும்!

விக்கியண்ணனின் இதழ்களிலே மெல்ல இளநகை விளையாடியது. தானிருந்த தற்காப்பற்ற அந்த நிலையிலும் கடம்பமாதேவி அதைக் கவனிக்கவே செய்தாள். அவனணைப்பில் ஆழ்ந்திருந்த அந்நிலையில், அவனைப்போலவே உணர்வின் மயக்கத்தில் அவளும் ஆழ்ந்திருந்த காரணத்தால் அவன் இளநகை உதிர்த்ததன் காரணத்தை அறியமுடியாதவளாய் இருந்தாள்.

குதிரை விரைந்து கொண்டிருந்தது. அந்த விரைவிலும் விக்கியண்ணனின் எண்ணம் கோர்வையாகச் செயல்பட்டது. புலவர்கள் பொய்சொல்வதில்தாம் எத்துணை வல்லவர்கள்!

அரிவையின் கூந்தல் நறியது என்று புனைந்துரைத்துக் கவிபாடியது புலவனின் குற்றமன்று. அவனை அந்த நிலைக்கு மயக்கத்தில் ஆழ்த்திவிட்ட அரிவையின் அளப்பரிய அழகின் ஆற்றலது. பெண்ணின் அழகிலும் உடலுறவிலும் பெரிதும் பிணைக்கப்பட்டுவிட்ட புலவன், அந்தப் பெண்ணின் அகம் மகிழுமாறு பலப்பட பாராட்டித் தானும் மகிழ்கின்றான்; "அணங்கு கொல்? ஆய்மயில்கொல்லோ? கனங்குழை மாதர்கொல்? மாலும் என் நெஞ்சு" என்று காவியம் பாடுகிறான். புலவன் தான் சொல்லும் பொருளில் உள்ள குற்றத்தை உணராதவன் அன்று. இலக்கியங் களிலே அப்படிப்பட்டவைகளெல்லாம் அழகுகளாகக் கொள்ளப்படு பவையேன்றித் தள்ளப்படுபவை அல்ல என்ற இலக்கணத்தை அவன் நன்கு அறிந்திருக்கின்றான்! அதனால்தான், தான் சொல்லும் பொருள்களில் பொதிந்துள்ள குற்றங்களை அவன் பொருட் படுத்துவதில்லை. அவன் கருத்து முழுவதும் தன்னை அணைத்து மகிழ்ந்தவளின் அகம் குளிரவேண்டும் என்பதுதான்.

பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலே மணம் கிடையா தென்பது கவிஞன் அறியாததன்று. பெண்கள் ஆண்களின் புகழ் மொழிகளிலே உண்மைகளைவிட பொய்மைகளையே அதிகம் விரும்புகிறார்கள் என்பதை அறிந்திருப்பதே, புலவனின் புனைந்துரைக்கு மூல காரணமாகும். பெண்கள் மட்டுந்தாமா? ஆண்களுமன்றோ பெண்களைப்பற்றிப் பெரிதும் புகழப்படும் பாட்டுக்களை வெகுவாக விரும்புகிறார்கள்.

எண்ணிப்பார்க்க விக்கியண்ணனின் இதழ்களில் மென்னகை அரும்பியது. அந்தப் புன்னகை இளவரசி கடம்பமாதேவியை எங்கோ இட்டுச் சென்றது. உடல் வளர்ந்து உரத்தோடு விளங்கிய அவனின் உள்ளம் இன்னும் சிறுஇளைஞனின் ஆரம்பநிலையில் இருப்பதை அந்தப் புன்னகை அவளுக்கு அறிவுறுத்தியது. அவள் இதழ்கள் மேலும் விரிந்தன.

"என்ன சிரிப்பு?"

"கன்னற் சுவையே; தென்னன் தமிழே! கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பியைக் கூவி அழைத்தோர் காவியம் வடித்த புலவனின் மனநிலை புரிந்தது; மகிழ்ந்தேன்."

"அப்படி என்ன புரிந்துகொண்டீர்கள் அந்தப் பாட்டில்?"

"எழிலெலாம் இணைந்த பொழிலாம் உன்றன் கூந்தலுக்கு இணையோ தேன்தரு பூமணம்? இல்லை, இல்லை; என்றும் இல்லை!"

"எல்லாம் அறிந்த செல்வரோ தாங்கள்?"

"இல்லை பெண்ணே. கற்றவை கொஞ்சம்; மற்றவை கணக்கில."

"பொருளில் குற்றம் பொதிந்த பாடல் அது. இயற்கையில் கூந்தலுக்கு இல்லை மணமென யாவரும் அறிவர். இட்டுக் கட்டி இயற்றமிழ் புலவன் உரைத்த கதையன்றோ?"

"கட்டுக்கதைதான்; ஆனால் கருத்து அப்படியன்று. இறையனார் என்ற இன்தமிழ்ப்புலவரை முறையிலாச் சமய மூடர்தம் முழுமுதற்கடவுளே எனப்பலப்பட ஏற்றியுரைத்தனர். கடவுள் பெயரைக் காதலால் இன்றும் பெற்ற மக்கட்குப் பெயரிடுதல் மரபே. கட்டுக்குலையாக் கன்னி உடலோய்! நான் உரைத்ததில் ஏதும் குறையெனில் மறுக்க."

"உரைத்தவை அனைத்தும் உங்களுக்கு உகந்த கருத்துகள். எப்படி இருப்பினும் அப்பழம்பாடல் தப்புடைத்து; ஒப்புவீர் அன்றோ?"

"இல்லை, பெண்ணே; இல்லை. வழுவெனில் அப்பாடல் இன்றுவரை வழங்கி வந்திருக்காது. ஒருவர்க்கு ஒருவர் உள்ளன்பு கொண்டு, இயற்கை நெறியில் இணைந்து இன்பம் துய்த்தபின், தலைவியின் நலத்தைப் புனைந்துரைத்துத் தலைவன் மகிழ்வதாய் அமைந்த இகலிலாச் செய்யுள் அது."

அழகுச்சிலையின் அண்மையினால் மயக்கத்திற்கு ஆளாகிக் கூந்தலது மணத்தைப்பற்றி எண்ணத்தைச் சிதற விட்டிருந்த விக்கியண்ணன், தன்பார்வையை அவளுடலுக்காகத் திருப்பி

ஆராய முற்பட்டபோது, இளவரசியின் உடல் ஒருமுறை உணர்ச்சியால் அசைந்ததைக் காண, அகத்தை இழந்தான்.

அவளோ, விக்கியண்ணனின் உடலணைப்பிலே தான்முன் கண்டிராத உணர்ச்சியின் எழுச்சியினை உணர்ந்தாள்; அப்படி உணரவே, அவள் உடல் நடுங்கியது; உள்ளம் தடுமாறியது.

'இந்த அணைப்பிலே என் உள்ளமும் உடலும் ஒருங்கே ஒடுங்கிப் போகின்றனவே, அஃது ஏன்? எத்தனையோ ஆண்களைப் பார்த்திருக்கிறேன்; அவர்களோடு பழகியிருக்கிறேன். ஆனால், அவர்களால் இந்நாள்வரை எழுப்பமுடியாத இன்ப உணர்வுகளை இந்த மனிதனால்மட்டும் எப்படி எழுப்பமுடிகிறது? இவரைவிட வயதில் இளையவர்களையும் அழகில் மிகுந்தவர்களையும் விரும்பாத என்னுள்ளம் எங்கிருந்தோ சற்றுமுன்னர்தான் இடையில் குறுக்கிட்ட இவர்மீது நாட்டங்கொள்வானேன்? பெண்களோடு மென்மையாகப் பழகத்தெரியாதவர் இவரென்று செய்கைகள் விளக்குகின்றன. முரட்டுத்தனமாய் என்னைக் கவர்ந்து குதிரைமீது கொண்டு செல்பவர், சூழ்நிலையை எத்துணைத் திறமையாய்த் தனக்குத் தகுந்ததாகப் பயன்படுத்திக் கொள்கிறார்! இல்லை யெனில் இடையை வளைத்துப் பிடித்திருக்கும் கையேன் மெல்ல மேலும்கீழும் அசைந்து பெண்மைக்கு மேலும் மென்மை சேர்க்கவேண்டும்?'

விக்கியண்ணனின் அணைப்பிலே வீழ்ந்துகொண்டிருந்த கடம்பமாதேவி, விலகியிருந்த மேலாடையூடே வெளிச்சமென விளங்கிய தன்மேனி அழகிலே வெட்கமனைத்தும் துறந்தோனாய் அந்த ஆண்மகன் விரும்பிப் பார்வையைச் செலுத்தியதைக் காண வேதனை அடைந்தாள்.

"என்ன ஆண்மகன் இவன்? இக்கட்டான நிலையிலுள்ள ஒருபெண்ணின் எழிலில் தன்னையே மறந்து தஞ்சமடையக் கூடியவன் வீரனாக இருக்கக்கூடுமா?"

அவனிடத்துச் சிறிது வெறுப்பை அடைந்தாளேயாயினும், அவன் கண்களில் அவள் கண்ட காதல் வேட்கையின் மிகுதியால் அவள் உள்ளத்தை வெட்கம் ஆட்கொண்டது; முழுமதியொத்த

முகத்தினிலே செழுமை மிகுந்தது. உணர்ச்சிப்பெருக்கை ஆற்றாலாய் மேலாடையைத் திருத்திக்கொள்ள அவள் முயன்ற செய்கை, விக்கியண்ணனுக்கு மேலும் மகிழ்ச்சியை விளை விப்பதாய் அமைந்தது.

ஆடையை அவள் சரிசெய்துகொள்ள முயன்ற அதேநேரம், விரைந்து கொண்டிருந்த குதிரை திடீரென்று நின்று, பக்காவாட்டில் திரும்பி மீண்டும் விரையவே விரைவின் மாற்றத்தால் நிலை குலைந்த இளவரசி விழாமலிருக்க விக்கியண்ணனின் உடலைப் பற்றுக்கோடாய் வலிய பற்றியணைத்துக்கொள்ள, அதற்காகவே நெடுநேரம் காத்துக்கொண்டிருந்தானென்ன அவனும் அவளுடலை ஆரா ஆசையுடன் இறுகத் தழுவியதோடு, இயலாதவனாய்த் தன்னிதழ்களைப் பளிங்கொத்த அவளின் கழுத்திலே பதித்து விட்டான். எல்லாம் ஒரு வினாடியில் நடந்துமுடிந்துவிட, ஏதும் செய்ய உணரா அவள் தடுமாற்றம் நிறைந்த குரலில் தன் சீற்றத்தைக் காட்டுவாளானாள்.

"நீங்கள் ஓர் ஆண்மகன்தானா?"

சீறினாள் அவள்; அவனோ சிரித்தான்.

"என் செய்கையே நான் ஆண்மகன் என்பதை நிலை நாட்டியிருக்குமே!"

"பொருத்தமற்ற செய்கையை நன்றெனச் சொல்வீர். கூர்வேல் கொண்டு போரிடுகளத்தில் நேர்நின்று பகைமுடித்தல் வீரர்க்கு அழகு. என் வீரர்களுக்கு அஞ்சி என்னைக் கவர்ந்து விரையும் உங்கள் வீரம் நகுதற்கு உரியது. பெண்களிடம்தாம் உங்கள் வீரம் வெளிப்படும்போலும்!"

"என்னுடைய வீரம் என்றுமே உன்போல் மெல்லியர் தம்முன் எடுபடுவதில்லை. நான் புறமுதுகு காட்டுகின்ற ஒரே இடம் எது தெரியுமா? காமக்கூட்டம் காணுதற்கேற்ற அழகுப் பெண்கள் ஆராக் காதலால் அணைக்க அமைக்கும் மஞ்சம் மட்டுமே! மற்ற களங்கள் என்முன் இற்றென முடிபவை. பெண்ணின் எழிலே!

பேசுஞ்சிலையே! கண்ணின் ஒளியே! கருத்தின் தெளிவே! உன்னைக் கண்டஞான்றே உள்ளம் இழந்தேன்."

கடம்பமாதேவி அவன் சொற்களால் வாடினாள். பல பெண்களிடம் அவன் பழகியவன் என்ற எண்ணம் அவள் நெஞ்சைப்புண்ணாக்கும் நிலைதான் என்ன? அவள் தன் மாற்றத்தை அறிந்து சோர்ந்தாள்.

"எல்லா பெண்களிடமும் இப்படித்தான் நடந்து கொள்வீர்களோ?"

"என்றும் இல்லை! உன்னழகும் இளமையும் ஒருநொடியில் என்னை உன்னடிமையாக்கிவிட்டன; உன்னுள்ளம் அதை உணர்த்த வில்லையா?"

விக்கியண்ணனின் பேச்சிலே குழைந்தொலித்த வேட்கை, அவள் சீற்றத்தைப் போக்கியதோடு முகத்திற்கு மேலும் செழுமையைச் சேர்த்தது. நெஞ்சில் நிறைந்து விரைந்த புன்னகையை மறைத்துப் புரியாதவள்போல் கேட்டாள்.

"இப்பொழுது நானன்றோ உங்கள் அடிமையாக உங்களால் கடத்திச் செல்லப்படுகிறேன்!"

"இல்லை, இல்லை; என்றுமே இல்லை! இப்போது மட்டுமன்று; எப்போதுமே நான்தான் உன்னடிமை. எந்தப் பெண்ணிடமும் இதுநாள்வரை நான் கண்டிராத, என்னுள்ளத்தை முழுதுமாய்க் கவர்ந்திராத அழகுப்பொழிலான உன்னைச் சொந்தமாக்கிக்கொள்ள என்றுமே உன்னடிமையாக இருக்க நான் தயங்கேன். என் நெஞ்சம் உனக்காக ஏங்கித்துடிப்பது உனக்குக் கேட்கவில்லையா? கண்ணே, உன் நெஞ்சைக் கொண்டு என் நெஞ்சைக் கேட்டுப்பார். அது, நான் சொல்வது அனைத்தும் உண்மை என்பதை உறுதிப்படுத்தும்."

கடம்பமாதேவி அவனுடைய வாய்ச்சொற்களால் தன்வயத்தை இழந்தாள் என்றால் மார்புற அவளுடலை வலிய அணைத்து நெஞ்சங்களை இணைக்க முயன்ற அவன் செய்கையால் இவ்வுலக

நினைவை முற்றும் இழந்தாள் என்றே சொல்லவேண்டும். அவனுடைய அன்புப் பேச்சாலும் ஆசை அணைப்பாலும் தன்னையே மறந்து அவனோடு ஒன்றிப்போன அவள் பேசியபோது, பேச்சு முழுமையாகத் தெளிவாக வெளிப்படவில்லை.

"எந்தப் பெண்ணுமே ஒரு கோழையை ஏற்றுக் கொள்வதில்லை."

தன்னுடைய பேச்சு அவனிடம் விளைவித்த மாற்றத்தைக்காண அவள் மகிழ்ச்சி அடைந்தாள். குதிரையைச் சட்டென்று நிறுத்திய விக்கியண்ணன், அதே வேகத்தோடு அவள் முகத்தைச் சீற்றத்தோடு தன்னிடக் கையால் தூக்கிக் கூர்ந்து நோக்கினான்.

"என்னையா கோழை என்கிறாய்?"

அவன் பேச்சிலிருந்த தடுமாற்றம் அவளுக்கு நகைப்பை உண்டாக்கியது.

"ஏன் சிரிக்கிறாய்?"

அவனுடைய வெகுளி அவளுக்கு அகமகிழ்ச்சியைத் சேர்த்தது. அவள் பேசினாள்.

"கோழைகளின் சீற்றம் அதிக நேரம் நிலைப்பதும் இல்லை; அதே போல் எவ்வித பாதிப்பை விளைவிப்பதும் இல்லை."

அவன் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்வது நன்கு தெரிந்தது.

"என்னைக் கோழை என்றா மீண்டும் கூறுகின்றாய்?"

"ஆமாம். உங்கள் செய்கை உங்களை வீரர் என்று விளக்கு வதாக இல்லையே!"

விக்கியண்ணன் குதிரையை மீண்டும் செலுத்தினான்.

"பெண்ணின் பேரெழிலே! காதலும் வீரமும் இரண்டு கண்களெனக் கொண்ட வேளிர்குலத்து வீரன் நான். மலையே அசையினும் நிலையில் திரிதலில்லா நெஞ்சுரம்மிக்கவன் நானாகும். வாளெடுத்து என்னெதிர் நிற்பார் வானவன் நாட்டிலேயே இல்லை என்றால் என்னெதிர் வென்றவர் என்பதும் ஏது."

"வீரரே! உங்கள் பேச்சு நகைப்பைத் தருகிறது. உங்களுக்கெதிர் ஒருவரும் இல்லையெனில், என்னுடைய வீரர்களுக்கஞ்சி இப்போது விரைவதும் ஏன்? வீரர்கள் என்றும் வெறுமொழி புகலார்."

விக்கியண்ணன் வாய்விட்டுச் சிரித்தான். அவன் சிரிப்பதன் காரணத்தை அறிந்திராத கடம்பமாதேவி சீறினாள்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

"தேனொத்த மொழியினிளே! தேவையோ விளக்கமும்? நான் உன்னைக் கடத்திவந்ததே என்வீரத்தைப் பறைசாற்றும். உன் வீரர் களுக்கு அஞ்சி நான் ஓடிவந்துவிடவில்லை. மானும் நேர்நில்லா மாதுன்னைக் கண்டபொழுதே என்னுயிராய்க் கொண்டேன். அப்படி இருக்க, ஒப்பிலா உன்றன் மனதிற்குகந்த வீரர்க்கெதிராய் வாளை என்கை உருவுமேல், நாளை உன்னை நான் அணைக்கக் கூடுமோ? கையில் வாளொடு நான் களம்புகுந்தால், வையமே நடுங்கும்!"

அவன் பேச்சை அவளுள்ளம் முழுமையாக ஏற்றுக்கொண்ட தெனினும், ஏற்காதவள்போல் கடம்பமாதேவி சொல் ஆடலானாள்.

"நான் நம்பமாட்டேன்."

"இப்பொழுது நம்பவேண்டா; எப்பொழுது என்வீரத்தை நீ ஒப்புக்கொள்கிறாயோ, அன்று எந்த எதிர்ப்புமின்றி என்னை நீ ஏற்றுக்கொள்ளவேண்டும்; சரிதானே?"

"ஏன்? இப்போது உங்களால் வீரத்தைக் காட்டமுடியாதா?"

"ஏன் முடியாது? கருவொடு இணைந்தது எங்குல வீரம்! கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கும் முன்பே வாளொடு

தோன்றிய மூத்தகுடி எங்குடி! வாய்ப்பு கிடைப்பின் இப்போதே என்வீரம் எதிர்படும்."

"அதோ பாருங்கள்."

அவள் காட்டிய திக்கில் விக்கியண்ணன் பார்வையைத் திருப்பினான். அங்கே சிறிது தொலைவில் முரடர்கள் சிலர் உருவிய வாள்களுடன் பல்லக்கொன்றைச் சூழ்ந்து கொண்டிருந்தனர். அவர்களின் வாள்கள் மாலை ஒளியில் மின்னிக் கண்களைக் கூசச் செய்தன.

"நீ எதிர்பார்க்கும்படி நான் என் வீரத்தைக் காட்டுவேனானால், நீ எனக்குச் சொந்தம், சரி தானே?"

குழல் சிரித்தோவென அவள் சிரித்தாள்.

"அதைப்பற்றிப் பின்னர்ப் பேசுவோம். மேலும், பெண்ணின் உள்ளம் பேரம் பேசக்கூடிய ஒன்றன்று!"

"நன்று! நன்று! இதோ நேரில் காண்."

அடுத்த வினாடி குதிரை விரைந்தது. அதைவிட வேகமாய் வேறெதுவும் விரையக்கூடும் என்பதை அறிந்திராத இளவரசி கடம்பமாதேவியைப் பெரிதும் வியப்பில் ஆழ்த்த விழைந்ததாய், அவன் கையிலிருந்து விரைந்து பாய்ந்து சென்றது எறிவேல்!

## 4. கலையுள்ளமும் கண்ணீரும்

*"எண்ணும் எழுத்தும் இயலைந்தும் பண்ணான்கும்*
*பண்ணின்ற கூத்துப் பதினொன்றும்...."*

நாடக மகளிர்க்கு இன்றியமையாதனவைகளாகக் கூறப் பட்டவைகளில் ஒன்றேனும் குறைபடாமல், இளமையிலேயே ஏழாண்டுகள் இடையறாது பயின்ற பயிற்சியால் சிறந்த திறம் பெற்று, யாவரும் போற்றும் இயற்கை அழகு மிகப் பெற்ற நடன வல்லியாகிய வண்டார்குழலி, விழிகள் மெல்ல மூடியிருக்க எதிலும் நாட்டமில்லாது சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

கணிதத்தின் சிறப்பினையும் 'எழுத்தறியத்தீரும் இழிதகைமை' எனும் இலக்கணம் அமைந்த எழுத்துகளின் சிறப்பினையும் இவை களால் உண்டாகிய இயற்றமிழின் கூறுபாடுகளான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணிகளின் சிறப்பினையும் இசைத் தமிழுக்கியைந்த நால்வகைப் பண்களின் பெருமையையும் அப் பண்களோடு கூடிய பதினொருவகைக் கூத்துகளையும் வசையின்றி எங்கும் தன் இசைபெருக வாய்க்கப் பெற்றிருந்த வஞ்சிக்கொடி வண்டார்குழலியின் முகம் அப்போது வாட்டமுற்றிருந்தது. அடுத்ததைக் காட்டும் அந்த அழகு முகம் அவள் கொண்ட எண்ணத்தை எடுத்துக் காட்டியது.

எத்துணைச் சிறப்புகள் அவள் எய்தியிருந்தும் என்ன பயன்? இந்த உலகம் எல்லாரையும் ஒப்ப அவளையும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறதே! அவள்தான் என்ன செய்வாள்? 'எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர் திண்ணியர் ஆகப் பெறின்.' உண்மைதான்; ஆனால், அதுவே எப்போதும் எந்த நிலையிலும் முடியக்கூடியதா? அவளிடம் அமைந்திருந்த அழகை, ஆற்றலை, கலையைக் கண்டு அகமகிழ்ந்து மயங்கிப் பாராட்டும் மக்கள் அவளையும் தங்களுக்குள் ஒருத்தியாக ஏற்றுக்கொள்ளத் தயங்கு வதேன்? 'குலத்தளவே ஆகுமாம் குணம்' என்று கூறி ஒதுக்கும் குறைபாடுதான் ஏன்? 'வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனைய(து) உயர்வு' என்ற பொய்யில் புலவன் மெய்யுரைக்கு இந்தக் குமுகாயம் புகழ்சேர்த்திருக்குமேயாயின் இன்று அவள் எண்ணி எண்ணி வாடவேண்டி வந்திருக்காதே!

கணிகையர் குலத்தில் பிறந்துவிட்ட ஒரே காரணத்திற்காக இந்தக் குமுகாயம் அவளை இழிவுபடுத்துமேயானால், பெண்ண வளால் என்னதான் செய்ய இயலும்? அவளும் பெண்தானே? அவளுக்கு மட்டும் மற்ற பெண்களைப்போல் ஆசைகொள்ள உரிமை கிடையாதா? ஒருத்திக்கு ஒருவன் என்ற உயர்ந்த வாழ்க்கையை அவள் விரும்பினால் அதையேன் அனைவரும் மறுக்கவேண்டும்?

கணிகையர் குலத்தில் பிறந்தவள் கணிகையாகவே வாழ வேண்டுமென்பது என்ன நீதி? 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'; உண்மை அதுதானே? ஆனால் நடைமுறையில் கடைபிடிக்கப்

படுவதென்ன? பிறந்துவிட்ட இடத்தைக் கொண்டு இன்னார்க்கு இன்ன வாழ்க்கைதான் என்று நியதியை ஏற்படுத்திய கொடுமை யாரைச் சேரும்? பிறப்பைக் கொண்டு நான்குவகை வருணத்தைக் காட்டிப் பிறப்பில் வேற்றுமையைத் தோற்றுவித்தது ஏன்? அவைகளிலும் தொழிலைச் சொல்லிப் பிரிவுகளை ஏற்படுத்திய பேதைமை ஏன்?

ஆண்டான் அடிமை வேறுபாட்டை நிலைநிறுத்த, ஆண்டாண்டாக அனைத்தையும் தேடிக்கொண்டோர் மெல்ல மெல்ல ஆண்டவன் பெயரைச் சொல்லியும் விதியென விளக்கங் கூறியும் இந்தக் குமுகாயத்திற்கு விளைவித்துவிட்ட கொடுமைகள் அல்லவா இந்த இனப்பிரிவுகள்! செய்தொழிலாலேயே ஒருவர்க்குச் சிறப்பு என்றால் எந்தத் தொழிலைச் செய்யவேண்டும் என்பதைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு எல்லாருக்கும் இங்குத் தரப்படுகிறதா? அங்கும் பிறந்த குலமன்றோ பிரித்து நிற்கின்றது.

கணிகையர்குலமாம்! குலத்தளவே ஆகுமாம் குணம்! என்னே மடமை! உரிமை மனம்படைத்த ஆணினம் பெண்களுக்கிழைத்த பெருந்தீங்கு இதனினும் வேறெதும் இருக்கக் கூடுமா? எல்லா வகையிலும் தம்மொடு ஒத்த பெண்களைப் போகப்பொருள்களாய்ப் பொதுவுடைமையாய் மாற்றியது எவ்வகையில் பொருந்தும்? படிப்பு பகுத்தறிவைக் கொடுக்கும்; படித்த பெண் உரிமையைக் கேட்பாள். அதை எண்ணித்தான் 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?' என்ற வழக்கை ஆண்கள் உலவவிட்டிருக்க வேண்டும்.

அங்காடிக்குச் சென்றால் விலைகொடுத்து வேண்டிய பொருள்களைப் பெறலாம். அதுபோன்றன்றோ பெண்களிலும் ஒரு பிரிவினரை யாரும் விலைகொடுத்துப்பெறும் நிலைமைக்கு உள்ளாக்கி வைத்துள்ளனர். பொருட்பெண்டிர்! அப்பப்பா! எப்படிப் பட்ட கேவலமான நிலைக்குப் பெண்களை இந்த ஆண்கள் தள்ளி வைத்துள்ளனர்.

கணிகையர் குலத்தில் பிறந்துவிட்ட காரணத்தால் தானும் கணிகையாக வாழவேண்டும் என்பதை வண்டார்குழலி ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. நுண்ணறிவுடையோர் நூலொடு பழகினும் பெண்ணறிவு என்பது பேதைமைத்தே என்று அவளுக்கு

அறிவுறுத்தினர் அவளை அறிந்த அனைவரும். அவர்கள் கருத்திற்கு வண்டார்குழலி உடன்பட்டாள் அன்று. அவள் வாழ விரும்பினாள்; அதற்காக முறையற்ற வாழ்வை மேற்கொள்ள ஒருபோதும் நினைத்த தில்லை. கணிகையர் குலத்தில் பிறந்த மாதவியைக் கண்ணகிக்கு இணையாக வைத்து ஏற்றும் குமுகாயம், அதே குலத்தில் அரும்பிட்ட அவளை மட்டும் மாறாக ஏன் நடத்தவேண்டும்?

அன்னைதான் அவளைச் சரியாக அறிந்திருக்கவில்லை என்றால் அரசருமா அப்படி? வண்டார்குழலி மன்னரின் எண்ணத்தை மறுத்தபோதுதான், அரசியல் என்ற சூதாட்டத்தில் அவளையும் ஓர் அங்கமாக ஆகுமாறு அவளைக் கேட்டுக் கொண்டார். அதன் விளைவு, அதற்குள் இன்னலைத் தோற்றுவிக்கக் கூடுமா?

தஞ்சை மாநகரை நோக்கி மெல்ல நகர்ந்து கொண்டிருந்த மூடுபல்லக்கு திடீரென நிற்கவே, எங்கெங்கோ அலைந்து கொண்டிருந்த வண்டார்குழலியின் எண்ணம் இயல்பு நிலைக்குத் திரும்பியது. திரையை விலக்கிப் பார்த்தவள் திடுக்கிட்டாள். பல்லக்கு நின்றதன் காரணத்தை உணர அச்சம் அவளைப் பற்றியது. முன்னே இருவர், பின்னே இருவர் எனப் பணியாட்கள் சூழப் பயணத்தை மேற்கொண்டிருந்த வண்டார்குழலி, பல்லக்கை உருவிய கூர்வாள்களுடன் வீரர்கள் சூழ்ந்திருந்ததையும் உதவிக்காக அவளுடன் வந்திருந்த பணியாட்கள் ஒன்றும் செய்ய இயலாதவர்களாய்ப் பகைவர்தம் வாள்முனைகள் வருத்தத்தை ஏற்படுத்திவிடுமோ என்ற அஞ்சிய நிலையினராய் அசைவின்றி நின்றிருப்பதையும் காண, அடுத்து என்ன நிகழுமோ என்று நடுங்கி அயர்வுற்றாள்.

வண்டார்குழலியின் வாட்டத்திற்கும் காரணம் இருந்தது. பன்னிரண்டாம் அகவையிலேயே, ‘ஆடலும் பாடலும் அழகும் என்றிக் கூறிய மூன்றினொன்று குறைபடாமல்’ அரங்கேறிய அந்நாள்முதல், இளமையின் எழிலெலாம் ஒருங்கே இடங்கொண்ட பொழிலே பெண்ணெனப் பூத்துக்குலுங்கும் அந்நாள்வரை, அவளை அடைய வேண்டுமென்ற ஆற்றவொண்ணா ஆசையால் ஆகாத வழிகளை எல்லாம் நாடி அல்லல்கொண்டோர் எண்ணிக்கை

யற்றோர்! அப்படி ஆசைகொண்டு அல்லல்பட்டோரில் ஒருவரின் ஆட்களாக அவர்கள் இருக்கக்கூடுமோ?

எண்ணிப்பார்க்கவே நெஞ்சம் வலித்தது. அதுவே உண்மையா மெனின், அவளுடைய வாழ்வு ஆனையுண்ட விளங்கனியாய் அர்த்தமற்றுப் போய்விடும். அப்படிப்பட்ட இழிந்த வாழ்வினும் இறந்துபடுவதே சிறந்தது என்பதை வண்டார்குழலி என்றோ தெரிந்து வைத்திருந்தாள்.

இன்னார் இவர்கள் என்று அறியும்படி அவர்கள் இருக்க வில்லை. கருங்குன்றொத்த மேனியராய்க் கனல் வீசுங் கொடும் நோக்கினராய் இருந்தனர். எதற்கும் அஞ்சா இறுகிய நெஞ்சினர் என்பது சிறுத்த சிவந்த கண்கள் வெளிப்படுத்தின. இவர்கள் யாராக இருக்க முடியும்? சோழவீரர்களாக நிச்சயம் இருக்க முடியாது. சோழ வீரர்கள் இப்படித் தகாதமுறையில் நடந்து கொள்ள மாட்டார்கள்.

அதுவும்போக, அவளை அறியாத சோழவீரர்களே இருக்க முடியாது. பெண்ணொருத்திக்குத் தன்னாட்சியில் எந்தத் தீங்கேற் பட்டாலும் தனக்கே ஏற்பட்டதாகக் கொண்டு தண்டிக்கத் தயங்காதவர் சோழ மன்னர் விசயாலயர். அவராட்சியில் வீரர்கள் யாரிடமும் தவறாக நடந்துகொள்ள இடமேஇல்லை. ஒருவேளை முத்தரையரின் ஆட்களாக இருக்கக் கூடுமோ? நிச்சயமாய் இருக்கமுடியாது. வரையா வண்மைக்குப் பெயர்பெற்ற முத்தரையர் முறையற்று நடந்துகொள்ளக்கூடும் என்ற எண்ணமே நகைப்பைத் தருகிறதே!

சுற்றுப்புறத்தைப்பற்றிச் சூழ்ந்த நகைப்பொலி வண்டார்குழலியின் எண்ண ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தியது; அதைத் தொடர்ந்தொலித்த ஆணவக்குரல் அவளுடலை அச்சத்தால் அசைத்தது.

"உம்! ஏன் நின்று கொண்டிருக்கிறீர்கள்? அந்தப் பெண்ணை இழுத்துக்கொண்டு வாருங்கள்."

அச்சத்தால் பின்னசைந்த வண்டார்குழலியின் கையை ஒரு முரட்டுக்கை பற்றி இழுக்க, ஈடுகொடுக்க முடியா அவள் முகம்

சிவக்க வெளியே வந்து விழுந்தாள். அவள் நெஞ்சம் அச்சத்தில் வேகமாக இயங்கியது. கண்களை மூடிக்கொண்டு கடவுளை வேண்டிக் கொண்டாள்.

அவளின் கோரிக்கை ஆண்டவனின் செவியை அடைந்திருக்க வேண்டும் என்று அவள் நம்பினாள். இல்லையென்றால் அந்த நேரத்தில் அந்த வீரன் தன்குதிரையில் விரைந்து அவ்விடத்திற்கு வந்தடைய வேண்டிய நிகழ்ச்சி நேர்ந்திருக்க வேண்டா அன்றோ?

தங்களை நோக்கி விரைந்துநெருங்கும் குதிரையின் குளம் பொலியால் பார்வையைத் திருப்பிய பகைவர்களின் வேகத்தைவிட, விக்கியண்ணனின் கையிலிருந்து விடுபட்ட வேலின்வேகம் மிகையாகவே இருந்தது. அதன் விளைவாகத் தோளிலிருந்து குருதி பெருகத் துள்ளித் தள்ளி விழுந்த அந்த முரட்டுமனிதனின் இரும்புப்பிடியிலிருந்து விடுபட்ட வண்டார்குழலி, அதையடுத்து விளைந்த செயல்களால் எழுந்த வியப்பினின்றும் விடுபட முடியாதவளாய் நின்ற இடத்திலேயே நிலைத்து நிற்கவேண்டியதாயிற்று.

சூறாவளியைப்போல் மாறா வேகத்துடன் உடன்று வந்த குதிரையினின்று உருவி வாளுடன் தரையில் குதித்த அவ் வீரனைத்தான் அவள் கவனித்தாளேயன்றி, அவனோடு அக்குதிரையில் உடன்வந்திறங்கிய பெண்ணரசியைக் கண்டாள் இல்லை. நிலமே அதிர விரைந்துவந்த பரியினின்றும் இம்மியும் குறிதப்பாது எதிரி தொலைவில் இருக்கும்போதே வேலெறிந்து வீழ்த்தக் கூடியவன் எப்படிப்பட்ட வீரனாக இருக்கக்கூடும்!

எப்படிப்பட்டவன் அவன் என்பது உருவிய வாளொடு தரையில் தவழ்ந்த சில வினாடிகளில் வண்டார்குழலியேயன்றி, அவனுக்கெதிராக வாட்போரில் ஈடுபட்ட பகைவர்களுக்கும் புரிந்து விட்டது. அத்தனை பகைவர்களுக்கிடையே தனியனாய் இறுமாந்து போரில் இறங்கியவன், ஒன்று அறிவிலியாய் இருக்க வேண்டும்; இல்லையேல், போற்றற்குரிய ஆற்றல்மிக்கவனாய் இருக்க வேண்டும். நேர்யாரும் நில்லாப் போர்மறவன் அவனென்பதைக் கண்ணிமைக்கும் முன்பாக அவன் கையிலிருந்த வாள் பகைவர்

இருவர்தம் கன்னங்களைப் புண்ணாக்கிக் களித்த செய்கை வெளிப்படுத்தியது.

குதிரையருகே நின்றுகொண்டு விக்கியண்ணனின் வாளாற்றலைக் கண்டுகொண்டிருந்த பெண்ணரசி, விரைவில் அவன் எண்ணத்தைப் புரிந்துகொண்டாள். எதிரிகளுடைய திறமைக்கும் மேலாகப் போரிட்டாலும் யாரையும் கொல்லும் எண்ணம் அவனுக்கு இல்லை என்பதையும் எதிரிகள் எண்மரும் மாறாக உறுதியுடன் அவனை நெருக்குவதையும் உணர்ந்த அவள் மேலும் அமைதியாகக் காத்திருக்கவில்லை. வேலால் வீழ்த்தப் பட்டுக் கிடந்தவனின் உடைவாளை உருவிக் கொண்ட அவள், ஏதும் செய்வதறியாதவளாய் நின்றிருந்த பணியாட்களையும் பல்லக்குத் தாங்கிகளையும் நோக்கி, "ஏன் நிற்கிறீர்கள்? தாக்குங்கள்!" என்று கட்டளையிட்டபடியே பகைவர்கள்மேல் பாய்ந்தாள். அவ்வளவுதான்; எங்கும் ஒரே கூச்சல்! குழப்பம்!

பெண்ணொருத்தியால் இத்தனை இயல்போடு வாட்போர் செய்யக் கூடுமோ? விக்கியண்ணன் தன்னையே கேட்டுக் கொண்டான். அந்தக் காட்சியைக் கண்களால் கண்டும் அவனால் நம்பமுடியவில்லை. இஃதென்ன விளையாட்டா? இல்லை. வாட் போர்தானா? இத்துணை எளிதாக இரண்டு பகைவர்களை இவளால் வீழ்த்தமுடியுமெனில் இவள் திறமையை என்னென்று புகழ்வது!

விக்கியண்ணன் எய்திய வியப்பை மற்றவர்கள் யாரும் அங்கு எய்தியதாகத் தெரியவில்லை. அவன்தான் புதியவன்; ஆனால் மற்றவர்கள்? சோழகுல இளவரசி கடம்ப மாதேவியின் வல்லமையைப்பற்றி அறியாதவர்கள் சோழநாட்டில் இருக்க முடியுமா?

இரண்டுபேர் வீழ்த்தப்பட்டாலும் ஊக்கத்தைச் சிறிதும் இழக்காத எதிரிகள், திடீரென்று பின்வாங்குவதன் காரணத்தை முதலில் தெரிந்துகொள்ளவில்லை விக்கியண்ணன். சிலவினாடிகள் சென்றபிறகே அவனுக்கு உண்மை புரிந்தது. உண்மையை உணர்ந்தானோ இல்லையோ, அவனும் மெல்லப் பக்கவாட்டில் தன்குதிரைக்காக அசைந்தான். என்ன செய்கிறான் என்பதை யாரும்

கவனிக்குமுன், அவன் குதிரை அவனைத் தாங்கிக் கொண்டு கிழக்கு நோக்கிப் பறந்தது.

பகைவர்கள் பயந்து ஒதுங்கிப் பின்வாங்கியதன் காரணத்தை அறிய முடிந்த வண்டார்குழலிக்கு, தன்னைப் இன்னலினின்றும் காத்த அவ்வீரன் இடையிலேயே ஏன் ஓடி மறையவேண்டும் என்பது வியப்பாக இருந்தது. ஆனால், இளவரசி கடம்பமாதேவிக்கு அவன் செய்கையின் காரணம் தெரிந்தே இருந்தது.

இளவரசியைத் தங்கள் கண்முன்பாகவே கடத்திச்சென்ற குதிரைவீரனைத் தொடர்ந்து தங்கள் குதிரைகளை விரட்டிக் கொண்டு சோழவீரர்கள் அவ்விடத்தை வந்தடைந்தபோது, விக்கியண்ணனைத் தாங்கிச் சென்ற குதிரை வெகுதொலைவில் சென்று மறைந்துவிட்டிருந்தது.

## 5. கோட்டைக்குள்ளே குழப்பம்

*"கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்*
*நிலைக்கெளிதாம் நீரது அரண்."*

தஞ்சைக் கோட்டையைக் கண்ட விக்கியண்ணன் பெரிதும் வியப்படைந்தான். கோட்டையைச் சுற்றிலும் அகலமும் ஆழமும் நிறைந்த அகழியும் அகழியைத் தொடர்ந்து சுற்றிலும் அடர்ந்து படர்ந்த காவற்காடும் இயற்கையாய் அமைந்து எழுந்து நின்ற தன்மை சோழமன்னர் விசயாலயனின் போர்திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டு என்பதைக் கோட்டைவாயிலை அவன் அடையுமுன்னரே கண்டுகொண்டுவிட்டான்.

தேரார்தம் முற்றுகை திங்கள்கள் பலவாயினும் தாங்கக்கூடிய ஆற்றல் மட்டுமன்றி, அங்ஙனம் முற்றுகையிட்டோர்தம் வலிமையை அற்றுப்போகச் செய்யும் பெற்றியும் அக்கோட்டை பெற்றிருந்ததை அருகில் நெருங்கி ஆய்ந்து கவனித்த விக்கியண்ணன் உடனே அறிந்துகொண்டான். இப்படிப்பட்ட கோட்டை இருக்கப்பெற்றுமா சோழமன்னர் சேரரின் உதவியை நாடியிருக்கிறார்? இந்தக் கேள்விக்கு விக்கியண்ணன் விடையறிந் திருக்கவில்லை.

கோட்டையின் மதிற்சுவர்கள்தாம் எத்தனை வகைப்பட்ட பாதுகாப்புப் பொறிகளைத் தம்மகத்தே தக்கவைத்துக்கொண்டிருக் கின்றன! வீரர்களே அன்றித் தாமே வளைந்தியங்கி அம்பெறிந்து ஆட்களைக் கொல்லும் பொறிகள், கரிய விரல்களையுடைய குரங்கு களைப்போல் உருவமையப் பெற்றுத் தம்மை நெருங்கினாரைக் கடித்துக் கொல்லும் பொறிகள், பொன்னையும் உருக்கிச் சேரார் மீது வீசும் உலைப்பொறிகள், அகழியை நீந்திக் கோட்டைமதிலை அடைவோரைக் கோத்திழுக்கும் தூண்டில் வடிவினவாகிய கருவிகள், பகைவர் உச்சியிற் பாய்ந்து அவர்தம் மூளையை உறிஞ்சும் ஆண்தலைப்புள்வடிவினவைப் பறக்கவிடும் கருவிகள், மதின்மேல் ஏறுவோரை மறித்துத் தள்ளிவிடும் இரும்பாலியன்ற கவைக்கோல்கள், அம்பேவும் அறைகள், மதிலுச்சியைப் பற்றுவோர் கைகளைத் துளைக்கும் ஊசிப்பொறிகள், பகைவர்கள்மேல் பாய்ந்து கண்களைக் கொத்தும் மீன்கொத்திப் பறவையைப் போன்ற பொறிகள், மதிலுச்சியை அடைந்தார் உடலைக் கொம்புகளால் கிழித்தெறியும் இரும்பால் இயன்ற பன்றிப் பொறிகள்; அடடா! இன்னும் எத்தனை வகையான பொறிகள்! இத்தனை பாதுகாப்புகள் அமையப்பெற்ற கோட்டையைக் கடந்து வெற்றிகொள்வது கனவிலும் கருதமுடியாத ஒன்றன்றோ! அப்படி இருக்கப் பிறர் உதவியை விசயாலய சோழர் நாடும் பேதைமை ஏன்?

இரவுபகலின்றி எந்நேரமும் இடைவிடாது ஆய்தம் தாங்கிய வீரர்கள் அணிஅணியாய் மதில்மேல் கண்ணுங்கருத்துமாகக் காவல் காத்தபடி உலவிவருகின்றனர். போதாதற்கு அகழியிலே வாயகன்ற முதலைகள் ஆராப்பசியோடு அலைந்து கொண்டிருக்கின்றன. அப்படியிருந்தும் சோழமன்னர் அச்சங்கொள்ளும் கட்டாயம் என்னவாக இருக்கக்கூடும்?

கோட்டைக்காவல் கடுமையாக இருந்ததெனினும் வாயிலைக் கடந்து உள்ளே செல்லுதல் விக்கியண்ணனுக்கு அரிதாய் இருக்க வில்லை. வாயிற்காவலர்கள் எந்தத் தடையுமின்றி எல்லோரையும் உள்ளே செல்ல அனுமதித்தபோதும், புதியவனான தன்னை நன்கு நினைவில் நிறுத்திக் கொள்ள அவர்கள் தவறவில்லை என்பதை அவன் கவனிக்கவே செய்தான். அதே சமயம், வெளியே செல்பவர்கள்மீது வீரர்களின் நாட்டம் வெகுவாக விழவில்லை என்பதையும் விக்கியண்ணன் கண்டுகொண்டான்.

கோட்டைக்குள் நுழைந்துவிட்ட விக்கியண்ணனின் வியப்பு, கோட்டையின் உட்புற அமைப்பைக் காண மேலும் விரிவதாயிற்று. உள்ளே, காவல் செய்யப்படவேண்டிய பகுதி சிறியதாயும் போரிட நேருமேல் அதற்காகச் சுற்றிலும் இடம் பரந்தும் இருந்ததன்மை, கோட்டையை யாராலும் என்னமுயன்றும் கைப்பற்றல் முடியாதென்று அவன் முன்னரே கொண்டிருந்த எண்ணத்தை உறுதிபடுத்துவதாய் இருந்தது.

விக்கியண்ணன் அடர்ந்த காட்டிடையே அமைதியாகப் பலநாழிகைகள் ஓய்வெடுத்துக் கொண்டு புறப்பட்ட காரணத்தால், அவன் கோட்டையின் உட்புறத்தை அடைந்தபோது இருள்படர்ந்து நிலவு வெளிவந்துவிட்டிருந்தது. அப்படி வெளிவந்துவிட்ட வெள்ளி நிலாவும் வீதியிலே பொருத்தப்பட்டிருந்த விளக்குகளும் தஞ்சையை அழகுமிக்க நகரமாக ஆக்கிக்கொண்டிருந்தன.

மலர்மாலைகள் தொங்கவிடப்பெற்ற உச்சியினையுடையவாய் வைரமணிகள் பதிக்கப்பட்டதொப்ப அழகமைந்த தூண்களா லியன்ற மாடமாளிகைகள்; அம்மாடமாளிகைகளின் உச்சியின் நிலாமுற்றத்திலே நிலவோடு நிலாக்களாக ஒளிசிந்திக் கொண்டிருந்த நேரிழைகள்; அந்நேரிழையர் கண்பார்வைக்காகக் குறுக்கும்நெடுக்குமாகக் குதிரைமீது உலாவரும் ஆடவர்கள்; அவ்வாடவர்கள் தங்கள் அருங்காதல் மகளிருக்குப் பரிசளிக்கத்தக்க அணிகள் விற்பனைக்காகப் பெய்துவைக்கப்பட்டுள்ள பண்டக சாலைகள்; வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ்சாந்தும் பூவும்கையும் மேவிய விரையும் ஆகிய இன்னோரன்ன அழகுப் பொருள்களைச் சுமந்து சென்றுவிற்பவர் திரிகின்ற தெருக்கள்; பட்டாலும் பல்வகை மயிராலும் பருத்தி நூலாலும் பல்வகை ஆடைகளைப் பாங்குற அமைக்கும் நெய்வோர் இருக்குமிடங்கள்; பட்டும் பவளமும் அகிலும் ஆரமும் மாசற்ற முத்தும் மணியும் பொன்னும் இன்னும் பிறவற்றால் செல்வ வளமிக்கோர் வாழ்கின்ற மறுகுகள்; எண்வகைக் கூலங்கள் குவிக்கப்பட்டுள்ள கூலவீதிகள்; மற்ற பிறவும் விக்கியண்ணனின் எண்ணத்தை எங்கும் அலைய விடாமல் வியப்பில் ஆழ்த்தின.

கள்விற்போர், மீன்விற்போர், மணப்பொருள் விற்போர், ஊன் விற்போர், வெண்கலக் கன்னார், தச்சர், கொல்லர், தட்டார், மறவர்,

இப்படிப் பலதொழில் வல்லாரை எல்லாம் வழியிலே கண்டு வாழ்த்திச் சென்ற விக்கியண்ணனுக்கு, நகரின் நடுநாயகமாக அமைந்திருந்த மன்னரின் மாளிகை வாயிலை அடைந்த போதே தான் ஏற்றுக்கொண்டு வந்திருந்த கடமை நினைவிற்கு வந்தது. குதிரையை நிறுத்திவிட்டு வாயில் காவலரை நெருங்கியபோதுகூட அவன் தான் கொண்டுவந்திருந்த ஓலையைப்பற்றி நினைத்தான் இல்லை.

"மன்னரை நான் பார்க்க வேண்டும்."

காவலர் இருவரும் அவனை ஊன்றிக் கவனித்தனர். இடையில் வாளொன்று தொங்கத் தங்களையொத்த வீரனொருவன் அந்த நேரத்தில் அரசரைப் பார்க்க வேண்டுமென்றது அவர்களுக்கு வியப்பை அளித்தது.

"யார் நீங்கள்?"

"சேர நாட்டிலிருந்து வருகிறேன்."

"நினைத்தோம். ஊருக்குப் புதியவர் தாங்கள் என்பதை உங்கள் செய்கையே உணர்த்தியது. புதியவர் அன்றிப் புகழுடைய சோழமன்னர் வாயில்வரைக் குதிரை ஏறி எவரும் குறுகார். நன்று வீரரே! அரசரைப் பார்க்க வேண்டியதன் தேவை என்ன?"

"கட்டாயம் நீங்கள் தெரிந்துகொள்ள...."

விக்கியண்ணன் தன்பேச்சை இடையிலே நிறுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. காரணம், இடையை அடைந்த அவன் இடக்கை கொண்ட ஏமாற்றமே! அவன் அப்படியே நிலைத்து நின்றான். அவன் முகத்தை அகத்தைப்போலவே இருள் சூழ்ந்தது.

விக்கியண்ணனுக்கு எதுவும் புரியவில்லை. இடையிலிருந்த ஓலை எப்படிக் காணாமல் போயிருக்கும்? மீண்டும்மீண்டும் அவன் கைகள் இடையை ஆராய்ந்து ஏமாற்றம் எய்தின. ஓலை எங்கே விழுந்திருக்கக்கூடும்? வரும்வழியில் ஓய்வெடுத்துக் கொண்டானே, அங்கு விழுந்திருக்கக் கூடுமோ? அன்றிப்,

பல்லக்கில் வந்த அந்தப் பெண்ணைக் காக்க முரடர்களோடு மோதினானே, அங்கு விழுந்திருக்கக் கூடுமோ? ஓலையின்றிச் சோழமன்னரைக் காணமுடியுமா? அப்படியே கண்டாலும், ஓலையின்றி அவனால் என்ன செய்ய இயலும்?

பைத்தியக்காரனைப் பார்ப்பதுபோல் காவலர் இருவரும் தன்னைக் கவனிப்பதையும் பொருட்படுத்தாமல் குதிரைக்காக விரைந்தவன், தன்னை யாரோ விளிப்பதை அறிந்து திரும்பினான். அடுத்த வினாடி குதிரையில் தாவி அமர்ந்தவனாய்க் குதிரையைப் பறக்கவிட்டான். குதிரையைப் போலவே விக்கியண்ணனின் எண்ணமும் பறந்தது. இந்த வீரர்களிடம் அகப்பட்டால் தான் சிறை செய்யப்படுவது நிச்சயம் என்பது அவனுக்கு உறுதியாகத் தெரிந்ததே. காட்டுவழியில் அவர்களோடிருந்த காரிகையை அவர்கள் கண்முன் கடத்தியவனன்றோ அவன்! அதற்குள்ளாகவா அவர்கள் அவனை மறந்திருக்கக்கூடும்?

கோட்டையின் வெளிவாயிலை நோக்கிக் குதிரையைச் செலுத்திய விக்கியண்ணன், நகரிலே ஏதோ குழப்பம் மெல்லப் படருவதை உணர்ந்துகொண்டான். கோட்டை வாயிலைக் கடந்து காவற்காட்டினுள் நுழைந்த சற்று நேரத்திற்கெல்லாம் ஊதுகுழலின் பேரொலியும் அதைத்தொடர்ந்து கோட்டையின் வெளிக்கதவு விரைவாக மூடப்படும் செய்கையும் விக்கியண்ணனை வெகுவாகக் குழப்பிவிட்டன.

# 6. இரவில் எழுந்த இன்னிசை

*"பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்தும்*
*இருள்தீர எண்ணிச் செயல்."*

விக்கியண்ணன் தன்னையே நொந்து கொண்டான். எண்ணாச் செய்கை மண்ணாய் முடியுமென்பது எத்துணை உண்மை! எண்ணாமல் ஒரு செயலில் இறங்கப் போயன்றோ தன்னிடமிருந்த ஓலையை இழக்கவேண்டியதாயிற்று. அழகு பெருந்தொல்லை யானது என்பதை அவன் அறிந்திருந்தும் அறிவற்று நடந்து கொண்டது குற்றமே! அழகைச் சுவைப்பதோடு நிறுத்திக் கொள்ளாது அதை அடையமுயன்றது அறியாமைதானே?

பெண்ணே பெரிதாய் எண்ணும் அவனுடைய பேதைமைதான் என்னே! மன்னர் இட்ட கட்டளையை மறந்து மற்றொரு செயலில் ஈடுபட்டது அவனுடைய தவறுதான். ஆனால், அவன் வீரனல்லவா? பெண்ணொருத்தி துயரில் இருப்பதை அறிந்த பிறகும் அந்தத் துயரைப் போக்க அவன் முயலாதிருப்பானேல் அவன் ஆண்மைக்கு இழுக்கன்றோ ஏற்படும்? அதற்காக, அந்தப் பெண்ணைத் தன் குதிரையில் கடத்திச் சென்றது நியதியில்லையே. நியதியில்லை என்பதை விக்கியண்ணின் மனம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. அவளைக் கடத்திக்கொண்டு சென்றதற்கும் அவளுடைய பாதுகாப்பன்றோ காரணம்.

நிலவு பால்போல் காய்ந்து கொண்டிருந்தும் விக்கியண்ணனின் முயற்சிகள் அனைத்தும் வீணாயின. எல்லா இடங்களிலும் தேடி அலைந்தும் ஓலை கிடைக்கவில்லை. ஓலை வேறுயார் கையிலும் கிடைத்திருக்கக் கூடுமோ?

ஓலையைத் தேடி ஓய்ந்துபோன விக்கியண்ணனின் நெஞ்சில் வேறொரு குழப்பமும் வெகுநேரமாய் நிறைந்திருந்தது. கோட்டை யிலிருந்து வெளியேறியபோது விளைந்திட்ட குழப்பத்திற்குக் காரணம் அவன்தானோ? ஏனிருக்கக்கூடாது? அரண்மனை வாயிலில் அவனை நிறுத்த முயன்ற வீரன் அடர்காட்டிலே அவன் சந்தித்த அந்தப் பெண்ணுடன் இருந்தவன்! அப்படித்தான் இருக்க முடியும். அந்தப்பெண் சோழநாட்டு இளவரசிதான். அதனால்தான், அவனைச் சிறைசெய்யக் கோட்டைக்குள் அத்தனை ஏற்பாடுகள் நடந்திருக்க வேண்டும். இனி அவன் என்ன செய்யக்கூடும்!

கோட்டைக்குள் சென்றால் எந்த வினாடியும் சிறைபடுத்தப் படுவான். சேரமன்னரின் ஓலையும் இல்லை. ஓலை இருப்பின் சோழமன்னரைச் சந்தித்து நிலையை விளக்கி இளவரசியிடம் நடந்துகொண்ட செய்கைக்கு வருத்ததைத் தெரிவித்துத் தப்பித்துக் கொள்ளவும் கூடும். இப்போதோ, எதுவும் செய்ய இயலாது விக்கியண்ணன் சோர்ந்து நின்றான்.

விக்கியண்ணனின் புலன்கள் சுறுசுறுப்படைந்தன. கண்கள் இமையாது சற்றுத்தொலைவில் இருந்த புதரையே உற்று நோக்கின. அமைதியான அந்தச் சூழலில் அந்தப் புதரில் மட்டும் ஏற்பட்ட

அசைவின் கரணியம் என்ன? முதலில் மெல்ல அசைந்த புதர் அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மேலும் அசையத் தொடங்கியது. மெல்ல வீசிய தென்றல்காற்றின் வேகத்திற்கு விஞ்சி அசைந்த அப்புதரில் ஏதோ புதிர் இருக்கவேண்டுமென்பதைப் புரிந்து கொண்ட அவன், குதிரையோடு தன்னையும் மரங்களின் அடர்விலே மறைத்துக்கொண்டு கூர்ந்து கவனிக்கலானான்.

விக்கியண்ணன் எண்ணியது வீண்போகவில்லை. புதரினிருந்து வெளிப்பட்ட மனிதன், ஒரு வினாடி சுற்றுமுற்றும் தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்பதைக் கணித்துவிட்டு, புதரினின்று வெளிப்பட்ட அதே விரைவோடு தெற்கே விரைந்து மரங்களிடை மறைந்தான்.

மரங்களிடை மறைந்த மனிதனின் செயலால் விக்கியண்ணனின் மனதில் விதவிதமான ஐயங்கள் விளைந்தன. கோட்டைக்குள் விளைந்த குழப்பத்திற்கு இம்மனிதன்தான் காரணமோ? கோட்டைக்குள் என்னதான் நடந்திருக்கக்கூடும்? யாரிந்த மனிதன்? இந்த இரவு நேரத்தில் இந்த மனிதன் இக்காட்டிலே இத்துணை விழிப்புடன் நடந்து கொள்வானேன்? எதிரில் இருக்கும் இந்தப் புதரில் என்ன மறைபொருள் இருக்கக் கூடும்? மறைந்த மனிதனைப் பின்தொடர்வதா? இல்லை, புதரிடை மறைந்துள்ள புதிரினை ஆராய்வதா?

விக்கியண்ணனின் சிந்தனையோட்டம் தொலைவில் எழுந்த குதிரைக் குளம்பொலியால் தடைப்பட்டது. மறைந்த மனிதனைத் தொடர்வதென்பது இனியாகாது. தொடர்வதால் தொல்லைகளன்றி நன்மைகள் ஏற்பட வாய்ப்பில்லை. விரைவில் ஒருமுடிவுக்கு வந்தவனாய் மரங்களின் மறைவிலேயே குதிரையை நிறுத்தி விட்டுப் புதரைநோக்கி அவன் நடந்தான். அதே சமயம் அவன் கண்கள் எல்லாப் பக்கங்களையும் கவனிக்கத் தவறவில்லை.

அந்தப்புதர் கோட்டை மதிலையொட்டி அகழிக்கப்பால் வெகு தொலைவில் இல்லாமலிருப்பினும் மற்றவர் கண்களுக்குப் புலப் படாவண்ணம் பலவாறு பிரிந்து செல்லும் ஒற்றையடிப் பாதைகளுக்கு எட்டாத முறையில் அமைந்திருந்த அமைப்பே அதில் மறைந்திருக்கும் மறைபொருளை உறுதிசெய்வதாயிருந்தது.

அவன் எண்ணியது தவறாகவில்லை. புதரினுள் நுழைந்தவன், மறைந்திருக்கும் சுரங்க வழியைத் தேடிக் காலடியோசையில் கவனத்தைச் செலுத்திய காரணத்தால் காலடி ஓசை மாற்றத்தைக் கொண்டு எளிதில் மறைவழியைக் கண்டுகொண்டான். காலடியோசையில் அவன் கவனம் முழுமையாக இல்லாதிருந் திருப்பின் அவ்வழியைக் கண்டுகொண்டிருத்தல் என்பது மிகமிகக் கடினம். அத்துணைத் திறமையாக அவ்வழி அமைக்கப்பட்டிருந்தது விக்கியண்ணனுக்கு வியப்பை அளிக்கவில்லை. அவன் தன் பணியில் எத்தனை மறைவழிகளை இதற்குமுன் பார்த்திருக்கிறான்!

படிகள் வழியே உள்ளே இறங்கியவன் பாதுகாப்பிற்காகத் தான் வந்தவழியை மூடிவிட்டதால் எங்கும் இருள் நிறைந்தது. இருளைக் கண்டு மருள்பவன் அவனில்லை என்றாலும் காற்றோட்டம் இல்லாமையால் நிலவிய தீ நாற்றம் அவனைச் சிறிது பாதிக்கவே செய்தது. எனினும் விக்கியண்ணன் எந்தத் தடுமாற்றமும் இன்றி அந்த இருளில் முன்னேறினான். அவனெதிர் பார்த்தபடியே வேறு பிரிவுகளின்றி வழி ஒருவழிப்பாதையாகவே அமைந்திருந்தது. ஆனால், அடிக்கடி பாதையில் படிகள் குறுக்கிட்டுக் கீழும்மேலும் சென்றதால், தவறி விழுந்துவிடாமல் இருக்க மெல்லவே கால்களால் தடவிப்பார்த்தே செல்லவேண்டியிருந்தது.

'இந்த வழிக்கு முடிவே இருக்காதா? எவ்வளவு மெதுவாக நடந்திருந்தால்கூட இந்த இருநாழிகை நேரத்தில் அகழியைக் கடந்து கோட்டைக்குள் வந்திருக்க வேண்டுமே! ஒருவேளை நடுநாயகமாய் விளங்கும் அரண்மனைக்குள் செல்லும் வழியாக இருக்குமோ? அப்படித்தான் இருக்க வேண்டும்.'

எண்ணியபடி முன்னேறிக் கொண்டிருந்த விக்கியண்ணனின் நடை சட்டென்று தடைப்பட்டது. அவன் செவியில் சேர்ந்த ஒலி உண்மைதான்! அதோ, அந்த ஒலி மீண்டும் எழுகிறதே! அதில்தான் எத்துணை இனிமை! யாரோ பெண்ணொருத்தி பாடுவது போலன்றோ தெரிகிறது. அப்படியானால் அவன் தன் பயணத்தின் முடிவை அடைந்துவிட்டானா?

உண்மைதான்! அடுத்து அவன் முன்னேறியபோது படிகள் மேல்நோக்கிப் போயின. இசையின் மயக்கத்திலும் ஏதோ ஒரு

சிக்கலை அவிழ்க்கப்போகும் ஆர்வத்திலும் வேகமாய் முன்னேறிய விக்கியண்ணன், விரைவிலே பாதையின் முடிவிற்கு வந்து விட்டோம் என்பதைத் தெளிவாகக் கேட்கமுடிந்த இன்னிசைப் பாடலால் தெரிந்துகொண்டான். மதுவுண்ட வண்டெனக் களிப்பேறிய உள்ளத்தோடு இசையிலே எண்ணத்தை இழந்து நின்றவிடத்திலேயே நின்றான். குழலோ? யாழோ? கொஞ்சும் மழலையோ? அந்தக்குரல் அவன் கொண்ட உறுதியைக் குலைத்து இளக்கியது.

*"இமையிலா நோக்கோய், வாழி;*
*இளமதி சுடரோய், வாழி;*
*உமையவள் இடத்தோய், வாழி;*
*உட்புறம் ஆனோய், வாழி;*
*நமனுதை காலோய், வாழி;*
*நஞ்சுறை மிடற்றோய், வாழி;*
*எமதுளம் நிறைந்தோய், வாழி;*
*எம்மிறை, வாழி! வாழி!*

*நான்மறைப் பொருளே, வாழி;*
*நல்லவர்க் கருளே, வாழி;*
*தேன்மிகு கொன்றை மாலை*
*திகழ்ந்தொளிர் மார்போய், வாழி;*
*மான்மழு கையோய், வாழி;*
*மன்றினில் நின்றோய், வாழி;*
*நான்தொழு நல்லோய், வாழி;*
*நாதனே, வாழி! வாழி!*

*நீறணி உடலோய், வாழி;*
*நீண்முடி சடையோய், வாழி;*
*சீறரா அணியோய், வாழி;*
*செஞ்சுடர் கனலோய், வாழி;*
*ஏறெழு உரவோய், வாழி;*
*எல்லையில் பொருளே, வாழி;*
*ஈறிலி, ஈசா, வாழி;*
*எந்தையே, வாழி! வாழி!"*

இசையின் இனிமையிலும் பாட்டின் பொருளிலும் தன்னை இழந்திருந்த விக்கியண்ணன் பாடல் முடிந்து பலவினாடிகள் முடிந்தும் அப்படியே அமைதியாக இருந்தான். குரலே இத்துணை இனிமையெனில் குரலுக்குரியவள் எத்துணை இனியளாக இருக்க வேண்டும்! ஆவல் உந்த அவன் இயங்கினான்.

வழியை அடைத்துநின்ற கதவைத் திறப்பது அவனுக்கொரு கடினமான செயலில்லை. சேர நாட்டிலே பல போர்களிலும் உள் நாட்டுக் குழப்பங்களிலும் மன்னர்க்குத் துணையாகத் தூண்போல் விளங்கிய அவனுக்கு அறியாதவை அரசியலில் மிகச் சிலவாகவே இருக்கக்கூடும்.

விக்கியண்ணன் எதிர்பார்த்தபடியே அந்த அறை விளங்கியது. ஆனாலும் அவன் வியப்படைந்தான். அதற்குக் காரணம் அந்த அறையின் அமைப்போ அன்றி அறையின் நடுவே யாழோடு அமர்ந்திருந்த பாவையோ அன்று. அந்தப் பாவையை அவன் முன்னரே அறிந்திருந்ததே அவன் கொண்ட வியப்பிற்குக் காரணம் ஆகும்.

தான் நின்ற நிலையிலேயே விக்கியண்ணன் வெகுநேரம் நின்றிருந்தான். எதிரே அமைந்திருந்த எழிலுருவம் அவனுள்ளத்தைத் தடுமாறச் செய்தது. உறுதியற்ற அவனுடைய உள்ளம் ஒரு நிலைக்கு வரத் தகுதியற்றுச் சோழநாட்டில் அடியெடுத்து வைத்த ஒரே நாளில் தான்கண்ட இரண்டு பெண்களின் எழில்களிலும் ஆழ்ந்து எந்தப் பெண்பக்கம் சாய்வதென்பதை முடிவுசெய்ய இயலாததாய்க் குழம்பித் தவித்தது.

## 7. வலையில் அகப்பட்ட வரிப்புலி

*"பையுள்நோய் கூரப் பகல்செய்வான் போய்வீழ*
*வையமோ கண்புதைப்ப வந்தாய் மருள்மாலை*
*மாலைநீ யாயின் மணந்தார் அவராயின்*
*ஞாலமோ நல்கூர்ந் ததுவாழி மாலை"*

தேன்போலும் இனிய செந்தமிழ் இசையாலே மதுவருந்திய மனிதனைப்போல் மயக்கமுற்ற நிலையினனாய், வந்த வழியின்

தடுப்பை முன்போல் மூடிவிட்டு அறைக்குள் நுழைந்துவிட்ட அந்த ஆண்மகன், அருகே வந்து தன்னழகிலே ஆழ்ந்து நிற்கும் தன்மையையும் அறியாதவளாய் வயமிழந்து வண்டார்குழலி பாடிக் கொண்டிருந்தாள். உள்ளத்திலே கள்ளத்தைப் புகுத்திவிட்ட அந்த வீரனின் உரு, அவளுள்ளத்தில் ஆழ்ந்து நிலைத்துவிட்ட காரணத்தால் அவனின் நினைப்பு எழுப்பிய ஆராக்காதல் அவளுடலுணர்வினைப் பெரிதுபண்ணி ஏக்கத்தைத் தோற்றுவிக்க, ஆற்றாளாய் உள்ளம் பாடலொடு ஒன்ற உருகிக் கரைந்து கொண்டிருந்தாள். அப்படி உருகி ஒன்றவே அவள் கண்கள் அருவியென நீரைக் கொட்டின.

யாழொடு இயைந்தினித்த பாடலிலே எண்ணத்தை முற்றுமிழந்து நின்ற விக்கியண்ணன், பாடல் முடிந்தபிறகும் அந்தப்பைங்கிளி கண்ணீர் உகுத்தபடி அமர்ந்திருந்ததைக் காண ஏதும் அடுத்துச்செய்வதறியாது அப்படியே நின்றான். ஏதோ எண்ணத்தில் நிலைத்துவிட்ட அவ்வினியவளின் அமைதியை அவன் எப்படிக் கலைக்கக்கூடும்? அவளின் அமைதி கலையுமேல், அவன் தன் வருகைக்கு எந்தக் காரணத்தைச் சொல்வான்?

விக்கியண்ணனின் எண்ணம் இப்படி இருக்கையில் வேல்விழியாள் எண்ணமோ அவனைச் சுற்றியே வலம்வந்தது. அவளின் எண்ணவோட்டத்தைமட்டும் அவன் அறிந்துகொள்ளக் கூடுமேல், அவன் தனித்து விலகி நிற்க வேண்டிவராதே.

'அந்த ஆண்மகன் யாராக இருக்கக்கூடும்? அவனுக்கும் இளவரசி கடம்பமாதேவிக்கும் என்ன தொடர்பு? காதலர்களாக இருப்பின் வண்டார்குழலியின் வாழ்வென்னாவது? இதற்குமுன்னர் அவள் எந்த ஆண்மகனையும் எண்ணத்தால் எண்ணியும் அறியாத வளாயிற்றே! அவன்மேல் அன்புகொண்டுவிட்ட அவள் வாழ்வு என்னாவது? இளவரசியின் காதலனாக இல்லை அவனெனில் இருவரும் ஒரே குதிரையில் பயணம் செய்வானேன்? இளவரசியின் காதலனெனின் பின்னேன் இளவரசியின் மெய்க்காப்பளர்களைக் கண்டதும் தப்பித்துச் செல்லவேண்டும்?'

வண்டார்குழலி வாடினாள். கூற்றே வரினும் நிலைகலங்கா அவளின் உறுதி அவனைக் கண்டபோதே அனலிடை மெழுகாக

உருகிய விந்தைதான் என்ன? இறைவன் பணியே என்றும் தன்பணி என்றிருந்த அவள் நெஞ்சில் காதல் காலூன்றிய திறம்தான் என்னே? உருவைக்காட்டி உள்ளத்தைச் சிதைத்துச் சென்றவனை அவள் மீண்டும் காணநேருமா? பனிநீரொத்துத் தூய்மையாய் இருந்த அவள் எண்ணத்தைப் பாழ்படுத்தியவன் இப்போது எங்கே உள்ளானோ? யார்அவன்? எந்த ஊர்? எப்படிப்பட்டவன்?

வண்டார்குழலி பெருமூச்சுவிட்டாள். அந்த பெருமூச்சிலே உள்ளே அடங்கிக்கிடந்த வெம்மையெல்லாம் அனலாக வெளி வந்தது. அவன் யாராக, எப்படிப்பட்டவனாக இருப்பின் என்ன? இனி அதைப்பற்றி எண்ணி என்ன பயன்? எப்போது அவள் நெஞ்சம் அவனைக் கண்டதும் ஏற்றுக்கொண்டுவிட்டதோ, அப்போதே அவள் அவனுடன் ஐக்கியமாகிவிட்டாள்.

கொவ்வைக் கனியொத்த அவளிதழ்கள் அசைந்ததைக் கண்ட விக்கியண்ணன் வேட்கை மீதுற அவளை நெருங்க நினைத்த போது, அவளிதழ்களினின்று மெல்ல வெளிவந்த சொற்கள் அவனைச் சிலையென நிற்கவைத்தன.

"அன்பரே, என் துன்பத்தைத் துடைக்க மாட்டீரா?"

இடத்திற்கிடம் தன்னெண்ணத்தை மாற்றிக்கொள்ளும் இயல்புடைய விக்கியண்ணன் எப்பொழுதுமே பிறர்பொருளை வேட்கும் பேதைமை உடையவனன்று. அவன் உள்ளம், எத்தனை தான் எதிரே அமைந்திருந்த எழிலுருவால் ஈர்க்கப்பட்டிருந்தாலும் இன்னொருவனை அவளெண்ணம் ஏற்றுக் கொண்டுவிட்ட தென்பதை அறிந்ததுமே தன்னைத் தேற்றிக்கொள்ளத் தலைப்பட்டு விட்டது. அஃது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. அங்கே மேலும் இருப்பது வேதனையையே கூட்டும் என்பதால் அவளறியும் முன்பாக அறையைவிட்டு அகலும் நோக்கால் வெளிக்கதவை நோக்கி மெல்ல அசைந்தான். ஆனால், அவனுடைய உடைவாள் அருகிருந்த பஞ்சணையில் மோதி ஒலியெழுப்பி அவனைக் காட்டிக் கொடுத்துவிட்டது.

வண்டார்குழலி திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தாள். அவனை அங்குக் கண்டதும் தன் கண்களையே அவளால் நம்ப

முடியவில்லை. அவள் கைகளிலிருந்த யாழ் நழுவித்தரையில் விழுந்தது. எல்லாம் சில வினாடிகள் நேரம்தான். அடுத்து அவள் எழுந்த விரைவும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அவனை நோக்கிச் செலுத்திய இளநகையும் விக்கியண்ணனை மேலும் வியப்பில் ஆழ்த்தின.

அவனைக் கண்டதும் அவள் அகம் மலர்ந்தது அவனுக்குப் புரிந்தது. அதன் காரணம் என்ன? வேறொருவனை விரும்புபவள் விக்கியண்ணனைக் கண்டதும் மேலாடையைச் சரிசெய்து கொள்வானேன்? வெட்கங்கலந்த பார்வையினளாய் அவனைக் கள்ளத்தனமாய்ப் பார்த்துக் களிப்புறுவானேன்? சற்றுமுன் அவள் கொண்ட வேதனை முற்றும் மறைவானேன்? இனம்புரியாத இளநகையை இப்போது ஏற்பானேன்? அவன் அந்த அறைக்குள் நுழைந்தபோது, மணந்தவனைத் துறந்தவள் மாலையின் கொடுமையைப்பற்றிக் கனத்த நெஞ்சொடு கானல்வரிப் பாட்டைக் கல்லும் கனியப் பாடிக்கொண்டிருந்தவள், அவனைக் கண்டதும் கார்கண்ட மயிலொப்பக் களிப்புறுவானேன்?

வண்டார்குழலி வாய்திறவாச் சிலையைப்போல் வடிவெலாம் ஒளிவீச, வஞ்சிக் கொடியுடல் மெல்லத் தவழ்ந்த மென்காற்றுக்கு ஆற்றாது அசைந்து, அங்கப் பொலிவெலாம் வீங்கி அவன் கண் களுக்கு விருந்தாகப் பொருந்திய செய்கை, விக்கியண்ணனைக் கொக்கியிட்டு இழுக்கவே, அவன் அவளுக்காக அசைந்தான்.

அருகே நெருங்கிவிட்ட அவன் வரவால் அந்த அழகுஉடல் மேலும் அசைவதாயிற்று. ஊதுலைபோல் மூச்சு எழ உயர்ந்து திரண்ட மார்பகங்கள், தங்கள் அமைப்பு நன்கு விளங்கப் புடைத்துப் பெருகி அசைந்து அந்த ஆண்மகனின் ஆசையைத் தூண்டின. மிகவும் அருகே நெருங்கிவிட்ட அவன் செய்கையால் மூச்சுவிடவும் முடியாதவளாய் அவள் நின்றாள்.

வண்டார்குழலி தன்னை மறந்த நிலையில் அப்படியே நெடுநேரம் நின்றுவிடவில்லை. அவனுடைய கைகள் ஆசையோடு அவளிடையை அடைந்தபோது, ஆர்ப்பரித்தெழுந்த உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டவளாய் அவனிடமிருந்து விலகி நின்றாள். அவனுடைய அணைப்பிற்காக அவளுடலும் அகமும் ஒருங்கே

ஏங்கியது உண்மைதாம். அந்த ஆசைக்குத் தாழ்ந்து அவனணைப்பிற்கு உடனே ஆளாகிவிட்டால், நாணமற்றவள் அவளென்று அவன் நகைக்கக்கூடுமன்றோ?

"குழலின், யாழின், கொஞ்சும் மழலையின் விழுமிய இசையோய்! யாழும் தோற்றது உன் இசையின் முன்னர். வாழிய மலரே, வாழி!"

"தாங்கள்?"

அவள் தடுமாறினாள்.

"மறந்ததோ அதற்குள்? மாதே, நன்று!"

ஏளனம் அவன் குரலில் இழையோடியது.

"மறப்பதா? நானா? இறப்பினும் இல்லை. பெரிதாம் உயிரின் பெண்மையைக் காத்த பெற்றியர் தாங்கள்! கைம்மாறு வேண்டாது என்னைக் காத்திட்ட உங்களைக் கனவிலும் மறவேன். நன்றியையும் எதிர்பாராது சென்ற செய்கை நல்லோர் நீங்கள் என்பதை..."

"போதும் பெண்ணே; புகழ்ச்சி போதும். என்னைக் கண்டதும் பின்னேன் வியந்தாய்?"

வெட்கத்தால் வண்டார்குழலி தலையைத் தாழ்த்திக் கொண்டாள். அதன் காரணத்தை அறியாது அவன் தவித்தான்.

"இந்த இடத்தைத் தாங்கள் அடைந்தது எப்படி என்றுதான்."

விக்கியண்ணன் குறும்பாகச் சிரித்தான்.

"மலரின் இருப்பிடத்தை வண்டிற்கு மற்றவர்களும் சொல்ல வேண்டுமா?"

விக்கியண்ணன் தன்னை நெருங்கியபோது வண்டார்குழலி முன்போல் விலக முயலவில்லை. அவன் கைவிரல்கள் அவள்

முகத்தை உயர்த்தியபோது, அவன் கண்களை ஏறிட்டு நோக்கும் வலிமையற்றுக் கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

"பூத்துக்குலுங்கும் பொழிலே எழிலாய் வாய்த்தாய்! பெண்ணே, உன்பெயரென்ன?"

அவனுடைய அண்மையும் ஆண்மையும் அவளை என்னவோ செய்தன. நெஞ்சம் வெகுவேகமாக இயங்கியது. அவள் விடையளித்த போது உடலின் நடுக்கம் சொற்களிலும் இழைந்தது.

"வண்டார்குழலி."

"உருவைப் போலவே கரும்புன் பெயரும்!"

அவன் கண்கள் தன்னுடலை ஆசையோடு ஆராய்வதைக் காண, வெட்கத்தால் கண்களை மூடிக்கொண்டாள். பொல்லாத மனிதன் அவனென்று புலம்பியது அவளுள்ளம். இல்லை யென்றால், முன்பழக்கமில்லாத அவளிடம் எவ்வித தடுமாற்றமுமின்றி இப்படி நெருங்கிப் பழகத் தோன்றுமா?

"வண்டார்குழலி!"

அவனுடைய மூச்சு அவள் முகத்தைத் தொடவே, அச்சத்தால் வாய்திறவாது அமைதியாக நின்றாள். ஆனால், கைகள் அமைதியாக நிற்கவில்லை. இடையைச் சேர்ந்த அவனிரு கைகளும் மலரொத்த அவளுடலை வலியசேர்த்து மார்புற அணைத்துக் கொள்ளவே, வண்டார்குழலி மயங்கி அவன் மார்பிலே முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

"பெண்ணே! உன்னழகு என்னைப் பித்தனாக ஆக்கிவிட்டது. குழலொத்த உன் குரலும் கொடியொத்த உன்னுடலும் என்னை எப்படியெல்லாம் வாட்டுகின்றன தெரியுமா? எங்கே? என்னைப் பார்."

அவள் தன்னிலை மறந்தவளாய் மிதந்தாள். அவனுடைய இதழ்கள் மெல்ல நெருங்குவதைக் காண அவளிதழ்களும்

அச்சத்தாலும் ஆர்வத்தாலும் துடித்தன. 'எண்ணும்போதே இத்துணை இன்பமிருக்குமெனில் இதழ்கள் இணைந்தால் இன்னும் எப்படி எல்லாம் இருக்குமோ! இறைவா! என்னாசைகளை எல்லாம் வெறும் ஏக்கங்களாக மாற்றிவிடாதே. என்னை எதற்காகவும் இவரிடமிருந்து பிரித்துவிடாதே!'

அவன் அவளை வலிய அணைத்தான். அவனுடைய கைகள் அவளுடலில் அங்குமிங்கும் அலைந்து அவளின் எண்ணத்தைத் திரும்ப அப்போதைய நிலைமைக்குக் கொண்டு வந்தன.

"ஐயா, இஃதென்? பையப் பைய! பெண்மையும் மென்மையும் உண்மையில் ஒன்றுதான். உங்கள் வேகத்திற்கு மென்னுடல் எதிர்நிற்றல் ஆகுமா? ஒருவரையொருவர் உணர்வதற்குமுன் இதெல்லாம் எதற்கு? அருளே உருவாய் அமைந்த அன்பரே! மற்றவர் அறியநேரின், கடன்பட்டதனால் இவள் உடன்பட்டாள் என்று கருதக்கூடும்! அதனால் ஏற்றம் ஏதும் உண்டோ? தனியளா? தழுவ இனியளா? தகுமா? இவற்றையெல்லாம் தாங்கள் எண்ணிப்பார்த்தல் முறையல்லவா?"

அவள் மொழிகேட்டு விக்கியண்ணன் மெல்லச்சிரித்தான். அவன் விழிகள் அவள் விழிகளை ஊன்றி நோக்கின.

"பெண்ணிற்கணியே! நீ உரைத்தவை எனக்கும் ஏற்புடையவே. மதுவின் மயக்கத்தில் நானிருக்கும்போதுகூட மாற்றார் பொருளை நாடும் பேதைமையை நான் இதுவரைக் கொண்டதில்லை; இனியும் கொள்வதுமில்லை. கண்டபோதே என்னுயிரை நீ கொண்டுவிட்டாய்! கொழுகொம்பறியாக் கொடியென உன்னெழில் விழிகளைக் கண்டபோது நான் உணர்ந்து கொண்டேன். பொங்கித் தளும்பும் உன் அங்கப்பொலிவே, பூவையுன் நெஞ்ச ஆவலைப் புலப்படுத்தும். தழுவுவதைத் தவிர்க எனநீ மொழிகுவை எனினும் உன் அகமகிழ்வினை உன்னழகு முகம் மலர்ந்து பறைசாற்றும். பஞ்சணைக்கு ஏற்ற பளிங்குடலாய்! இன்னும் அஞ்சுதல் எதற்கு? என்னைக் கொஞ்சுக ! "

அவனின் சொற்கள் தேனாய் இனித்தன. அவன்தான் எப்படிப்பட்டவன்! எத்துணைத் திறமையாகப் பேசக்

கற்றிருக்கிறான்! எத்தனை துல்லியமாக அவளுடைய அகத்தின் உணர்வுகளை அவன் அறிந்திருக்கிறான்!

ஒருக்கணம் சென்றிருந்தால் வண்டார்குழலி உலகையே மறந்திருக்கக்கூடும். அவள் முதலில் கவனிக்கவில்லை. இடைவெளி அறவே இதழ்களிடை அற்ற நிலையில், அவன் திகைத்து நின்றபோதே, அவளும் அதன் காரணத்தை அறியவந்தாள். இந்த நேரத்தில் இங்கு வரக்கூடியவர்கள் யாராக இருக்கமுடியும்?

வேலைசெய்யும் பணிப்பெண்கள் அச்சத்தோடு பின்தொடர விரைந்து அறைக்குள் நுழைந்த வீரர்களைக் கண்டதும் விக்கியண்ணனின் அணைப்பிலிருந்து விலகிநின்ற வண்டார் குழலி என்ன நடக்கவுள்ளதோ எனவெண்ணி அச்சங் கொண்டாள். ஆனால், விக்கியண்ணன் அச்சங் கொண்டான் இல்லை.

"உங்களுக்கு என்ன வேண்டும்?"

வீரர்களின் முன்நின்றவன் வண்டார்குழலிக்குப் விடையளித்தான். அவனின் கரிய திரண்ட தோற்றம் விக்கியண்ணனிடம் அவன்பால் மதிப்பைத் தோற்றுவித்தது.

"வேழமாம் நம்மரு சோழ மன்னரைக் கொல்ல முயன்ற பொல்லா மனிதர் இவரைச் சிறைசெய்ய வந்துள்ளோம். அரசரின் ஆணை இது."

வண்டார்குழலியின் முகம் அவள்கொண்ட குழப்பத்தையும் வேதனையையும் வெளிப்படுத்துவதாய் அமைந்தது. அவள் பேசியபோது சொற்கள் தடுமாறின.

"இவரா? இல்லை; தவறாய்ச் சொல்கிறீர்."

"தவறில்லை தாயே, தகுந்த சான்றுகள் இருக்கவே வந்தோம். இவரை எங்களுடன் அழைத்துச் செல்வதில் பிழையெதுவும் இல்லை."

விக்கியண்ணனுக்கு இப்போது எல்லாம் புரிந்துவிட்டது. கோட்டைக்குள் ஏற்பட்ட குழப்பத்திற்குக் காரணம் இதுதானா? வண்டார்குழலி சோர்ந்து சாய்ந்தாள்.

## 8. என்குறி எப்போதுமே தப்பாது

*"புண்ணூறு தன்திரு மேனியிற் பூணாகத்*
*தொண்ணூறும் ஆறும் சுமந்தோனும்..."*

வேழமெனச் சோழமன்னர் விசயாலயர் வீற்றிருந்தார். பக்கத்திலே சற்றுத்தள்ளிப் பட்டத்தரசி நிற்க, சூழ்ச்சித்திறன் மிக்க அமைச்சரும் நண்பருமான நாங்கூர்வேளிர் நற்குணப் பேரெழிலார் அருகே அமர்ந்திருந்தார். அனைத்துப்படைகளுக்கும் தலைவரான செங்கண்ணான், ஒற்றர்படைத் தலைவன் சேந்தன்கீரன் ஆகிய இருவரும் ஒருசார் பணிவோடு நின்றிருந்தனர்.

களங்கள் பலகண்டும் கலங்காத விசயாலயரின் சித்தம் சிறிது கலங்கியே இருந்தது. முதுமையை எய்திட்ட காரணத்தால் முன்போல் ஆட்சியில் தன்னால் பெரிதும் ஆர்வம் செலுத்த முடியாமைக்காக வாடினார். அடங்கிக்கிடந்த சோழவரசை ஓரளவிற்கு முன்னுக்குக் கொண்டுவந்துவிட்ட தன்னால் எங்கே அதை இறுதிவரை நிலைநிறுத்த இயலாது போகுமோ என்றே அஞ்சினார். அவருடைய அச்சத்திலே அனைவரும் பங்கு கொண்டிருந்த காரணத்தால், தென்றலெனத் தவழ்ந்துவந்த இளவரசி கடம்பமாதேவியை யாரும் முதலில் கவனித்தாரில்லை.

"தந்தையே!"

நிமிர்ந்து இளவரசியை நோக்கிய விசயாலயர் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. சோர்வு ஏற்பட்டபோதெல்லாம் அவளின் வரவு அவருக்குப் புத்துணர்ச்சியைக் கொடுக்கத் தவறியதில்லை. கணக்கற்ற போர்களிலே விசயாலய மன்னர் கலந்து கொள்ளக் காரணமானவளே இளவரசி கடம்பமாதேவியன்றோ!

"வா, மகளே; அருகே வா."

"இஃதென்ன? நான் கேள்விப்பட்டது உண்மைதானா?"

"உண்மைதான் மகளே."

அவள் வெகுண்டாள்.

"இத்தனை கட்டுக்காவலிருந்தும் அரண்மனைக்குள் நுழைந்து அரசரையே கொல்ல முயற்சி நடக்கிறதென்றால், என்ன பொருள்?"

"விதியின் வழிதான் வினைகள் நடைவுறும்."

நாங்கூர் வேளிர் மெல்லக் கனைத்தபடி குறுக்கிட்டார்.

"அரசரும் நாங்களும் அதைப்பற்றித்தான் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். பகைவர்களின் இலக்கு அரசரோடு மட்டும் நிற்கவில்லை என்பது தெரிகிறது. வரும்வழியில் உங்களையும் கொல்ல முயற்சி நடந்ததாகச் சற்றுமுன்னர்ப் பல்லவரையன் சொல்லிச் சென்றார்."

கடம்பமாதேவி அறையுள் இருந்த அனைவரையும் ஒருமுறை நன்கு நோக்கினாள். அவள் பேசியபோது பேச்சிலே நஞ்சு கலந்திருந்ததை அங்கிருந்த அனைவருமே புரிந்து கொண்டனர்.

"மன்னரைக் கொல்ல மாளிகைக்குள்ளேயே முயற்சி! எதற்காக அரண்மனைக்குக் காவல்? பகைவர்கள் எண்ணியபடி மன்னர் படுக்கையறை வரை நுழைந்து எதையும் செய்யமுடியுமேல் கோட்டைக்குக் காவல்தான் ஏன்? காவலர் தலைவர்தான் ஏன்?"

"அமைதி, மகளே; அமைதி. இமையொப்ப நம்வீரர்கள் அரண்மனையினை உரமுடன் காத்துவருகிறார்கள். காவலர் களையோ, காவல்தலைவரையோ குறைகூறிப் பயனில்லை. பகைவர்கள் இத்தஞ்சையைப் பலகாலம் முன்னர் ஆண்டுவந்தனர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எத்தனை மறைவழி இக்கோட்டைக்குள் இருக்கின்றன என்பதை யாரால் சொல்லக்கூடும்? அதுவும்போக, பகைவன் அகப்பட்டுவிட்டான். நேரே அவனை இங்குக் கொண்டுவரும்படி ஆணையிட்டிருக் கிறேன். இதோ, அவர்களும் வந்துவிட்டனர் என்று நம்புகிறேன்."

வாயில்வழியை அடைத்துகொள்பவன் போல் உள்ளே நுழைந்தான் காவல்தலைவன் கடியநெடுவேட்டுவன். நிமிர்ந்துயர்ந்த தன்னுடலைத் தாழ்த்தித் தலைகுனிந்து பணிவோடு பேசினான்.

"அரசே, குற்றவாளியைக் கொண்டு வந்திருக்கிறேன்."

இருபக்கமும் வீரர்கள் இருவர் பாதுகாவலாய்வர, உருவிய வாளொடு குதிரைப் படைத்தலைவன் பல்லவரையன் பின்தொடர அறைக்குள் வந்துநின்ற விக்கியண்ணனைக் கண்டதும் கடம்பமாதேவி வியந்துநின்றாள். அவளுடைய வியப்பின் காரணம் அங்குப் பல்லவரையன் ஒருவனுக்கே தெரிந்திருந்தது.

இவரா கொலைக்காரன்? இவர் எதற்குக் கொலைசெய்ய முயன்றார்? கடம்பமாதேவிக்கு எதுவும் விளங்கவில்லை. அரசரின் பேச்சு அங்கு நிலவிய அமைதியை அழித்தது.

"வீர, யார் நீ?"

விக்கியண்ணன் எந்த விடையைச் சொல்வான்? சோழமன்னருக்காகச் சேரமன்னரிடமிருந்து ஓலை தாங்கி வந்தானென்று சொன்னால் அதை அவர்கள் நம்பவேண்டுமே! ஓலை கையிலிருந்தாலும் அவர்கள் நம்பக் கூடும்; அதையும்தான் அவன் வரும்வழியில் இழந்து விட்டானே!

அவன் விடைகூறாது நிற்கவே, வேந்தர், கடியநெடுவேட்டுவனைக் குறிப்பாக நோக்கினார். குறிப்பறிந்த காவற்றலைவன் உடனே பேசலானான்.

"அரசே! புதியவனான இவன் இன்றுமாலை கோட்டைக்குள் நுழைந்ததை நம் காவலர்கள் கவனித்திருக்கின்றனர். அரண்மனை வாயில்காப்போரை அணுகி அரசரைப் பார்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறான். அப்போது பல்லவரையன் வரவே அஞ்சி ஓடிஒளிந்துவிட்டான். சற்றைக்கெல்லாம் மன்னரைக் கொல்ல முயற்சி நடந்திருக்கிறது. குற்றவாளி, தேடுவதற்கு அகப்படாமல் நடனவல்லி வண்டார்குழலியின் மாளிகைக்குள் புகுந்துவிட்டிருக்

கிறான். அப்படி நுழைந்ததைக் கண்ட சிலர் தங்கள் ஐயத்தை ஒரு நாழிகை முன்னர்தான் காவலரிடம் தெரிவித்திருக்கின்றனர். செய்தி அறிந்ததும் விரைந்து சென்று இவனைச் சிறைப்படுத்தினேன்."

"வண்டார்குழலியின் மாளிகையிலா இவர் இருந்தார்?"

குற்றவாளியை இளவரசி மதிப்பளித்து விளித்தது எல்லோருக்கும் வியப்பை அளித்தது.

"ஆம், இளவரசி. முத்தரையர் தலைநகருக்குச் சென்றிருந்த வண்டார்குழலி இன்று மாலைதான் தஞ்சை திரும்பியதாக ஒற்றர்கள் செய்தி கொண்டு வந்துள்ளனர். அதுவும்போக, இம்மனிதன் வண்டார்குழலியை வழியில் சந்தித்ததாகப் பல்லவரையரும் சொல்கிறார்."

"காவல் தலைவரே! ஆவதும் அழிவதும் நல்லதும் கெட்டதும் இல்லதும் உள்ளதும் வல்லவன் வழிப்படி செல்வது இயற்கை. யாரை நொந்து என்னபயன் விளையும்? இந்த வீரனைக் கொண்டு செல்க. யாவற்றையும் காலையில் முடிவுசெய்வோம் ."

"கூர்வாள் எறிந்த கொடியர் இவர் என்பதை நான் ஏற்கேன். தந்தையே, உங்களைக் கொல்ல முயன்றவன் முகத்தை யாருமே சரியாகப் பார்க்கவில்லையா?"

நாங்கூர் வேளிர் பதிலளித்தார்.

"இல்லை இளவரசி. அரசர் மட்டுமே அப்போது தனியாக அறையில் இருந்திருக்கிறார்."

விக்கியண்ணனைப் பின்தொடர்ந்து செல்லத் தொடங்கிய பல்லவரையனை அரசரின் ஆணை நிற்கவைத்தது.

"பல்லவரையா! அவர்கள் போகட்டும். நீங்கள் எல்லாம் நெருங்கி வாருங்கள்."

இருபக்கமும் வாள் வீரர்கள் காவலாய்ச் சூழ வெளியேறிய விக்கியண்ணனையே பார்த்துக் கொண்டிருந்த இளவரசி கடம்பமாதேவி தன் கவனத்தை அறைக்குள் திருப்பினாள். படைத் தலைவர்கள் பணிவோடு அரசரின் கட்டளைக்காகக் காத்திருந்தனர். அரசர் மெல்லவே பேசினார்.

"உங்கள் அனைவரிடமும் மனம்திறந்து பேசவேண்டுமென்று நெடுநாள்களாகவே நினைத்துக்கொண்டிருந்தேன். அதற்கு இன்று தான் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதுதான் என்று குறித்துச் சொல்லக் கூடாத இன்னலால் நான் சோர்வடைகிறேன். முதுமையின் பயனாய் முடவனாய் அங்குமிங்கும் நடத்தலற்றுப் பெரும்பாலும் இவ்வறையிலேயே அடங்கிக்கிடக்கிறேன். இந்த நிலையில் நம் பகைவர்களோ வலிமைப்பெற்று வருகின்றனர். என் வாழ்நாள் முழுவதும் போரே வாழ்வாய்ப் போக்கிவிட்டேன். கொண்ட குறிக்கோள் நிறைவேறுமுன் என்னுயிர் பிரிந்துவிடுமோ என்றஞ்சு கின்றேன்."

"அப்பா."

கடம்பமாதேவி குறுக்கிட்டதன் காரணம் யாருக்கும் புரியவில்லை."

"என்னம்மா?"

"உங்களைக் கொல்ல முயன்றதாக ஒருவரைக் கொண்டு வந்தார்களே, அவர் யாரென்று"

இளவரசியின் பேச்சு வெளியே எழுந்த ஒலியால் தடைப் பட்டது. யாரோ ஓடிவரும் காலடியோசை எல்லோருக்கும் கேட்கவே, அனைவர் கவனமும் கதவுக்காய்த் திரும்பின. அங்கே...!

ஒரே நேரத்தில் படைத்தலைவர்கள் நால்வரின் வாள்களும் உறையினின்றும் உருவப்பட்டன. ஆனால், அந்த வேகத்தைவிட, இடக்கையில் நீண்ட வாளும், வலக்கையில் எறிவாளும் தாங்கி எல்லோரையும் ஒருங்கே கவனித்துக்கொண்டு இயல்போடு நின்றிருந்த விக்கியண்ணனின் எச்சரிக்கை விரைந்து வந்தது.

"யாரும் அசையாதீர்கள். நான் நினைத்தால் இந்தக் குறுவாள் அரசரின் மார்பை அரைநொடியில் அடைந்துவிடக் கூடும்."

உருவிய வாள்களுடன் நின்ற படைத்தலைவர்கள் அடுத்துச் செய்வதை அறியாது தயங்கினர்.

"ஏன் தயக்கம்? என்னுடைய குறி எப்போதுமே தப்பியதில்லை! வேண்டுமென்றால் இளவரசியைக் கேட்டுப்பாருங்கள்; அவர்கள் அறிவார்கள்."

இளவரசி கடம்பமாதேவியை எல்லோரும் பார்த்தனர். அதைப் பொருட்படுத்தாதவளாய் அடியெடுத்துவைத்து அனைவருக்கும் எதிரே வந்து நின்றாள்.

"எல்லோரும் வாள்களை உறையுள் இடுங்கள்."

"இளவரசி! என்ன இது?"

கேள்விகேட்ட நாங்கூர் வேளிரை இளநகையோடு இளவரசி கடம்பமாதேவி நோக்கினாள்.

"ஆமாம் மாமா. அவர் சொல்பவை உண்மைதாம். அவர் குறி தப்புவது அரிதுதான். நான் என்கண்களாலேயே இருமுறைக் கண்டிருக்கிறேன். ஏன்? பல்லவரையரும் ஒருமுறை நேரில் பார்த்திருக்கிறார் ."

"அப்படி இருந்துமா வாளை உறையுள் போடச் சொல்கிறாய்?"

"ஆமாம்."

அவள் பதிலில் உறுதி இருந்தது.

"இப்படி அருகில் வாருங்கள்."

இளவரசி அழைப்பை ஏற்று, விக்கியண்ணன் நெருங்கினான்.

"தந்தையே. இவர் உங்களைக் கொல்லமுயன்றவராயின் இந்நேரம் நீங்கள் உயிரோடு இருந்திருக்க முடியாது. குற்றவாளியாக இவர் இருப்பின், காவலர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டவர், எதற்கும் அஞ்சா நம்படைத்தலைவர்கள் இங்குச் சேர்ந்து இருப்பதை அறிந்திருந்தும் இங்கு வருவாரா? பல்லவரையரே! காட்டில் பகைவரிடமிருந்து என்னைக் காத்தவர் இவர்தான் என்பதை அதற்குள் நீங்கள் எப்படி மறந்தீர்?"

பல்லவரையன் வாள் முதலில் உறையுள் அடங்கியது. தொடர்ந்து மற்றவர் வாள்களும் உறையுள் அடங்கின. விக்கியண்ணன் இளவரசியின் குறுக்கீட்டால் மிகவும் மகிழ்ந்தவனாய், தலையைத் தாழ்த்தி மன்னருக்கு வணக்கத்தைத் தெரிவித்தான்.

"அரசே! சேர நாட்டு வீரனின் வணக்கங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். தவறாக என் செயல்கள் அமைந்திருப்பின் அதற்காக என்னை நீங்கள் பொறுத்தருள வேண்டும்."

"சேர நாட்டு வீரரா நீர்?"

"ஆம் அரசே. என் பெயர் விக்கியண்ணன்."

"விக்கியண்ணன்? அமைச்சரே, இப்பெயரை நாம் முன்பே கேள்விப்பட்டிருக்கிறோம் அன்றோ?"

"அதைத்தான் நானும் சிந்திக்கிறேன் அரசே."

"நான் சொல்கிறேன் தந்தையே. காமச்சுவை நிறைந்த கவிதை களைப் புனைவதில் கைதேர்ந்தவர் இவர்!"

"நினைவிற்கு வந்துவிட்டது மகளே. நம் அவைப்புலவர்கள் இவரைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இவை இளமையிலே இயல்புதாம்."

"அதுமட்டுமன்று அப்பா. மதுவும் மங்கையும் இவருக்கு இணைபிரியாத் துணைகள்!"

"உனக்கெப்படி தெரியும் மகளே?"

"இதோ, இந்த ஓலையைப்பாருங்கள்."

வெறுப்பு அவள் குரலிலே நிறைந்திருப்பதை உணர்ந்த விக்கியண்ணன் வேதனை கொண்டான். இந்த ஓலை எப்படி இவள் கையை அடைந்தது? சேரமன்னர் என்னைப்பற்றி இப்படி எல்லாமா எழுதியிருக்கிறார்?

"இவ்வோலை தாங்கிவரும் விக்கியண்ணனை எனக்கு இணையாக எண்ணிக் கொள்ளலாம். மதுவும் மங்கையும் இவனால் மறுக்கமுடியாத துணைகள். எனினும் நீங்கள் நினைப்பதை முடிக்கும் அறிவும் திறனும் அமைந்திடப் பெற்றவன்."

விசயாலயர் ஓலையின் ஒரு பகுதியையே உரக்கப் படித்தார். அப்படிப் படித்துமுடித்த அவரேயன்றி அறையுள் இருந்த அனைவரும் விக்கியண்ணனை வியந்து ஊன்றி நோக்கினர். அவர்கள் ஒவ்வொருவரின் எண்ணங்களும் எந்தத்திக்கில் சுழல் கின்றன என்பதை விக்கியண்ணன் உணரவே செய்தான். மது மங்கை இரண்டிற்கும் அடிமையான இந்த மனிதன் சோழ நாட்டைக் காக்கும் திறமுடையவன் தானா?

மற்றவர்கள் தன்னை வியப்போடு நோக்கினும் இளவரசி கடம்பமாதேவியைப்போல் வெறுப்போடு நோக்கவில்லை என்பதைக்காண விக்கியண்ணனின் மனம் ஓரளவிற்கு அமைதி கொண்டது.

## 9. புயலுக்குப் பின்

*"யாயும் ஞாயும் யாரா கியரோ*
*எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்*
*யானும் நீயும் எவ்வழி அறிதும்*
*செம்புலப் பெயல்நீர் போல*
*அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே."*

'அன்பரே! என்தாயும் உன்தாயும் யார்யாரோ? அவர்களிடையே ஏதும் தொடர்புண்டா? எதுவும் இல்லை. என் தந்தைக்கும் உம்

தந்தைக்கும் உறவாவது உண்டா? அதுவும் இல்லை. நாமோ, ஒருவரை ஒருவர் முன்பென்றும் கண்டதுமில்லை; மற்றவர் சொல்லக் கேட்டு அறிந்ததுமில்லை. இவ்வகையாக நம்மிடையே தொடர்பிருக்க, எங்கோ கடலில் தோன்றி மேகமாய்ப் படர்ந்து எங்கோ தொலைவில் உள்ள செந்நிலத்தில் விழும் மழைநீரானது, எப்படித் தான் விழுந்த செந்நிலத்தின் தன்மையோடு கலந்து ஒன்றிப்போகிறதோ, அப்படி என்நெஞ்சமும் உம்முடைய நெஞ்சத்தின் அன்போடு இணைந்து இரண்டறக் கலந்துவிட்டதே; இதன் பொருள்தான் என்ன?

'பருவமடைந்த காலமுதல் பல ஆண்களைக் கண்டிருக் கிறேன்; இருந்தும், உங்களைக் காணும்போதுமட்டும் என்னுடல் என்றும் கண்டறியா உணர்ச்சியால் உயிர்பெறுகிறதே; ஏன்? உடல் மட்டுமா? உறுதிமிக்க என் உள்ளமும் அன்றோ ஒரு காரணமும் இன்றி உங்கள் முன் தடுமாறித் தத்தளிக்கிறது! இதன் காரணம் என்ன? காதலா? இல்லை காமமா?

'காதலும் காமமும் வேறுவேறா? இல்லையே. இரண்டு சொற்களுமே ஒரே பொருளைத் தெரிவிப்பன அல்லவா? இருந்தும், இன்று இருவேறு பொருள்களைக் குறிப்பவைபோல் வழக்கில் வந்துவிட்டனவே. காதல் உள்ளத்தைப் பற்றியது, காமம் உடலைப் பற்றியது; உண்மைதாமா? உடல்மேல் ஆசையின்றி உள்ளத்தை மட்டுமே விரும்புவர் இருக்கக் கூடுமா? இயல்புதானா? அதேபோல், உடலை மட்டுமே விரும்பி உள்ளத்தை வெறுப்பதும் இயல்பா? உள்ளம், உடல் ஆகிய இரண்டின் சேர்க்கையின் விளைவாய் எழுகின்ற அன்பின் வெளிப்பாடுதானே காதலும் காமமும். அனைத்திற்கும் உள்ளார்ந்த அன்புதானே மூலம்?

'காதலுக்கும் காமத்திற்கும் இப்படிப் பொருள்காணலாமா? ஒருவன் ஒருத்தி ஆகிய இருவரிடையே தோன்றிய அன்பின் விளைவாய், ஐம்புலன்களுக்கு முதலிடம் அளிக்காது நெஞ்சங் களின் உறவிற்கு முதலிடம் அளிப்பது காதலாகவும், ஐம்புலன் களுக்கு முதலிடம் அளித்து நெஞ்சங்களைச் சற்றுப்பின் வைப்பதுபோல் எண்ணத்தைத் தோற்றுவிப்பதைக் காமமாயும் கொள்ளலாமா? காதல் அடுப்புத் தீ; காமம் காட்டுத் தீ.

'கணிகையர் வழியிலே வந்த நான் மற்ற பெண்களைப் போலவே மணஞ்செய்துகொண்டு நல்வழி நடக்கவே விரும்பினேன் நேற்றுவரை. இன்றோ, உங்கள் ஒருவருக்கே உரிமை பூண்ட காமக்கிழத்தியாக உடனுறையவும் அணியமாக இருக்கிறேன். நீங்கள் யார்? எப்படிப்பட்டவர்? என்றெல்லாம் உங்களைப்பற்றி எண்ணவும் பின் ஏற்கவும் மறுக்கிறதே என் நெஞ்சம்; அஃது ஏன்? இரண்டறக் கலந்துவிட்ட இனியரே! இதழ்கள் இணையும் வேளையிலா இடையூறு வந்து சேர வேண்டும்? உங்களை நான் நம்புகிறேன். ஒரு பழியும் உங்களிடம் இருக்க முடியாது. என்னுள்ளம் என்றுமே என்னைக் கைவிடாது. உயர்ந்தவர் நீங்கள்; ஒருபோதும் உங்களுக்குத் தவறான வழி தெரியாது. உடலால் இப்பொழுது பிரிந்திருந்தாலும், உள்ளத்தால் எப்பொழுதுமே நாம் ஒன்றானவர்கள்.'

கற்பனையில் காதலனுடன் ஒன்றித் தனக்குள் உரையாடிக் கொண்டிருந்த வண்டார்குழலி, அறைக்கதவு தட்டப்படும் ஓலிகேட்டு உலக நினைவிற்கு வந்தாள். பணிப்பெண் செந்தாமரை தேவையற்று அந்த நேரத்தில் தொல்லை தரமாட்டாள் என்பது அவளுக்கு நன்கு தெரியும்.

"செந்தாமரை, என்ன?"

வண்டார்குழலியின் கண்கள் வியப்பால் விரிந்தன. அவளுள்ளம் நிறைந்த அவன் பணிப்பெண்ணைத் தொடர்ந்து உள்ளே வந்து கொண்டிருந்தான்.

"பொறுத்துக் கொள்ளுங்கள் அம்மா. என்ன சொல்லியும் கேட்காமல் இவர் உள்ளே நுழைந்துவிட்டார் ."

"வாருங்கள் ."

விக்கியண்ணன் அறைக்குள் வந்தான். அவன் கண்கள் சிவந்திருந்ததை வண்டார்குழலி கண்டுகொண்டாள்.

"அம்மா! அவர் நிறையவே குடித்திருக்கிறார்."

அவளுக்குமட்டுமே கேட்குமாறு செந்தாமரை மெல்லச் சொன்னாள்.

"இருக்கட்டுமே; நீ போ. நான் அழைத்தால் மட்டும் வா. என்ன?"

செந்தாமரை சரியென்று தலையை அசைத்துவிட்டு அகன்றாள். உலகைப்பற்றி அவள் நிறையவே அறிவாள்.

கதவை மூடிவிட்டு அவனை நோக்கி அசைந்த வண்டார்குழலி ஆசைகளின் எதிர்பார்ப்பால் உண்டாகிய அச்சத்தால் மெதுவே சென்றாள். அறையுள் வெளிச்சமும் மிகையாக இருக்கவில்லை. பஞ்சணைக்கருகே நின்றிருந்த அவனைச்சுற்றிச் சென்ற அவள், படுக்கையருகே இருந்த விளக்கைப் பெரிதுபடுத்தினாள். அதன் ஒளி அறையை நிரப்பியது.

"நிற்கிறீர்களே; உட்காருங்கள்."

அவளுடைய அன்பான வேண்டுகோளை அவன் பொருட் படுத்தவில்லை. சற்று அப்பால் நின்ற அவளின் கையை எட்டிப் பற்றி அவனிழுத்தபோது, முரட்டுத்தனத்தை அவன் செயலில் வண்டார்குழலி அறிந்தாள். அவனுடைய அன்பின்மை அவளுக்குத் துன்பத்தைச் சேர்த்தாலும் ‘மதுவின் ஆளுகையில்தான் அப்படி அவன் நடந்துகொள்கிறான்' என்ற மாற்றத்தைத் தன் மனதிற்குக் கூறித் தன்னையே தேற்றிக் கொண்டாள். மதுவின் நாற்றம் அவன் வாய்திறந்து பேசியபோது வெளிப்பட்டது. அவனுடைய பேச்சிலும் அன்பிருக்கவில்லை.

"நான் சிறை செய்யப்பட்டது ஏனென்று தெரியுமில்லையா?"

"தெரியும்".

அச்சத்தோடு அவள் மெல்ல விடையளித்தாள்.

"நான் குற்றமற்றவன் என்பதும் நீ அறிவாயில்லையா?"

"ஆம்; அறிவேன்."

"பின்னேன் அவர்களிடம் நீ உண்மையைச் சொல்லவில்லை?"

அரவொப்பச் சீறினான் அவன். உண்மையில் அவள் நடுங்கிப் போனாள். தென்றலுக்கே அலையும் அவளின் கொடியுடல், அச்சத்தால் மிகவும் நடுங்கியது.

"நான் சொன்னால் அவர்கள் நம்புவார்களா?"

"உண்மையை யார்தாம் நம்பமாட்டார்கள்? குற்றவாளியைக் காட்டிக் கொடுக்க நீ அணியமாய் இல்லை! அது தானே?"

அவள் கையை விட்டுவிட்டு அறைக்குள்ளாகவே அவனிங்கு மங்கும் நடை நடந்தான். அவன் பேச்சு அவளுக்கப் புரியாத புதிராக இருந்தது.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"உனக்குப் புரியவில்லை?"

விக்கியண்ணன் உருமினான்.

"இல்லை"

"நான் புரியவைக்கிறேன்."

அருகில் வந்த விக்கியண்ணன் அவளிரு தோள்களையும் உறுதியாகப் பற்றிக்கொண்டு பேசினான். அவன் கண்கள் அவள் கண்களை ஆழ்ந்து நோக்கின.

"நீ ஒரு நடனக்காரி என்பது சற்று முன்னர்த்தான் தெரிய வந்தது. இப்போதோ, நீ கைதேர்ந்த நாடகக்காரி என்பதும் புரிந்து விட்டது. இல்லையென்றால், இன்றுமாலை எத்தனையோ நடந்திருந்தும் ஏதுமே அறியாதவள்போல் உன்னால் இத்துணை இயல்பாக இருக்கக்கூடுமா? உன்னைப்பற்றி யாருக்கும் எதுவும்

தெரியாதென்று எண்ண வேண்டா. முத்தரையர் சோழருக்குப் பகைவர் என்பதை அறிந்திருக்கும் நீ, அவர்கள் தலைநகருக்குச் சென்று இன்றுதான் மீண்டு வந்திருக்கிறாய். திரும்பிவரும்போது சோழகுலத்தைத் தீர்த்துக்கட்டிடும் திட்டங்களோடு வந்திருக்கிறாய். விளைவுதான் இளவரசியையும் மன்னரையும் கொல்ல நடத்தப் பட்ட முயற்சிகள்! இப்போதென்ன சொல்கிறாய்? இன்னும் புரியவில்லை என்கிறாயா?"

அவனுடைய கடுமையான குற்றச்சாட்டுகளால் குழப்ப மடைந்துபோன குழலியின் சொற்களில் தெளிவிருக்கவில்லை; மாறாகக் கவலையே நிறைந்திருந்தது.

"எனக்கு எதுவுமே தெரியாது."

"மன்னரைக் கொல்ல முயன்றவன் காவலர்களுக்குத் தப்பி இந்த மாளிகையில் நுழைந்து மறைந்தானே; அதுவும் தெரியாதா?"

"தெரியாது."

"இந்த அறைக்குள் யாருக்கும் தெரியாமல் நானெப்படி முதன் முதலில் வந்துசேர்ந்தேன் என்பதாவது தெரியுமா?"

தெரியாதென்ற முறையில் அவள்தன் தலையை ஆட்டினாள். விக்கியண்ணன் அவளுடைய மறுப்பால் வியப்படைந்தான். 'இவளுக்கு ஏதும் தெரியாதென்பது உண்மைதானா? இவளுடைய கருவிழிகளிலே சிறிதளவும் கலக்கத்தை என்னால் காணக்கூட வில்லையே!'

"இந்த அறையில் வேறு ஏதேனும் மறைவழி இருக்கிறதா?"

"இல்லை."

"பொய்யுரைக்கிறாய் நீ!"

வண்டார்குழலியின் முகம் வாடியதையும் கண்கள் குளங்களானதையும் விக்கியண்ணன் கண்டு சிந்தை தடுமாறினான். அவன் மனம் அவனையும் மீறி அன்பால் இளகியது.

"என்னை நம்புங்கள்; நான் ஏதும் அறியாதவள்."

"இருப்பதாக நீ நம்புகிறாயே, அந்த இறைவன்மேல் ஆணையாகச் சொல்வாயா?"

ஒருவினாடி அவள் தயங்கியதை அவன் கண்டான். விடை கூறியபோது அவள் குரலில் உறுதி நிறைந்து ஒலித்தது.

"உங்கள்மேல் ஆணையாகச் சொல்கிறேன் . "

"என்மேல் , ஏன் ஆணையிடுகிறாய்? கடவுள்மேல் ஆணையிடு."

"நீங்கள்தாம் இனி எனக்கு எல்லாம்!"

விக்கியண்ணன் வேறெதுவும் பேசக்கூடாதவனாய் வியந்து நின்றான். அவள் கண்கள் அவனின் பரந்த மார்பை விட்டு அகலாமல் பதிந்து நின்றன.

வண்டார்குழலியின் தோள்களினின்றும் கைகளை அகற்றிக் கொண்ட விக்கியண்ணன் மேலே ஒன்றும் பேசத்தோன்றாதவனாய் அறையில் அங்குமிங்கும் நடந்தான். அவனுடைய உள்மனம் அவளை நம்பியது. ஆனால் நடந்த நிகழ்வுகள் அவளைக் குற்றவாளியாகக் காட்டின.

குறுக்கும் நெடுக்குமாக தொடர்ந்து நடந்துகொண்டிருந்த விக்கியண்ணன் பஞ்சணையில் அமர்ந்து சாய்ந்துகொண்டான். கால்களையும் வசதியாய்ப் படுக்கையில் அமைத்துக்கொண்டான். சிந்திக்க வேண்டியனவாய் அவனிருந்தான். கண்களை மூடிக் கொண்ட அவனின் கருத்து அன்று கடந்து முடிந்த அனைத்தையும் ஒருமுறை ஆராயத் தலைப்பட்டது.

"பால் அருந்துங்கள்."

"வேண்டா"

"பழங்கள்"

"ஊகூம்."

கண்களைத் திறக்காமல் அதுவரை விடையிறுத்த விக்கியண்ணன், குழலியின் கைகள் அவன் கால்களில் பட்ட உணர்வால் பதட்டத்துடன் கண்களைத் திறந்தான். வண்டார் குழலியின் அமைதியான செயல்கள் வியப்பை விளைவிக்க அவள் செயல்களை அசைவின்றி அவன் கவனிக்கலானான்.

மிதியடிகளைக் கால்களினின்றும் மெல்லப் பிரித்துத் தரையில் பஞ்சணைக்குக் கீழே வைத்தவள், வெகுவாக ஒளிபரப்பிக் கொண்டிருந்த விளக்கின் திரியை மட்டுப்படுத்தி அறையின் ஒளியை மிதப்படுத்தினாள். பின்னர், மின்னற்கொடிபோன்ற இடைவாடத் தவழ்ந்து சென்று பஞ்சணையில் விக்கியண்ணனின் காலடியில் அமர்ந்து தன்னிரு தளிர்கைகளால் அவன் கால்களைப் பிடித்துவிடத் தொடங்கினாள்.

விக்கியண்ணனின் மனம் அவள்செயலால் விரிந்தது; உடல், அவள் கைகளின் கவனிப்பால் உவகை அடைந்தது. ஆண்பெண் உடல் இணைப்பில் மட்டுமே அதுநாள்வரை இன்பத்தை அறிந்திருந்த விக்கியண்ணன் என்றுமே தான்முன் கண்டறிந்திராத விளக்கமுடியாத இன்பஉணர்வில் ஆழ்ந்துபோனான். இப்படியும் ஓரின்பம் இந்த உலகில் உண்டா? இதுநாள் இந்த உணர்வு ஏற்படாமல் இருந்தது எப்படி? எட்டியிருக்கும்போதே இத்தனை இன்பம் என்றால் தொட்டணைத்தால்?

மெய்மறந்து வீற்றிருந்த விக்கியண்ணனின் எண்ணம் கால்மீது விழுந்த கண்ணீர்த் துளிகளின் வெம்மையால் கலைந்தது. அவன் அவளை அன்போடு நோக்கினான். அவள் பார்வை அவன் கால்கள்மீது பொருந்தி இருந்தது.

எங்கும் அமைதி. மிகு இருளுமில்லை; மிகு ஒளியுமில்லை. அழகான அறை; அமைதியான சூழல். தென்றல் திறந்திருந்த சாளரத்தின் வழி அறையெங்கும் தவழ்ந்தது. உயரவிருந்த சாளரத்தின் வழியே வட்டநிலா வானிலிருந்து எட்டிநோக்கியது. மலரினும் மென்மையான பஞ்சணை; பக்கத்தில் பாலும் பழமும் நிறைந்த வெள்ளித்தட்டுகள். பளிங்குச் சிலையெனப் பருவம் பூரித்துப் பார்வையைக் கொள்ளை கொள்ளும் பனிமொழியாள் பக்கத்தில்! அறைக்கதவும் மூடப்பட்டிருந்தது.

"வண்டார்குழலி!"

விடையிருக்கவில்லை.

"அழுகிறாயா?"

இல்லையென மெல்லத் தலைமட்டும் அசைந்தது.

"பின் ஏன் கண்ணீர்?"

மீண்டும் அமைதி.

"என் மேல் வருத்தமா?"

இல்லையென மீண்டும் தலையசைந்தது.

"பிறகெதற்குக் கண்ணீர்?"

அதே அமைதி.

"பேசமாட்டாயா?"

"உம்."

"ஏன் கண்ணீர்?"

"மகிழ்வுக் கண்ணீர் ."

"உண்மையாகவா?"

"ஆமாம்."

விடையளித்துக்கொண்டிருந்தவள் தன்னை ஒருமுறைக்கூட ஏறிட்டுப்பார்க்கவில்லை என்பதை விக்கியண்ணன் கண்டான்.

"வண்டார்குழலி! இப்படி என்னருகே வா."

தலையைத் தாழ்த்திய வண்ணம் அவள் அவனருகே வந்தாள். அவன் கைகள் அவளிடையை அடைந்தன. அவள் வெட்கத்தால் நெளிந்தாள். அவனுடைய விரைவை இடையைப்பற்றிய கைகளின் இயக்கத்தினின்று வண்டார்குழலி புரிந்து கொண்டாள். அவள் முகம் சிவந்தது. ஏன் அவனுக்கு இத்தனை வேகம்? அவள் எங்கே போய்விடப்போகின்றாள்? அப்பப்பா! எத்துணை முரட்டுத்தனம் அவன் செயல்களில்! கன்னியுடல் நோகுமே என்ற எண்ணங்கூட இல்லையே! மென்மையும் பெண்மையும் இரண்டல்ல; ஒன்றென்று உணராதவனாய் இருக்கிறானே அவன்!

வெள்ளிநிலா அங்கு அரங்கேறிய விளையாட்டைக் கண்டு வெட்கங் கொண்டது. ஒன்றிய உடல்கள் ஊடே செல்ல வழியின்றித் தென்றல் காற்றோ திகைத்துத் திரும்பியது.

# 10. படைவலிமையும் மனவலிமையும்

*"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்*
*சொல்லவும் வல்லது அமைச்சு."*

அமைதியோடு அமர்ந்திருந்த அமைச்சர் நற்குணப் பேரெழிலார் முகத்திலேயே அவ்வறையில் குழுமியிருந்தோர் அனைவரின் கவனங்களும் நிலைத்திருந்தன. இக்கட்டான நிலைமைக்கு வந்துவிட்ட சோழநாட்டு ஆட்சியைக் காக்கவல்ல வழிகளைத் தேர்ந்து தெளிந்து சொல்லக்கூடியவர் அவரைத்தவிர பட்டறிவு வாய்ந்தவர் வேறுயாரும் இல்லை என்பதை இளவரசி கடம்பமாதேவி மட்டுமன்று, கூடியிருந்த படைத்தலைவர்களும் முழுமையாக நம்பினர். சோழ அரசோடு அவருக்குள்ள தொடர்பு

இன்று நேற்று ஏற்பட்டதன்று. கைகளிலே வாளை ஏந்தக் கற்றுக்கொண்ட காலத்தினின்றே சோழராட்சியின் மீட்சிக்காகத் தன்னை ஆட்படுத்திக் கொண்டவர் அவர். விசயாலயரோடு தோளோடு தோளாகப் பல போர்க்களங்களைக் கண்ட அவர், வயதின் காரணமாக மிகவும் தளர்ந்தநிலையிலே பிறரின் வற்புறுத்தலால் அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

"சேந்தன்கீரன் கொண்டுவந்த செய்தி தவறாக இருக்கக் கூடாதா என்று என்னுள்ளம் ஏங்குகிறது. பாண்டியன் இன்றைய சூழ்நிலையில் படையெடுத்து வருவானேல் சோழராட்சி முற்றும் அழிந்துவிடும். எப்பொழுது மீண்டும் தஞ்சையைக் கைப்பற்றக் கூடும் என்று நாளும் காலம்நோக்கி முத்தரையன் தவித்துக் கொண்டிருக்கிறான். பல்லவனும் பகைமறந்து பாண்டியருடன் உறவாடத் துடித்துக் கொண்டிருக்கிறான். போர் தொடங்குமேல், பல்லவன் நடுநிலைமை வகிக்கக்கூடும். இந்த நிலையில், இருக்கின்ற ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள இயலாத நிலையில் இன்று இருக்கும் நம்மால், தமிழகம் முழுவதும் சோழராட்சி நிலவ வேண்டும் என்று கண்டுவரும் கனவை நனவாக்கக்கூடுமா?"

அனைத்துப் படைகளுக்கும் தலைவனான செங்கண்ணான் அமைச்சரின் பேச்சில் குறுக்கிட்டுப் பேசினான்.

"மன்னரின் போக்கும் தற்போது மறைவாகவே இருக்கிறது."

அமைச்சர் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தார். அவர் பேசியபோது குரலிலே தளர்வு நன்கு தெரிந்தது.

"உண்மைதான். முன்போல் அரசரின் மனதை என்னால் இப்போது அறிந்து கொள்ளமுடியவில்லை. அவர் தன் பேச்சை வெகுவாகக் குறைத்துக்கொண்டுவிட்டார். இளவரசியின் எண்ணத்தை அறிந்துகொள்ளாமல் இதற்குமுன் எந்த முடிவையுமே அரசர் எடுக்கமாட்டார்; ஆனால், இன்றோ?"

"காலங்காலமாய் அரசர்க்கு உண்மையாய் உயிரையும் பொருட் படுத்தாமல் நாமெல்லாம் பணியாற்றிவருகிறோம். நம்மையெல்லாம் விட நேற்றுவந்தவன் எந்தவிதத்தில் உயர்ந்தவன்? அவனை நம்பிப்

பெரும்பொறுப்பை அரசர் ஒப்படைத்தது இங்கு யாருக்குமே முறையாகப் படவில்லை."

"எனக்கு மட்டும் முறையாகப்படுகிறது என்றா நம்புகிறாய்? இல்லை, செங்கண்ணா. இளவரசியார் எண்ணமே என் எண்ணமும். மது, மங்கை இரண்டிற்கும் மயங்கக்கூடிய எல்லோரையும் ஒத்த மனிதனிடம் அனைத்துப் பொறுப்புகளையும் ஒப்படைக்க அரசர் எப்படித் துணிவு கொண்டார்? இந்தச் சோழமண்ணில் கால்வைத்து இன்னும் ஒரு திங்கள்கூட முடியவில்லை; அப்படிப்பட்ட விக்கியண்ணன் இந்த நாட்டு நிலைமையை என்னைவிட நன்கு அறிந்திருக்கிறானா? படைகளைச் செலுத்திப் பழக்கப்பட்ட உங்கள் எல்லாரையும்விட பயிற்சி மிக்கவனா? இளமை முதற்கொண்டு சோழ அரசியலிலே தன்னை இணைத்துக் கொண்டுவிட்ட இளவரசியார் கடம்பமாதேவியைக் காட்டிலும் அரசியலில் ஆற்றல் வாய்ந்தவனா? எதைக் கண்டு அரசர் எல்லாமே அவனென்று எண்ணி நம்பி எல்லாவற்றையும் அவனிடம் ஒப்படைத்தார்? எனக்கு எதுவும் புரியவில்லை."

"மாமா! மற்றுமொரு செய்தி. உள்நாட்டுக் கலகங்களை ஒருசாரார் திட்டமிட்டு நடத்தி வருவதாகத் தெரிகிறது. எப்பொழுது மீண்டும் போர் ஏற்படுமோ என்று மக்கள் அஞ்சிமருள்வதாக ஒற்றர்கள் உரைக்கின்றனர்?"

"நானும் அறிவேன் இளவரசி. நாளை நடக்கவிருக்கும் அமைச்சர்கள் அலுவலர்கள் அவையில் என்ன நடக்கும் என்பதுதான் எனக்கு அச்சத்தை அளிக்கிறது. அரசரின் போக்கை, நடவடிக்கைகளை அனைவரும் கண்டித்துப்பேச உள்ளதாக நான் அறிகிறேன். வாழ்நாள் முழுவதையும் போர்களில் ஈடுபட்டதைத் தவிர அரசர் என்ன செய்துவிட்டார் என்ற கேள்வியை இன்று எல்லோரும் எழுப்பப் தொடங்கிவிட்டனர். அதற்கு விடையை அரசர் அறிவாரா? அந்த நிலையிலே நாம் எந்த நிலையை மேற்கொள்ளவுள்ளோம்? என்ன நினைக்கிறீர்கள் நீங்கள்?"

அமைச்சரின் பேச்சைத் தொடர்ந்து எழுந்த அமைதியை ஒற்றர்படைத்தலைவனான சேந்தன்கீரன் தன்பேச்சால் கலைத்தான்.

"படையைப் பெருக்குவதே என்றும் நம் குறிக்கோளாக இருந்திருப்பினும் பாண்டியர் படையின் பத்தில் ஒரு பங்கும் நம்படை எண்ணிக்கை இருக்கவில்லை. பாண்டிய நாடு பரவலான நாடு. தந்தை இறந்து தான்பட்டமெய்திய இந்தப் பதினெட்டு ஆண்டுகளில் பாண்டியமன்னர் வரகுணவர்மர் தன் படைகளைப் பன்மடங்கு பெருக்கியுள்ளார். இதுவரை எந்தப் பெரும் போரிலும் ஈடுபட்டதுமில்லை. நாமோ, எப்போதும் போரிலேயே ஈடுபட்டு வந்திருக்கிறோம். முத்தரையரோடு நாம் போரிடாத ஆண்டுகளே இல்லை எனலாம். நம்நாடு மிகவும் சுருங்கியது. சோழநாட்டின் தென்பகுதி பாண்டியர் ஆட்சியிலும் வடபகுதி பல்லவர் ஆட்சியிலும் பலகாலமாய் இருந்துவருகின்றன. அவற்றை மீட்க நம்மால் இன்றுவரை இயலவில்லை. அரசின் பொருட்கிடங்கில் செல்வமோ அறவே இல்லை. இந்த நிலையில், யார்தான் என்ன செய்யக்கூடும்?"

"இளவரசியார் மனதுவைத்தால்..."

அமைச்சர் நாங்கூர்வேளிர் சொல்ல வந்ததை முழுமையாக முடிக்கவில்லை. அனைவரும் இளவரசியின் முகத்தை ஆவலோடு நோக்கினர். இளவரசியின் முகம் சிவந்ததைக் கண்டு பார்வையைத் தாழ்த்திக் கொண்டனர்.

"மாமா! போதும் உங்கள் புலம்பல்!"

"சினங்கொண்டு என்ன பயனம்மா? நாட்டு நிலைமையை நோக்கும்போது எல்லாவற்றையும் எண்ணிப்பார்ப்பதில் தவறில்லை. உனக்கு யாரம்மா அறிவுரை சொல்லமுடியும்? இளமையிலிருந்தே இந்த நாட்டிற்காக உன்னையே ஒப்படைத்துக் கொண்டவள் நீ! இந்த நாட்டின் மேம்பாட்டிலே உன்னைவிட யாருக்கு அதிக அக்கறை உண்டு? நீ கண்டுவரும் ஆசைகளை நிறைவேற்றவன்றோ சோழமன்னர் விசயாலயர் தன்னாட்சிக்காலம் முழுவதையும் போர்க்களத்திலேயே போக்கிவிட்டார்! உன் எண்ணமே எங்கள் கடமையென்று நாங்களும் உன்னைப் பின்பற்றிவருகிறோமே; உண்மையில்லையா?"

"உண்மைதான். உங்களுக்கு நான் என்றுமே நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். நான் நீங்கள் சொல்லும் எதையும் மறுக்கவில்லை. ஆனால் நீங்கள் காணும் வழி சரியில்லை."

"எப்படியம்மா சொல்லுகிறாய்?"

"புரிந்திருந்தும் புரியாததுபோல் பேசும் உங்களுக்கு நானெப்படிப் புரியவைக்கக்கூடும்? நான் காணும் ஆசைகள் யாவை? என்னுடைய காலத்திலேயே இந்தச் சோழஅரசு யாருக்கும் கீழ்ப்படியாத, கட்டுப்படாத தனியரசாக விளங்கவேண்டும். பிறர்மேல் ஆதிக்கம் செய்யும் பேரரசாக இருக்கவேண்டா; இந்தச் சோழநாட்டின் ஒரு சிறுபகுதியைக்கூட மாற்றார் சொந்தங் கொண்டாடிடாத சோழராட்சி வேண்டும். அடங்கித் தாழ்ந்து அடுத்த நாட்டானுக்குத் திறை செலுத்தும் தீமை அறவே ஒழியவேண்டும். அந்நிலையை இந்நாடு அடையாதவரை நான் மணம் செய்து கொள்ளப்போவதில்லை. இதை மீண்டுமீண்டும் உங்களுக்கு நினைவுபடுத்த வேண்டுமா? இங்கு இவர்களையெல்லாம் நான் ஒருங்கே அழைத்துவந்தது என் திருமணத்தை உறுதிசெய்வதற் கன்று; அடிப்படையே ஆடத்தொடங்கிவிட்ட சோழராட்சியை நிலைபெறச்செய்வதற்கான வழிவகைகளை ஆய்ந்தறிவதற்காக! மாமா, அதற்கான வழிகளைச் சொல்லுங்கள்."

எந்தவிடையை அமைச்சர் நற்குணப் பேரெழிலார் சொல்வார்? பக்கத்திலிருந்து கொண்டு பலவகைகளிலும் சிக்கல்களை எழுப்பிவரும் சிற்றரசனான முத்தரையன் படையை முற்றிலும் அடக்கமுடியாத சோழப்படை, பாண்டியப் பேரரசின் படைக்குமுன் எப்படி ஈடுகொடுக்க இயலும்? பக்கத்துணையோ ஒரு சிறிதும் இல்லை. பல்லவனோ பாண்டியனுடன் நட்பு கொண்டாடு கின்றான்! சேரமன்னரோ உதவிக்குப் படையனுப்பாமல் தீயப் பழக்கங்களுக்கு அடிமையான ஒரு சிறுவனை அனுப்பியிருக்கிறார். அரசர் விசயாலயசோழரோ, அப்படிப்பட்ட வீரனிடம் இந்த ஆட்சியின் அனைத்துப்பொறுப்புகளையும் ஒப்படைத்திருக்கிறார். இந்த நிலையில், அமைச்சர் மட்டுமன்று; வேறுயார்தான் என்ன செய்யக்கூடும்?

இளவரசி கடம்பமாதேவி எண்ணினால் இந்த இக்கட்டைத் தவிர்க்க முடியும் என்பதை அங்கு எல்லோருமே அறிந்திருந்தனர். ஆனால், இளவரசி யாரையும் மணக்க அணியமாய் இல்லை. பல்லவ இளவரசன் அபராசிதனை இளவரசி ஏற்றுக்கொண்டால், பல்லவர் உதவி சோழர் படைக்குக் கிடைப்பது உறுதி. பல்லவர் படையும் சோழர்படையும் ஒன்று சேர்ந்தால் பாண்டியர் படையை வெல்வது பெரிதும் அரிய செயலில்லை. பதினெட்டு ஆண்டுகளுக்குமுன் அரிசிலாற்றங் கரையில் நடந்த போரில் இப்போதைய பாண்டிய மன்னரின் தந்தையான மாறவர்மன் சீமாறன் சீவல்லனைப் பல்லவப் படையும் சோழர்படையும் இணைந்து வெற்றிகொண்டதை அப்போது விசயாலருடன் படைத்தலைமை தாங்கிப் போரிட்ட நற்குணப்பேரெழிலார் இன்றும் மறந்தார் இல்லை.

"என்ன மாமா ஆழ்ந்த சிந்தனை?"

"இந்தக் கிழவனால் வேறென்னம்மா செய்யக்கூடும்? எத்தனையோ சிக்கல்களை விசயாலயர் இதற்குமுன் உன் எண்ணத்தைக்கேட்டு அதற்கேற்ப விடுத்திருக்கிறார். ஆனால் இன்றோ, ஏன் உன்னிடம் எதைப்பற்றியும் கலக்கவில்லை? அதுதான் ஏன் என்று சிந்திக்கிறேன் ."

காவல்தலைவன் கடியநெடுவேட்டுவன் முதன்முதலாகப் பேச்சில் கலந்துகொண்டான்.

"அரசர் மிகவும் நொந்துபோயிருக்கிறார். இரவு அவர் என்னிடம் பேசியதிலிருந்து தெரிந்துகொண்டேன். இளவரசர் ஆதித்தர் அரசின் அன்றாடப் பொறுப்புகளில் அதிக அக்கறை காட்டாமல் இருப்பதால் வேதனை கொண்டுள்ளார். தான் வாழ்நாள் முழுதும் போரிட்டுக் கட்டிக் காத்த சோழவரசு எங்கே தனக்குப்பின்னர் அழிந்துவிடக் கூடுமோ என்ற கவலை அவரை வெகுவாக வாட்டுகிறது. அவர் கவலை கொள்வதிலும் உண்மை இருப்பதாகவே நானும் உணர்கிறேன்."

"உண்மைதான் தலைவரே. அரசர் கவலை சரியானதே. மாமா, உங்களுக்கும் அவருக்கும் வயது மிகவும் மிகையாகிவிட்டதென்று அப்பா என்னிடமே குறைபட்டுக் கொண்டார் ."

இளவரசி கடம்பமாதேவியின் குரலில் வேதனை இழை யோடியது. அதன் காரணமாகக் கண்கள் கலங்கித் தோன்றின.

"பொருளற்ற கவலை அரசர்க்கு! எங்களுக்கெல்லாம் பக்கபலமாய் அறிவுரைக் கூறக்கூடிய நீ இளமையோடு இருக்கும் போது யாருக்கு வயதானால் என்ன? உன்னை எனக்குத் தெரியும். நீ எண்ணியதை எப்படியும் அடைந்தே தீருவாய். இப்பொழுது கவலைப்பட்டு எதுவும் நடக்கப் போவதில்லை. இந்த ஆண்டு நடைபெற இருக்கும் துர்க்கை விழாவிற்கு பல்லவ இளவரசர் வந்துகலந்துகொள்வதாய் உறுதியளித்துள்ளார். அப்போது எல்லாம் ஒரு முடிவிற்கு வரக்கூடும் என்று நம்புகிறேன் . "

அமைச்சர் தன்பேச்சை முடிக்கவில்லை. இடையே எழுந்த குரல் அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

"அப்பா! அப்பா! சீக்கிரம் ஓடிவாருங்கள்!"

அறையுள் இருந்த அனைவரும் வெளிக்கதவை நோக்கி விரைந்தனர். ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டதென்பது எல்லோருக்குமே புரிந்திருந்தது. இல்லையென்றால், நாங்கூர்வேளிர் நற்குணப்பேரெழிலாரின் ஒரே மகளான மாதேவி அப்படி அலறியிருக்க வாய்ப்பில்லை. என்ன தீநிகழ்வு அவளுக்கு ஏற்பட்டிருக்கக் கூடும்? இளவரசி கடம்பமாதேவியின் நெஞ்சம் நடுங்கித் துடித்தது. அந்த அழகுப் பெண்ணையன்றோ தன்தம்பி ஆதித்தனுக்கு மனைவியாக்க அவள் ஆசைகொண்டிருந்தாள்!

வெளியே தோட்டத்தில் அவர்கள் கண்டகாட்சி ஒருகணம் அனைவரையும் அதிர்ச்சியால் அப்படியே நிலைத்து நிற்க வைத்து விட்டது. எல்லாம் ஒரு கணம்தான்! அடுத்த கணம் யாருடைய கட்டளையையும் எதிர்பாராதவர்களாய்ப் படைத்தலைவர்கள் நால்வரும் ஒரே நேரத்தில் உடைவாள்களை உருவினர்; எதிரே குருதிக்கறைப்படிந்த நெடுவாளொடு நின்றுகொண்டிருந்த விக்கியண்ணனை நெருங்கினர். அவர்கள் கண்கள் அவன்மேல் மட்டுமே நிலைத்திருந்தன. தோளிலிருந்து குருதி கசிய மாதேவியின் மார்பில் கிடந்த சோழ இளவரசனுக்கு முதலுதவி அளிப்பதைவிட, அவனை அந்த நிலைக்கு ஆளாக்கிய

விக்கியண்ணனை வெற்றிகொள்வதில்தான் அனைவரின் நாட்டமும் பதிந்திருந்தது.

விக்கியண்ணன் இளவரசி கடம்பமாதேவியின் கண்களை நோக்கினான். அங்கே வெறுப்பு நிறைந்திருந்தது.

# 11. வேலும் வாளும்

*"புயலே சுமந்து பிறையே அணிந்து பொருவிலுடன்*
*கயலே மணந்த கமல மலர்ந்தொரு கற்பகத்தின்*
*அயலே பசும்பொற் கொடிநின்ற தால்...."*

இளவரசன் ஆதித்தன் கையிலிருந்த வாள் சுழன்றது. வாள் மட்டுமா சுழன்றது? அவன் கைவாள் சுழற்சியைக் காட்டிலும் வேகமாகச்சுழன்று அவன் உள்ளத்தைப் புண்ணாக்கிக் கொண்டிருந்தது அவனுக்குத்தோதாய் எதிர்நின்று பயின்று கொண்டிருந்தவளின் வாளன்று; அவளுடைய அழகுக்கொழிக்கும் இளமுகத்தில் அமைந்திருந்த வேலினும் கூரிய விழிகள்தாம்! அமைச்சர் நாங்கூர் வேளிரின் மகள் மாதேவியின் அழகில் அவன் மயங்கிச் சோர்வது அதுதானா முதல்முறை? இல்லை; இல்லை; என்று இளமையுணர்ச்சி நெஞ்சில் அரும்புவிட்டதோ, அன்றே அந்தத் துடியிடையாள் அவனில் தொத்திக்கொண்டுவிட்டாள்.

சோழ இளவரசன் ஆதித்தன் பெண்களின் தொடர்பு அறவே அறியாது வளர்க்கப்பட்டவன். அவன் அறிந்த ஒருசில பெண்களில் அவனுடைய தமக்கை கடம்பமாதேவி அவனுள்ளத்தில் உயர்ந்து விளங்கினாள். அதற்கு அடுத்த இடத்தை இளமை முதல் இணையாகத் தன்னோடு வளர்ந்துவந்திருந்த மாதேவிக்கு அவன் அளித்திருந்தான். அவனுக்குப் பொருத்தமானவள் அவள் ஒருத்திதான் என்று அவன் தமக்கை அவனிடம் அடிக்கடி கூறியிருக்கிறாள் அன்றோ!

வாள் பயிற்சியை மாதேவிக்குக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தான் ஆதித்தன். பயிற்சிக்கு ஏற்ப முன்னுடையை இறுக்கமாகக் கட்டியிருந்தாள் மாதேவி. அவள் தன் கைவாளைச் சுழற்றியபடி துள்ளிக்குதித்த போதெல்லாம் வெகுவாக அசைந்த

அந்த உடற்செழிப்பு, என்றும் கற்பனையில் இன்பங்காணும் பருவத்தினனான இளவரசன் ஆதித்தனின் கருத்தைச் சிதைத்து வாள்பயிற்சியின் இயல்பைக் குறைத்தது.

கலகலவென்று உரக்கவெழுந்த சிரிப்பும் அதைத் தொடர்ந்த கை தட்டல் ஒலியும் வாள்பயிற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தன. யார் அப்படி நடந்துகொண்டதென்பதைத் தெரிந்துகொள்ளத் திரும்பிய இளவரசன் ஆதித்தனுக்கு, எதிரே குறுஞ்சிரிப்போடு நின்று கொண்டிருந்த புதுமனிதனைக் காணச் சினம் பீறிட்டெழுந்தது. சினத்தால் குமுறிய உணர்ச்சிகளை அடக்கி அமைதிகாணப் பயின்றறியாத ஆதித்தனின் உதடுகள் துடித்தன. அத்துடன் எதிரே இருந்தவனிடமிருந்து எழுந்த பேச்சு எரிக்கு எண்ணெய் இடுவதாய் அமைந்தது.

"இஃதென்ன? வாள் பயிற்சியா? இல்லை; கோலாட்டமா?"

"யார் தாங்கள்?"

ஆதித்தனின் கேள்வியில் பதட்டமிருந்தது.

"ஊருக்குப் புதியவன்."

"அது தங்கள் நடத்தையிலேயே தெரிந்தது!"

ஆதித்தனின் பேச்சில் ஏளனம் இழையோடியதை விக்கியண்ணன் உணர்ந்தான்.

"நானொரு போர்வீரன்."

"உண்மையாகவா?"

"ஏன்? ஐயமா?"

"இடையில் வாள் இருப்பதால் நீங்கள் போர்வீரராக இருக்கலாம். ஆனால், வீரம் உடையவராக இருக்கவேண்டு மென்பதில்லையே!"

"அப்படியா நினைக்கிறீர்கள்?"

"ஆமாம். எங்கே, வாளை எடுத்துக்கொள்ளுங்கள்; நாங்கள் செய்தது வாள்பயிற்சியா? கோலாட்டமா? என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டாவா?"

விக்கியண்ணன் இளைஞனான ஆதித்தனின் வீரவுணர்வைக் கண்டு மெல்ல இளநகையொன்றை வெளிப்படுத்தினான். அந்த இளநகை ஆதித்தனின் சினத்தை அதிகப்படுத்தியது.

"ஏன் சிரிக்கிறாய்?"

அதுவரைப் புதியவனான தனக்கு மதிப்புக் கொடுத்துப் பேசிவந்தவன் சினத்தால் முறைதவறிப் பேச முற்பட்டதை விக்கியண்ணன் கவனிக்கச் செய்தான்.

"நான் சிறுவர்களோடு வாட்போர் புரிவதில்லை."

"நான் சிறுவன் இல்லை."

சீறினான் ஆதித்தன்.

"சினத்தை அடக்கமுடியாத அத்தனைபேரும் சிறுவர்கள்தாம்! உண்மையான வீரன் எந்தநிலையிலும் உணர்ச்சிக்கு இடங் கொடுக்கமாட்டான். வீரன் உணர்ச்சிவயப்பட்டால், விளைவது தோல்வி தான்!"

"எடும் வாளை; தோற்பது யாரென்பதைக் காண்போம்."

ஆதித்தனின் வாள் விக்கியண்ணனின் கண்கள் முன் மின்னியது. விக்கியண்ணன் மெல்லப் பின்வாங்கினான்.

"விளையாட்டு வேண்டா. நான் சொல்வதைக் கேளுங்கள்."

ஆதித்தன் பேசவில்லை. அவன் வாள் சீறியது. மாதேவி ஆதித்தனின் முரட்டுக்குணத்தை அறிந்தவள்; அதனால், எதிரே

ஒதுங்கிய புதியவனுக்காக இரக்கங்கொண்டாள். ஆனால், அடுத்து நடந்தவைகள், அவள் கொண்ட இரக்கத்தைப் பொருளற்றதாக்கி விட்டன. ஒருவினாடி, மாதேவி அச்சத்தாலும் வியப்பாலும் அப்படியே அயர்ந்து நின்றுவிட்டாள்.

ஆதித்தனின் வாள்நுனி கண்களின் முன்வட்டமிட்டு எந்தக்கணமும் இன்னலை விளைவிக்க அணியமாய் உள்ளதை உணர்ந்த விக்கியண்ணன் வேறுவழியின்றி உறையினின்றும் தன்வாளை வெளியே உருவவேண்டியதாயிற்று. எதிரே இருப்பவன் சினத்தால் மதிகுலைந்து மனந்தடுமாறியிருந்தமையால், அவன் வாளைத் தடுத்துநிறுத்தி வெற்றிகொள்வது மிக எளிது என்பதை விக்கியண்ணன் அறிந்திருந்தான். ஆனால், அவன் அறிந்திராதது நிகழ்ந்தபோது அவன் சிறிது அதிர்ச்சியுறவே செய்தான்.

தன்மேல் பாய்ந்த ஆதித்தனின் வாளை அமைதியாகத் தடுத்துப் பின்வாங்கச் செய்த விக்கியண்ணன், எதிர்நின்றவனின் வாளைப் பிரிப்பதற்காகத் தன்வாளை எதிர்திக்கில் விரைந்து சுழற்றியபோது அவன் எதிர்பாராதது நிகழ்ந்துவிட்டது. பின்வாங்கிய ஆதித்தன் தடுமாறிக் கீழே விழுந்ததையும் அப்படிக் கீழே விழுந்த போது தன்வாளின் நுனி அவன் தோளைக் காயப்படுத்திக் குருதியைத் தோற்றுவித்ததையும் எதிர்பார்க்காததால் அவன் அதிர்ச்சிக்குள்ளானான்.

மாதேவி அதிர்ந்து முதலில் அஞ்சி நின்றுவிட்டாலும், குருதி கொட்டியபோதும் வெஞ்சினத்தோடு மீண்டும் போரிட வெகுண்டு எழுந்த ஆதித்தனின் செயல் அவளின் அமைதியைக் கலைத்தது. அச்சத்தோடு குரல் கொடுத்தவாறு ஆதித்தன் எழாதவாறு தரையில் அமர்ந்து அவனைத் தாங்கித் தன்மார்போடு அணைத்துக் கொண்டாள். அப்படி அவள் அச்சத்தோடு உதவிக்காக ஓலமிட்ட ஒலியைக் கேட்டே மாளிகையில் உள்ளிருந்த அனைவரும் ஓடிவந்தனர்.

இளவரசி கடம்பமாதேவியின் கண்கள் தன்னை வெறுப்போடு நோக்குவதை விக்கியண்ணன் கண்டான். அதைக்காண அவன் மனம் சிறிது தடுமாறவே செய்தது. இளவரசன் ஆதித்தனுக்காகத் தன்பார்வையைத் திருப்பினான்.

பெருகி வழியும் குருதியையும் பொருட்படுத்தாதவனாய், விக்கியண்ணனையும் உருவிய வாள்களோடு ஒருங்கே நெருங்கிக் கொண்டிருந்த படைத்தலைவர்களையும் மாறிமாறிப் பார்த்திட்ட ஆதித்தனின் கண்கள் வியப்பைக் காட்டுவதன் காரணத்தை விக்கியண்ணன் உணர்ந்தான். படைத்தலைவர்கள் நால்வரின் வாள்களுக்கும் சிறிதும் அஞ்சாது இந்தப் புதியவன் நிற்பது எப்படி என்பதே ஆதித்தன் கொண்ட வியப்பிற்குக் காரணமென்பதை உணர்ந்துகொண்ட விக்கியண்ணன் மகிழ்ச்சி கொண்டான். அவன் பேசியபோது அவன்குரலில் பெருமிதம் ஒலித்தது.

"இளவரசே! இதோ கவனியுங்கள். வாள்போர் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும்."

ஒரே நேரத்தில் நான்கு வாள்கள் சீறின. என்ன பயன்? அந்த நான்கு வாள்களின் சீற்றத்தையும் விக்கியண்ணன் கையிலிருந்த ஒருவாளே மாற்றியழிக்கும் ஆற்றல் வாய்ந்ததென்பதை அங்கிருந்த எல்லோருமே சற்றுநேரத்திற்குள்ளாகவே ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

நாங்கூர்வேளிர் நற்குணப்பேரெழிலாரின் முகம் மலர்ச்சியைக் காட்டியது. எத்தனை போர்க்களங்களைத் தன்வாழ்நாளில் அன்று வரைக் கண்டிருக்கிறார்! எத்துணைத் திறம் வாய்ந்த வீரர்களை யெல்லாம் அவர் சந்தித்திருக்கிறார்? ஆனால் இன்று? இத்துணைத் திறமையாக வாளைக் கையாளும் இளைஞனை இதுவரைச் சந்தித்ததில்லையே! வாளா அது? வானிழி மின்னலென வட்டமிடும் வேகம்தான் என்னே! கண்ணிமைக்கவும் நேரங்கொடாது கறங்கென எதிர்நிற்போரைக் கலங்கவைக்கும் திறம்தான் என்னே! வாழ்க்கையையே போர்க்களமாக்கிக்கொண்ட பரகேசரி விசயாலய சோழனின் வாள்பயிற்சிகூட இந்தச் சேரநாட்டு வீரனின் முன் செல்லாதாகிவிடுமன்றோ!

விக்கியண்ணனின் கையிலிருந்த வாள் மட்டுமா சுழன்றது? கண்கள் சுழன்றன; கால்கள் சுழன்றன; அவன் கருத்திற்கேற்பக் கல்லொத்த அவன்தன் கட்டுடலோ தரையில் பற்றிநிற்காமல் எங்கும் சுற்றிச் சுழன்றது.

விரைவாகக் கால்களை நகர்த்தியபடி வாளைச் சுழற்றினாலும் விக்கியண்ணனின் அசைவில் உறுதியும் ஒழுங்கும் இருந்ததைக் காண எதிர்த்துப் போரிட்டுக்கொண்டிருந்த படைத்தலைவர்கள் அவனை மனதிற்குள் பாராட்டவே செய்தனர். எதிரே போரிடுபவன் எளியன் இல்லை என்பதை அடிக்கடி தங்கள் உடல்களைத் தழுவிச் சென்ற அவனின் வாளின்திறம் அவர்களுக்கு அறிவுறுத்தியது. உடலை அடிக்கடி தடவிச் சென்றாலும் எந்தவகையிலும் ஊறுவிளைவிக்காத திறம், வாளைக் கையாளுவதில் அவனுக்குள்ள வல்லமையை அவர்களுக்குத் தெளிவாக்கியது. அன்றெல்லாம் போரிட்டாலும் அவனை வெல்லல் ஆகுமோ என்று அவர்கள் மனம் ஆராய முற்பட்டபோது, விக்கியண்ணன் மெல்லச் சிரித்தான்.

ஏன் சிரித்தான் எதிரி என்பதை எண்ணிப் பார்க்கவும் நேரத்தை விக்கியண்ணன் விட்டுத்தரவில்லை. எதிர்பாரா முறையில் வாளின் சுழற்சியை எதிர்திக்கில் மாற்றிய விக்கியண்ணனின் வாளின் விரைவு, பல்லவரையனின் வாளைப் பறித்துச்செல்லவே, அவன் திகைத்து நின்றான். பல்லவரையன் மட்டுமே திகைத்து நின்றிருந்தால், வாள்போர் மேலும் நீடித்திருக்கக் கூடும். ஆனால், எதிரியின் திறமையால் பல்லவரையனின் கைவாள் பறப்பதைக் கண்டு மற்ற மூவரும் ஒரு வினாடி திகைத்து நிற்க, அக்கணமும் நிற்காது சுழன்ற விக்கியண்ணனின் வாள் செங்கணானின் வாளொடு மோதி அவன் வாளைச் சிதைக்கவே மற்றவர் இருவரும் என்செய்வதென்பது அறியாது பின்வாங்கினர். ஆனால், விக்கியண்ணன் அடுத்து என்ன செய்யவேண்டுமென்பதை அறிந்திருந்தான்.

தன்வாளை உறையுள் சேர்த்த விக்கியண்ணன், சற்றுத் தள்ளித் தரையில் கிடந்த பல்லவரையன் வாளைக் குனிந்தெடுத்து உரியவனுக்காக எறிந்தான். எறியப்பட்ட வாளைப்பற்றிய பல்லவரையன், கையில் சிதைந்த வாளொடு செங்கணானும் மற்றவர்களும் நிற்பதைப் பொருட்படுத்தாதவனாய்த் தன்வாளை உறையுள் சொருகியவனாய் விக்கியண்ணனை நெருங்கினான்.

"பல்லவரையரே, இளவரசரை அமைச்சரின் மாளிகைக்குள் சேர்த்துவிட்டு என்னிருப்பிடத்திற்கு வந்து என்னைச் சந்தியுங்கள்."

மாதேவிக்கு உதவியாய் இளவரசன் ஆதித்தனைத் தூக்கி நிறுத்திய விக்கியண்ணன் பேசியபோது அவன் குரலில் உறுதி தெரிந்தது.

"இளவரசே! நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டிய போர்ப் பயிற்சிகள் நிறையவே இருக்கின்றன. இதோ இந்தக் கணையாழியைப் பாருங்கள். உங்கள் தந்தை, சோழமன்னர் பரகேசரி விசயாலயர் எனக்களித்தது இது. அரசர் இதை எனக்களித்ததன் மூலம் இந்த ஆட்சியைக் காக்கும் அனைத்துப் பொறுப்புகளையும் எனக்குத் தந்திருக்கிறார். அந்தப் பொறுப்பு களில் ஒன்றுதான் இளவரசர் உங்களை ஓர் ஈடில்லா வீரராக ஆக்குவதுடன் பொறுப்புள்ளவராக மாற்றுவதும். கோழை ஒவ்வொரு நாளும் சாகிறான்; வீரன் ஒரேஒரு முறைதான் சாகிறான். சென்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நாளை முதல் உங்களுடைய பயிற்சி தொடங்குகிறது."

இளவரசன் ஆதித்தனின் உதடுகள் இளநகை உதிர்த்தன. அதைக்காண அமைச்சர் நாங்கூர்வேளிர் நிறைவு கொண்டார். விதையொன்றிட்டால் முளைவேறா கிளம்பும்? இளமையில் விசயாலயன் எப்படிப் போரென்றால் பூரித்துப் புன்முறுவல் பூப்பானோ, அதே முறையிலன்றோ ஆதித்தனும் புன்னகை பூக்கின்றான்!

மாதேவி பின்தொடர மாளிகைக்குள் பல்லவரையன் துணையுடன் ஆதித்தன் நுழைந்து மறையும்வரை அமைதியாக நின்றிருந்த விக்கியண்ணனின் பார்வை படைத்தலைவர் களுக்காகத் திரும்பியபோது கடுமை நிறைந்திருந்ததை அமைச்சர் மட்டுமன்றி இளவரசி கடம்பமாதேவியும் கவனிக்கவே செய்தாள். இவனென்ன எல்லோரையும் போல இயல்பான மனிதன்தானா? சற்றுமுன்னர்ப் புன்னகை பூத்த முகத்தவன் இவன்தானா? இப்போது சினத்தால் முகம் சிவந்துவிட்டதே! கண்களில் இருந்த கனிவு எங்கே ஒளிந்துகொண்டது? இப்போது கடுமையன்றோ கண்களில் குடிகொண்டுவிட்டது!

விக்கியண்ணன் மீண்டும் பேசியபோது பார்வையிலிருந்த கடுமையைவிட அவன் பேச்சில் கடுமை மிகுந்தொலித்தது.

"நன்று! மிக்க நன்று! படைகளுக்குப் பயிற்சியளிக்கவேண்டிய படைத்தலைவர்கள் அரசர் அறியாது அமைச்சரோடு ஆராய்தல் மிகவும் நன்று! அரசர் கொண்டுள்ள அச்சத்திற்கு அடிப்படை இல்லாமல் இல்லை."

கடம்பமாதேவி குறுக்கிட்டாள்.

"நான்தான் அவர்களை இங்குவரச் செய்தேன்."

"இருக்கலாம். ஆனால், அரசர்க்குத் தெரியாமல் இங்குத் தனித்துக் குழுமியது படைத்தலைவர்களுக்குப் பண்புமில்லை; ஆட்சிவிதிகளில் அதற்கு இடமுமில்லை."

"இளவரசியின் ஆணையைப் புறக்கணிக்க யாருக்கும் உரிமையில்லை."

சினத்தில் சீறினாள் இளவரசி கடம்பமாதேவி. அவள் பேச்சு விக்கியண்ணனைச் சிறிதும் பாதிக்கவில்லை. விடையளித்தபோது, தலையைச் சிறிது தாழ்த்திப் பணிவோடு பேசினாலும் அவன் பேச்சில் விளையாட்டுத்தனம் நிறைந்திருந்ததை அனைவரும் உணர்ந்தனர்.

"இளவரசியார் இந்த எளியவனைப் பொறுத்தருள வேண்டும். அரசின் நன்மைக்காக இன்றியமையாதபோது இளவரசியாரின் ஆணையை மீறிநடப்பது உண்மையான வீரனுக்கு இழுக்கில்லை. நாட்டைப் போர்மேகம் சூழ்ந்திருக்கும் இன்றைய சூழ்நிலையில், படைவீரர்களுக்குப் பயிற்சியளித்து எழுச்சியோடு அணிய நிலையில் வைத்திருக்கவேண்டியது படைத்தலைவர்கள் ஒவ்வொருவரின் முதன்மைக் கடமையாகும். இளவரசியார் எனக்கு ஒப்புதல் அளித்தால், நான் புறப்படுவேன். மாலைக்குள் படைக் கலக்கூடங்கள் அனைத்தையும் பார்வையிட வேண்டியவனாய் உள்ளேன்."

"என் ஒப்புதல் உங்களுக்குத் தேவியில்லை என்பதை நான் அறிவேன். மாமா! வாருங்கள்."

காற்றென விரைந்து மாளிகைக்குள் புகுந்தாள் இளவரசி கடம்பமாதேவி. அவளின் அடிச்சுவட்டைப் பின்தொடர எண்ணித் திரும்பிய அமைச்சர் நாங்கூர்வேளிரை விக்கியண்ணனின் பேச்சு தடுத்துநிறுத்தியது.

"அமைச்சருக்கு ஏதேனும் ஆகவேண்டுமென்றால் எனக்குச் சொல்லியனுப்புங்கள். படைத்தலைவர்களுக்கு இனி ஓய்வின்றிப் பணிகளிருக்கக் கூடும் ."

நாங்கூர் வேளிர் நற்குணப்பேரெழிலார் அனைத்தையும் புரிந்து கொண்டதற்கடையாளமாக மெல்லத் தலையை அசைத்தார்.

# 12. இவனே எல்லாம் இனி

*"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்*
*கவிகைக்கீழ்த் தங்கு முலகு."*

பரகேசரி விசயாலயசோழர் பார்வையில் அமைதி நிறைந் திருந்தது. அவ்வமைதியினூடே அவர் முகம் மலர்ச்சியையும் வெளிப்படுத்தியது. அந்த அவையிலே குழுமியிருந்தோர் அனைவருடைய எண்ணங்களையும் அவர் அறிந்திருந்தார். எதைப்பற்றி அவரிடம் எடுத்துக்கூற எல்லோரும் வந்திருக்கின்றனர் என்பதை முன்னதாகவே அறிந்திருந்த காரணத்தால், தனித்தங்குக் கூடியிருந்த தன்னரசியல் உயர்அலுவலர்களை நோக்கி விசயாலயரே முதலில் பேச்சைத் தொடங்கினார்.

"எதற்காக நீங்கள் எல்லோரும் இணைந்து என்னைச் சந்திக்க விழைந்தீர்கள் என்பதை நான் ஓரளவு உணர்ந்திருக்கிறேன். பாண்டியன் தன்படைகளைப் பன்மடங்குப் பெருக்கி வைத்துள்ளான். இம்முறை போர் ஏற்பட்டால், நாம்மட்டுமே தனித்துப் பாண்டியனை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அரசனான எனக்கோ தள்ளாத வயது. இந்த நிலையில் இந்நாட்டைக் காக்க என்ன செய்யமுடியும் என்பதே உங்கள் சிந்தனை."

"மன்னர் எங்களைத் தவறாகப் புரிந்துகொண்டுள்ளார். அரசரின் ஆற்றலை அறியாதவர் இங்கு ஒருவரும் இல்லை. தள்ளாத

வயதெனினும் தளராத நெஞ்சுடையவர் தாங்கள் என்பதை எல்லோரும் நன்கு அறிவோம் ."

குறுக்கிட்டுரைத்தார் முறைசெய்வதில் மன்னருக்குத் துணை நிற்கும் நான்மறையாளர் இளநாகர். அவருடைய கருத்தை அறிந்து கொண்ட பொருளில் தலையை அசைத்தபடி தொடர்ந்தார் விசயாலய சோழர்.

"புரிகிறது இளநாகரே! என் ஆற்றலில் இப்போதும் உங்களுக்கு நம்பிக்கை உள்ளது; ஆனால், என் நெஞ்ச உறுதியில் இப்போது அத்தனை நம்பிக்கை இல்லை. சரிதானே?"

"மன்னர் பொறுத்துக்கொள்ளவேண்டும். போரில் பெற்ற புண்களே பூண்களாகப் பூண்டிருக்கும் மன்னரின் மனவுறுதியில் யார்க்கும் எள்ளளவும் நம்பிக்கை பிறழ்ந்து போய்விடவில்லை ."

நகராட்சித்தலைவர் நன்னிலங்காத்தார் பணிவோடுரைத்தார்.

"பின்னெதற்கு இந்த அவை இன்று கூட்டப்படவேண்டும்?"

"இன்று நம்நாடு எங்கும் குழப்பம் நிறைந்திருக்கிறது."

"தெரியும்."

"மக்களின் மனதிலே அச்சம் நிலவுகிறது. போரென்றால் பொங்கியெழும் சோழமக்கள் இன்றும் போருக்கு அஞ்சவில்லை. போருக்குப்பின்னர் ஏற்படும் விளைவுகளை எண்ணிப் புழுங்கு கின்றனர். பல்லவர் பாண்டியருடன் குலவுகின்றனர். நம்மைச் சுற்றியுள்ள சிற்றரசுகளோ நமக்குச் சற்றும் உதவுபவர்கள் இல்லை. அவர்கள் உதவியிலும் எந்தப் பயனும் இருக்கப்போவதில்லை. முத்தரையரோ தஞ்சையை மீட்க முயலாத நாள்களே இல்லை. நமக்கு நல்ல துணையென்று சொல்லிக் கொள்ள நம்பிக்கையான வலிய அரசு எதுவும் நம்பக்கம் இல்லை. இந்தச் சூழ்நிலையில், தந்தையின் தோல்விக்குப் பழிவாங்க உறுதிகொண்டுள்ள வரகுணவர்மப் பாண்டியரின் பெரும்படைக்குமுன் சோழப்படை

சிறிதுநேரங் கூட எதிர்நிற்க இயலாதென்பதை எல்லோருமே அறிந்திருக்கின்றனர்."

நன்னிலங்காத்தார் மேலே தொடரத் தயங்குவது அனைவருக்கும் புரிந்தது.

"தயக்கம் என்ன? மேலே தொடருங்கள்."

கருவூலக்காப்பாளர் அருளாளர் எழுந்து இடையே பேசினார்.

"அரசர் தன்னாட்சிக்காலம் முழுவதையுமே போர்க்களத்தில் கழித்துவந்திருக்கிறார். மக்கள் நலனில் அக்கறை காட்டியதே இல்லை. இது தவறில்லையா?"

அருளாளர் பேச்சால் அனைவரும் திடுக்கிட்டு அமர்ந்திருந்தனர். அவையில் அமைதி நிலவியது. அரசரின் மாற்றத்தைக்காண அனைவரும் அவர் முகத்தையே நோக்கினர். நான்மறையாளர் இளநாகனார் அமைதியைக் கலைத்தார்.

"மன்னர் அருளாளரைப் பொறுத்தருள வேண்டும். அவர் சொல்லவந்தது என்னவெனில்..."

விசயாலயர் குறுக்கிட்டார்.

"இளநாகரே, நீங்கள் அமருங்கள். அருளாளர் தன் எண்ணத்தை எடுத்துரைத்ததில் தவறேதும் இல்லை. இந்த அவையிலே எல்லோரும் தாங்கள் சரியென்று எண்ணுவதை எடுத்துச்சொல்ல உரிமையுண்டு. அப்படிச் சொல்லப்படுபவை, எனக்கு முரண்பாடாக, பொறுத்துக்கொள்ள முடியாததாக இருப்பினும் விளைவை நோக்கிப் பொறுத்துக்கொள்ள வேண்டியது என்னுடைய கடமையாகும். அருளாளரே! தயக்கம் வேண்டா. எண்ணுவதை நீங்கள் எதற்கும் தயங்காது சொல்லுங்கள் ."

"போரில் ஈடுபடும் நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் என்பது உறுதி. நம்நாடோ போரில் ஈடுபடாத நாளே இல்லை எனலாம். சோழவளநாட்டில் சோற்றுக்குப் பஞ்சமில்லை

என்பது உண்மைதான்! எனினும் இருந்திருக்க வேண்டிய வளம் இம்மியும் இன்று இருக்கவில்லை. பொருட்கிடங்கில் செல்வம் மிகவும் சுருங்கிவிட்டது. இருக்கின்ற படையின் செலவை ஈடுகட்டு வதற்கு இயலாமை நிலவும்போது மேலும் படையைப் பெருக்குவ தென்பது ஏது? மக்களுக்கென்று எந்த நலத்திட்டத்தையும் நாம் நெடுங்காலமாய்ச் செய்ததில்லை. இந்நிலை இனியும் தொடருமேல் சோழநாட்டில் சின்னாட்களில் கொந்தளிக்கும் சூழ்நிலை ஏற்படும் என்று எல்லோருமே சொல்கின்றனர் ."

"உண்மைதாம். நீங்கள் உரைத்த அனைத்தும் நானும் அறிவேன். இவைபற்றித் தலைமை அமைச்சரிடம் நான் தனிமையில் பேசியும் இருக்கிறேன். இங்கு வருவதற்குமுன் நீங்கள் எல்லோரும் கலந்து பேசிவிட்டு வந்திருப்பீர்களே; உங்கள் எல்லோருடைய முடிந்த முடிவுதான் என்ன? இன்றைய நிலையில் நாம் எடுக்கவேண்டிய செயல்கள் யாவை? எடுத்துச்சொல்லுங்கள்; அடுத்து ஆவன செய்வோம்."

இளநாகர் மெல்ல எழுந்தார். அவர் பேச்சில் பணிவும் தயக்கமும் இருந்தன.

"அரசர்க்கு அறிவுரைகூறும் தகுதி எங்களுக்கில்லை. மன்னர் எதைச் சரியென்று கொள்கிறாரோ அதையே நாங்களும் சரியென்று ஏற்போம்."

விசயாலயர் மெல்லப் புன்னகையொன்றை மலரவிட்டார்.

"நன்று; இளநாகரே, மிகவும் நன்று. அரசன் அத்தனை அறிவுடையனாக அமைந்துவிட்டால், அமைச்சர்கள் எதற்கு? ஆய்ந்து அறிவுறுத்த உங்களையொத்த உயர் அலுவலர்கள் எதற்கு? இந்த அவைதான் எதற்கு? இளநாகரே, நீங்கள் அனைவரும் ஒருமித்துக் கொண்ட முடிவினைச் சொல்லுங்கள். இங்கு எல்லோர் கருத்தும் ஒத்திருக்குமேயாயின் அதை ஏற்றுச் செயல்படுத்துவது என் முதற்கடமையாகும். உம்! தயக்கமென்ன? சொல்லுங்கள்."

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியுந் தூக்கிச் செயல்" என்பது தமிழ்மறை. போர்

ஏற்படுமேல், அது மிகச் சிறிய போராக இருக்கமுடியாது. அந்தப்போரில் நம்படை அளவில் சிறிதாக அமையும். பாண்டியர் படை பன்மடங்கு பெரியது. கடந்த பலவாண்டுகளாய்ப் பழிவாங்கும் உணர்ச்சியோடு தன் படையைப் பெருக்குவதில் கண்ணாய் இருந்திருக்கிறார் பாண்டிய மன்னர். அப்படையைப் பல்லவர் துணைக்கொண்டும் வெல்வது கடினம். இன்று, பல்லவர் துணையும் நம்பக்கம் இல்லை. நம்மைச் சுற்றியுள்ள சிற்றரசுகளோ நமக்கு நாளும் தொல்லைகளையே கொடுத்துவருகின்றன. இந்த நிலை கவலையையும் அச்சத்தையும் உண்டாக்குகிறது."

"இளநாகரே, கவலைப்பட்டுப் பயனில்லை. கவலை கொள்வதால் காலம்தான் வீணாகிறது. அச்சங்கொண்டு ஆவதும் ஒன்றுமில்லை. நம்பிக்கை வேண்டும். நம்பிக்கை அச்ச உணர்வையே அகற்றிவிடும். எதுவுமே தானே நம்மைத் தேடிவராது. ஒன்றைப்பெற ஒன்றை இழக்க ஏற்பாடாக இருக்கவேண்டும். இலமென்று அசைய இருப்பாரைக் கண்டால் எல்லாரும் நகைக்கவே செய்வர். இளமையிலேயே நான் ஓர் எண்ணத்தை என் குறிக்கோளாக ஏற்றேன். அந்த எண்ணத்தை எந்த நிலையிலும் நான் மறந்துவிடாமல் பார்த்துக்கொண்டவர் என்மகள் இளவரசி கடம்பமாதேவி. அந்த எண்ணத்தை நிறைவேற்றும்போது சில தவறுகள் உண்டாகின என்பதை ஏற்றுக் கொள்கிறேன். தவறே செய்யாதவர் இருக்கவே முடியாது. தவறே செய்யவில்லை என்றால் அவன் எதையுமே செய்யாதவன் என்பதுதான் பொருள். வீட்சியுற்ற சோழராட்சி மீட்சிபெற நான் மேற்கொண்ட போர்களால் ஏற்பட்ட இன்னல்கள் ஏராளம்! ஏராளம்! இன்னல்கள் அனைத்தையும் இன்முகத்தோடு ஏற்றுத் துணையாகத் தோள்கொடுத்துநின்ற என் சோழநாட்டு மக்களுக்கு என்றும் நான் கடமைப்பட்டவன். அந்த நல்ல மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு நீங்கள் சொல்லும் முடிவிற்கு நான் உடன்படுகிறேன். நீங்கள் உங்கள் முடிவை எந்தவித அச்சமுமின்றி இந்த அவையிலே உரைக்கலாம்."

இளநாகனார் எல்லோரையும் ஒருமுறை பார்த்துவிட்டுக் கூறினார்.

"அரசே! நடக்கவிருக்கும் போரைத் தவிர்ப்பதுதான் இன்று நாட்டைக்காக்கக் கூடிய ஒரே வழியாகும்."

"முடியுமா? இளநாகரே ."

"முடியும் அரசே!"

"எப்படி? பழிக்குப்பழி என்ற பகையுணர்வே பாண்டிய மன்னரிடம் நிறைந்துள்ளது. பருவநிலை நோக்கி அவர்படை காத்திருக்கிறது. இந்த நிலையில் போரைத் தடுத்து நிறுத்துவது எப்படி இயலும்."

"அரசர் நினைத்தால்..."

நன்னிலங்காத்தார் மெல்ல இழுத்தார்.

"எனக்கென இதில் தனிக்கருத்தேது. உங்களின் ஒருமித்த கருத்தைக் கூறுங்கள்; அதை நிறைவேற்ற என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யச் சித்தமாக இருக்கிறேன்."

இளநாகனார் தயக்கத்தோடு பேச்சைத் தொடர்ந்தார். தயக்கத்திற்குக் காரணம் அச்சம் என்பதை விசயாலயர் அறிந்திருந்தார். அதேபோல், அந்த அச்சத்திற்குக் காரணம் தானில்லை என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

"மன்னர் மனம் வைத்தால் எளிதில் நடக்கக் கூடும். பாண்டியருடன் நாம் மணவுறவு வைத்துக்கொண்டால் இடையே யுள்ள பகைமை அகலும் ."

"உண்மைதான். நானும் இதைப்பற்றிப் பலநாள்கள் எண்ணிய துண்டு. பாண்டியர் அரசோ இன்று வலுவான ஒரு பேரரசாக உள்ளது. நம்மரசோ மிகவும் குறுகிய சிற்றரசு. இந்த ஏற்றத் தாழ்விற்கிடையே ஆதித்தனுக்குப் பாண்டியரின் பெண்ணைக் கேட்பது அறிவுடைமையாகுமா? பாண்டிய மன்னரும் நம் கோரிக்கையை ஒப்புக்கொள்வாரா? சொல்லுங்கள் இளநாகரே ."

"பெண் கேட்பது தவறாக இருக்கலாம்; ஆனால் நம் பெண்ணை அவர்களுக்கு மணமுடித்துக் கொடுக்க முன்வருவதில் எந்த இழுக்குமில்லையல்லவா?"

"புரிகிறது. ஆனால், நீங்கள் சொல்வது நடக்கக் கூடியதா?"

அரசரின் கண்கள் அருகே அமர்ந்திருந்த இளவரசி கடம்பமாதேவியின் மீது ஒரு கணம் சென்று மீண்டதை விக்கியண்ணன் கவனித்தான். இளவரசி தலைநிமிர்ந்து யாரையும் நோக்காததையும் அவன் கவனித்தான்.

"நீங்கள் முயன்றால் நடக்கக்கூடும். இளவரசியார் தங்கள் சொல்லை ஒருபோதும் தட்டமாட்டார்."

அரசர் விசயாலயர் வாய்விட்டுச் சிரித்தார். அதன் பொருளைப் புரிந்து கொள்ள இயலாது விக்கியண்ணன் குழம்பினான்.

"தெரிந்து பேசுகிறீர்களா? இல்லை, தெரிந்தும் தெரியாதது போல் பேசுகிறீர்களா? இளவரசியின் சொல்லைத்தான் இந்த நாட்டில் யாருமே தட்டுவதில்லை; இதை நாடே அறியும். என் சொல்லை இளவரசியார் மீறமாட்டார் என்பது மிகவும் வேடிக்கை! நானும் நற்குணப்பேரெழிலாரும், இன்றுநேற்றல்ல; கடந்த இரண்டாண்டுகளாய் இளவரசியாரை இத்திருமண ஏற்பாட்டிற்கு இசையுமாறு வேண்டிவந்திருக்கிறோம். எங்களால் இயலவில்லை. இங்கு நீங்கள் வருவதற்குமுன் எல்லோரும் இளவரசியைச் சந்தித்துவிட்டுத்தானே வந்திருப்பீர்கள்; ஏன் நீங்கள் அவருக்கு அனைத்தையும் எடுத்துச் சொல்லியிருக்கக்கூடாது?"

"எல்லோருமே சொன்னோம்; ஆனால், எங்கள் பேச்சு எடுபட வில்லை. அரசரும் தலைமை அமைச்சரும் முயன்றும் ஆகாதபோது எங்களால் மட்டும் எப்படி முடியும்?"

"மணவுறவை மறுப்பதற்கு இளவரசியார் ஏதேனும் காரணம் கூறியுள்ளாரா?"

அதுவரை அமைதியாக அனைத்தையும் கவனித்து வந்திருந்த விக்கியண்ணன் முதன்முதலாகப் பேச்சில் கலந்துகொண்டான். அரசர் நீங்கலாக அனைவருடைய கண்களும் அவன்மேல் முழுமையாகப் பதிந்தன.

"இல்லை."

"இளவரசியார் இப்பொழுதாவது சொல்வாரா?"

அமைதி அங்கே ஆட்கொண்டது. எதிர்பார்ப்போடு எல்லோரும் இளவரசி கடம்பமாதேவியின் எழில்முகத்தையே நோக்கினர். கடம்பமாதேவி முகத்தை நிமிர்த்தி விக்கியண்ணனை நோக்கியபோது அவள் கண்களிலிருந்து யாரும் எதையும் தெரிந்து கொள்ளமுடியவில்லை.

"திருமணம் என் சொந்த கருத்தைப் பொறுத்தது."

"இளவரசியின் கருத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை. அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தனித்துச் செயல்பட உரிமை இல்லை. அவர்களின் வாழ்வு அரசியலோடு ஒன்றாக இணைந்தது."

"நீங்கள் நினைக்கலாம்; நான் அப்படி நினைக்கவில்லை. அமருங்கள். என் வழியில் குறுக்கிட யாருக்கும், குறிப்பாக உங்களைப் போன்றவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை."

இளவரசி கடம்பமாதேவியின் கட்டுக்கடங்காச் சினம் அவள் கண்களில் தெரிந்ததைவிட பேசியபேச்சில் தனலாய்த் தெறித்தது. அதைத் தணிக்க எண்ணியவராய் அரசர் விசயாலய சோழர் குறுக்கிட்டுப் பேசினார்.

"இளவரசி விரும்பாத எதையும் செய்ய நான் எண்ணுவது இல்லை. மணம் பெண்களின் மனவிருப்பப்படி நடத்தப்பட வேண்டுமென்பதே என் கருத்தும் ஆகும். எனவே, இளவரசியார் திருமணத்தைத் தவிர்த்து வேறுவழிகள் இருப்பின் சொல்லுங்கள் ."

"நாங்கள் சொல்ல இனி ஏதுமில்லை, அரசே ."

ஏதுமில்லை என்று அனைவர் சார்பாக நகராட்சித்தலைவர் நன்னிலங்காத்தார் கூறினாலும் வேறு எதையோ சொல்லத் தயங்குவது விசயாலருக்கு வெளிப்படையாகத் தெரிந்தது. அதன் காரணத்தை அறிந்திருந்த விசயாலயர் இனியும் அவையை

நீட்டிப்பதில் பலனில்லை என்ற முடிவுக்கு வந்தவராய் அனைவரையும் ஒருமுறை நோக்கிவிட்டுப் பேச்சைத் தொடங்கினார்.

"போரைத் தவிர்க்க எந்த வழியுமில்லை என்பதை நீங்கள் எல்லோருமே நன்றாக அறிவீர்கள். இருந்தும் அதைப்பற்றி இந்நேரம் வெற்றெனப் பேசிக் கொண்டிருந்தீர்கள். இந்த அவை கூட்டப் பட்டதன் நோக்கம் என்னவென்பதை நான் அறிவேன். வெளிப் படையாக அதைப் பேச நீங்கள் தயங்கியிருக்க வேண்டியதில்லை. அரசனின் எண்ணத்திற்கேற்ப ஒத்துப் பேச அமைந்தவர்கள் இல்லை அமைச்சர்களும் உயர் அலுவலர்களும்! தவறு எனின் எதுவரினும் தடுத்துநிறுத்தத் தயங்காதவர்கள்தாம் ஓர் அரசனுக்குத் தேவை. 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானுங் கெடும்' என்பதை அறியாதவர்கள் இங்கு யாரும் இல்லை."

"பொறுக்க வேண்டும் அரசே. இதோ இருக்கும் விக்கியண்ணனிடம் இந்த நாட்டுப் பொறுப்புகள் அனைத்தையும் தாங்கள் ஒப்படைத்திருக்கிறீர்கள். இளமை முதல் உங்களுக்கு இணையாக அனைத்துப் போர்களிலும் தோளொடு தோளாக நின்று இன்று இயலாமையால் உங்கள் தலைமை அமைச்சராகப் பணியாற்றுகிறார் நாங்கூர்வேளிர் நற்குணப் பேரெழிலார். திருமணமே வேண்டாவென்று இந்தத் திருநாட்டின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் வழிகாட்டியாக எல்லோருக்கும் விளங்குகிறார் இளவரசியார். அரசரிட்ட ஆணைகளை அட்டியின்றி உடன்முடிக்க உரனுடை படைத்தலைவர்கள் உள்ளனர்; உயர் அலுவலர்கள் நாங்களும் உள்ளோம். இத்தனை பேர்கள் உங்களுக்காத் தங்கள் இன்னுயிரையும் ஈய உடனிருக்கிறார்கள். இருந்தும் தாங்கள் எங்கிருந்தோ வந்த ஒருவரிடம் இந்த நாட்டின் எல்லா பொறுப்பு களையும் ஒப்படைத்திருக்கிறீர்கள்; எங்களையும் அவர் ஆணைப் படி நடக்கப் பணித்திருக்கிறீர்கள். இது முறைதானா? எங்களிடம் முன்னரே அரசர் கலந்து முடிவெடுத்திருக்கலாமே!"

அருளாளரின் கூற்று சரியே என்று ஒப்பும்வகையில் சிலர் தலைகளை ஆட்டுவதை விக்கியண்ணன் கவனித்தான். அரசரின் விடையை அறிய அவன் ஆவல் கொண்டான்.

"அருளாளரே, மிக்க மகிழ்ச்சி. இப்போதாவது உங்களால் மனந்திறந்து பேசமுடிந்ததே! என்னிடமும் ஏதோ தவறிருக்க வேண்டும். மன்னன் என்பவன் என்னைப் பொருத்தவரை ஓரெளிய மனிதன்தான். காட்சிக்கு எளியவனாய்க் கடுஞ்சொல் அல்லனாய் மன்னன் இருக்கவேண்டும். என்னைச் சுற்றி நீங்கள் எளிதில் சந்திக்கமுடியாவண்ணம் ஏதேனும் கட்டுப்பாடுகளை அமைத்துக் கொண்டுவிட்டேனோ என்று அஞ்சுகிறேன். யாரேனும் விளக்கக் கூடுமா?"

அனைவரும் அமைதி காத்தனர். இளவரசி கடம்பமாதேவி மெல்லப் பேசினார்.

"தந்தையே! தவறு என்னுடையதே. உடலாலும் உள்ளத்தாலும் உழைத்து உழைத்துத் தளர்ந்துபோன உங்களுக்கு ஓய்வுதேவை; எதற்கெடுத்தாலும் அரசரை அணுகி வீண்தொல்லைகளை விளை விக்கவேண்டாவென்று நான்தான் எல்லோருக்கும் அறிவுறுத்தி யிருந்தேன். அவையினர்பால் எந்தத் தவறும் இல்லை."

சோழர் விசயாலயர் இளவரசியை முகமலர்வோடு நோக்கிப் பேசினார்.

"மகளே! நீ எது செய்தாலும் இந்நாட்டு நன்மைக்காகத்தான் இருக்கும் என்பதை நான் நம்புகிறேன். என்னினிய அவையினரே! என் எண்ணங்களை உங்களிடம் இப்போது வெளிப்படையாகவே பகிர்ந்து கொள்கிறேன். இளவரசியாருக்கோ, தலைமை அமைச்சருக்கோ, படைத்தலைவர்களுக்கோ என் செய்கைகளில் நம்பிக்கை இல்லை என்பதை உங்களைப் போலவே நானும் அறிவேன். இந்நாட்டுப் பொறுப்புக்கள் அனைத்தையும் புதியவனான இவ்விளைஞனிடம் நான் ஏன் ஒப்படைத்தேன்? என்னால் எந்தக் காரணத்தையும் சொல்லமுடியாது. என்னாலும் புரிந்து கொண்டு இப்படித்தான் என்று விளக்க இயலாத ஒரு நம்பிக்கை! அவ்வளவுதான். இன்றைய சூழ்நிலையில் யாரும் காப்பாற்ற அரிதான இந்தச் சோழராட்சியை இந்த இளைஞர் எப்படியும் காத்து நிலைநிறுத்துவார் என்று இவரைக் கண்டதும் என் உள்மனதில் பட்டது; அதனால் பொறுப்பை இவரிடம் ஒப்படைத்தேன். உங்கள் அனைவரிடமும் கலந்துபேசாதது

தவறுதான்! அதற்காக வருந்தவுஞ் செய்கிறேன். ஆனால், நான் எடுத்த முடிவு தவறென ஏற்கமாட்டேன். இந்த இளைஞரிடம் நிறைய குறைகள் இருக்கின்றன. உண்மைதான்! குறைகளே இல்லாத மனிதனை யாரேனும் எங்கேனும் காட்டக் கூடுமா? அஞ்சும் நிலையின்றி நாட்டில் அமைதி நிலவக் கூடுமேல், விக்கியண்ணனிடம் இந்தப்பெரும் பொறுப்பை ஒப்படைக்க நானும் ஒப்பியிரேன். ஆனால், இன்றைய நிலையில் நான் சிறிதும் தயங்கவில்லை. நீரில் மூழ்க இருக்கும் இவ்வரசுக்கு இறுதியில் கிட்டிய சிறுதுரும்புதான் இந்த விக்கியண்ணன். சிறுதுரும்பு பெரும்பாரத்தைச் சுமக்கமாட்டாது நீரில் அழுந்திவிடவும் கூடும். உண்மைதான்! ஆனால், வேறு வழி? இந்த இளைஞரால் எதுவும் கூடும் என்பது என் நம்பிக்கை. என் நம்பிக்கை உள்மனத்தின் வெளிப்பாடு; அது இன்றுவரைப் பொய்த்ததில்லை. இந்தச் சோழநாடு இன்னும் சில ஆண்டுகளில் தலைநிமிர்ந்து தனியாட்சி கொள்ளும். நீங்கள் என்றும்போல் என்மேல் நம்பிக்கை வைத்து உங்கள் கடமைகளைச் செய்யுங்கள். மற்றவற்றை விக்கியண்ணன் கவனித்துக் கொள்வார்."

மன்னரின் பேச்சுக்கு மறுபேச்சு அங்கிருக்கவில்லை.

## 13. காதலும் கசப்பதுண்டோ?

*"ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்*
*பன்னாள் வந்து பனிமொழி பயிற்றியென்*
*நன்னர் நெஞ்சம் நெகிழ்ந்த ..... "*

"ஆதித்தா! உனக்கு ஒரு அக்காள் உள்ளாள் என்பதும் மறந்துவிட்டதா?"

"என்ன அக்கா அப்படிச் சொல்லிவிட்டாய்? உங்களை விட உயர்ந்தவர்கள் எனக்கு யாரிருக்கிறார்கள்? தந்தை சொல்லைக் கூடக் கேட்காத நான் தமக்கை உங்கள் சொல்லை என்றாவது தட்டிப்பேசியதோ, நடந்ததோ உண்டா?"

"அப்படியானால் என்னை ஏன் இத்தனை நாள்களாக நீவந்து பார்க்கவில்லை? தோளில் ஏற்பட்ட வாள்புண் குணமாகிவிட்டதா

என்பதை அறியத் துடித்துக்கொண்டிருப்பேன் என்பதை நீ அறிவாயன்றோ?"

"பொறுத்துக்கொள்ளுங்கள். தலைவர் சொல்லைத் தட்ட முடியவில்லை. அதனால்தான் உங்களை உடன்வந்து பார்க்கக் கூடவில்லை."

இளவரசி கடம்பமாதேவி வாய்விட்டுச் சிரித்தாள்.

"இளவரசனுக்கும் ஒரு தலைவரா? இஃதென்ன வேடிக்கை!"

"விக்கியண்ணனைத்தான் தலைவரென நம் இளவரசர் குறிப்பிடுகிறார் இளவரசி."

பணிவோடு பக்கம்நின்றிருந்த படைத்தலைவர் செங்கணான் இடையில் குறுக்கிட்டு இளவரசிக்கு விளக்கம் அளித்தார்.

"அந்த மனிதரையா ஆதித்தன் தலைவனெனச் சொல்கிறான்?"

இளவரசியின் கேள்வியில் சினம் இழையோடியது.

"அக்கா! நானென்ன? இந்த நாடே அவரைத் தலைவரென்று தான் அழைக்கிறது! என்ன படைத்தலைவரே ஏதும்பேசாமல் இருக்கின்றீர்கள்? அக்காவிற்கு அனைத்தையும் சொல்லுங்கள்."

"இளவரசர் சொல்வது உண்மைதான் அம்மா."

"தாங்களும் அந்த மனிதரை அப்படித்தான் அழைக்கிறீரோ?"

இளவரசியின் கேள்வியில் ஏளனம் இழையோடியது.

"அழைப்பது மட்டுமன்று; அவர் பேச்சை அட்டியின்றிக் கேட்டும் நடக்கின்றார்."

"ஆம் இளவரசி. நான் மட்டுமில்லை; தலைமை அமைச்சர் நாங்கூர் வேளிர் அவர்களும் விக்கியண்ணன் சொற்படிதான் நடக்கின்றார். இன்று நாட்டில் அவர் இட்டதே சட்டம்!"

"அப்படியா?"

"ஆமாம். அக்கா! 'தம்பி! நீ பெரிய வீரனாக வேண்டும்; உன்னை வெல்வார் இந்த உலகத்திலே யாரும் இருக்கக்கூடாது; அடங்கிக் கிடக்கும் சோழநாடு நீ அரசனானதும் தலைநிமிர்ந்து இருக்கவேண்டும்' என்று நான் சிறுவனாக இருக்கும்போது நீங்கள் ஓயாமல் சொல்லிக் கொண்டிருப்பீர்களே; நினைவிருக்கிறதா? உங்கள் விருப்பத்தை நான் பொய்யாக்கமாட்டேன். இந்த ஒரு திங்களாய்ப் பார்க்கவில்லையே என்று குறைபட்டுக்கொண்டீர்களே, ஏன் உங்களை நான் பார்க்கக்கூடவில்லை தெரியுமா? ஓயாத போர்ப்பயிற்சியை நாளும் தலைவரிடம் கற்று வருகிறேன். கற்றது கை மண்ணளவு என்பதை அவரிடம் பயிற்சியை மேற்கொண்ட போதே நான் உணர்ந்துகொண்டேன். எத்தனை வகையான பயிற்சி வகைகள்! இரவு அயர்ந்து தூங்கும்போதும் போர்ப்பயிற்சிகள்தாம் கனவாக வருகின்றன. அக்கா! சண்டைப்பயிற்சி மட்டுமில்லை. அரசியல் பயிற்சியையும் எனக்குத் தலைவர் உடன் தந்து கொண்டிருக்கிறார். இன்று நான் ஒரு மாணவன்தான்; ஆனால் நானும் தலைவருக்கு இணையாய் எல்லாவற்றிலும் திறமையை விரைவில் அடையமுடியும் என்ற நம்பிக்கையை எனக்குத் தலைவர் ஊட்டியிருக்கிறார். அவரை அரசியல் ஆசானாகப் பெற நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும் ."

இளவரசன் ஆதித்தனின் பேச்சில் இருந்த ஆர்வத்தையும் விக்கியண்ணனிடம் அவன் கொண்டிருந்த பெருமதிப்பையும் இளவரசி கடம்பமாதேவியால் நன்கு உணர முடிந்தது. விக்கியண்ணன் அத்தனை திறமைமிக்கவனாக இருக்கக்கூடுமா? அப்படி இல்லையென்றால் ஆதித்தன் கண்கள் விக்கியண்ணனைப்பற்றிப்பேசும்போது ஒளிர்வானேன்?

"படைத்தலைவரே! ஆதித்தன் சொல்பவைகள் அத்தனையும் உண்மைதாமா?"

"ஆம். இளவரசி. இளவரசரின் வாள்பயிற்சியைத் தாங்கள் இப்போது கண்டால் மிகவும் பாராட்டுவீர்கள்."

"அக்கா! பயிற்சி செய்துவருவது நான் மட்டுமன்று; படைத்தலைவர்கள் அனைவருமே பயிற்சி பெற்றுவருகின்றனர்."

"ஆம், இளவரசி. பல்வகையான போர்ப்பயிற்சிகளைத் தலைவரிடம் கற்று மற்ற வீரர்களுக்கு நாங்கள் பயிற்சி அளித்து வருகின்றோம். அதுமட்டுமின்றிக் கடந்த பதினைந்து நாட்களில் இரண்டாயிரம் இளைஞர்களைப் படையில் புதிதாகச் சேர்த்துப் பயிற்சியளித்து வருகின்றோம். ஓய்வென்பது யாருக்கும் இல்லை. பகல் முழுவதும் போர்ப்பயிற்சி; இரவு நெடுநேரம்வரை அடுத்து நடக்கவேண்டியவைபற்றி ஆராய்ச்சி. தலைவருடைய விரைவிற்குப் பலநேரங்களில் என்னாலும் ஈடுகொடுக்க முடிவதில்லை."

இளவரசி கடம்பமாதேவி அதுவரை அமர்ந்திருந்த இருக்கையினின்றும் எழுந்து நின்றாள். அவள் முகம் அகத்து நிகழ்ந்து கொண்டிருந்த ஆழ்ந்த சிந்தனையை எடுத்துக்காட்டுவதாய் அமைந்திருந்தது.

"ஆதித்தா! நேரமாகிவிட்டது; போய் ஓய்வெடுத்துக்கொள்."

அவள் பார்வை அடுத்துப் படைத்தலைவர் செங்கணானுக்காகத் திரும்பியது.

"நீங்களும் போகலாம். அடிக்கடிவந்து நிலைமைகளைச் சொல்லிச்செல்லுங்கள்."

அவர்கள் இருவரும் சென்று நெடுநேரம் கழிந்தும் கடம்பமாதேவியின் எண்ணம் கலையவில்லை. திறந்திருந்த சாளரத்தின் வழியே விண்மீன்கள் இளவரசியைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டிக் கொண்டிருந்தன. கண்கள் வானை நோக்கி நிலைகுத்தியிருந்தபோதும் கடம்பமாதேவி விண்மீன்களைக் கவனித்தாள் இல்லை. தென்றல் மெல்லத் தவழ்ந்து அவள் மேனியைத் தழுவித் தன் வெம்மையைத் தணித்துக் கொண்டது.

அவள் வெகுநேரம் அமைதியே உருவாய் ஆழ்ந்த சிந்தனையில் நின்றிருந்ததால், அறையுள் நுழைந்து அருகே நெருங்கிய பணிப்பெண்ணை முதலிலேயே கவனிக்கவில்லை.

"அம்மா!"

இளவரசி கடம்பமாதேவி தன்பார்வையைத் திருப்பாது பேசினாள்.

"என்ன?"

"அவர் வந்திருக்கிறார்."

இளவரசியின் கவனம் இப்போது முழுமையாகப் பணிப்பெண் மேல் திரும்பியது.

"அவரென்றால் யார்?"

"நாளும் தங்களைக் காணவந்து காணமுடியாது திரும்பிச் செல்கிறாரே, அவர்தானம்மா இன்றும் வந்திருக்கிறார்."

விடையளிக்குமுன்னர் இளவரசி சிறிது எண்ணியது நன்கு தெரிந்தது.

"அவரைப் பார்க்கமுடியாதென்று சொல்லி அனுப்பிவிடு."

பணிப்பெண் உடனே புறப்படாது தயங்கிநின்றாள்.

"ஏன் இன்னும் நிற்கிறாய்?"

"தொடர்ந்து உங்களைப் பார்க்கவந்து கால்கள் தேய்ந்து விட்டனவென்று உங்களிடம் சொல்லச் சொன்னார், அம்மா ."

"அவ்வளவு தானே?"

"அவரைப் பார்க்கவே இரக்கமாக இருக்கிறது. இன்று உங்களைப் பார்க்காமல் போவதில்லையாம்."

"இன்றில்லை; இனி என்று வந்தாலும் அவரைப் பார்க்க நான் விரும்பவில்லை."

"இளவரசியாருக்கு அப்படி என்ன நான் தீங்கிழைத்து விட்டேன்?"

இளவரசி திடுக்கிட்டுப் பார்வையைத் திருப்பினாள். ஒப்புதல் இன்றி அங்கே விக்கியண்ணன் நுழைந்துவிட்டதைக் கண்ட பணிப்பெண், அடுத்து என்ன நிகழுமோ என்று அஞ்சி நடுங்கினாள். இளவரசி கடம்பமாதேவியின் பார்வையில் மட்டுமன்று; விக்கியண்ணனை நோக்கி வீசிய சொற்களிலும் சூடு நிறைந்திருந்தது.

"இஃது இளவரசியின் இருப்பிடம்; இங்குவர யாருக்கும் உரிமை இல்லை."

"எனக்குண்டு இளவரசி. உங்களின் உள்ளத்தில் இடங் கொண்டுவிட்ட எனக்கு உங்கள் தனியறையில் நுழைவது அடுக்காத செயல் இல்லை."

சினத்தால் கடம்பமாதேவியின் இதழ்கள் துடித்தன. அவன்மீது எழுந்த சினம் அங்கிருந்த பணிப்பெண் மீது திரும்பியது.

"ஏன் நிற்கிறாய்? வெளியே போய் இரு. அழைத்தால் வா."

பணிப்பெண் அறையைவிட்டகன்று நெடுநேரமாகியும் அவளின் சினம் குறையாததை விக்கியண்ணன் உணர்ந்தான். அவள் கொண்ட சினத்தைப் போக்கும் வழிபல ஆய்ந்தும் வழி காணாது ஓய்ந்தான்.

"தேவிக்கு என்மேல் இத்துணைச் சினம் இருக்கக்கூடும் என்பது எனக்கு இப்போதுதான் தெரிந்தது."

கடம்பமாதேவி மெல்ல அசைந்து திறந்திருந்த காற்று நுழைவிற்காக நகர்ந்தாள். விக்கியண்ணனுக்கு அவள் விடை இறுத்தபோது அவள்பார்வை இருட்டில் எங்கோ நிலைத்திருந்தது.

"உங்கள்மேல் சினங்கொள்ள எனக்கென்ன உரிமை?"

"என்னிடத்து உங்களுக்கில்லா உரிமை இந்த உலகத்தில் வேறுயார்க்கு உண்டு? தேவி! உங்கள் உள்ளத்தைக் கேளுங்கள்; அஃது உண்மையை உணர்த்தும்."

அவன் பேச்சில் புதைந்திருந்த பொருளைப் புரிந்து கொண்டாள் கடம்பமாதேவி. அப்படிப் புரிந்துகொண்டதால் நிறைந்த செழுமையை அறையின் மங்கிய ஒளியிலும் அவளுடைய அழகு முகத்தினின்று அறிந்துகொண்ட விக்கியண்ணன் அகம் மகிழ்ந்தான்.

"ஐயா வீரரே; நான் இந்நாட்டு இளவரசி."

"ஆம், தேவி."

"நீங்கள் இந்த அரசில் பணியாற்றும் ஒரு படைமறவர்."

"முற்றும் உண்மை, தேவி."

"அப்படி இருந்தும் நீங்கள் என்னைப் பெயர்ச்சொல்லி அழைக்கின்றீர் ! "

அவளுடைய ஆழ்ந்த நோக்கின் உட்பொருளை அவள் பேச்சின் பொருளைவிட வெகுவாக விக்கியண்ணன் புரிந்து கொண்டான். தன்னைத்தாழ்த்த விரும்புகிறாள் அந்தத் தளிருடலாள் என்பதை அவன் அறிந்தேயிருந்தான்.

"தேவி! நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் பெயரை உரிய மதிப்பின்றி நான் பயன்படுத்துகிறேன் என்பது உண்மை இல்லையெனினும் உங்களைப் பெயரிட்டழைக்க எனக்கு உரிமையுண்டு."

"உரிமை உண்டா? அஃதெப்படி?"

"ஆம், தேவி! உள்ளத்தைக் கேளுங்கள்; இவனுக்கு உங்களை எப்படியும் அழைக்க எல்லா உரிமையும் உண்டு என்று அது சொல்லும். உரிமை மட்டுமன்று; போதிய தகுதியும் உண்டு. இன்று நானொரு எளிய போர்மறவன்தான்! ஆனால், என்னுள் ஓடுவது இழிந்த குருதி இல்லை. தேவி! இரவாத போதும் வரையாது ஈயும் வண்மைக்குப் பெயர்போன தொன்மைப்பழங்குடியின் தோன்றல் நான்! அட்டியின்றிப் பாடுநர்க்குக் கொட்டியளித்த வேள்ஆவியின் வேளிர்குலத்தில் பிறந்த எனக்குச் சோழர்குலத்துச் சுந்தரியைப் பெயரிட்டு அழைப்பதேயன்றிப் பிரியாக் காதலினால் அணைத்துப் பழகவும் அருகதை உண்டு."

பேசிக்கொண்டே மயக்கமுற்றவனாய் விக்கியண்ணன் தன்னை நெருங்கவே கடம்பமாதேவி மெல்லப் பின்புறமாக விலகிச் சென்றாள்.

"ஏன் தேவி? என் பேச்சில் பிழையுண்டா? உங்கள் குலமுன்னோனும் உங்கள் அனைவருடைய கனவுகளுக்கும் தலைவனுமாகிய கரிகால்பெருவளத்தான் எங்கள் குலத்தைச் சேர்ந்த நாங்கூர் வேளிர் மகளைத் தன்மனைவியாக ஆக்கிக் கொள்ளலாம்; ஆனால், அதே வேளிர்குலத்தவனான நான் உங்களை விரும்பக் கூடாதா?"

'ஐயா, வேளிர்குல வீரரே! வரலாற்றை ஊன்றிப்படியுங்கள். உங்கள் வேளிர்குலத்தினர் அனைவரும் இனப்பற்றால் இருங்கோவேளொடு ஒருங்குசேர்ந்து இளவலான கரிகாலரை ஒழித்துவிட எழுந்தபோது, இறுதிவரை சோழரோடு இடையறாது நின்றவர் நாங்கூர்வேளிர் மட்டும்தான்! அந்த நன்றிக்கு அடையாளமாகத்தான் கரிகாலர் நாங்கூர்வேளிரின் மகளைத் தன் பட்டத்தரசியாக ஆக்கிக் கொண்டார். இப்பொழுது உங்களுக்கு எல்லாம் புரியுமென்று எண்ணுகின்றேன்."

"தேவி! அப்படியானால் தற்போது தங்கள் தம்பி இளவரசர் ஆதித்தருக்கு நாங்கூர் வேளிரின் பெண் மாதேவியை

மனைவியாக்க நீங்கள் முடிவுசெய்திருப்பதாகச் சொல்கிறார்களே, அதுவும் நன்றியின் பொருட்டுத்தானா?"

விடையளித்தபோது கடம்பமாதேவியின் பேச்சில் பெருமிதம் மிகுந்திருந்தது.

"ஆம்! அதிலென்ன ஐயம்? என் தந்தையின் ஆட்சித் தொடக்கநாள் முதல் படைத்தலைவராய்ப் பணியாற்றி வந்தவர் நாங்கூர் வேளிர். இன்று முதுமையில் முடியாமையினால் அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார். தன் வாழ்நாள் முழுவதையுமே சோழமன்னர் வாழ்விற்காகத் தன்னை ஆளாக்கிக் கொண்டவரின் பெண்ணை என்தம்பி ஏன் மணக்கக் கூடாது?"

"மணக்கலாம்; ஆனால், இளவரசர் ஏற்றுக்கொள்ள வேண்டுமே!"

"ஐயா! உங்களைவிட என்தம்பியை நான் நன்கு அறிவேன். ஆதித்தன் ஒருநாளும் தன் அக்காவின் சொல்லை மீறமாட்டான்."

கடம்பமாதேவியின் பேச்சில் செருக்கு இருந்தது. அவள் கண்கள் ஒளியை வீசின.

"தேவி, உங்கள் பேச்சைத் தட்டாது கேட்டு நடக்க வேண்டு மென்பதுதான் என் உள்ளத்திற்கும் ஆசை. ஆனால், நான் ஓர் ஆண்மகன்; அதிலும் பெரும் பொறுப்புகள் கொண்ட வீரன். பெண்கள் பேச்சைக் கேட்ட எல்லோருமே பின்னாள் வருந்தி யிருப்பதாகப் பெரியோர்கள் சொல்கிறார்கள்."

"என் பேச்சை நீங்கள் கேட்கவேண்டுமென்று நான் எதிர்பார்க்கவில்லை."

"இருந்தாலும், என்மனம் உங்கள் எண்ணம்போல் நடக்கச் சொல்லி என்னை உறுத்திக் கொண்டே இருக்கிறது. இந்த நாட்டில் எல்லோரும் உங்கள் சொல்லைக் கேட்டு நடக்கின்றனர். அதேபோல், என்னால் நடக்க இயலாமைக்குத் தாங்கள் பொறுத்துக் கொள்ளவேண்டும்."

"அதனால் என்ன? அவரவர் எண்ணப்படி நடக்க யாருக்கும் உரிமை உண்டு."

"தேவி, ஒன்றுமட்டும் உறுதியாகக் கூறுகின்றேன். அரசியல் போன்ற பொதுப் பொறுப்புகள் நீங்கலாக நம்மைப்பொறுத்த சொந்த செயல்கள் அனைத்திலும் உங்கள் கருத்தை மீறி எதையும் நான் செய்யமாட்டேன். என்னை நம்புங்கள்."

விக்கியண்ணனின் பேச்சிலும் அசைவிலும் விளைந்த சிறுசிறு மாற்றங்களைக் கடம்பமாதேவி கவனித்தாள். மது தன் வேலையைச் செய்யத் தொடங்கிவிட்டதோ? இவனா இந்த நாட்டுத் தலைவிதியை மாற்றியமைக்கப் போகிறான்? அவள் நெஞ்சில் வேதனை நிறைந்தது.

"ஐயா வீரரே! மது மிகவும் மிகையோ?"

"இல்லை தேவி. உங்களைச் சந்திக்க வந்தவன் மது அருந்திவிட்டு இங்கு வருவேனா?"

"பின்னேன் இந்த மயக்கம்?"

அவள் கண்கள் தன்முகத்தில் முழுமையாகப் பதிந்திருந்ததை அவனிருந்த தடுமாறுநிலையிலும் விக்கியண்ணனால் நன்கு உணரமுடிந்தது.

"தேவி! உங்கள் அழகு என்னுடலில் உணர்வலைகளைப் பெருக்கி விட்டது. உணர்வின் பெருக்கம் உள்ளத்தை நெருக்கவே, மதுவருந்தினால் பெருகும் மயக்கத்தினும் பன்மடங்கு மயக்கத்திற்கு உள்ளாகித் தடுமாறிக் கொண்டிருக்கிறேன் ."

"நன்று! வீரரே, போய் வாருங்கள்."

"அதற்குள்ளாகவா? இல்லை! இல்லை! நான் எண்ணியதைச் சொல்லி முடிக்கவேண்டாவா? தேவி, செய்ந்நன்றி மறக்காத திறத்தால்தான் கரிகால்பெருவளத்தார் நாங்கூர்வேளிர் மகளை மணந்துகொண்டதும் தாங்கள் இன்று இளவரசருக்கு மாதேவியை

மணமுடிக்க நினைப்பதும் என்றால், இந்த ஏழையையும் தாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். நாங்கூர் வேளிர்கள் அன்றும் இன்றும் சோழமன்னர்களுக்கு என்னென்ன செய்துவந்துள்ளார்களோ, அவையெல்லாம் ஒன்றுமில்லையென்று ஒதுக்குமாறு இந்தச் சோழவரசுக்கு என்னால் திறம்பட செயலாற்றிக் காட்டினால் என்னைத் தாங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் அல்லவா?"

கடம்பமாதேவி அமைதியாக நின்றிருந்தாள். அவள் இமைகளையும் அசைக்காது அவனையே நோக்கியபடி எண்ணத்தில் ஆழ்ந்திருந்தாள்.

"ஏன் தயங்குகிறீர்கள்? இவனால் எதுவும் ஆகாதென்ற எண்ணமா? இப்போதே என்னை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று உங்களைக் கேட்கவில்லை; சொல்வதைச் செய்துகாட்டியபின் ஏற்றுக்கொள்ளுங்கள் என்றுதான் கேட்கின்றேன். உடன்பாடு தானா? விடை சொல்லுங்கள் தேவி. முடியுடை மூவேந்தருடனும் மணவுறவு கொண்டது எங்கள்குடி. நாங்கூர் வேளிரின் மகளை மணந்துகொண்ட கரிகாலரின் தந்தை இளஞ்சேட்சென்னி மணந்துகொண்டது அழுந்தூர்வேளிர் மகளை! செல்வக் கடுங்கோ வாழியாதனும் நெடுஞ்சேரலாதனும் எங்குல முன்னோனான வேளாவியினுடைய பெண்களைத்தாம் மணந்துகொண்டனர். எங்குலத்துப் பெண்கள் பலரை மணந்துகொண்டிருக்கும் உங்கள் குலத்துப் பெண்ணொருத்தி என்னை ஏற்றுக்கொள்ளக் கூடாதா? அரசகுலத்தினருக்குப் பெண்கொடை வழங்க மட்டுமே வந்தவர்களா நாங்கள்? அரசகுல அழகிகளை மாறாக மனைவிகளாக ஆக்கிக்கொள்ள எங்களுக்கு அருகதை கிடையாதா? சொல்லுங்கள் தேவி."

சொற்களை அடுக்கிக்கொண்டிருந்த அந்த வீரனின் பேச்சு கடம்பமாதேவிக்குக் கட்டுக்கடங்காக் களிப்பை அளித்தது. களிப்பின் பெருக்கத்தால் கருத்திழந்திருந்த அவள், அவன் தன்னை மிகவும் நெருங்கிவிட்டதைக் கவனிக்கவில்லை.

"ஐயா, வேளிர்குலத் தோன்றலே! உங்களுக்கு அருகதை உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், ஒன்றை நோக்க நீங்கள் மறந்துவிட்டீர்கள். தமிழர்தம் அகப்பொருள் இலக்கணம்

நம்மிடையே தடையாக இருப்பதை நீங்களே அறிவீர்கள். உருவும் திருவும் ஒத்த தலைவனும் தலைவியும் ஒத்த உளத்தினராய் ஒன்றுபடுவதையே மெத்தவும் விரித்துரைக்கிறது நம் இலக்கணம். நம்மிருவரிடையே பல ஒற்றுமைகள் உள்ளன; ஆனால் திருவில்? நானோ இந்நாட்டு இளவரசி! ஆனால், தாங்களோ கையில் வாளன்றி வேறெந்த வளமும் இல்லாதவர்! குலங்கல்வி அகவை இவற்றில் தலைவன் மிக்கோனாய் இருப்பதில் தவறில்லை என்ற விதிவிலக்கு தலைவனுக்கு உண்டே ஒழிய தலைவிக்கு உண்டா? எந் நிலையிலும் தலைவன் தாழ்ந்தவனாய் இருக்கக் கூடாதென்பது தமிழர் நெறியன்றோ? தாங்கள் அறியாததா?"

"புரிகிறது தேவி. பொன்னும் பொருளுமே மற்றெல்லா வற்றையும்விட இப்பொல்லா உலகில் பொருந்துஞ்செல்வங்கள் என்பது உங்கள் எண்ணம். உள்ளங்கள் அன்பால் ஒன்றுமேல் எதுவுமே இடையில் குறுக்கிட இயலாது என்பது என் எண்ணம். உங்கள் எண்ணத்தைச் சரியென்று நான் ஒப்புக்கொள்ளவில்லை எனினும் மறுக்கவில்லை. தேவி, நீங்கள் என்னை நம்ப வேண்டா; என் கைவாளை நம்புங்கள். இரண்டே ஆண்டுகளில் இச்சோழ நாட்டுக்கொப்பாக இன்னொரு நாட்டை என் வாள் வன்மையால் வென்று உங்கள் காலடியில் வைக்கின்றேன். அதுவரைத் தாங்கள் எனக்காகக் காத்திருப்பீர்களா? சொல்லுங்கள்!"

ஆர்வ மிகுதியால் விக்கியண்ணன் வேறெதையுமே எண்ணிப் பாராதவனாய் அவள் தோள்களைத் தொட்டு அசைத்தபோது, முன்னமே குளிர்ந்திருந்த அந்த மொய்குழலாளின் மனம் மேலும் மகிழ்ச்சியால் குளிர்ந்திருந்தது; அவன்மேல் கொண்ட ஆசையினால் மார்பகங்கள் விம்மிப் பெருகிப் பின்தாழ்ந்து மீண்டும்மீண்டும் விளையாடின. அவள் சொல்லும் விடையை அறிவதிலேயே நாட்டத்தைக் கொண்டிருந்த விக்கியண்ணன் குளிர்ந்த மலர் முகத்தையோ, விம்மித்தாழ்ந்து வேடிக்கைக் காட்டிக் கொண்டிருந்த மார்பகங்களின் விளையாட்டையோ கவனித்தான் இல்லை.

"அருள்கூர்ந்து கைகளை அகற்றிக் கொள்கிறீர்களா?"

அவள் பேச்சில் வெறுப்பு இருக்கவில்லை; அமைதி இருந்தது. வெகுளி கொள்ளவேண்டியவள் வெறுமனே அமைதி

கொண்டதேன்? விக்கியண்ணன் தன்பார்வையை அவளின் அழகொழுகு முகத்தின்றும் தாழ்த்தி அவள் உடல்மீது பதியவிட்ட அக்கணமே அறிந்துகொண்டான். எப்படிப்பட்ட உறுதியான எண்ணம் உடையவள் எனினும் அவளும் ஒரு பெண்தானே! அதனால்தான் அவன் கைகள் அவள்மேல் பட்டதும் எளிதில் உணர்ச்சிக்கு இடங்கொடுத்துவிட்டாள். இல்லையெனில், கச்சினைக் கலைந்துகொண்டு வெளியேறத் துடித்துப்பொங்கும் அமுதகலசங்கள் தங்கள் செய்கையில் அத்துணை விரைவைக் காட்டுவானேன்? தோள்கள் அவன் பிடியில் துடிப்பானேன்?

"தேவி! நானென்ன தொழுநோய் உடையவனா நீங்கள் துயர் கொள்வதற்கு?"

இளவரசி கடம்பமாதேவி தன் உணர்ச்சிகளை ஓரளவிற்கு அதற்குள் அடக்கிக்கொண்டாள் என்பதை அவள் செய்கையும் தொடர்ந்த அவள்பேச்சும் விக்கியண்ணனுக்கு விளக்கின. உறுதியாகத் தோள்களைப் பற்றியிருந்த அவன் கைகளை உதறித் தள்ளிய அவள் பேசியபோது அப்பேச்சில் சினமும் வேகமும் ஒருங்கே நிறைந்திருந்தன.

"நீங்கள் தொழுநோய் மட்டுமே உடையவராய் இருந்திருப்பின் நான் துயர் கொண்டிருக்க மாட்டேன். நீங்களோ காமமென்னும் கழிபெருங் கொடுநோய் கொண்டவர். நலங்கிள்ளி வழிவந்த நானெப்படி நாளுக்கு ஒருத்தியைத் தேடும் நாணமில்லா உங்களை நாடக்கூடும்?"

## *14. பரத்தையர் உறவும் பாவையின் சினமும்*

*"உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதின்*
*துஞ்சுபுலி இடறிய சிதடன் போல*
*..............................*
*வருந்தப் பொரேஎன் ஆயின் பொருந்திய*
*தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்*
*பல்இரும் கூந்தல் மகளிர்*
*ஒல்லா முயக்கிடைக் குழைகஎன் தாரே."*

நடுஇரவை நோக்கிக் காலம் நகர்ந்து கொண்டிருந்தது. நகரத்தில் வழக்கமாக நெடுநேரம் நிலவக்கூடிய சந்தடியும் அடங்கி விட்டது. எங்கும் அமைதி. காற்றோட்டமான அந்த அறையில் அந்த நேரத்தில் தனித்து ஓர் ஆடவனோடு இருப்பது கடம்பமாதேவிக்கு அதுவே முதல் நிகழ்வு.

அந்தக் கன்னியின் உள்ளத்தில் அச்சம் அசைபோட்டுக் கொண்டிருந்தது. அழைத்ததும் ஓடிவரப் பணிப்பெண்கள் அடுத்த அறையில் காத்திருப்பதை அவள் அறிவாள். விழித்த பார்வையராய் உருவிய வாளொடு வெளியே காவலர்கள் உலவிக் கொண்டிருப்பதையும் அந்தக் கன்னி அறிவாள். இருந்தும் அவள் உள்ளத்தில் அச்சம் உறவாடிக் கொண்டிருந்தது. அதற்குக் காரணம், எதிரே நின்றுகொண்டு அவளெழிலில் நிலையிழந்துகொண்டிருந்த விக்கியண்ணன் அன்று; அவளுடைய உடலின் உணர்ச்சியே.

விக்கியண்ணனன்றி வேறெந்த ஆண்மகனாக இருந்திருப் பினும் உணர்ச்சியால் விளையும் செயல் நோக்கி அச்சப்பட்டிருக்க மாட்டாள். ஆனால், எதிரே நிற்பவன் அவள் எண்ணத்தைக் கவர்ந்தவன்; எட்டி இருக்கையிலும் அவளின் உணர்ச்சியைத் தட்டி எழுப்புவன். அப்படிப்பட்டவன், அவளைத் தொட்டுப்பற்றிக் கட்டி யணைத்து இன்பத்தைச் சேர்க்கமுயன்றால், அவளால் எப்படித் தன்னுணர்ச்சியின் எழுச்சிக்குத் தடையை விதித்துப் பின்னர் அவன் தழுவலிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ளக்கூடும்? வெப்பத்தைக் கண்டு கொண்டிருந்த வெண்ணெய் நிலையில் கடம்பமாதேவி விக்கியண்ணன் முன்னர் எந்தக் கணமும் இளகிக் கரையும் பக்குவத்தில் இருந்தாள்.

"ஐயா! ஏன் உங்களிடம் இத்தனை நேரம் நான் பொறுமையாகப் பேசிக் கொண்டிருக்க வேண்டும்? என்னைக் காலமெலாம் அறிந்த இளைஞர்களும் என்னெதிர் நிற்கவும் அஞ்சுவர். ஆனால் நீங்களோ, இந்த நாட்டில் அடிவைத்து இன்றோடு முழுமையாக மூன்றுதிங்கள்களும் முடியவில்லை. அதிலும் நீங்கள் ஒரு படைவீரர். இருந்தும், இந்தச் சோழநாட்டு இளவரசியின் எதிரில், அதுவும் இரவுநேரத்தில் தனியாக இருந்துகொண்டு உங்களை மணந்துகொள்ளுமாறு வேண்டுகிறீர்.

அஃது எத்துணைப் பெரிய குற்றம் தெரியுமா? இந்தக் கணமே, காவலர்களை அழைத்து உங்கள் தலையை அறுத்தெறியக் கூடும்!"

"கோழை பலமுறை சாகிறான்; வீரன் ஒரேஒரு முறைதான் சாகிறான், தேவி! இறப்பவர் பிறப்பரோ? நானறியேன். ஆனால் பிறந்தவர் இறந்தே தீருவர். என் சாவு உங்கள் கையிலும் இல்லை; என் கையிலும் இல்லை! என்று என் வாளின் சுழற்சியில் வேகமும் திறனும் குறைகின்றதோ, அன்றே சாவு என்னை அணுகக் கூடும். அதுவுந்தவிர, என்று உங்களைக் காட்டில் கண்டேனோ, அன்றே என்னுயிர் உங்களோடு ஐக்கியமாகிவிட்டது. எனக்கென்று ஒருயிர் இனி எந்நாளும் இல்லை."

"திறமையாகத்தான் பேசுகிறீர்கள்! உங்களிடம் வீரம் இருக்கிறது. அதேபோல், பட்டறிவும் இருக்கிறது. வீரத்தால் வெற்றி கொள்ளக்கூடியவை தாம் தமிழப்பெண்களின் காதல் உள்ளங்களும். உங்கள் வீரத்தை நான் உயர்வாக மதிக்கிறேன். ஆனால்.... "

மேலே தொடராமல் கடம்பமாதேவி நிறுத்தினாள். விக்கியண்ணன் விரைவுபடுத்தினான்.

"ஆனால், என்ன? மேலே சொல்லுங்கள் தேவி."

"சொல்கிறேன். நீங்கள் ஓர் ஒழுக்கம் இல்லாதவர். கட்டுப்பாடற்ற மனம் உங்கள் மனம். வாளைப் பிடிக்கும்போது கொள்ளும் மனவுறுதியை வஞ்சியரைப் பார்க்கும்போது நீங்கள் கொள்வதில்லை. பரத்தையர் பலரின் பஞ்சணைகளைப் பகிர்ந்து பழகிவிட்ட உங்களை, உண்மையறிந்த எந்தப் பெண்தான் எளிதில் ஏற்றுக்கொள்வாள்? ஏன், ஐயா? இப்பொழுது மட்டும் பேச்சு வரவில்லையோ?"

விக்கியண்ணன் விடையளித்தபோது அதில் தடுமாற்றமே நிறைந்திருந்தது.

"தேவி! உங்களுக்கு நான் உரைக்கவும் வேண்டுமோ? தமிழரின் அகப்பொருள் இலக்கண இலக்கியங்களை அறிந்தவர் தாங்கள். அவைகளில், பரத்தையர் உறவுபற்றிப் பலப்படப்

பேசியிருப்பதை அறிந்திருப்பீர்களே? பரத்தையர் உறவென்பது பண்டையோர்க்கு உடன்பாடான ஒன்றன்றோ?"

கடம்பமாதேவி வாய்விட்டுச் சிரித்தாள். காரணம் அறியாது விக்கியண்ணன் கலங்கினான்.

"ஐயா, வேளிர்குல வீரரே! இலக்கண இலக்கியங்களில் உங்களுக்கு ஏற்புடையதைமட்டும் எடுத்துக்காட்டுவதில் கை தேர்ந்தவர் நீங்கள். கவிஞரன்றோ தாங்கள்! தாங்கள் அறியாத இலக்கண இலக்கியங்களையா நான் தெரிந்து வைத்திருக்கப் போகிறேன்? பரத்தையர் உறவை வள்ளுவர் எங்காவது பாராட்டி இருக்கிறாரா?

'பொருட்பெண்டிர் பொய்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ அற்று'

என்று வெறுத்துக்கூறும் அவர், எந்தவிடத்திலாவது பரத்தையர் உறவு தனக்கு உடன்பாடானது என்று குறிப்பாகவாவது குறித்துச் சென்றிருக்கிறாரா? எங்கே ஒரு பாடலைக் கூறுங்கள்! உங்களால் கூறமுடியாது. பரத்தமையை முற்றும் வெறுத்தவர் வள்ளுவர். அவர்க்கும் உடன்பாடுதான் என்றாலும் நான் உங்களை ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஏன் தெரியுமா? ஒருத்திக்கு ஒருவன் என்பது மட்டுமன்று, ஒருவனுக்கு ஒருத்தியென்று வாழ்ந்துகாட்டிய நலங்கிள்ளியின் வழிவந்த என்னால், எப்படி ஐயா, இரவுக்கு ஒருத்தியைத் தேடும் இழிந்த ஒழுக்கம் உடைய உங்களைத் துணையாக ஏற்றுக்கொள்ளக்கூடும்? பரத்தையர் உறவைப் பழியாக வெறுத்த எம்மனோர் எங்கே? பரத்தையரே அனைத்துமெனப் பழகிவரும் நீங்கள் எங்கே? 'இதை இப்படி முடிக்கேனேல் பாடிவரும் பாவலர்க்கு வாரிவழங்க என்னிடம் பொருளற்றுப் போவதாக' என்று சூளுரைத்த அரசர்களை அறிந்திருக்கும் நீங்கள், நலங்கிள்ளிச்சோழரின் சூளுரைபற்றியும் அறிந்திருக்க வேண்டுமே! 'தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப் பல்லிருங் கூந்தல் மகளிர் ஒல்லா முயக்கிடை குழைக என்தாரே!'. எம் முன்னோர்கள்தாம் எப்படிப்பட்ட பண்பாளர்கள்! 'புலவர்களுக்குக் கொடுக்கப் பொருளற்றுப் போக' என்ற சொற்களிலே புரவலர்கள் புலவர் களுக்குத் தந்த உயர்வான நிலையை உணரமுடியமே ஒழிய, நலங்கிள்ளியின் உரையிலே உள்ளப்பெருமிதத்தை, ஒழுக்கத்தை

உயிரினும் பெரிதென எண்ணும் உயர்தனிச்சிறப்பைக் காண முடியுமா? இப்பொழுது சொல்லுங்கள்; நான் உங்களை ஏற்றுக் கொள்ளத் தகுமா?"

கடம்பமாதேவியின் குரலிலே பெருமிதம் இருந்தது; உணர்ச்சியினால் குரல் தழுதழுத்தது. தலையுயர்த்தி நோக்கிய அவள் கண்களில் நீர் மென்திரையொப்ப நிலவியது.

விக்கியண்ணன் தன்னிலைமையை வெளிச்சமெனக் கண்டான். உண்மை நிறைந்த அவளின் பேச்சிற்குமுன் தன்பேச்சு நிற்காதென்பதையும் அவன் அறிந்தான்.

விக்கியண்ணன் விரைந்து மண்டியிட்டு அவள் காலடியில் அமர்ந்தான்; அவள் கைகளைப் பற்றிக் கனிவோடு அவள் கண்களை நோக்கினான். அந்தச்செயல் வேல்விழியாள் கடம்பமாதேவிக்கு மகிழ்ச்சியை விளைவிப்பதற்கு மாறாக வேதனையையே விளைவித்தது.

'என்ன மனிதன் இவன்! கன்னியரின் காலடியில் மண்டியிடுவதென்பது இவனுக்கு வழக்கமாகிவிட்டிருக்க வேண்டும். இப்போது கைகளைப் பிடித்துக் கொண்டிருப்பவன், நிலைமை நீடிக்குமேல் கால்களையும் பற்றத் தயங்கமாட்டான். பெண்ணின் முன்னர்த் தலைகுனிபவன் எப்படிப் பெரும் வீரனாக இருக்கமுடியும்? இவன்தான் எப்படிப்பட்டவன்! சே! எத்துணைக் கீழான நடத்தையுடையவன் இந்த மனிதன்!'

கடம்பமாதேவியின் எண்ண ஓட்டத்தை விக்கியண்ணன் உணர்ந்திருந்தான். தேவை ஏற்படின் அவள் கால்களைப் பிடிக்கவும் அணியமாக இருந்தான். அவன் அறிவான் பெண்களின் அகங்களைப் பற்றி. சீறேல் என்று சீரடி பற்றி ஊடல் கொண்டபல ஆடல்மகளிரை அணைத்துமகிழ்ந்த அவனின் திறமை கடம்பமாதேவியிடம் மட்டும் பயனற்றுப் போய்விடக்கூடுமா?

வெறுப்புக்குடியேறிய தன் கண்களைக் கடம்பமாதேவி வேறுபுறம் திருப்பிக் கொண்டாள். அவளின் செய்கையைக் கண்டு

அவன் செயலற்று நின்றுவிடவில்லை. அவன் அவளிடம் அதைத்தான் எதிர்பார்த்தான். இனி அவனுக்கு எல்லாமே எளிது.

விக்கியண்ணன் மெல்ல எழுந்தான். அதே நேரம் அவன் கைகளும் இயங்கின. அவன் எழுந்து நின்றபோது கைகள் இடையை அடைந்துவிட்டிருந்தன.

"தேவி!"

அவனிதழ்கள் அவளின் காதோடு மறைமொழி பேசின. அவள் அசையவில்லை. அவன் கைகள் மேலும் அசைந்தன. ஆலிலை போன்ற அவளின் அடிவயிற்றில் அவனின் கைகள் தவழ்ந்தபோது அவளின் உடல் அதிர்ந்து நடுங்கியது நன்கு தெரிந்தது. கைகளின் அணைப்பு இறுகியது.

"தேவி!"

அவளிடமிருந்து எந்த ஒலியும் வெளிப்படவில்லை. அவனிதழ்கள் காதோரம் தவழ்ந்த கருங்குழலின் கற்றையோடு உறவாடி எத்தனை நேரம்தாம் களிப்படையக்கூடும்? இதழ்களும் இதழ்களும் இணையும் போதன்றோ உண்மையான இன்பம் உடன்றெழுகின்றது!

"தேவி! என்னைத் திரும்பிப் பாருங்கள்."

அவளாகத் திரும்பவில்லை. இடையைப் பற்றிப் படர்ந்திருந்த விக்கியண்ணனின் கைகள் இளவுடலைத் திருப்பின. தலை தாழ்த்தி நின்ற அவளின் தளிர்முகத்தைத் தாங்கி உயர்த்திய விக்கியண்ணன் தடுமாறிப்போய்விட்டான்.

வண்டு நிறங்கொண்ட வரியோடுங் விழிகள் வாடிச்சோர்ந்து குளத்து நீரில் மிதக்கும் குவளை மலர்களென கண்ணீரில் மிதப்பானேன்? சிரித்தும் சீறியும் அவன் சித்தத்தைச் சிதைத்த செம்பவள இதழ்கள் துடிப்பானேன்?

"தேவி! இஃதென்ன நான் காண்பதும்? உண்மையிலேயே என்மேல் உங்களுக்கு இத்துணை வெறுப்பா?"

அவளிடமிருந்து விசும்பல் ஒலியே அவனுக்கு விடையாகக் கிடைத்தது. காய் கனியும்வரை காத்திருந்து சுவைக்கக் கற்றவன் விக்கியண்ணன். காயைப் பறித்துக் கலத்துள் காத்துக் கனியாக்கிப்பின் சுவைக்கும் கருத்தை வெறுப்பவன் அவன். தானே கனியும் கனியின் தரத்திற்கும் கனியவைக்கப்பெறும் கனியின் தரத்திற்கும் இடையே இருக்கும் சுவையின் ஏற்றத்தாழ்வு மலைக்கும் மடுவிற்கும் ஒப்புமையாகும் என்பதை அவன் எப்பொழுதும் மறந்தவன் இல்லை.

"என்னைத் தாங்கள் பொறுக்க வேண்டும். உங்கள் உள்ளம் உணராது உயர்வற்று நடந்து கொண்டுவிட்டேன். என் நடத்தைகளுக்காக நான் வருந்துகிறேன் . "

அவளை அணைத்திருந்த தன் கைகளை அகற்றிக் கொண்டான் விக்கியண்ணன். ஆனால், அடுத்தவினாடி அவள் அணைப்பில் அவனிருந்தான். கைகளை விலக்கிக் கொண்டவனின் கருத்தை உணராதவளா கடம்பமாதேவி! அவள் கைகள் அவன் கழுத்தைச் சேர்த்துத் தழுவின. அவளுடல் அவனுடலோடு ஒன்றிப் பொருந்தியது. அவள் முகம் அவனின் அகன்ற மார்பில் புதைந்தது.

விக்கியண்ணன் வினாடி நேரமே வியந்தான். அந்த நேரமும் அவன் கைகளுக்குத் தேவையிருக்கவில்லை. கழுத்தில் கைசேர்த்துக் கட்டியணைத்த கண்ணுக்கினியாளின் பொன்னுடலை ஆரத்தழுவி அளப்பரிய இன்பங் கொண்டன. அவனின் முரட்டு இதழ்கள் மார்பில் முகம்புதைத்திருந்தவளின் மணிக் கழுத்தில் பதிந்தன.

காலம் மெல்லக் கழிந்துகொண்டிருந்தது. அந்த ஆண்மகனின் கைகள் அவளுடல் முழுதும் அலைந்து அழகினை அளவெடுத்த திறமையும் இதழ்கள் தந்த இன்ப வேதனையும் கடம்பமாதேவியின் உள்ளத்தை நெகிழ்த்து எங்கோ இட்டுச் சென்றன. இவன்

அணைப்பில் இத்தனை இன்பமா? இதனினும் இன்பம் இன்னும் இருக்கக் கூடுமா?

"வீரரே?"

குரல் குழைந்தது.

"சொல்லுங்கள் தேவி."

"உங்கள் உடையை என் கண்ணீர் நனைத்துவிட்டது."

அவன் அணைப்பின் இறுக்கம் மேலும் மிகுந்ததை அறிந்து மகிழ்ந்தாள்.

"தேவி! ஆடை நனைந்ததைவிட என் அகமே மிகவும் நனைந்தது. இந்த அணைப்பிற்காக நான் எதையும் செய்வேன்!"

"எனக்காக எதுவும் செய்வீரா?"

யாழ் கொஞ்சியது.

"சொல்லுங்கள் தேவி; செய்து காட்டுகிறேன்."

"வேண்டா வீரரே. உறுதி அளித்துவிட்டுத் தாங்கள் பின் வருந்தவேண்டிவரலாம்."

"தேவியார் நான் வருந்தும்படியான எதையும் கேட்கமாட்டார் என்பது எனக்குத் தெரியும் ."

"அப்படியா எண்ணுகிறீர்?"

அவன் கைவிரல்கள் அவளிதழ்களைப் பிரித்து விளையாடின.

"ஆம், தேவி. அதுவுந்தவிர, அழகான பெண்ணொருத்தி ஆசையோடு கேட்கையிலே அட்டியின்றி ஒப்புக் கொள்வதே

ஆண்மைக்கு அழகு. ஆனால், ஒப்புக் கொண்டபடியே நடக்க வேண்டுமென்பது கட்டாயம் இல்லை."

"மிகவும் நன்று! கையை எடுங்கள். பெண்களிடம் உங்களுக்கில்லாத பழக்கமா? இதோ, என் கண்களைப் பாருங்கள்"

அவளுடைய கட்டளையின்படியே அவள் கண்களை விக்கியண்ணன் கண்டான். அவளின் அழகுக் கண்களில் வேதனை தொக்கி நிற்பதை அவனால் காண முடிந்தது.

"பல்லவ இளவரசர் அபராசிதர் ஒருபக்கம்; பாண்டிய மன்னரின் தம்பி பராந்தகர் மறுபக்கம். இவ்விருவரில் யார் ஒருவரை நான் மணந்தாலும் ஆடிப்போயிருக்கும் சோழவரசை அழிவினின்று காக்கமுடியும் என்பது அனைவரது முடிவான கருத்தாகும். உண்மைதான். நானும் ஒப்புக்கொள்கிறேன். இந்த மணவுறவைப் பல்லவர் விரும்புகின்றனர். பாண்டியரும் விரும்பக் கூடும். இப்படி இருந்தும் இந்த மண ஏற்பாட்டினை நானேன் ஏற்கவில்லை தெரியுமா?"

விடை எதிர்பார்த்து விக்கியண்ணனின் முகத்தை நோக்கினாள் கடம்பமாதேவி. அவனோ, அவளின் அழகு நெற்றியின்மேல் தவழ்ந்த குழலினை ஒதுக்கி ஒழுங்கு செய்வதில் நாட்டத்தைக் காட்டிக் கொண்டிருந்தான்.

"தெரியாது தேவி. திருமணம் உங்கள் சொந்த முடிவு அன்றோ?"

குழலோடு விளையாடிக் கொண்டிருந்த அவன் கையைச் சினத்தோடு பற்றினாள் கடம்பமாதேவி. அவனை நோக்கிய கண்கள் அனலைக் கக்கின.

"போதும் விளையாட்டு! அன்று என் சொந்த முடிவு; ஆனால், இன்று? நான் வேறு; நீங்கள் வேறா?"

"உண்மைதான்."

"இப்பொழுதுதான் உங்களுக்குப் புரிகிறதா?"

கொஞ்சியவளாய் அவன் கையை நழுவவிட்டாள். அதற்காகவே காத்திருந்தது ஒப்ப அந்தக் கை அவளின் மாம்பழக் கன்னத்தை அடைந்தது.

"அபராசிதரையும் பார்த்திருக்கிறேன்; பராந்தகரையும் பார்த்திருக்கிறேன். இருவருமே இளைஞர்கள்; அழகானவர்கள்; வீரத்திலும் தீரர்கள். இருந்தும் என்மனம் அவர்களை ஏற்க மறுத்தது. ஏன் தெரியுமா? எல்லோரையும் போல் நானும் எளிய பெண்தான். மற்றவர்களுக்கும் எனக்குமிடையே எந்த மாற்றங்களும் இல்லை. சற்றுமுன்னர் நான் எப்படி நடந்துகொண்டேன் என்பது உங்களுக்கே தெரியும். ஆசை, பற்றுகளுக்கு அப்பாற்பட்டவள் இல்லை நான். பருவத்திலெழும் பாலுணர்ச்சியை அறியாதவள் அன்று. அப்படி இருந்தும் மணத்தை வெறுத்தேன். மணத்தை வெறுத்தேன் என்பதும் சரி இல்லை. பல்லவரையோ பாண்டியரையோ மணப்பதை வெறுத்தேன். என் வெறுப்புக்குக் காரணம் பராந்தகரோ, அபராசிதரோ இல்லை; முழுக்க அரசியல் தான். சொல்வதென்றால் என் தன்னலம்தான் உண்மையான காரணம். விழுந்துகிடக்கும் சோழராட்சி மீண்டும் வீறுபெற்று விளங்கவேண்டும். சோழராட்சி மீட்சிபெற்றுப் பழைய எழுச்சியைப்பெற இடையூறாக இருப்பவர்கள் யார்யார் தெரியுமா? பல்லவரும் பாண்டியரும் தாம்! ஆம். சோழநாட்டின் வடபகுதி பல்லவராலும் தென்பகுதி பாண்டியராலும் நிலையிழந்து கிடக்கின்றன. இழந்த பகுதிகளை இனிப் போரின்றி எந்நாளும் பெறமுடியாது. இந்த நிலையில், நான் அந்த இருவரில் யாரை மணந்தாலும் சோழர் எழுச்சிக்குத் தடையாகவே அமையும். புரிகிறதா, வீரரே? பல்லவரை நான் மணந்துகொண்டால், பல்லவர்க்கு எதிராகச் சோழர்படையைச் செலுத்த ஆதித்தன் தயங்கமாட்டானா? அதே நிலைதானே பாண்டியரை நான் மணந்தாலும்! சொல்லுங்கள், வீரரே! என் தம்பி ஆதித்தன் என் காலத்திலேயே பழைய சோழவரசை அமைத்துக் காட்டவேண்டும். அதுவே நான் கொண்ட ஒரே குறிக்கோள். அதற்குத் தடையாக என் மணம் அமையக் கூடாதன்றோ?"

வெகுநேரம்வரை விக்கியண்ணனிடமிருந்து விடை வரவில்லை. அவன் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். அதுவரை அவளுடலை அணைத்து அங்குமிங்கும் ஊர்ந்து கொண்டிருந்த அவன் கைகள் அமைதி காத்தன. குறுகியொடுங்கிய பார்வை அவன் கொண்ட சிந்தனையைக் கடம்பமாதேவிக்குப் புரியவைத்தது.

"தேவி! உங்கள் உள்நோக்கம் எனக்கு இப்போது தெளிவாகிறது. நல்லவேளை! தொடக்கத்திலேயே நீங்கள் சொல்லிவிட்டீர்கள். இனி என் செயல்கள் யாவும் உங்கள் எண்ணத்தை ஈடேற்ற தகுந்தவையாய் அமையும். நான் சென்று வருகிறேன். கவலையை அறவே விட்டொழியுங்கள். அனைத்தையும் நான் கவனித்துக்கொள்கிறேன்."

விக்கியண்ணன் விரைந்து வெளியேறி ஒரு நாழிகை கடந்தும் கடம்பமாதேவிக்கு அமைதி ஏற்படவில்லை. அவனேன் திடீரென்று அவளிடம் விடைபெற்றுச் செல்ல வேண்டும்? அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் அறிந்துகொண்டிருந்ததெல்லாம் சற்று முன்னர்வரை அவன் அணைப்பில் இன்னதென்று பிறர்க்கு விளக்க இயலா இனம்புரிந்துகொள்ளமுடியாத இன்பவுணர்வுகள்தாம்.

# 15. பழையாறையும் படைமறவர் எழுச்சியும்

*"தமருள் தலையாதல் தார்தாங்கி நிற்றல்*
*எமருள்யாம் இன்னம்என் றெண்ணல் - அமரின்*
*முடுகழலின் முந்துறல் முல்லைத்தார் வேந்தன்*
*தொடுகழல் மைந்தர் தொழில்."*

பழையாறை நகர், அன்று என்றும் முன் கண்டிராப் புதிய விழாக்கோலம் கொண்டிருந்தது. பரகேசரி விசயாலயச்சோழர் தஞ்சையை முத்தரையரிடமிருந்து மீட்டுத் தலைநகராக அமைத்துக் கொள்வதற்கு முன்னர்ப் பழையாறை நகரன்றோ சோழர்களின் தலைநகராக விளங்கியது! தலைநகர் தஞ்சைக்கு மாற்றியமைக்கப் பட்ட பின்னர்ப் பழையாறையிலிருந்த அரச குடும்பத்தினரும் உயர் அலுவலர்களும் வணிகப் பெருமக்களும் தஞ்சைக்குக் குடிபெயர்ந் தமையால், கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாய்ப் பழைய

பொலிவினைச் சிறிது சிறிதாக இழந்துகொண்டிருந்த பழையாறை நகர் மீண்டும் கொஞ்சம் ஏற்றத்தை அன்றுதான் பெற்றது.

தலைநகராய் முன்பு தனிச்சிறப்புப் பெற்றிருந்த பழையாறை மீண்டும் அன்று தகவுபெற்றதன் காரணம் சோழ இளவரசன் ஆதித்தனின் வருகை மட்டுமன்று; வேறொரு காரணமும் இருக்கவே செய்தது. தலைநகர் மாற்றத்திற்குப் பிறகு பழையாறையில் பழம்பெருங் குடியினரும் படைமறவர் குடும்பத்தினரும் மட்டுமே உறைந்துவந்தனர். தலைநகரை மாற்றி யமைத்த சோழன் பரகேசரி விசயாலயர் தன்படைத்தளத்தைப் பழையாறையிலேயே இருத்தி வைத்திருந்தார். சோழர் படையின் பெரும்பகுதி போர்பல கண்ட சீர்மிகு வீரத்தலைவன் பொலன்மார்பன் மேற்பார்வையில் என்றும் படையெடுப்பிற்கு அணிய நிலையில் பழையாறை நகரில் அமைந்திருந்தது.

பழையாறையிலிருந்து அரசகுடும்பத்தினர் குடிபெயர்ந்த பின்னர், அரசகுடும்பத்தினரை அடிக்கடி சந்தித்து அளவளாவி அகமகிழும் வாய்ப்பை அந்நகர மக்கள் இழந்துவிட்டிருந்தனர். படைகளைப் பார்வையிடத் திங்கள் ஒருமுறையேனும் தவறாது வந்து கொண்டிருந்த விசயாலயசோழரும் மூப்பின் பயனால் விளைந்த இயலாமையால் கடந்த ஒருசில ஆண்டுகளாய் வரஇயலாது போகவே, அரசகுலத்தினரைப் பார்க்கும் வாய்ப்பைப் பழையாறை மக்கள் அறவே மறந்துவிட்டிருந்தனர். அந்தச் சூழ்நிலையில்தான் சோழ இளவரசன் ஆதித்தன் இரண்டுநாட்களுக்கு முன்னர் அங்கு வந்து அவர்களோடு தங்கி அளவிலா மகிழ்ச்சியைச் சேர்த்திருந்தான்.

பழையாறைப் பழங்குடியினரும் படைமறவர்தம் குடும்பத்தினரும் தங்களின் இளவரசனின் திடீர்வரவால் இறும்பூது எய்தினர். படைமறவர்களோ அன்று வரவிருந்த விக்கியண்ணனை எண்ணி மேலும் மகிழ்ச்சியை அடைந்தனர்.

எண்ணி ஆறு திங்கள்கள் முடியவில்லை; அதற்குள் விக்கியண்ணனின் பெயர் வீரர்கள் அனைவர் நெஞ்சிலும் நிலைத்துவிட்டிருந்தது.

எளிய குடிமக்களும் விக்கியண்ணனைப்பற்றி அறிந்து வைத்திருந்தனர். அவர்கள் அறிந்திருந்தது, அரசருடைய அனைத்துப் பொறுப்புகளையும் ஏற்றுச்செயலாற்ற அரசரால் அமர்த்தப்பட்ட ஓர்உயர் அலுவலன் என்பதே! ஆனால், படை மறவர்களோ, விக்கியண்ணனின் வீரத்தைப்பற்றியும், அவனிடம் மற்ற படைத்தலைவர்களுக்கும் அரசியல் உயர்அதிகாரிகளுக்கும் இருந்த மதிப்பினைப்பற்றியும் அச்சத்தைப்பற்றியும் வெகுவாக அறிந்திருந்தனர். இல்லையெனில், பலகாலங்களாக இயல்பாக எந்திரகதியில் நடந்துவந்திருந்த படைக்கலப்பயிற்சி கடந்த இரண்டு திங்கள்களாக மட்டும் பன்மடங்கு ஆர்வத்தோடு நடைபெற வேண்டியதில்லையல்லவா? இதுமட்டுந்தானா? பழையாறைப் படைப்பிரிவைப் பார்வையிட்டறியாத் தஞ்சைத் தலைமைப்படையின் தலைவர்களில் இளையவனான பல்லவரையன் இந்த ஒரு திங்களாகப் பழையாறை வீரர்களுக்குப் பயிற்சியளிப் பதற்கென வந்து அவர்களுடன் தங்கியிருக்கக் கூடுமா? போர் முனையை இனிமேலேயே காணவேண்டிய இளவரசன் ஆதித்தன், முதன்முதலாகப் பழையாறைப் படைத்தளத்தைப் பார்வையிட நேற்று முன்நாள் அங்கு வந்திருக்கக் கூடுமா? இளவரசர் ஆதித்தனுடன் அனைத்துப் படைகளுக்கும் தலைவனான செங்கணானும் பலவாண்டுகளுக்குப் பின்னர்ப் பழையாறைக்கு வந்திருக்க இயலுமா?

அன்று முழுதும் அங்கு அனைவர்க்கும் வேலையிருந்தது. இளவரசன் ஆதித்தனுக்கும் ஓய்விருக்கவில்லை. தங்கள் மன்னனின் ஒரே மகனைப் பார்க்கவேண்டுமென்ற ஆர்வமிகுதியால் அதிகாலையிலே மக்கள் குழுமிவிட்டிருந்தனர். அவர்களின் அன்பு வெள்ளத்தினின்று மீள்வது ஆதித்தனுக்கு எளிதாக இருக்க வில்லை. பகல் முழுவதும் ஆதித்தன் படைப்பிரிவினரிடை தன் நேரத்தைக் கழித்தான். அவனைக் கண்டதனால் வீரர்கள் கொண்ட ஆர்வத்தை உணர ஆதித்தனின் மனம் எழுச்சியுற்றது. அவன் தன்னை மறந்தான்; தானும் அவர்களில் ஒருவனாய் ஐக்கியமானான். வயதில் முதியனாயினும் உடல்வளத்தில் தன்னைப்போல் மிகவும் வலியவரான படைத்தலைவ ர் பொலன்மார்பனின் பொறுப் புணர்ச்சியைக் கண்ட ஆதித்தன், அந்நாள்வரை அவர்களோடு கலந்துகொள்ளாமல் கழித்தமைக்கு மிகவும் வருந்தினான். அப்போதே அவனுக்கு விக்கியண்ணனின் நினைவு மீண்டது.

விக்கியண்ணன் சொற்படியன்றோ அவன் அங்கு வந்திருந்தான்! அவன் நெஞ்சம் விக்கியண்ணன்பால் மேலும் நன்றி பாராட்டியது.

தூரத்தில் வீரர்களின் ஆரவார ஒலி எழுந்தது. ஆதித்தனின் பார்வையோடு அனைவர் பார்வையும் ஒலிவந்த திக்கிற் திரும்பின. விக்கியண்ணன் வந்துவிட்டான்! அவன் வரவுதான் வீரர்களின் மகிழ்ச்சிக்குக் காரணம். விரைந்து புரவியை விரட்டி அவர்களை நாடிவரும் செங்கண்ணார் கொண்டுவரும் செய்தியும் அஃதாகத் தான் இருக்கமுடியும்.

தாவி விரைந்த புரவி தன்விரைவைக் குறைத்து நிலைத்து நிற்பதற்குமுன் தரையில் குதித்த செங்கண்ணார் அதே விரைவைத் தான்கொண்டுவந்த செய்தியைத் தெரிவிப்பதிலும் காட்டினார்.

"இளவரசே! தலைவர் வந்துவிட்டார். உடன் அவர் திரும்பவேண்டி உள்ளதாம். உங்களையும் படைத்தலைவரையும் அழைத்துவரச் சொன்னார்."

"நல்லது."

"பொலன்மார்பரே, இங்குள்ள வீரர்கள் அனைவரையும் பயிற்சிக் களத்தில் கூடச் சொல்லுங்கள்; தலைவர் வீரர்களிடம் ஏதேனும் சொல்லக்கூடும் என்று எண்ணுகிறேன்."

ஆணைகள் பறந்தன. அவைகளைத் தொடர்ந்து வீரர்களும் பறந்தனர். படைத்தலைவர்கள் இருவரும் பக்கம் வர, விக்கியண்ணன் இருந்த இடத்தை இளவரசன் ஆதித்தன் அடைந்த போது, அகண்டுபரந்த அந்தப் பயிற்சிக் களத்தில் பல்லாயிரக் கணக்கில் வீரர்கள் படர்ந்திருந்தனர். வெண்புரவியிலே வீற்றிருந்த விக்கியண்ணனின் முகத்திலேயே வீரர்கள் அனைவரின் கண்களும் பதிந்திருந்தன.

இளவரசனின் வரவிற்காகவே காத்திருந்தவனைப்போல், விக்கியண்ணன் தன்பார்வையை வீரர்கள் அனைவரும் குழுமி விட்டதை உறுதிசெய்துகொள்ளக் களத்தைச் சுற்றி ஒருமுறை சுழலவிட்டான். தன்னைவிட முதியவர்களிடமின்றித் தன்னொத்த

இளைஞர்களிடம் பணிவுடன் நடந்து பழகியறியாப் பல்லவரையன் விக்கியண்ணனுக்குச் சற்றுத்தள்ளிப் பணிவோடு புரவியில் அமர்ந்திருந்ததைக் காண, ஆதித்தனுக்கு விக்கியண்ணனிடம் மேலும் மதிப்பே பெருகியது.

வீரர்களை நோக்கி விக்கியண்ணன் பேசியபோது, பேச்சில் தெளிவும் பெருமிதமும் இருந்தன.

"உங்களுடைய எழுச்சியைக்காண என்னுள்ளம் உவகை அடைகிறது. போரின்றிச் சிலகாலம் உள்ளுக்குள் புழுங்கிக் கொண்டிருந்த நீங்கள், இன்று பூரிப்புக் கொண்டிருப்பதன் காரணத்தை நான் கூறவேண்டியதில்லை. பாண்டியரின்படை நம்மைநோக்கி எக்கணமும் புறப்படும் நிலையில் உள்ளது. அப்படையைத் தடுத்துத்தாக்க நீங்களும் எழுச்சியோடு இருப்பதைக்காண மகிழ்ச்சியடைகிறேன் .

"சோழர்படையின் பெரும்பகுதி பழையாறையில் உள்ளது என்று சொல்லக்கேட்டு நான் முதலில் பதைபதைத்தேன். மன்னரின் நேர்ப்பார்வையில் இல்லாததால் படைவீரர்களின் நிலைமை எப்படி இருக்கக்கூடுமோ என அச்சங்கொண்டேன். பயிற்சியின்றிப் படைவீரர்கள் இருப்பார்களேயெனில், எளிய பகைவர்களையும் வெற்றி கொள்ள இயலாது அன்றோ? அதனால்தான் பல்லவரையரை முன்னதாக இங்கு அனுப்பி வைத்தேன்.

"இங்கிருந்து பல்லவரையர் எனக்கனுப்பிய செய்திகள் என்னுள்ளத்தைக் குளிர வைத்தன. எண்ணிறந்த போர்களில் மன்னருடன் ஆதிமுதல் கலந்துகொண்டிருந்த எழுச்சிமிகு மறவர்கள் இப்பிரிவிலேயே நிறைந்திருக்கின்றனர் என்பதையும் பிறஇடங்களில் உள்ள படைப்பிரிவுகளைவிட இப்பிரிவில் உள்ளோர் இடையிலாப் பயிற்சி நிரம்பியவராய் எந்த வினாடியும் போருக்கு ஏற்பாடாக இருப்பதையும் அறியவந்தபோது, என்னால் உங்கள் படைத்தலைவர் பொலன்மார்பரைப் போற்றாமல் இருக்க முடியவில்லை. உங்கள் ஆற்றலையும் அரசரிடம் கொண்ட அன்பையும் அறிந்ததனால்தான் இளவரசர் ஆதித்தரை இங்கு உங்களுடன் கலந்துகொள்ளுமாறு அனுப்பிவைத்தேன்.

இளவரசரும் உங்களுடன் இன்னும் சிலநாட்கள் இங்குத் தங்கியிருப்பார்.

"போரென்றால் பின்வாங்கும் போக்கு தமிழ்மண்ணில் பிறந்திட்டார் யாரும் பெறுவதில்லை. வீரர்களுக்கு வீரத்தைப்பற்றி விளக்குவது வீணென்பதை நானறிவேன். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தேயே வாளோடு முன்தோன்றிய மூத்தகுடி நம்குடி. இக்குடி பிறந்த வீரன் ஒவ்வொருவனும் எப்படிப்பட்ட ஆற்றல் உடையவனாக இருக்கவேண்டும் தெரியுமா? உடனிருக்கும் மறவர்களில் தனியொருவனாய் உயர்ந்து சிறப்புற்று நிற்க வேண்டும்; கனன்று எதிர்வரும் பகைவரின் தூசிப்படையைத் தடுத்துத் தாங்கவேண்டும்; பகைவரிடையே ஊழித்தீப்போல் உட்புகுந்து அழிக்கும் ஆற்றல் மிக்கவனாய் இருக்கவேண்டும். காட்டுத்தீப்போலப் பகைவர்கள் படர்ந்து விரைந்தபோதும் எழும்போரில், ஒன்று தான் கொல்லப்படுதல் வேண்டும்; இல்லையேல் எதிர்ப்போர் வானுலகடைய வேண்டும் என்ற இரண்டில் ஒன்றை ஆய்ந்து உறுதிசெய்து கொண்டபின் வாளைத் தொடுவதன்றிப் பகைவர்தன்மேல் வாளைப்பாய்ச்சிய போதும் தன்வாளைத்தொடாத தறுகண்ணனாய் வீரன் விளங்கவேண்டும். இவ்வுலகில் என்றும் நிலைத்து நிற்பது புகழ்; நிலையற்றது உயிர்! நின்ற புகழொழிய நில்லா உயிரோம்பி வாழ்கின்ற வாழ்க்கை மிகவும் இழிவானது.

"காடு திருத்தி நாடாக்கி, குளமெடுத்து வளம் பெருக்கிய கரிகால் சோழரைப்பற்றி அறிந்திருப்பீர்கள். எப்பக்கமும் எதிர்ப்பின்றி சென்றுமீண்ட வெற்றித்திருமகன் அவர்! அவரின் வெற்றிக்குக் காரணம் என்ன? கரிகால் பெருவளத்தாரின் வரலாற்றை ஒவ்வொரு வீரனும் உணர்ந்திருக்கவேண்டும். அவர் நம்மைப்போல் எளிய வீரர் இல்லை! தன் வாளொன்றைக் கொண்டே வையகத்தைச் சமைத்தவர்! பாராளும் பொறுப்பை ஏற்கும்முன்பே பகைவர் எதிர்ப்பை ஏற்றவர் அவர்! தாய்வயிற்றி லிருந்து தாயத்து எய்திய கரிகாலர் பகைவர்களால் இளமையில் சிறையிடப்பட்டார். சிறைப்பட்ட அவர் சினந்தெழுந்தபோது, பகைவர்களால் மாளிகைக்கு இடப்பட்ட தீ காலைக்கருக்கியது; ஆனால், அவர்கொண்ட சினத்தீ பகைவர்கள்தம் வாழ்வையே பொசுக்கியது. இருபெரும் வேந்தரும் ஒரு களத்து அவிய

வெண்ணித் தாக்கிய கரிகால் பெருவளத்தாரின் பெருமையை இன்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கலாம்.

"கரிகாலர் பிறந்த சோழநாட்டிலே நீங்களும் பிறந்த பெருமை பெற்றிருக்கிறீர்கள்! அவருக்கமைந்த வீரம் உங்களிடமும் அமைந்திருக்க வேண்டும். உயர்வற்றுக் கிடக்கும் சோழநாடு இனி உங்களால்தாம் உயர்வடைய முடியும்! 'என்னை எதிப்பவர் மெல்ல வந்தென் மெல்லடி பொருந்தி ஈயென இரக்குவராயின்' இந்த அரசு மட்டுமன்றி என்னுயிரையும் கொடுப்பேன்; அன்றிப் பகைமைப் பாராட்டுவாரேல், துஞ்சுபுலி இடறிய குருடனைப்போல், அழிந்து ஒழிவது உறுதி என்று சூளுரைத்த சோழன் நலங்கிள்ளியின் வீரம் நம்நினைவில் இருக்கவேண்டும். முகிலால் மறைக்கப்பெற்ற முழுநிலவை ஒப்பச் சோழர் பெருமையும் வீரமும் பகைவர்தம் சூழ்ச்சியால் மறைக்கப்பட்டுள்ளன. சூழ்ச்சியை வீழ்த்திச் சோழர்தம் ஆட்சியை மீட்பது வீரர்களாகிய நம் கடமையாகும்.

"இளவரசர் உங்களுடன் இங்குப் பலநாள்கள் இருப்பார். பகைவர்தம் படையெடுப்பை எதிர்நோக்கி எப்பொழுதும் ஏற்பாட்டோடு இருங்கள். பலபோர்களில் பங்கேற்றுச் சிறந்த படைத்தலைவர் பொலன்மார்பரும் பொறுப்புணர்ந்த உங்களைப் போன்ற உயர்ந்த மறவர்களும் உள்ளவரைச் சோழர் பெருமை ஒருநாளும் அழிந்துவிடாது. விடாது பயிற்சியை மேலும்மேலும் தொடருங்கள்; வெற்றியை நான் தேடித்தருகிறேன்!"

பல்லவரையன் பின்தொடர பழையாறையை விட்டுத் தஞ்சையை நோக்கித் தன்பயணத்தைத் தொடங்கிவிட்ட விக்கியண்ணனின் அகம் வெகுவாக நிறைந்திருந்தது. பழையாறை யிலிருந்த படைமறவர்களின் பயிற்சியும் எழுச்சியும் மற்ற பிரிவுகளில் இருந்த மறவர்களிடமும் இருக்குமேயானால், இளவரசி கடம்பமாதேவி கண்டுவரும் எண்ணம் கட்டாயம் இனிது நிறைவேறும்.

விக்கியண்ணன் தன்புரவியின் விரைவை மட்டுப்படுத்தி மெல்ல நடக்கவிட்டான். புரவியின் விரைவைக் குறைத்த அவன் அடுத்து நிறைவேற்ற வேண்டிய செயல்களில் விரைவை வெளிப்படுத்தினான்.

"பல்லவரையரே!"

பல்லவரையன் தன்புரவியைப் பக்கத்தில் கொண்டு வந்தான்.

"சொல்லுங்கள், தலைவரே!"

"இப்போதுள்ள படையைக் கொண்டுமட்டும் பாண்டியனை வெற்றி கொள்ள இயலுமா?"

"முடியாது, ஐயா. பாண்டியர்படை மிகவும் வலியது. பல்லவரோடு நாம் இணையினும் பாண்டியரை வெல்வது பெரும் ஐயமே!"

"அப்படியா நினைக்கிறீர்?"

"நினைப்பது மட்டுமன்று; உறுதியாகவும் நம்புகின்றேன்!"

விக்கியண்ணன் சிந்தனையில் ஆழ்ந்தான். புரவிகளின் வேகம் இப்படியே இருப்பின் தஞ்சையை அடைய நடுஇரவுகூட ஆகலாம் எனப் பல்லவரையன் எண்ணினான்.

"பல்லவரையரே! பாண்டியரின் படை இப்போதும் முன்னேற்பாடாக உள்ளது. இருந்தும், பருவநிலையைக் கருத்தில் கொண்டு அந்தப் படை புறப்பட இன்னும் இரண்டு திங்கள்கள் ஆகக்கூடும் என்று நம் ஒற்றர்கள் கூறுகின்றனர்."

"ஆம்; ஏற்றுக் கொள்ளக்கூடியதுதான்."

"இந்த இடைப்பட்ட காலத்தில் நம்மால் எதையும் செய்யக்கூடுமா?"

"படைவலிமையை மட்டுமே நம்பிப் பயனில்லை, தலைவரே. போர் நடைபெற்றால் பல்லவர் துணைநிற்பினும் வெற்றி காண்பது அரிது. வெற்றி கண்டாலும், போருக்குப்பின்னர்ப் படைத்திறன் மட்டுமன்றி நாட்டுவளமும் மிகவும் பாதிக்கப்பட்டுவிடும். பிறகு, எளிய முத்தரையரையும் நம்மால் எதிர்க்க முடியாது போகும்.

இப்போது நமக்குள்ள ஒரே வழி போரை நடைபெறாமல் தடுத்து நிறுத்துவதுதான்."

"ஆகக் கூடியதா அது?"

பல்லவரையன் பதில் அளிக்கவில்லை; அளிக்க அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

புரவிகள் தம்போக்கில் மெல்லச் சென்று கொண்டிருந்தன. அமைதி நெடுநேரம் அவர்களிடையே குடிகொண்டிருந்தது. விக்கியண்ணன் இறுதியாகப் பேசியபோது அவன் குரலில் அவன் அப்போதும் அகத்தில் ஆய்ந்துகொண்டிருந்த ஆழ்ந்த சிந்தனையால் விளைந்த தயக்கம் தெரிந்தது.

"பல்லவரையரே! பாண்டிய நாட்டில் உங்களைப் பலருக்குத் தெரிந்திருக்குமா?"

விக்கியண்ணனின் அந்தக் கேள்விக்கான காரணம் பல்லவரையனுக்கு உடனடியாக விளங்கவில்லை.

"இல்லை, ஐயா. சோழர்படையில் நான் இப்போது வகிக்கும் பொறுப்பு சென்ற ஆண்டிலிருந்துதான்; அதுவும் நம் இளவரசியாரின் அருளினால் பெற்ற பேறாகும்! வேறு யாரும் என்னை நன்கு அறிந்திருக்கும் பேறுபெற்றவனில்லை நான்."

பல்லவரையன் குரலில் ஏக்கம் தெரிந்தது. புகழுக்காகப் புழுங்கும் பல்லவரையனின் நோக்கம் ஒவ்வொரு வீரனுக்கும் இருக்குமேல் தன்வேலை எத்துணை எளிதாகிவிடும் என்பதை எண்ணி விக்கியண்ணன் பல்லவரையன்பால் மேலும் அன்பு கொண்டான்.

"பாண்டிய மன்னர் வரகுணவர்மருக்கு ஒரு தம்பி உண்டல்லவா?"

"ஆம். பராந்தகர் என்பது அவர் பெயர்."

"உடன் பிறந்த தம்பியா அவர்?"

"இல்லை. மற்றொரு தாய்மூலம் பிறந்தவர்"

"பராந்தகருக்குப் பதவி ஆசை உண்டாகி நம்மோடு சேர்ந்து கொள்ளக்கூடுமேல் பலன் நமக்கு ஏற்ப அமையலாம் இல்லையா?"

"அமையலாம்; ஆனால் அது நடக்கக் கூடியதில்லை."

"காரணம்?"

"பாண்டியரின் படைக்கு எல்லோரும் புகழ்ந்தேற்றும் நக்கம்புள்ளருக்கு அடுத்த நிலையில் பராந்தகரே தலைவராகும்."

"அப்படியானால், நான் எண்ணுஞ்செயல் இன்னும் எளிதாக முடியும். பல்லவரையரே, நான் சொல்லுவதை எண்ணிப்பாரும். பராந்தகரின் உடலில் ஓடுவது பாண்டியர் குருதி மட்டுமன்று; சோழர்குலக் குருதியும் கலந்துள்ளது. பராந்தகரின் தாயாகிய அக்களநிம்மடி மயிலை பொத்தப்பிச் சோழன் திருகண்டராசரின் மகளென்று நான் தெரிந்துகொண்டேன்; உண்மைதானா?"

"உண்மைதான்."

"அப்படியானால் நான்சொல்வதைக் கேளுங்கள். மதுரைக்கு இப்போதே புறப்பட்டுச் செல்லுங்கள். பராந்தகரை நேரில் பார்த்து அவரிடம் நான் பேசவேண்டுமென்ற என்விருப்பத்தைச் சொல்லுங்கள். அவர் எப்படியும் தஞ்சைக்கு வந்தாகவேண்டும். அதற்காக நீங்கள் என்ன செய்வீர்களோ? என்ன சொல்வீர்களோ? எனக்குத் தெரியாது. தஞ்சையில் நடைபெற இருக்கும் துர்க்கை நிதம்பசூதணியின் திருவிழாவின்போது பராந்தகர் இங்கு இருக்கவேண்டும்; அஃது உங்கள் பொறுப்பு."

விக்கியண்ணனின் குரலில் உறுதி தெரிந்தது.

எப்போது தலைவனென்று ஒருவனை ஏற்றுக்கொண்டானோ, அப்போதிருந்தே அவன் ஆணையைத் தட்டிநடக்க எண்ணங்

கொள்ளாப் பல்லவரையன் எப்போதும் எதற்கும் ஏற்பாடாக இருந்தான்.

"இங்கிருந்தே புறப்படவா?"

"ஆம். இன்னும் ஐந்து கல்தொலைவில் மதுரைக்குப் பாதையொன்று பிரிந்து செல்கிறதல்லவா? அங்கே நீங்கள் பிரிந்து செல்லுங்கள்."

விக்கியண்ணன் புரவியை விரட்டினான். குதிரை விரைந்தது. அதைத் தொடர்ந்து பல்லவரையன் குதிரையும் பாய்ந்தது.

## 16. இடையில் விளைந்த இடர்.

*"இளமையு நில்லா யாக்கையு நில்லா*
*வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா*
*புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்*
*மிக்க அறமே விழுதுணை யாவது."*

விக்கியண்ணனுக்கு மெல்லமெல்லத் தன்னினைவு மீண்டு கொண்டிருந்தது. எங்கும் இருள்! அவனுக்கு எதுவும் புரியவில்லை. ஏன் இந்த இருள்? உலகமே இருண்டுபோய் விட்டதா?

விக்கியண்ணனின் நினைவு சிறிது விளக்கங்கொண்டது. கண்கள் இறுக மூடிக்கொண்டிருந்தால் உலகம் இருண்டு தோன்றாமல் வேறெப்படி இருக்கத் தோன்றும்? உண்மைதான்! அவன் கண்கள் மூடிக்கொண்டுதாம் இருந்தன. ஆனால், காதுகள்? அவைகளுமா அடைத்துக் கொண்டுவிட்டன? எந்த ஒரு சிற்றோசையும் அவன் செவிகளை எட்டக் காணோமே, அஃதேன்?

கண்களைத் திறக்க முயன்றான் விக்கியண்ணன். அத்துணை எளிதாக அந்தச் செயல் இருக்கவில்லை. ஒரு வினாடிதான் கண்கள் விரிந்தன; அடுத்த வினாடியே அவன் முயற்சிக்கும் கட்டுப்படாமல் தாமாகவே மூடிக்கொண்டன. விக்கியண்ணனின் நினைவு மேலும் விரிந்தது.

உடலின் நினைவு வரவே, படுக்கையில் கிடந்த விக்கியண்ணன் எழுந்தமர எத்தனித்தான். எவ்வளவு விரைவாக அவனின் முன்னுடல் எழந்ததோ, அவ்வளவு விரைவாக மீண்டும் படுக்கையில் சாய்ந்தது!

"அம்மா!"

அவன் அறியாமலேயே அவன் கொண்ட உடல்வலியால் அந்தச்சொல் வெளிப்பட்டது. அவன் அழைப்பை ஏற்று அவனன்னை அங்கு வந்திருக்கக்கூடுமா? இல்லை; அந்தப்பெண் அவனன்னை இல்லை. சேரநாட்டின் சிறுகிராமம் ஒன்றில் தனியளாய் உறையும் அவனின் தாய் எப்படி அவனறியாமல் வந்திருக்கக்கூடும்? அதுவுந்தவிர, அவனுடலை அணைத்துத் தூக்கித் தன்மார்பில் தாங்கித் தலையை மெல்ல வருடிக் கொண்டிருந்த பெண்ணின் உடலமைப்பைக் கண்களால் காண முடியாவிட்டாலும் உற்றுணர்ந்த தன்மையால் விக்கியண்ணன் விளங்கிக் கொண்டிருந்தான்.

விக்கியண்ணன் அமைதியாக ஓய்வுகொண்டான். அந்த ஓய்வு அவனுக்கு இன்றியமையாது தேவைப்பட்டது. அவன் நினைவு மெல்லமெல்லத் தன்னிலைக்குத் திரும்பியது. என்ன நிகழ்ந்தது என்பதைக் கண்களால் கண்டிருந்த அவன், நினைவு தவறியபின் என்ன நிகழ்ந்திருக்க வேண்டுமென்பதையும் எண்ணித் தெளிந்து கொண்டான். பிறர் தாக்குதலில் அகப்பட்டுக்கொண்ட அவனைக் காப்பாற்றிய அந்தப்பெண், இப்போது அன்போடு தன்மார்பில் தாங்கிக் கொண்டிருக்கும் இந்தப் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். உண்மைதான்! அப்படித்தான் இருக்கவேண்டும். இந்தப் பெண் யார்? இவள் எப்படி அந்தக் காட்டில் அந்த இரவு நேரத்தில் வரநேர்ந்தது? அவன் விடையை அறிந்திருக்கவில்லை.

பாண்டியநாடு சென்றுவரும்படி தன்னால் பணிக்கப்பட்ட பல்லவரையன் பாதையில் தன்னைவிட்டுப் பிரிந்தபின்னர் நடந்தவைகள் அனைத்தையும் விக்கியண்ணன் ஒருமுறை நினைவு கூர்ந்தான். வழியில் அவன் எதிர்பார்க்காதவைகள் அல்லவா நிகழ்ந்துவிட்டன! யார் அந்தக் கொலைக்கஞ்சாக் கொடியவர்கள்!

நூலிழையில் தான் உயிர்பிழைத்திருப்பதை எண்ணி விக்கியண்ணன் வியந்தான்.

எங்கும் இருள்! விண்மீன்கள் கூட அந்த இரவில் கண்ணயர்ந்துவிட்டன போலும்! அந்த இருட்டில் விரைந்து புரவியை வழிநடத்த முடியாத காரணத்தால், தஞ்சைக் கோட்டையை விக்கியண்ணன் நெருங்கும்போது நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது.

அரசியல் நிலைமையைப் பற்றியே வழிநெடுக ஆராய்ந்து வந்திருந்த விக்கியண்ணன் கோட்டையை நெருங்கும்போது அன்றிரவு அவன் கொள்ள இருந்த இன்பத்தைக்குறித்துக் குளிரத் தொடங்கிவிட்டதால், வழியில் அவனைக் குறித்துக் காத்திருந்த கொடுமையைக் கவனிக்கத் தவறிவிட்டான். இளவரசி கடம்பமாதேவி அவன் நெஞ்சம் முழுதும் நிறைந்திருந்தாள் எனினும், அவனகம் வண்டார்குழலியின் வடிவழகில் என்றும்போல் நிலையிழந்துபோகத் தவறியதில்லை. அவன் வரவை எதிர்நோக்கி வழிமேல் விழிநாட்டி வண்டார்குழலி வாட்டத்தோடு காத்திருப்பாள் என்ற எண்ணமே விக்கியண்ணனின் விருப்பத்தைப் பன்மடங்காக்கும் விந்தைதான் என்னே!

விக்கியண்ணன் புரவியை விரட்டினான். அதுதான் என்ன செய்யக்கூடும்? அவன் விரைவுபடுத்துவதன் நோக்கத்தை அறிந்து கொண்டால்கூட, ஓய்வின்றிப் பழையாறையிலிருந்து பலநாழிகை களாய் அவனைச் சுமந்தபடி இன்னும் எவ்வளவுதான் விரைந்து செல்ல இயலும்?

காலை எதுவோ கவ்வுவதைப்போல் இருப்பதை உணர்ந்த விக்கியண்ணன், அஃதென்னவென்று கவனிக்குமுன்னரே புரவி யினின்றும் தூக்கி எறியப்பட்டான். தரையில் விழுந்த அவன்மேல் ஒரேநேரத்தில் பலபேர் அந்த இருட்டில் விழுந்தபோதே, அவனுக்கு அனைத்தும் புரிந்தன. வழியில் கவனம் செலுத்தாத தன் கவனமின்மைக்காக அவன் ஒருவினாடியும் வருந்தவில்லை. எத்துணைக் கவனமாக அவன் வந்திருப்பினும் அந்த இருட்டில் மரங்களிடையே மறைந்துதாக்கும் எதிரிகளை முன்னரே அறிவது என்பது அரிது என்பதை அவன் அறிவான்.

சோழ அரசின் முதன்மைப் பொறுப்பு வகிக்கும் ஒரு தலைவன் தன்னந்தனியனாய் வந்திருக்கக்கூடாது. தன்னந்தனியனாகப் பகைவர்களிடம் அகப்பட்டுக் கொண்டதற்காக விக்கியண்ணன் அச்சங்கொள்ளவில்லை. போதிய வெளிச்சம் மட்டும் எதிரிகளை இனங்கண்டுகொள்ள இருக்குமேயாயின், எந்த எதிர்ப்பையும் அவனால் தகர்த்தெறிய முடியும். ஆனால், எங்கும் இருட்டு! எதிர்பாராத் தாக்குதல்! திடீர்த் தாக்குதலால் திகைப்படைந்த அவனுக்குச் சுற்றுப்புறம் வெறுமையாய்த் தெரிந்தது. எதிரிகளும் இருட்டில் அவன் நிலையில்தாம் இருந்திருக்க வேண்டும்.

எதிரிகள் யார் என்பதை எண்ணும்நிலையில் அவன் இல்லை. உயிருக்கான போராட்டம்! எதிரிகளின் வாள்கள் அவனுடலைப் பலவிடங்களில் தடவிச் சென்றன. ஒரு வினாடிச் சோர்வுபோதும் அவன் உயிரை இழப்பதற்கு! எந்த நேரத்திலும் ஏதாவது ஒருவாள் அவன் மார்பை ஊடுருவக்கூடும் என்பதை விக்கியண்ணன் நன்கு அறிவான். சுற்றிச்சுழன்ற அவன் கைவாளும் ஓரிடத்து நிலைத்து நிற்காது அலைகளென இயங்கிய அவனிரு கால்களும் எதிரிகளை அச்சுறுத்தி எட்டவே நிற்கவைத்தன. அப்படிஇருந்தும் பகைவர் களின் வாள்கள் அவனுடைய உடலைப் பலமுறைத்தீண்டிச் சென்றதால் ஏற்பட்ட புண்களிலிருந்து குருதி கசியக்கசிய, விக்கியண்ணன் சிறுகச்சிறுக வலிவிழந்து கொண்டிருந்தான். அவனுடைய வாள்வீச்சும் கால்களின் சுழற்சியும் தளர்ந்து கொண்டிருந்தன. அவனுடைய வாள்தீண்டிப் பகைவர்களில் சிலராவது பெரும்புண்கள் பெற்றிருக்க வேண்டும். அதனால்தான், அவர்களின் எதிர்ப்பும் வெகுவாகக் குறைந்திருந்தது.

வாளைச் சுழற்றிக் கொண்டிருந்த விக்கியண்ணனின் கண்கள் இருண்டன; நினைவு தடுமாறியது. சாவது இனி நிச்சயம் என்ற எண்ணம் எழுந்தபோது, சற்றுத்தூரத்தில் தீப்பந்தங்கள் சில அவனிருந்த திக்கை நோக்கிப் பறந்துவருவதை அவன் கண்டான். அவன் காண்பது உண்மையா? இல்லை, மாயையா?

கண்கள் இருள, உடல் முற்றும் வலிமை இழக்க, உணர்வுதவறித் தரையில் விழுந்தான் விக்கியண்ணன். உணர்வு முற்றும் இழக்கும்முன்னர் இறுதியாகச் செவியில் விழுந்தது ஒரு பெண்ணின் இனிய குரல்தான்!

கழிந்த நிகழ்ச்சிகளின் நினைவுகளினின்றும் விடுபட்ட விக்கியண்ணன் உடலை மெல்ல அசைத்தான். முன்பிருந்த அத்துணைத் துன்பம் அப்போது இல்லாததுமன்றி, அவனால் அமைவாய் நிமிர்ந்து அமரவும் முடிந்தது. அவன் அப்படி அமர முயன்றபோது, அதுவரை அவனைத் தாங்கிக் கொண்டிருந்த தளிருடலாள் அவன் தோள்களைத்தாங்கி உதவி செய்தாள்.

"இதை அருந்துங்கள்."

பழகிய குரல் என்பது அவனுக்குப் புரிந்திருந்தது. கண்களைக் கட்டாயப்படுத்தித் திறந்தாலும் பார்வைக்குப் பனிமூட்டம் போன்றே தெளிவற்றுச் சூழல் தெரிந்தது.

இதழ்களில் சேர்ந்த குவளையிலிருந்த பழச்சாறு அமுதமாய் இனித்தது. அதைவிட அவன் தோள்களை அமைவாய்த் தாங்கி அப்பழச்சாற்றை அவனுக்களித்த அந்தப் பனிமொழியாளின் பரிவு தமிழ்ப்பாவாய் இனித்தது.

"இப்போது எப்படி இருக்கிறது?"

இப்போதும் அந்தக் குரலுக்குரியாளை அவனால் இனங்கண்டு கொள்ளக்கூடவில்லை.

"யார் நீங்கள்?"

"உடன் அறிந்துகொள்ள வேண்டுமா?"

"ஆம் ."

"ஏன்?"

"பழகிய குரலாக உள்ளது. யார் நீங்கள் என்பது என்நெஞ்சுள் இருக்கிறது; ஆனால், நினைவில் வர மறுக்கிறது ."

"அப்படித்தான் நினைத்தேன். உங்களுக்கு என்னை எப்போதோ மறந்துவிட்டிருக்கும். வேளிர்குலத்து வீரரைச்சுற்றி வேல்விழியருக்குப் பஞ்சமா?"

விக்கியண்ணன் திரும்பி அவள் கைகளை ஆசையோடு பற்றிக்கொண்டான்.

"தேவி; நீங்களா? உண்மைதானா?"

"ஐயமிருந்தால் பையக் கண்களைத் திறந்து காணுங்களேன். ஒருவேளை, கட்டழகிகளையே கண்டு பழக்கப்பட்ட உங்கள் கண்களுக்கு இந்த ஏழையைக் காண ஏற்கவில்லையோ? என்னவோ?"

இளவரசி கடம்பமாதேவியின் பேச்சில் இகழ்ச்சி நிறைந் திருந்ததை விக்கியண்ணன் தெரிந்துகொண்டான். கண்களைத் திறந்து எதிரில் இருந்த கட்டழகைக்காண அவனுக்கும் கசக்குமா?

விக்கியண்ணன் கண்களைத் திறந்தான். பகலவனைக் கண்ட பனிமூட்டம் மறைவதொப்ப, அவன் கண்களை மறைத்திருந்த திரை கடம்பமாதேவியைக் கண்டதும் விலகியது. அவன் கண்கள் அருகிருந்த அவளழகைப் பருகின. அதுவரை இருந்து அல்லல்தந்த சோர்வு அகன்றது; புத்துணர்வு நிறைந்தது. சற்றுமுன்னர்வரைத் தன்னுடலிருந்த நிலைமையை அவளழகின் ஆற்றலால் அவன் முற்றும் மறந்தான்.

"தேவி!"

ஆசையோடு அவன் கைகள் கடம்பமாதேவியின் இடையை அடைந்தன. அவள் கைகளும் அவன் கழுத்தைப் பின்னிப் படர்ந்தன. அவன் கண்கள் அவள் கண்களோடு உறவாடிக் களித்தன. இருவர் இதழ்களும் இணைந்து உறவாட எண்ணியவைகளாய் இன்னுணர்வால் துடித்தன.

"இப்போது எப்படி இருக்கிறீர்கள்? உடலில் வலி இல்லையே?"

அன்போடும் அக்கறையோடும் அவள் குழைந்தாள்.

"இதோ நீங்களே தெரிந்துகொள்ளுங்கள்."

"ஆஅஅ!"

அவனுடைய அணைப்பின் இறுக்கத்தால் அவளுணர்ந்த இன்பவேதனையின் பயனாய் அவளையும் அறியாமல் அவள் வாயினின்றும் பொருளற்ற ஒலிதானே வெளிப்பட்டது. அவளின் பெண்ணுணர்வு பெரிதும் இன்பங்கொண்டது. இத்துணை இன்பமா இவருடைய அணைப்பில் இருக்கமுடியும்! இந்த நிலையில் இருக்கும்போதே இவரணைப்பில் இத்துணை வேகம் இருக்கக்கூடுமேல், இயல்பான நிலையில் இவரணைப்பின் வேகம் எப்படி இருக்குமோ? இவருடைய வேட்கைக்கு ஈடுகொடுக்க என்னால் இயலுமா? இவருடைய இதழ்கள் கூந்தலோடு குலவும்போதே என்சித்தத்தில் இத்தனை குழப்பங்கள் ஏற்படுமேல், இதழ்களில் முத்தமிடின் பித்தன்றோ என்னைப் பற்றிவிடும்! அப்பப்பா! இன்பத்தின் தொடக்கமே இத்தன்மைத்தெனில் இறுதிநிலை எத்தன்மைத்தென்று யாரே கூறக்கூடும்? என் நெஞ்சிற்கு அப்பேரின்பப்பேற்றைத் தாங்கிக்கொள்ளும் ஆற்றல் வேண்டுமே!

"தேவி! பேசமாட்டீர்களா?"

கடம்பமாதேவியின் சிந்தனை சிதறியது.

"போதும். விடுங்கள் என்னை. உடலிருக்கும் நிலையில் உதவாது உங்கள் விளையாட்டு! பேசாமல் ஓய்வெடுங்கள்."

அவனின் அணைப்பினின்றும் வலிய விடுபட்ட கடம்பமாதேவி, விக்கியண்ணனைப் படுக்கையில் மெல்லச் சேர்த்தாள். அப்படிப் படுக்கையில் சேர்ந்தாலும், அவன் அவள் கைகளை விடவில்லை.

"தேவி! இறந்துவிடுவான் இவன் என்று நடுங்கிவிட்டீர்களா?"

அவன் கண்கள் அவளிடம் காவியம் படித்தன.

"இல்லை; ஐயா! என்னை விட்டு உங்களைப் பிரிக்க யாராலும் முடியாது. நீங்களே நினைத்தாலும் அது நடக்காதென்பதை நானறிவேன். நீங்கள் எனக்கு உரியவர். கோள்களின் இயக்கத்தைக் கொண்டு கணிக்கப்பட்ட என் வாழ்க்கைக் குறிப்பில் எனக்கு நம்பிக்கை உண்டு. நான் நெடுங்காலம் உயிர்வாழ்வேன். என்னுயிர் என்னவரின் மார்பில் இருக்கும்போதே போகும். அப்படி இருக்க நானேன் அஞ்சவேண்டும்? இருந்தாலும் நீங்கள் கவனமுடன் இருந்திருக்க வேண்டும்; இனியும் இருக்கவேண்டும்."

குவளைக் கண்கள் குற்றஞ் சுமத்தின.

"தேவி! என்மேல் எந்தக் குற்றமும் இல்லை. இருட்டு அதிகம் என்பதால் எதிரிகளை முன்னரே அறியமுடியவில்லை. பகலாக இருந்திருப்பின் பகைவர் எத்தனைபேரெனினும் என்கைகள் தளர்ந்திருக்கா."

"உங்கள் வீரத்தை நான் நன்கு அறிவேன். ஐயா! வீரம் மட்டுமே போதுமா? உடன், கவனமும் வேண்டும். உங்களுக்கு ஒன்றென்றால் என் உள்ளமும் உயிரும் ஒருங்கே வாடுமென்பதை நீங்கள் உணரவேண்டும். துணையின்றி இரவுப்பயணம் தேவை தானா?"

"கவலை வேண்டா. இனி இந்தத் தவறு நடவாது பார்த்துக் கொள்கிறேன்."

அவள் தன் பேச்சைத் தொடர்ந்தபோது குரல் தழுதழுத்தது.

"உங்களுக்கென்ன? நீங்கள் ஓர் ஆண்மகன்; எளிதாக எடுத்துக் கொண்டு விட்டீர்கள். உங்களுக்கு இடரென்று ஓராள் ஓடிவந்துரைத்த போது, எனக்கு எல்லாமே ஒருவினாடி நிலைத்து நின்றுவிட்டன! என்மனம் என்னவெல்லாம் எண்ணி இன்னல் கொண்டதென்பதை எங்கே நீங்கள் உணரப்போகிறீர்கள்? இங்கு விரைந்து உங்களை நேரில் பார்த்த பிறகன்றோ என் உயிரும் உணர்வும் திரும்பின!"

விக்கியண்ணன் பார்வையை அறைமுழுவதும் அலைய விட்டான். கண்கள் அவன்கொண்ட சிந்தனையை வெளிப் படுத்தின.

"என்ன தேடுகிறீர்கள்?"

"இஃதெந்த இடம்? நானெப்படி இங்குவந்து சேர்ந்தேன்?"

"இது தலைமை அமைச்சரின் மாளிகை. வழியில் புண்பட்டுக் கிடந்த உங்களை வீரர்களுடன் வந்த மாதேவி கண்டிருக்கிறாள்; உடனே உங்களை இங்குக் கொண்டுவந்து மருத்துவத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறாள். செய்தி கேட்டதும் நான் ஓடோடி வந்தேன்."

விக்கியண்ணன் மெல்லப் பேசினான்.

"என்னைக் காப்பாற்றியவர் அமைச்சர் நாங்கூர்வேளிர் நற்குணப்பேரெழிலாரின் அருமைப்பெண் மாதேவியார்?"

"ஆம்."

"அந்த இரவு நேரத்தில் கோட்டைக்கு வெளியே அவருக் கென்ன வேலை?"

"ஐயா! இஃதென்ன கேள்வி?"

கடம்பமாதேவி குழப்பத்தோடு விக்கியண்ணனை நோக்கினாள். அவனோ படுக்கையினின்றும் எழுந்திட எத்தனித்தான்.

"ஏன் எழுந்திருக்கிறீர்கள்? வேண்டா; உங்களுக்கு ஓய்வு தேவை. என்ன வேண்டும்? சொல்லுங்கள்; ஏற்பாடு செய்கிறேன்."

"தேவி! என்னைக் காப்பாற்றியவருக்கு நான் நன்றிசொல்ல வேண்டாவா? மேலும், எனக்கு நிறைய பணிகள் உள்ளன."

எழமுயன்ற விக்கியண்ணனைக் கடம்பமாதேவி தோள்களைத் தொட்டுத் தடுத்தாள்.

"சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் இங்கேயே இருங்கள்; மாதேவியை நானிங்கு வரச் சொல்கிறேன்."

"இல்லை; தேவி! அது முறைஇல்லை. அச்சம் வேண்டா. எனக்கு ஒன்றும்இல்லை; எல்லாம் சிறுசிறு புண்களே."

கடம்பமாதேவி மேலும் அவனைத் தடுக்கவில்லை. தன்னுடலை அவனுக்கு ஊன்றாகத் தந்து அவனெழ உதவி செய்தாள். முதலில் சிறிது தடுமாறிய விக்கியண்ணன், தனித்து நிற்கவும் சற்றைக்கெல்லாம் அணியமானான்.

"தேவி! பிறகு நான் உங்களைச் சந்திப்பேன். இப்போது எனக்கு விடை கொடுங்கள்."

கடம்பமாதேவியின் விடையை அவளின் கருவிழிகளிலே விக்கியண்ணன் கண்டான். நெஞ்சோடு நிறைந்தவளை அந்தத் தனியறையிலே தவிக்கவிட்டுவிட்டுப் பிரியமனமில்லாதவனாய் அவன் பிரிந்தான்.

அறையைவிட்டு வெளியே வந்தவன் செவிகளில் யாரோ பாடும் இன்னிசை சேர்ந்தது. இசை வந்த திக்குநோக்கி முன்னேறிய விக்கியண்ணன், குரல் எழுந்த இடத்தின் அண்மையை அடைந்த போது அந்தக்குரலை இனங்கண்டுகொண்டுவிட்டான். பகைவர்தம் தாக்குதல் பயனாய் உணர்வற்றுச் சாயுமுன் அவன் செவியில் சேர்ந்த பெண்ணின் குரலன்றோ அது!

ஆம்; உண்மைதான். அதே குரல்தான்! ஐயமே இல்லை.

# 17. மாதேவியின் மாண்பு.

*"முருகனே செந்தில் முதல்வனே மாயோன்*
*மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்*
*தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்*
*நம்பியே கைதொழுவேன் நான்."*

குழலினிதா? யாழினிதா? கொஞ்சும்எழில் வஞ்சியிவள் குரலினிதா?

விக்கியண்ணனின் நெஞ்சிற்கு அவனுள் எழுந்த கேள்வி களுக்கு விடையளிக்க இயல இல்லை. அவன் நெஞ்சிற்கு, அவனைப்பற்றி மற்றவர்கள் அறிந்திருப்பதைக் காட்டிலும் மிகையாகவே தெரியும். எத்தனைமுறை முறைகளை எடுத்துக்கூறி ஏளனத்திற்கு உள்ளாகியுள்ளோம் என்பதை அந்த நெஞ்சு அறியும்.

பெண்ணொருத்தியைப் பார்த்தால் போதும்; விக்கியண்ணன் பேதலித்துப்போய் விடுவான். அவள் எப்படிப்பட்டவளாக இருப்பினும் அவனுக்கு அக்கறை இல்லை. இருபதாகவும் இருக்கலாம்; இல்லை, அறுபதாகவும் இருக்கலாம். ஆனால், காதல் உறவிற்கேற்ற கட்டான உடலமைப்புப் போதும் அந்தப் பெண்ணிடம் அவனுக்கு அளவற்ற ஆசை எழ! அந்நாள்வரை அவன் பழகியிருந்த பெண்களின் எண்ணிக்கையை அவனே அறியமாட்டான். எண்ணிக்கைக்கு கணக்கில்லையே ஒழிய அவனெண்ணத்தில் ஆட்சிகொண்டவர் சிலர்தாம். அவர்களிலும் இளவரசி கடம்பமாதேவியாரிடம் அவன் தன்னையே இழந்து விட்டிருந்தான்.

குரலின் இனிமையைக் குழலோடும் யாழோடும் ஒப்பிட்டு விக்கியண்ணன் வியந்தாலும் அந்தக் குமரிப்பெண்ணை எந்தத் தவறான எண்ணத்தோடும் அவன் நோக்கவில்லை. இளவரசி கடம்பமாதேவியின் ஈடில்லா அன்பிற்கு உரியவளான மாதேவியிடம் அவன் கொள்ளும் ஈடுபாடு எந்த வகையிலும் தவறாக இருக்கக்கூடாதென்பதில், அவன் உறுதியாக இருந்தான்.

ஆண்டவன் வழிபாட்டை முடித்துக்கொண்டு அருள் வடிவாய்த் திரும்பினாள் மாதேவி. அறைக்கதவைப் பற்றாய்ப் பிடித்துக்கொண்டு நின்றிருந்த விக்கியண்ணனைக் காண அவள் கண்கள் வியப்பால் விரிந்தன. அவள் கொண்ட வியப்பை விரிந்த கண்களே அன்றித் தேனொத்த அவள் குரலும் தெளிவாய்க் காட்டியது.

"இஃதென்ன! நீங்கள் தற்சமயம் இருக்கவேண்டிய இடம் படுக்கையன்றோ?"

"வீரன் இருக்கவேண்டிய இடம் பஞ்சுமெத்தையன்று; பகைவர்கள் வேல்கள் பறந்துகொண்டிருக்கும் போர்க்களம்!'

"மிக்க மகிழ்ச்சி, ஐயா. உங்களுடன் யாரும் இருக்க வில்லையா?"

"இளவரசியார் இருந்தார்கள்."

"இருந்துமா உங்களை இங்குவர இசைவளித்தார்கள்?"

"என்னை நீ புரிந்துகொண்டிருக்கவில்லை. இளவரசி-யாருடைய இசைவு என்பதில்லை; யாருடைய இசைவுக்காகவும் நான் காத்திருப்பதில்லை."

மாதேவியின் முகம் சுருங்கியது. குழப்பத்தோடு அவனைப் பார்த்தாள்.

"ஏனம்மா திகைக்கிறாய்? நாங்கூர் வேளிரின் பெண்ணிடம் இப்படி மதிப்பு இன்றிப் பேசுகிறானே இவன் என்று திகைக்கின்றாய்; இல்லையா? அண்ணனிடம் அன்பைத்தான் எதிர்பார்க்கவேண்டும்; மற்றவர்களுக்குத் தரப்படும் மதிப்பை எதிர்பார்க்கக்கூடாது."

மாதேவி விக்கியண்ணனை நன்கு ஆராய்ந்து பார்த்தாள். அவள் கொண்ட வியப்பு அவள் பேசியபோதும் அவளைவிட்டுப் பிரிந்திருக்கவில்லை.

"நீங்கள் எனக்கு அண்ணனா?"

"ஏன் வியப்பாக இருக்கிறதா? நீமட்டும் தக்க நேரத்தில் வராமலிருந்தால் என்நிலை என்னவாகியிருக்கக்கூடுமோ? உயிரைக்காத்த உன்னை என்தங்கையாக ஏற்கிறேன். அது தவறா? சொல்லம்மா. மேலும் நான் உன்னைப்போல் வேளிர்குலத்தைச் சேர்ந்தவன்; அந்த இனப்பற்றும் இருக்குமன்றோ?"

"ஐயா! வேளிர்குலத்தைச் சேர்ந்தவரென்று சொல்லி நம்மிடை ஒரு பிணைப்பை அமைத்துக்கொள்ளவேண்டிய தேவை இல்லை. அருள்கூர்ந்து அந்த இருக்கையில் அமருங்கள். உடலில் உரமற்றபோது உங்களுக்கேன் வீண்துன்பம்? சொல்லியனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேன். வீரரே, நீங்கள் என்னிடம் எதையோ சொல்ல விழைகிறீர்; அதற்கு அடிப்படையாகவே அண்ணன் தங்கையென்ற உறவுமுறைப் பேச்சைத் தொடங்கியுள்ளீர். மெல்ல அமருங்கள். வயதில் மூத்த அனைவரையுமே நான் என் உடன்பிறவா அண்ணன்களாகவே மதிக்கிறேன். அதிலும் இளவரசர் ஆதித்தருக்கு உதவியாக வந்திருக்கும் உங்களை என் அண்ணனுக்கும் மேலாக மதிக்கிறேன். சொல்ல நினைப்பதைத் தயக்கமின்றிச் சொல்லுங்கள்."

விக்கியண்ணன் உடனே பேசத் தொடங்கவில்லை. மாதேவியின் வெளிப்படையான பேச்சு அவன் மனதில் பல மாற்றங்களைத் தோற்றுவித்தது .

"ஏன் அமைதி? எதைச் சொல்லவும் நீங்கள் அஞ்சத் தேவை இல்லை."

விக்கியண்ணன் மெல்லச் சிரித்தான்.

"அச்சமா? எனக்கா? அதுவும் பெண்களிடமா? மாதேவி! நான் எப்போதுமே எனக்காக அஞ்சுவதில்லை. என் அச்சமெல்லாம் மற்றவர்களைப்பற்றியே! என்னுடைய செயல்களால், பேச்சுகளால் எங்கே மற்றவர்கள் பாதிக்கப்பட்டுவிடுவார்களோ என்பதே என் அச்சத்தின் காரணம். அதிலும் பெண்களை எந்த நிலையிலும் புண்படுத்தும் எண்ணம் கொள்ளாதவன் நான்."

"புரிகிறது, ஐயா. உங்கள் பேச்சு என்னை எந்த வகையிலும் பாதிக்காது என்று நான் உறுதிகூறுகிறேன். வழிவழி வீரர்குலத்து

வந்தவள் நான்; வெறும் சொற்கள் என்னை வேதனைப்படுத்த முடியாது."

"மிக்க மகிழ்ச்சி அம்மா. நேற்றிரவு கோட்டைக்கு வெளியே காட்டில் காரிருட்டில் உனக்கு என்ன வேலை? சொல்ல முடியுமா?"

"முடியாமல் என்ன? ஏரகத்திலிருக்கும் இறைவனைத் தொழச் சென்ற நான், நேரங்கடந்து திரும்பிவரலானேன்; வரும்வழியில் உணர்வற்றுக் கிடந்த உங்களைக் கண்டு உடன் இங்குக் கொண்டு வந்தேன்."

"உயிரைக்காத்த உனக்கு நான் உயிருள்ளவரைக் கடமைப் பட்டுள்ளேன். மாதேவி! ஏரகத்திற்கு எப்போது புறப்பட்டுச் சென்றாய்?"

"நேற்று முன்நாள்தான். ஏன் இந்தக் கேள்விகள்? செய்யக் கூடாததை நானேதும் செய்துவிட்டேனா?"

"இளவரசரும் நேற்று முன்தினம்தான் பழையாறைக்குப் புறப்பட்டுச் சென்றார்; இல்லையா?"

"ஆம்; அதற்கென்ன?"

"நீயும் அன்றுதான் புறப்பட்டுச் சென்றிருக்கிறாய்! அதுமட்டு மில்லை; நீ பழையாறைக்கும் சென்று வந்துள்ளாய்."

"ஐயா! உங்கள் சிந்தனை தவறானது. சோழநாட்டைப்பற்றி இன்னும் தாங்கள் முழுமையாகத் தெரிந்துகொள்ளவில்லை. பழையாறையில்தான் இன்றும் உயர்குலத்தினர் தங்குவதற்கேற்ற பெருமனைகள் உள்ளன. சென்ற இரவிற்கு முன்னிரவை அங்குக் கழித்தேன். அது குற்றமா?"

"அது குற்றமில்லை, அம்மா! ஆனால், இக்கட்டுகள் பலவற்றிற்கு ஈடுகொடுக்க வேண்டியிருக்கும் இளவரசரைப் பின்தொடர்ந்து ஒருபெண் செல்வதுதான் குற்றம்!"

மாதேவியின் முகத்திலிருந்த மலர்ச்சி மறைந்ததை விக்கியண்ணன் கண்டான். அவள் முகம் சிவந்தது; இதழ்கள் மெல்லத் துடித்தன.

"வீரரே! நீங்கள் சொல்லவிரும்புவதை வெளிப்படையாகச் சொல்லுங்கள்."

"இளவரசர் ஆற்றவேண்டிய கடமைகள் இப்போதுதான் தொடங்கியுள்ளன. இடையில் உன்னைப்போன்ற பெண்ணொருத்தியால் உள்ளம் பாதிக்கப்படுமேல், அவரால் எதையுமே முடிக்க இயலாது. பிறகு, சோழநாட்டிற்கு விடிவே இருக்காது."

"அக்கா! அக்கா!"

விக்கியண்ணன் திடுக்கிட்டவனாய் நிமிர்ந்தமர்ந்தான்.

"மாதேவி! யாரை அழைக்கிறாய்?"

"இளவரசியாரைத்தான்! ஏன் இப்படி அஞ்சுகிறீர்கள்? உங்களுக்குத்தான் பெண்களிடம் அச்சம் கிடையாதே!"

"இளவரசியாரை நீ அழைத்திருக்கத் தேவை இல்லை. நாம் பேசிக் கொண்டிருந்தது உன்னைப்பற்றி!"

"உண்மைதான். ஆனால், என்னைப்பொறுத்தவரை எல்லாமே இளவரசியார்தான். இளமையிலிருந்தே நானும் இளவரசரும் இளவரசியால் வளர்க்கப்பட்டு வழிநடத்தப்படுகிறோம். எங்களுக் கென்று தனியாக எந்த எண்ணமும் கிடையாது. எங்களுக்கு இளவரசியார் இட்டதே சட்டம். இதோ, அக்காவே வந்துவிட்டார்கள்; அவர்களையே கேட்போம்."

விக்கியண்ணன் கொண்ட குழப்பம் வெளியே நன்கு தெரிந்தது. இளவரசியைக் கண்ட அவன் மெல்ல எழுந்துநின்றான். கடம்பமாதேவி அவன்மேல் கவனத்தைச் செலுத்தாதவளாய் மாதேவியை நெருங்கினாள்.

"மாதேவி! ஏன் கூப்பிட்டாய்?"

"அக்கா! நீங்களே சொல்லுங்கள்; ஏரகத்திற்கு நான் சென்று வந்தது எதற்காக? இறைவன் பொருட்டா? இல்லை, இளவரசர் பொருட்டா?"

"ஏனிந்தக் கேள்விகள்?"

"இதோ நிற்கிறாரே இந்த வீரர்; என்னை இல்லாதவெலாம் சொல்லி ஏளனப்படுத்துகின்றார். ஆதித்தரைச் சந்திக்கவே நான் அத்தனை தூரம் சென்றேனாம்!"

கடம்பமாதேவி அன்போடு மாதேவியின் கூந்தலை வருடியபடியே மெல்லக் கூறினாள்.

"இன்னும் குழந்தையாகவே இருக்கிறாய்! இதற்கா இத்துணைக் கவலை? இவர் எதை வேண்டுமென்றாலும் சொல்லட்டுமே! ஆதித்தனைப் பார்க்கச் சென்றதாகவே இருக்கட்டுமே! உனக்கில்லாத உரிமையா? உன்னைத் தடுக்க யார் உண்டு!"

"இளவரசியார் என்னைப் பொறுக்க வேண்டும்."

"எதற்காக ஐயா?"

"இடையே நான் ஒருவன் இடையூறாக இருப்பதற்காக."

"காரணம்?"

"அரசியல்."

"நான் அறியாததா?"

"ஆமாம். அறிந்தவராக இருப்பின் ஆதித்தருக்கு இந்தப் பெண்ணைத் துணையாக்க எண்ணியிருக்கமாட்டீர்கள். இந்தப்

பெண் கொண்டுள்ள ஆசை வீண். இளவரசரை மணந்து இந்த நாட்டின் அரசியாக வேளிர்மகள் விழைவது பேராசை!"

மாதேவியின் கண்கள் கலங்கின.

"ஐயா! சற்றுமுன்னர் என்னைத் தாங்கள் தங்கை என்றீர்களே, இதற்குத்தானா? நீங்கள் நினைப்பது தவறு. ஆதித்தரை மணந்து அரசியாக வேண்டுமென்ற ஆசை எனக்கு என்றுமே தோன்றிய தில்லை."

"இளவரசரை நீ விரும்பவில்லையா?"

மாதேவி பதில்கூறுமுன் கடம்பமாதேவி குறுக்கிட்டாள்.

"வீரரே, இவள் யாரை விரும்பினால் உங்களுக்கென்ன? அரசியலுக்கு அப்பாற்பட்டது பெண்களின் காதல் வாழ்வு! மீண்டும் மீண்டும் அதை நினைவுபடுத்த வேண்டுமா?"

"அக்கா! இவருடைய கேள்விக்கு நானே விடையளிக்கிறேன். ஐயா, என் நெஞ்சம் இன்றுவரை இளமை உணர்வுகளுக்கு இடங் கொடுத்ததில்லை. இளவரசரை நான் விரும்பவில்லை என்று உறுதியாக என்னால் சொல்லமுடியாது. ஆனால், அவரிடம் நான்கொண்ட விருப்பைக் காதலென்று கொள்ளமுடியாது. தெய்வத்திடம் உள்ள விருப்பைப் பற்று என்கிறோம்; உறவினரிடங் கொண்ட விருப்பைப் பாசம் என்கிறோம்; தலைவன் தலைவியிடை யுள்ள விருப்பைக் காதல் என்கிறோம். எல்லாருக்கும் இடையே தோன்றும் விருப்பிற்கு அடிப்படை அன்புதான். அன்பின் பெயர்தான் இடத்திற்கிடம் வேறுபடுகிறது. ஆதித்தரோடு இளமையிலிருந்து ஒன்றாக வளர்ந்தவள் நான்! எங்களிடையே இந்நாள்வரை உள்ள அன்பு நட்பாகத்தான் உள்ளது; இன்னும் காதலாக உருப்பெறத் தொடங்கவில்லை. அக்காவின் எண்ணத்தை நான் நன்கு அறிவேன். இளவரசருக்கு மனைவியாக்க என்தந்தைக்கும் இசைவுதான். ஆனால், இதைப்பற்றியெல்லாம் நான் இன்றுவரை எண்ணியவளில்லை. இளவரசரிடம் நான் கொண்ட நட்பு நாளையே காதலாக மலரலாம்; நான் மறுக்கவில்லை. ஆனால், நான் பழையாறைக்குச் சென்றுவந்தது நிச்சயம்

ஆதித்தரைப் பார்க்கவன்று என்பதை உறுதியாகக் கூறமுடியும். என் நெஞ்சில் இறைவனைத்தவிர வேறு எவருக்கும் இடங்கொடுத்த தில்லை!"

மாதேவியின் பேச்சால் விக்கியண்ணன் மலைத்துநின்றான். மாதேவியைக் கடம்பமாதேவி கட்டியணைத்து உச்சியில் முத்தமிட்டாள்.

"ஏன் ஐயா, அப்படியே நிற்கிறீர்? இன்னும் உங்கள் எண்ணம் தெளிவடையவில்லையா? குழந்தை குணங்கொண்ட இவள் வழியிலுமா நீங்கள் குறுக்கிடவேண்டும்?"

விக்கியண்ணன் மெல்ல அமைதியாகப் பேசினான்.

"இளவரசியார் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார். என்னுடைய உடன்பிறவாத் தங்கையாக இந்தப்பெண்ணை ஏற்றுக் கொண்டபிறகு, இவள் வாழ்வைப் பாழ்படுத்த என்மனமென்ன இரும்பா? மாதேவி, நீயே சொல்லம்மா. பல நூறாண்டுகளாய் வலுவிழந்துகிடக்கும் இந்தச் சோழராட்சியை நிலைநிறுத்த வேண்டியது இளவரசரின் இன்றியமையாக் கடமை இல்லையா? பகைவர்களான பாண்டியரையும் பழகினாலும் சோழநாட்டின் ஒருபகுதியைத் தங்கள் ஆட்சியுள் வைத்துள்ள பல்லவரையும் வென்று வாகைசூடிப் புகழை நிறுத்தவேண்டிய இளவரசர் ஆற்ற வேண்டிய கடமைகள் எத்தனை! எத்தனை! அப்படிப்பட்டவர் மனம் உன்னைப்போன்ற அழகிய பெண்களின் விழிக்கணைகளுக்கு இரையாகுமேல், இந்த நாடு இழிவினின்றும் விடுபட்டு எழுச்சி பெறுவது எந்நாள்? சொல், மாதேவி. இளவரசர் உயர்விலும் இந்தச் சோழநாட்டின் மீட்சியிலும் உண்மையான பற்று உனக்கு உண்டென்றால், நீ உன்னையே இழப்பதற்கும் ஏற்பாடாக இருக்க வேண்டுமில்லையா?"

"நிச்சயமாக. இளவரசருக்காகவோ, இந்தச் சோழநாட்டுக் காகவோ இல்லாவிட்டாலும், இதோ என்னைப் பெறமால் பெற்றெடுத்த தாய் என் அக்கா அவர்கள் கொண்ட கொள்கைக்காக என் உயிரையும் விடத்தயார்."

"மிக்க மகிழ்ச்சி."

"நான் என்ன செய்யவேண்டும்? சொல்லுங்கள் ஐயா."

"இளவரசரை மணந்துகொள்ளலாம் என்ற எண்ணத்தை முதலில் நீ மறக்க வேண்டும்."

"மாதேவி!"

இளவரசி கடம்பமாதேவியின் எச்சரிக்கையைப் பொருட் படுத்தும் நிலையில் மாதேவி இருக்கவில்லை.

"பொறுங்கள், அக்கா. என்மனதிலேயே அப்படியொரு எண்ணம் இல்லாதபோது, ஏன்நான் அஞ்சவேண்டும்? ஐயா, மேலே சொல்லுங்கள்."

விக்கியண்ணன் தயங்கித்தயங்கிப் பேசினான்.

"பல்லவ இளவரசர் அபராசிதவர்மரைப் பார்த்திருக்கிறாயா? அவர் அழகர் அன்றோ?"

இளவரசி அவனுக்குப் பதிலளித்தாள்.

"அவள் பார்த்தவள் இல்லை. நான் பார்த்திருக்கிறேன். அவர் நல்ல அழகர்தான். அதேபோல், பாண்டிய இளவல் பராந்தகரும் நல்ல அழகரே!"

"இளவரசியார் என் எண்ணத்தை அறிந்திருப்பதில் மிக்க மகிழ்ச்சி. சோழநாட்டு மக்கள் அறிவாற்றலும் அரசியல் பட்டறிவும் மிக்க இளவரசியைப் பெறக் கொடுத்து வைத்தவர்கள்! மீதியையும் இளவரசியாரே சொல்லக்கூடுமேல் என்தொழில் மெத்தவும் எளிதாகிவிடும்."

"அதற்கென்ன, ஐயா? நானே சொல்கிறேன். அம்மா, மாதேவி! இந்தச் சோழநாட்டுச் சுந்தரன் ஆதித்தனை மறந்துவிட்டு, பல்லவனையோ, பாண்டியனையோ நீ மணந்துகொள்ளவேண்டும்;

உன்னால்தான் இந்த நாடு இழந்த உரிமையை மீண்டும் பெறக்கூடும்! சரிதானே, வீரரே?"

கடம்பமாதேவியின் பேச்சில் கலந்தொலித்த ஏளனத்தை விக்கியண்ணன் கவனிக்கவில்லை.

"சரிதான்! உங்களைவிட இத்துணைத் தெளிவாக என்னால் எடுத்துச் சொல்லியிருக்க இயலாது."

"பார்த்தாயா மாதேவி, இந்தத் தமிழ்வீரரை? இவரைப்போய் எல்லோரும் தலைவரென்று ஏற்றுப் போற்றுகின்றனரே; எதற்காக? இவரை நம்பி இந்தச் சோழநாட்டை என்தந்தை இவரிடம் ஒப்படைத்துள்ளார்; இவரோ இந்நாட்டின் எதிர்காலத்தை உன்னிடம் பேரம் பேசுகிறார்! நல்ல வேடிக்கை! மாதேவி! நீ உள்ளே செல். இறைவன் நினைத்தால்கூட இன்றிருக்கும் சூழ்நிலையில் சோழநாட்டை யாரும் காப்பாற்றிக் கரைசேர்க்க முடியாது."

"என்னால் முடியும், இளவரசி."

"வெறும் பிதற்றல்! முடியுமென்றால் இன்றொரு பெண்முன் நின்று இங்கு மன்றாடமாட்டீர்!"

"இளவரசியார் நினைப்பது தவறு. பெண்களை மையமாகக் கொண்டு பெரும்பெரும் ஆட்சிகள் தோன்றியும் இருக்கின்றன; அழிந்தும் இருக்கின்றன. அரசியல் என்ற சூதாட்டத்தில் அழகிய பெண்களுக்குப் பெரும் பங்குண்டு. அந்தப்பெண்களை ஆட்டிப் படைக்க அறிந்தவன் வெற்றி பெறுகிறான்; அவர்கள் ஆட்டத்திற்கு அடிமையாகிறவன் அழிவை அடைகிறான். சோழவரசின் எதிர்காலம் எனக்கும் இருட்டாகத்தான் தோன்றுகிறது. இருந்தாலும், எனக்கொரு நம்பிக்கை! மாதேவி மட்டும் என்மனமுணர்ந்து நடக்கக் கூடுமேயாயின், பழைய வரலாற்றை மீண்டும் படைத்துக்காட்ட முடியும்."

"வேண்டா, ஐயா! வீணாக ஒரு பெண்ணின் வாழ்வைப் பாழாக்கிய பழிக்குத் தாங்கள் ஆளாக வேண்டா."

"இளவரசி! மாதேவியை நான் தங்கை என்றது ஒப்புக்கன்று. இளவரசர் ஆதித்தரிடம் இந்தப்பெண் இன்னும் உள்ளத்தை இழந்துவிடவில்லை. எனவே, மாதேவி மற்றொருவரை மணந்து கொள்வதால் தவறேதும் விளைந்திடாது. ஆதித்தரைப்போல் அபராசிதரும் ஒருநாட்டிற்கு இளவரசர்தான். மாதேவியின் மனதிற்கு அபராசிதரைப் பிடித்திருந்தால்மட்டுமே, அவரை மணந்து கொள்ளுமாறு சொல்கிறேன்."

மாதேவி அமைதியாகப் பேசினாள். அவள் கண்களும் அவள் முகத்தைப் போலவே ஆழ்ந்த அமைதியைக் காட்டின.

"எனக்கென்று ஏதய்யா மனம்? இந்தச் சோழ நன்னாட்டிற்கு என்னாலும் ஏதும் செய்யக்கூடுமேல், அதை என் பேறாகக் கருதுவேன்."

"என்னம்மா உளருகிறாய்? நீ உள்ளே செல்."

மாதேவி மெல்ல அசைந்தாள். அவள் முகத்தில் முன்பிருந்த மலர்ச்சி மறைந்துவிட்டிருந்தது. அமைதியே உருவாய் அவள் அந்த அறையைவிட்டு அகலும் வரை அங்குப் பேச்சிருக்கவில்லை.

"இஃது உங்களுக்கே நன்றாக உள்ளதா?"

"எது, தேவி?"

"நான் அதைச் சொல்லத்தான் வேண்டுமா? மாதேவியின் மனதைப் புண்படுத்துவதில் அப்படியென்ன உங்களுக்கு மகிழ்ச்சி?"

"மகிழ்ச்சியா? எனக்கா? இல்லை, தேவி! என்றும் இல்லை. எல்லாமே அரசியல்! இல்லை என்றால் உங்கள் கருத்துக்கு முரணாக ஒருபோதும் செயல்பட உடன்படுவேனா?"

"வரவர எனக்கு உங்கள் செய்கைகளையும் பிடிக்கவில்லை; உங்களையும் பிடிக்கவில்லை!"

"தேவி! இஃதென்ன பேச்சு? உங்களுக்கு ஒவ்வாத செயல் களைச் செய்யவேண்டிய நிலையில் நானிருக்கிறேன். அதற்கு நானா பொறுப்பு? எப்படி எல்லாமோ வாழ்ந்தவன் நான்! முதன் முதலாக இப்போதே வாழ்க்கையில் எனக்குப் பிடிப்பு ஏற்பட்டிருக் கிறது. அந்தப் பிடிப்பே நீங்கள்தான். நீங்கள் என்னை வெறுக்க நேரிட்டால், காட்டாற்றுச் சுழியில் அகப்பட்ட சிறுதுரும்பாய் வழிமாறிப்போகும் என் வாழ்க்கை."

விக்கியண்ணன் கைகள் கடம்பமாதேவியின் தோள்களைப் பற்றின. அவளின் வேல்விழிகளை எதிர்நோக்கும்திறம் அவன் கண்களுக்கு அப்போதிருந்தது.

"ஐயா! உங்கள் செயல் தவறென்று உங்களுக்கே தெரிய வில்லையா?"

"தேவி! மாதேவி வேளிர்குலத்தைச் சேர்ந்தவள். அப்படி யிருக்க, எனக்கு இனப்பற்றுக்கூடவா இல்லாமல் போகும்? ஒன்று மட்டில் உறுதியாகச் சொல்கிறேன். மாதேவி விரும்பாத எதுவும் நடக்காது. அவளுக்கு மகிழ்ச்சியான வாழ்வை அமைத்துத்தருவது அண்ணனாகிய என் பொறுப்பு. போதுமா?"

"எளிதில் நான் யாரையும் நம்புவதில்லை."

"என்னைக் கூட வா ."

அவனுடைய அணைப்பின் இறுக்கம் மிகையாகியது. அவள் அவன் பேச்சால் திகைப்படைந்தாள். அவன் அணைப்பினின்று விடுபடத் திமிரினாள்.

"என்ன சொன்னீர்கள்?"

"நான் ஒன்றும் தவறாகச் சொல்லிவிடவில்லையே! என்னைக் கூடவா நம்பவில்லை என்றே கேட்டேன்."

அவன் அவளை மீண்டும் வலிய அணைத்தான்; அவளும் அவனணைப்பில் உவந்து ஒன்றிப்போனாள்.

"ஆஅஅ! விடுங்கள் என்னை; முறை இல்லாத மனிதர் நீங்கள்!"

இதழ்கள் சிறைபட்டன. அதற்குமேல் அவளால் பேசக்கூட வில்லை.

## 18. மாலை மலரும் நோய்

*"அம்ம வாழி தோழி! காதலர்*
*நிலம்புடை பெயர்வ தாயினும் கூறிய*
*சொல்புடை பெயர்தலோ இலரே."*

வானத்திலே நிலவிருக்கவில்லை. அங்குமிங்குமாக ஒருசில விண்மீன்கள் கண்களைச் சிமிட்டிக்கொண்டிருந்தன. எங்கும் அமைதி. இரவுக்காவலர்களின் நடமாட்டமும் குறைந்து விட்டிருந்தது. எங்கோ ஒருசில வீடுகளில்மட்டுமே விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன.

வானத்து மீது வைத்தவிழி மாறாமல் நின்றுகொண்டிருந்தாள் வண்டார்குழலி. அவள் பார்வை பதிந்தவிடத்தில் இருளைத்தவிர வேறெதுவும் இருக்கவில்லை. நெஞ்சிழந்து நின்றிருந்தாள் அந்த வஞ்சிக்கொடி.

உள்ளம் நோவ, உடல் வாட, எழிலெலாம் அழிய அவள் அவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அவனுக்கு என்ன நேர்ந்திருக்கும்? நேற்றிரவே திரும்பிவிடுவதாக உறுதிகூறிச் சென்றவன் இத்தனை நேரமாகியும் இன்னும் வரக்காணோமே!

வண்டார்குழலி தன்வயமிழந்து வாடினாள். நெஞ்சம் இரும்பாய்க் கனத்தது. அந்த முதலிரவிற்குப்பிறகு அவனைப் பிரிந்தறியாதவளன்றோ அவள்! பிரிவு இத்துணைப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதா? ஒருநாள் பிரிவே அவள் உடம்பைத் துரும்பாக்கிவிட்டதே!

அவனைப் பிரியநேர்ந்தால் அவளெப்படித் துடிதுடித்துப் போவாள் என்பதை அறிந்தவனாயிற்றே அவன்! அறிந்திருந்துமா

பொறுப்பின்றி நடந்துகொண்டான்? சேச்சே! அப்படி இருக்காது; இருக்கவும் இயலாது. அவனொன்றும் அத்துணைக் கீழ்த் தரமானவன் இல்லை. அவனின் அன்பின் திறத்தை அவளறிவாள். அவளைப் பிரிந்திருக்கவேண்டுமென்று அவனுக்குமட்டும் ஆசையா? என்ன?

"அம்மா!"

வண்டார்குழலி திரும்பவில்லை.

"என்ன?"

"அவர் வந்துவிட்டார், அம்மா."

வண்டார்குழலி திரும்பினாள். செய்திகொண்டுவந்த செந்தாமரை திகைப்படைந்தாள். வண்டார்குழலி திரும்பிய விரைவினும் விரைவாய் அகமலர்ந்து முகஞ்சிவந்த விரைவே வியப்பைச் சேர்த்தது. செந்தாமரை உள்ளுக்குள் சிரித்து மகிழ்ந்தாள். அவளறிவாள் அன்புக் காதலனின் வரவிற்காகக் காத்திருக்கும் காதல்பெண்ணின் உள்ளப்போக்கை!

"அவரா?"

"ஆம்; ஐயாதான் வந்திருக்கிறார்."

வண்டார்குழலி அதற்குமேல் அரைவினாடியும் அங்கு நிற்கவில்லை. அவளுடைய கால்களின் வேகம் மிகுதியா? எண்ணங்களைச் சுமந்துபறந்த உள்ளத்தின் வேகம் மிகுதியா?

அறைக்குள் விரைந்த வண்டார்குழலி அப்படியே அதிர்ந்து நின்றுவிட்டாள்! இஃதென்ன கோலம்? இவருக்கென்ன நேர்ந்தது? உடலில் ஏனித்தனை கட்டுகள்?

அவள் நெஞ்சம் வேதனையால் துடிதுடித்தது. அவனருகே ஓடினாள் அவள்.

"என்னங்க இது?"

விக்கியண்ணன் விடைஎிக்கவில்லை. அவன் கண்கள் அவள் முகத்தில் ஆழப் பதிந்திருந்தன. அந்தக் கண்களில் எப்போதும் குடிகொண்டிருக்கும் அன்பும் ஆசையும் அப்போது இல்லாமையைக்கண்டு வண்டார்குழலி வாடிச்சோர்ந்தாள்.

"எதற்கு என்னை இப்படிப் பார்க்கிறீர்கள்?"

"அடுத்ததைக் காட்டும் பளிங்கைப்போல் முகம் உன்னகத்தைக் காட்டாதா என்றுதான் பார்க்கிறேன்."

"சில நேரங்களில் உங்கள் பேச்சும் நடத்தையும் என்னைப் பெரிதும் பாதிக்கின்றன. இஃதென்ன கோலம் எனக்கேட்டால் பொருத்தமற்றுப் புதிராகப் பேசுகிறீர்கள் . "

அவன் கைகள் அவள் தோள்களைப் பற்றின. மலரைத் தொடுபவன்போல் அவன் அவளைத் தொட்டது அவளுக்கு வியப்பாக இருந்தது. அவனுடைய முரட்டுத்தனம் எங்கே? இவனால் இப்படியும் நடந்துகொள்ளக் கூடுமா? இப்படித் தொடுவதிலும் ஓரின்பம் இருக்கத்தான் செய்கிறது.

"இவையென்ன கட்டுகள் என்று உனக்குத் தெரியாதா?"

"தெரிந்தால் நானேன் கேட்கிறேன்?"

"உண்மையாகவா?"

"நீங்கள் இப்படிக் கேட்பதைவிட என்னைக் கொன்று விடுங்கள். அன்று, முதன்முதலில் நாம் சந்தித்தபோதும் இப்படித்தான் அன்பற்று நடந்துகொண்டீர்கள். உங்களிடம் எதற்காகவும் நான் எதையும் மறைக்கமாட்டேன். அன்று என்ன சொன்னேனோ அதையே இன்றும் சொல்கிறேன். உங்களோடு ஒன்றாகிப்போன நான், ஒருநாளும் எதையும் மறைத்துத் திரித்துக்கூறும் தீமையைக் கொள்ளமாட்டேன்."

"அழகாகப் பேசுகிறாய்."

வண்டார்குழலியின் முகம் வாடியது.

"ஆனால், நம்பும்படி இல்லை; அப்படித்தானே?"

அவள் கண்கள் குளமாயின.

"உன்னை நம்பவேண்டா என்று என் உள்மனம் எச்சரிக்கிறது. அந்த எச்சரிக்கை உன் களங்கமற்ற கண்களுக்குமுன் பயனற்றுப் போகிறது. நடப்பவைகள் அனைத்தும் உன்னைக் குற்றவாளியாகக் காட்டுகின்றன; உன் நடத்தைகள் அவற்றிற்கு எதிராக இருக்கின்றன."

"நானா குற்றவாளி?"

"என்னாலும்தான் நம்பக்கூடவில்லை. குழலி! இந்தக் கட்டுகள் என்னவென்று வந்ததும் கேட்டாயில்லையா? வேறொன்றுமில்லை; அனைத்தும் பகைவர்களின் வாள்பட்டு விளைந்த புண்கள். அச்சம் வேண்டா. எனக்கு எந்தக் கேடும் இல்லை."

"உங்களுக்குப் பகைவர்களா?"

"உன்னாலும் நம்பமுடியவில்லை; இல்லையா? உண்மைதான். நானும் எதிர்பார்க்காததாலேயே இக்கட்டில் அகப்பட்டுக் கொண்டேன். கோட்டைக்கு வெளியே காட்டில் கொடியர்கள் என்வரவிற்காகக் காத்துக்கொண்டிருந்திருக்கின்றனர். நல்ல நேரத்தில் அமைச்சரின் மகளார் அந்தப்பக்கம் ஆள்களுடன் வந்துசேர்ந்தார். இல்லையேல், இந்நேரம் உயிருடன் இருப்பதும் அரிது."

குழலியின் கண்கள் நீரைக்கொட்டின; அவனுடலை நனைத்தன. அந்தச் செயல் விக்கியண்ணனை வெகுவாகப் பாதித்தது. உள்ளம் முற்றும் இழந்தவனாய் வண்டார்குழலியை மார்போடு சேர்த்தணைத்துக் கொண்டான்.

"குழலி! என் செல்வமே!"

அவனிதழ்கள் அவளுடைய அழகுமணிக் கழுத்திலே பதிந்தன. அவளிதழ்களும் உடலும் ஒருங்கே நடுங்கின. அவளுடைய கைகள் அவனைச் சுற்றிப் படர்ந்து மகிழ்ந்தன.

"அன்பரே! அமைச்சர் மகளுக்கு நானெப்படி என் நன்றியைத் தெரிவித்துக் கொள்வேன்? உங்களுக்கு ஏதேனும் நிகழ்ந்திருந்தால், என் உயிர் என்னவாகி இருக்கும்?"

அவனிதழ்களின் ஆளுகைக்கு அவளிதழ்கள் அடிமைப் பட்டன. இதழ்களின் இணைப்பு நெடுநேரம் நீட்டித்தது. உடலின் வலியை அவள் உதடுகளின் உறவில் தணித்துக்கொள்ள விரும்பினான் போலும்!

"அன்பரே!"

"உம்."

"எதிரிகளுக்கு நீங்கள் திரும்பிவருவது எப்படித் தெரியும்"

"அதைத்தான் உன்னிடம் அறிய எண்ணினேன். பழையாறைக்குப் பயணமானது பலருக்கும் தெரியும். ஆனால், அன்றே திரும்பிவிடுவேன் என்பது யாருக்கும் தெரியாது . "

"எனக்குத் தெரியுமே! நீங்கள் என்னிடம் சொல்லிவிட்டன்றோ சென்றீர்கள்; உங்களுக்கு நினைவில்லையா?"

"நினைவிருக்கிறது; ஆனால்,.... . "

விக்கியண்ணன் முகத்தைத் தன்முகத்திற்காக வண்டார்குழலி திருப்பினாள்.

"ஆனால் என்ன? என் கண்களைப் பாருங்கள்; இந்த என் உடலைப் பாருங்கள். நேற்றிரவு நீங்கள் எப்படியும் வந்துவிடுவீர்கள் என்று எதிர்பார்த்து இரவு முழுவதும் எள்ளத்தனையும் தூக்கமின்றி

வெட்டவெளியையே வெறித்துப் பார்த்துக்கொண்டு நான் நின்றிருந்ததை நீங்கள் எப்படி அறிவீர்கள்? இன்றிரவும் நீங்கள் வராதிருந்து, உங்களைப்பற்றி எதுவும் தெரிந்துகொள்ள முடியாது போயிருப்பின் நான் இறந்திருப்பேன்."

"அப்படி எல்லாம் பேசாதே; உன்னை நான் உணரேனா?"

"எனக்கொருத்திக்கே நீங்கள் திரும்பிவரும் நேரம் தெரியும்; அதனால் என்மேல் ஐயம் கொண்டீர்கள்; அப்படித்தானே?"

"உண்மைதான். அது தவறா?"

வண்டார்குழலி விக்கியண்ணனைவிட்டுப் பிரிந்து அமர்ந்தாள். அவள் முகம் வாடியது; கண்கள் அவள் அகத்துநிகழ்ந்த வேதனையை வெளிக்காட்டின. அவள் பேசியபோது, பேச்சில் தெளிவு நிறைந்திருந்தது.

"தவறுதான்! என்னை இன்னும் நீங்கள் புரிந்துகொள்ள வில்லை. பரத்தையர் குலத்தில் தோன்றியவள் பண்பற்று நடந்து கொள்வாள் என்பது உங்கள் எண்ணம். குலத்தளவே ஆகுமாம் குணம் என்பதே உங்கள் கொள்கை. நீங்கள் இல்லையென மறுக்க வேண்டா. உங்கள் நிலையில் யாரும் அப்படித்தான் நினைப்பார்கள். நீங்கள் என்னை நம்பவேண்டுமென்பதற்காக சொல்லவில்லை. என்னைப் பொருத்தவரை, நீங்கள் வேறு; நான்வேறு அன்று. எனக்கொரு துன்பமென்றால் உங்கள் நிலை எப்படியோ? ஆனால், உங்களுக்கொன்றென்றால் என்உயிரே போய்விடும்! நீங்களின்றி நானில்லை. என்னுயிரும் உடலும் உங்களோடு ஒன்றிவிட்டன. உங்களுக்கெதிராக என்றும் நானெதையும் செய்யக்கூடுமா? அறிவற்றவர்களும் தம் கண்களைத் தாமே வருத்திக்கொள்ள முயலுவும் செய்யார். அப்படியிருக்க, உங்களை உயிராகவும் உடலாகவும் கொண்டநான் எண்ணத்தாலும் தீங்கை எண்ணுவேனா? சொல்லுங்கள்."

விக்கியண்ணன் விடையளிக்கவில்லை. மாறாக, பிரிந்து அமர்ந்திருந்த அவளின் பிஞ்சு உடலைப் பற்றி இழுத்துப்

படுக்கையில் சாய்த்தான். அவன் செய்கைகளால் அவள் மயக்கத்தை அடைந்தாள். எனினும். அவள் தன்னலம் உடையவள் இல்லை.

பஞ்சணையிலிருந்து அவனைப் பிரிந்து, பக்கத்திலிருந்த பழச்சாற்றிலிருந்து ஒரு குவளை பெய்து விக்கியண்ணனிடம் நீட்டினாள் வண்டார்குழலி.

"என்ன?"

"உடலுக்கு நல்லது! அருந்துங்கள்."

"உன்னிதழ்களை விடவா?"

அவளிடையைப்பற்றி அருகிழுத்தணைத்த அவன் செயலில் மகிழ்ந்த வண்டார்குழலி, குவளையின் விளிம்பை அவனிதழ்களில் சேர்த்தாள். விக்கியண்ணன் அனைத்தையும் குடித்து முடித்தான்.

"மகிழ்ச்சிதானே?"

"உம்!"

அவனிதழ்களில் ஒளிவிட்ட மதுவின் ஈரத்தைத் தன்மேலாடை கொண்டு நாணம் குறையாத சிணுங்கலுடன் வண்டார்குழலி துடைத்தாள். அன்பு தளும்பிய அந்தச் செய்கையால் விக்கியண்ணன் தன்னை முற்றிலும் அவளிடம் இழந்தான்.

"குழலி! நேற்றுமாலை உன் நினைவாகவே வந்து கொண்டிருந்தேன்; அதனால்தான் எதையும் கவனிக்க இயலாமல் போய்விட்டது ."

"ஊகூம்?"

"ஆமாம் ! "

"இப்பொழுது?"

"இப்பொழுதா? என்நினைவே எனக்கு இல்லையே!"

"மிகவும் நன்றுதான்! தற்போது அமைதியாகப் படுங்கள்."

விக்கியண்ணன் அவளுடைய கைகளின் ஆணைக்கு அடங்கிப் பஞ்சணையில் சாய்ந்தான். எவ்வளவுக்கெவ்வளவு தயக்கத்தோடு மெல்லத் தன்னுடலைப் பஞ்சணையில் சாய்ந்தானோ, அவ்வளவுக்கவ்வளவு மிகுந்த விரைவோடு வெகுண்டெழுந்து நின்றான். அதே வினாடி அவன் கை இடையிலிருந்த குறுவாளை உருவியது.

வண்டார்குழலிக்கு முதலில் அவனின் நடத்தைக்கான காரணம் தெரியவில்லை. ஏதும் புரியாதவளாய் அவனின் கண்கள் நிலைத்துநின்ற பக்கம் அவளுடைய கண்கள் திரும்பியபோதே அவளால் அனைத்தையும் அறிந்துகொள்ள முடிந்தது.

அறையின் கதவைத் திறந்துகொண்டு வழியை அடைத்தாற் போல் நின்றிருந்தனர் அந்த மூவரும். அவர்கள் முத்தரையரின் ஆட்கள்; அவள் அறிவாள். அவர்கள் வந்து அவளைச் சந்தித்துப் பேசக் காரணம் உண்டு. ஆனால், அவளின் படுக்கறைக்குள் நுழைய அவர்களுக்கு தேவையும் இல்லை; அதிகாரமும் இல்லை.

குன்றுகளொத்த அவர்கள் உடம்பைக் கண்டோ, கோவைப் பழங்களொப்பச் சிவந்திருந்த விழிகளைப் பார்த்தோ, கொடு வாளைப்போன்று வளைந்து நிமிர்ந்து நின்ற அடர்ந்தகரும்மீசையை எண்ணியோ வண்டார்குழலி அச்சங் கொள்ள வில்லை. அடுத்து என்ன நிகழுமோ என்றே அஞ்சினாள்.

அவள் அஞ்சியதற்கான வேறுகாரணமும் அப்போதிருந்தது. அவர்களின் வருகையை அவள் அறியமாட்டாள் என்பதை விக்கியண்ணன் ஏற்றுக்கொள்வானா? இத்துணை நேரம் அவள் பேசிய ஆசைமொழிகள் அனைத்தும் வேசையின் வெற்றுமொழிகள் என்றன்றோ அவன் எண்ணக்கூடும். அவள் உள்ளம் அழுதது.

"உங்களை யாரிங்கு உள்ளே வரச்சொன்னார்கள்?"

"அரசரின் ஆணை!"

யானை பிளிறியதுபோல் இருந்தது. யாரை அரசனென்று அந்த முரடன் குறிப்பிடுகிறான்? நிச்சயம் பரகேசரி விசயாலய சோழராக இருக்கமுடியாதென்பதை விக்கியண்ணன் அறிவான். அப்போது அவனுக்கிருந்த குழப்பம் ஒன்றே ஒன்றுதான். இந்த முரடர்களுக்கும் வண்டார்குழலிக்கும் இடையே என்ன உறவு? யார் இவர்கள்? எதற்காக இந்த நேரத்தில் படுக்கையறைக்குள் நுழைந்துள்ளனர்?

"அரசரின் ஆணை என்படுக்கை அறைக்குள் உங்களைப் பண்பின்றி நுழையப் பணித்துள்ளது; அப்படித்தானே?"

முரடர்கள் விடைசொல்லத் தயங்குவதை விக்கியண்ணனும் உணர்ந்தான். வண்டார்குழலியைக் கண்டு அஞ்சும் இவர்கள் யாராக இருக்கக் கூடும்?

"பிழைதான்; எங்களைப் பொறுத்துக் கொள்ளுங்கள். இவரை எங்களுடன் அனுப்பிவையுங்கள்; உடனே இங்கிருந்து போய் விடுகிறோம்."

வண்டார்குழலி திடுக்கிட்டுப் பின்னால் நகர்ந்தது எல்லாருக்குமே நன்கு தெரிந்தது. விக்கியண்ணன் நிமிர்ந்து நின்றான். அவன் கையில் குறுவாள் ஒளிவிட்டுக்கொண்டிருந்தது. அவனுக்கு வினாடி நேரம் போதும் முன்னே நின்ற முரடனின் மூச்சை நிறுத்துவதற்கு! ஆனால், மற்ற இருவர்களை அவனால் என்ன செய்ய முடியும்?

"எதற்காக?"

வண்டார்குழலியின் வாள்விழிகள் எதிரில் நின்ற முரடனின் முகத்தைவிட்டு ஒருக்கணமும் அகலவில்லை.

"அரசரின் ஆணை."

"என்ன ஆணை?"

"இவர் எதிரில் சொல்ல இயலாது."

"காரணம்?"

"இவர் நம்மன்னரின் எதிரி?"

"ஆகவே, இவரைக் கொன்றுவிடும்படி மன்னர் ஆணை பிறப்பத்திருக்கிறார்; அப்படித்தானே?"

அங்கே விடையிருக்கவில்லை.

"நேற்று மாலை கோட்டைக்கு வெளியே இவரைக் கொல்லமுயன்றவர்கள் நீங்கள்தாம்; இல்லையா?"

அதுவரை விடையளித்துவந்த முரடனைப் பின்நிறுத்தி முன்னுக்கு வந்தனர் வயதில் இளையவர்களாகத் தோன்றிய மற்ற இரு முரடர்களும்! அவர்கள் கைகளில் நீண்ட நெடுவாள்கள் மின்னின. விக்கியண்ணன் எதற்கும் ஏற்பாடாகத் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான்.

"அண்ணே! இந்தப் பெண்ணிடம் என்ன பேச்சு? நகருங்கள்."

வண்டார்குழலி விக்கியண்ணன் உடலோடு ஒட்டி அவனை மறைத்தவளாய் நின்றாள். அவள் கண்களில் எந்தத் தடுமாற்றமும் இல்லை. கணிகையர் குலத்தில் தோன்றிய அவளின் உணர்வில் வீரம் கலந்துவெளிப்படும் காரணத்தை அறியமாட்டாது விக்கியண்ணன் வியந்துநின்றான்.

"இவரை நெருங்க வேண்டுமென்றால் முதலில் நீங்கள் என்னைத்தான் கொல்லவேண்டும். சரிதானா?"

"எதற்கும் சரி."

"எதற்கும் சரியா? நீங்கள் என்னிடம் நடந்துகொள்ளும் முறையே சரியில்லை. அரசர் இதை அறியவந்தால் உங்கள் நிலை என்னவாகும் தெரியுமா?"

மற்றிருவரால் பின்னால் ஒதுக்கப்பட்ட முரடன் முன்னே வந்தான்.

"வாள்களை உறையுள் வையுங்கள்."

"ஏன்?"

"சொல்வதைச் செய்யுங்கள். உங்கள் தலை உடலோடு இருக்க வேண்டுமா? வேண்டாவா? போய் வெளியே எனக்காகக் காத்திருங்கள்."

விக்கியண்ணனுக்கு விளங்காதவை பல. வண்டார்குழலி யிடம் இத்தனை ஈடுபாடுடைய மன்னன் யாராக இருக்கக்கூடும்? வண்டார்குழலிக்கும் அந்த மன்னனுக்கும் இடையே உள்ள தொடர்பின் தன்மை என்ன? உறவின் நெருக்கம் என்ன?

"அம்மா! அரசரிடம் நான் என்ன சொல்ல? இவரைத் தப்பவிட்டதை அறிய நேர்ந்தால் அவர் எங்களை என்ன செய்வாரோ?"

முரடனின் பேச்சில் பணிவிருந்தது.

"நடந்த உண்மைகளை மறைக்காமல் சொல்லுங்கள். அத்தோடு, வண்டார்குழலி அந்த வீரரின் உயிரோடு ஒன்றிப்போய் விட்டாள் என்றும் சொல்லுங்கள். அவருக்கு எந்தத் தீங்கு நேரிட்டாலும் அவளுயிர்தான் முதலில் அகலும் என்பதையும் அரசருக்குப் புரியவையுங்கள்."

வண்டார்குழலியின் தோற்றத்தில் புதுப்பொலிவு தெரிந்தது.

"சரி, அம்மா."

"மற்றுமொன்றையும் மறக்காமல் சொல்லுங்கள். இழிவான அரசியல் சூதாட்டத்தில் இனியும் வண்டார்குழலி ஈடுபடுவதாக இல்லை என்பதை எடுத்துச் சொல்லுங்கள்."

"காரணம் கேட்டால்?"

"வீரர் இவரிடம் தன்னை விரும்பி ஒப்படைத்துவிட்டாள் என்று சொல்லுங்கள்; அவர் அறிந்துகொள்வார்."

எஞ்சி நின்ற அந்த முரடன் அறையை விட்டகன்றதும் வண்டார்குழலி கதவை மூடித்தாழிட்டாள். பஞ்சணையில் ஆழ்ந்த சிந்தனையோடு அமர்ந்திருந்த விக்கியண்ணன் எதிரே அவள் வந்து நின்றபோது, அவன் அவளைக் கேள்விக்குறிப்போடு நோக்கினான்.

"என்ன சிந்தனை?"

"அவர்கள் யார்? முத்தரையரின் ஆட்கள்தாமே?"

அவள் பதிலளிக்கவில்லை. நடந்துசென்று பழச்சாறு பெய்து குவளையை எடுத்துவந்து அவனருகில் அமர்ந்தாள்.

"இதை அருந்துங்கள்."

"நான் கேட்டதற்கு விடை?"

"வேண்டா. அவை என் கடந்த காலமாக இருந்துவிட்டுப் போகட்டும். உங்களிடம் எப்போதுமே உண்மையானவளாக நடந்து கொள்ள விரும்புகிறேன். அதேபோல், பிறருடைய மறைசெய்தி களையும் மற்றவர்க்குத் தெரிவிக்காமல் காக்க விரும்புகிறேன். சொல்லித்தான் ஆகவேண்டுமென்று வற்புறுத்தினால், உங்களிடம் எதையும் மறைக்கமாட்டேன். நீங்கள் உண்மையான வீரர்; உயர்ந்த குணம் உடையவர்; மாற்றார் எண்ணத்திற்கும் மதிப்பளிப்பவர். ஆகவே, நீங்கள் என்னை வற்புறுத்த மாட்டீர்கள். சரிதானே?"

விக்கியண்ணன் நெடுநேரம் வண்டார்குழலியை வைத்த விழிகள் இம்மியும் அசையாது நோக்கினான்.

"சரிதான்."

"இதோ, உங்களுக்கு விருப்பமான பழச்சாறு; அருந்துங்கள். மெல்ல! மெல்ல! என்ன வேகம்? அப்பப்பா! இத்துணைத் துடுக்குத்தனம் இப்போது உங்களுக்கு இருக்க வேண்டா. இங்கே பாருங்கள். இன்னும் சில நாள்களுக்கு நீங்கள் இங்கிருந்து எங்கும் செல்லக்கூடாது. உடல்முற்றுங் குணமடைந்து இழந்த திறனை மீண்டும் பெறும்வரை இங்கேயே ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். உங்களைக் கவனித்துக் கொள்ளவேண்டியவள் நானில்லையா? என்ன? சரிதானே? தலையை மட்டும் அசைத்தால் எப்படி? சரிதானா? அப்பா! இப்போதுதான் எனக்கு மிக்க மகிழ்ச்சி. இன்னும் வேண்டுமா? பழச்சாறுதானே?... இல்லையா?.... பின் என்னவாம்? பொல்லாதவர் நீங்கள்!"

## *19. வஞ்சியான் வஞ்சியான்.*

*"வஞ்சியேன் என்றவன்தன் ஊருரைத்தான் யானுமவன்*
*வஞ்சியான் என்பதனால் வாய்நேர்ந்தேன் - வஞ்சியான்*
*வஞ்சியேன் வஞ்சியே என்றுரைத்தும் வஞ்சித்தான்*
*வஞ்சியாய் வஞ்சியர் கோ."*

கடம்பமாதேவியின் நெஞ்சம் எரிமலையொப்ப உள்ளுக்குள் கனன்றுகொண்டிருந்தது. தன்னையே அவள் நொந்துகொண்டாள். முன்பென்றும் சிறிதும் தளர்ந்தறியாத் தன்னுள்ளத்தைத் தவறு செய்வதையே தொழிலாகக் கொண்டுவிட்ட விக்கியண்ணனிடம் தந்துவிட்டமைக்காகத் தவித்து வாடினாள். அவனும் ஒரு மனிதன் தானா? அத்தனை உரைத்தும் அவனின் வழி சிறிதும் மாறவில்லை என்றால் அஃது எதைக் காட்டுகிறது? மிகவும் கீழ்த்தரமாக நடந்துகொள்ளும் அவனிடம் தன்னை இழந்தது அவள் செய்த பெருங்குற்றமே!

விக்கியண்ணன் அன்று அவளிடம் உரைத்தவை அனைத்தும் பொருளற்ற வெற்றுரைகளே. தவறுகளை அடுத்தடுத்துச் செய்துகொண்டுபோகும் தன்மையையே கடம்பமாதேவி அவனிடம் கண்டாள். செய்த தவறுகளுக்காகச் சிறிதேனும் வருந்தும் பெருந்தன்மையை அவனிடம் மருந்திற்கும் அவளால் காணக்கூட வில்லை. அவளெண்ணத்தை முழுமையாக அவனறிந்திருந்தும்

மாறாக நடந்து ஆறா வேதனையை அவளுக்குக் கொடுப்பவன் அவளிடம் அன்புடையவன் தானா?

அவள் பேச்சைத் தட்டி நடக்கமாட்டேன் என்று விக்கியண்ணன் அன்றுரைத்தது வெறுங் கட்டுக்கதையே! வஞ்சிநாட்டைச் சேர்ந்தவன் அன்றோ? அதுதான் நெஞ்சில் வஞ்சனையை நிறையக் கொண்டுள்ளான்! 'வஞ்சியே, உன்னை வஞ்சியேன்' என்று நெஞ்சினிக்கக் கொஞ்சியுரைத்திட்டும் அவளை அஞ்சாமல் வஞ்சித்துவிட்டான் அவன். இல்லையேல் வண்டார்குழலியின் இருப்பிடத்திலேயே இத்தனை நாள்களாக அடங்கிக் கிடப்பானா அவன்?

அன்று அவன் அத்துணை விரைவாகச் சென்றது அவளைச் சந்திக்கத்தானா? பகைவர்தம் வாள்பட்டுப் பேச்சுமூச்சின்றிக் கிடந்தவனைக் காத்துக் கொண்டுவந்த மாதேவியின் பேச்சையும் மறுத்துப் புறப்பட்டுச் சென்றது வண்டார்குழலியிடம் அடிமைப் பட்டுப்போகத்தானா? கடந்த ஏழுநாள்களாக அவள் வீட்டை நீங்கி விக்கியண்ணன் வெளிவரக்காணோம். அவனைச் சந்தித்து ஆணைகள்பெற அரசியல் உயர் அலுவலர்கள் அவள் வீட்டுக் கன்றோ சென்று திரும்புகின்றனர்! சே! எத்துணை இகழ்வு! கணிகையின் கவனிப்பில் இருந்துகொண்டா அரசுப்பணிகளை அவன் கவனிக்கவேண்டும்?

"இளவரசி! வாழ்க! வணக்கம்."

கடம்பமாதேவி தன் கவனத்தைத் திருப்பினாள்.

"பல்லவரையரா? வாருங்கள். ஏது உங்களை இப்போதெல்லாம் காணக்கூட முடிவதில்லை?"

பல்லவரையன் பணிந்து மெல்லப் பதிலளித்தான்.

"நிறைய வேலைகள்; அதனால்தான் இளவரசியாரை வந்து நேரில் பார்க்க இயலவில்லை."

"உங்களுக்கு மட்டுந்தானா?"

"எனக்கு மட்டுமன்று; எல்லோருக்குமே ஓய்வில்லை."

"எல்லோருக்குமா? நம்பமுடியவில்லையே பல்லவரையரே!"

கடம்பமாதேவியின் குரலில் ஏளனம் இழையோடியது. அதன் காரணத்தைப் புரிந்துகொள்ள இயலாது பல்லவரையன் குழம்பினான்.

"இளவரசியார் சொல்வது எனக்கு விளங்கவில்லை."

கடம்பமாதேவி வாய்விட்டுச் சிரித்தாள்.

"விளங்கவில்லையா? விந்தைதான்! எல்லோருக்குமே இடையிலாத வேலையென்கிறீர்கள்; ஆனால், உங்கள் தலைவரோ கடந்த ஏழுநாள்களாக கணிகையின் வீட்டைவிட்டு வெளியேயும் வரக்காணோம்! பல்லவரையா? அதற்கு என்ன பொருள்? அவள் மார்பிலே அவர் அங்கே இன்பம்கண்டு கொண்டிருக்க, நீங்களெல்லாம் அல்லல் அடைந்துகொண்டிருக்கிறீர்கள் என்பதா?"

"தலைவர் உடல்நலமின்மையால் ஓய்வெடுத்துக் கொண்டுள்ளார்; அவ்வளவுதான் . "

"ஓய்வெடுத்துக்கொள்ள ஒய்யாரியின் வீடுதான் உங்கள் தலைவருக்கு உகந்த இடமோ? அவருக்கென்று அமைந்த அரசு மனை என்னாயிற்று?"

"அவரை நன்கு கவனித்துக்கொள்ள அக்கறையுள்ள ஆள் வேண்டுமில்லையா? அதனால்தான்!"

"பல்லவரையா! உண்மைதான். வண்டார்குழலியின் கனிவான கவனிப்பு முன், பணிப்பெண்கள்தாம் என்ன செய்வார்கள்!"

பல்லவரையன் மேலே பேசத் தயங்குவது நன்கு தெரிந்தது.

"இளவரசி! அவர் எனக்குத் தலைவர்; அவருடைய ஆணைக்கு அடங்கியவன் நான். அவரைப்பற்றியோ, அவருடைய சொந்த

செயல்களைப் பற்றியோ நான் பேசுவது முறையுமில்லை; அறமும் இல்லை. எனவே, இது குறித்து மேலும் என்னிடம் ஏதும் கேட்க வேண்டாவென்று இளவரசியாரை வேண்டிக்கொள்கிறேன்."

பல்லவரையனைப் பார்த்தபடியே கடம்பமாதேவி பலவினாடி அமர்ந்திருந்தாள். அவனுடைய மனத்தடுமாற்றம் அவளுக்குப் புரிந்தது. அவனின் நல்ல மனத்தையும் தலைவன் மாட்டு அவன் கொண்ட பணிவையும் அறிந்து அவள் அகமகிழ்ந்தாள்.

"பல்லவரையா! நான் இந்நாட்டு இளவரசி! நான் உங்கள் தலைவரைப்பற்றிப் பேசலாம் இல்லையா?"

"பேசலாம். ஆனால், எங்கள் இளவரசியார் தகுதிக்கு அஃது ஏற்றதில்லை என்பது என் தாழ்மையான எண்ணம்."

"உண்மைதான். தகுதி மறந்து அரசர் அனைத்துப் பொறுப்பு களையும் உங்கள் தலைவரிடம் ஒப்படைத்தது பெருந்தவறு. நீங்களெல்லாம் அவள் மனைக்குச் சென்றுதான் அவரை ஒவ்வொரு நாளும் சந்தித்து வருகிறீர்களா?"

"ஆம், இளவரசி."

"அங்குப்போய்வர உங்களுக்குத் தயக்கமாக இல்லையா?"

"வேறுவழி இருக்கவில்லை. தலைவர் பேச்சைத் தவிர்த்து நடக்க யாருக்கும் துணிவும் இல்லை."

"மிகவும் அழகுதான்! அரசினை ஆடல் மகளின் படுக்கை யறையிலிருந்து அவர் நடத்திக் கொண்டிருக்கிறார்; அதைத் தட்டிக்கேட்க இங்கு ஆளில்லை. வெட்கம்! பல்லவரையா! உங்கள் தலைவரை உடனே என்னை வந்து நேரில் பார்க்கச் சொல்."

"சொல்கிறேன், இளவரசி. ஆனால்..."

"என்ன தயக்கம்?"

"பல்லவ இளவரசர் அபராசிதவர்மர் இன்று வருகிறார். அவரை எதிர்கொண்டு வரவேற்கத் தலைவர் அணியமாகிக்கொண்டிருந்தார். அதனால் தான் அவரால் தங்களைச் சந்திக்க இயலுமா எனத் தயங்கினேன்."

கடம்பமாதேவியின் குரலில் கடுமை கலந்தொலித்தது.

"பல்லவரையா! நானிந்த நாட்டின் இளவரசி. அதை உன் தலைவருக்கு ஞாபகப்படுத்து."

"அப்படியே இளவரசி. நான் விடை பெறுகிறேன்."

இளவரசியின் கண்கள் பல்லவரையனைக் கூர்ந்து நோக்கின. அப்பார்வையின் நீர்மையை உணர்ந்து பல்லவரையன் கலக்கத்தால் நெளிந்தான்.

"அதற்குள்ளாகவா? பல்லவரையா! என்னைவிட உங்களுக்கு எங்கிருந்தோ இடையில் வந்தவர் உயர்ந்தவராகி விட்டார்; அப்படித்தானே?"

பல்லவரையன் பதட்டத்தோடு பணிந்து விடையளித்தான்.

"இளவரசி! இஃதென்ன இப்படிக் கூறிவிட்டீர்கள்! என்றுமே நாங்கள் எல்லோரும் தங்கள் அடிமைகளே. உங்கள் ஒருவர் பேச்சை மட்டும் அரசரும் மீறிநடக்கவும் விரும்பாதபோது, நாங்களெல்லாம் மீறுவோமோ? நான் ஏதும் அறியாது தவறுசெய்திருப்பின் இளவரசியார் என்னைப் பொறுத்துக் காக்கவேண்டும்."

"உண்மையாகத்தான் சொல்கிறீர்களா? அன்றி ஒப்பிற்காகவா?"

"உண்மையைத் தவிர உங்களிடம் வேறெதையும் ஒருபோதும் தவறியும் உரைக்க எனக்கு உரமேது?"

"அப்படியா? மிக்க மகிழ்ச்சி. இத்தனை நாள்களாக ஏன் நீங்கள் என்னை வந்து பார்த்துச் செல்லவில்லை?"

"நிறைய வேலைகள் என்று வந்தவுடனேயே உரைத்தேனே, அம்மா."

"அரசில் நடைபெறும் அனைத்தையும் அவ்வப்போது என்னிடம் உரைக்கவேண்டுமென்ற ஆணை எல்லோருக்கும் உண்டில்லையா?"

பல்லவரையன் கூனிக்குறுகி நெளிந்தான். இளவரசியார் என்ன கேட்க வருகிறார் என்பது அவனுக்குத் தெரியாமலில்லை.

"உண்டு."

"பின்னேன் உங்கள் ஒருவரைமட்டும் சிலநாள்களாக என்னால் பார்க்கக் கூடவில்லை. நானறியக்கூடாத செய்திகளா அவை?"

"அப்படி இல்லை. இளவரசியாரை என்னால் சந்திக்க வாய்ப்பிருக்கவில்லை. அவ்வளவே."

"நல்லது. இப்போது சொல்லுங்கள்."

பல்லவரையன் ஒருமுடிவிற்கு வரமுடியாது தடுமாறினான்.

"ஏன் தயக்கம்? எதையும் என்னிடம் சொல்லவேண்டாவென்று உங்கள் தலைவர் உங்களுக்குக் கட்டளை இட்டுள்ளார்; அப்படித் தானே? இல்லையா? பிறகென்ன? சொல்லுங்கள்."

"இளவரசியார் எதைக் கேட்கிறார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை."

"சரி; நானே சொல்கிறேன். பாண்டியநாடு சென்றுவந்தீர்களே, அதைப்பற்றி நீங்கள் சொல்லலாமே!"

பல்லவரையன் நடுங்கினான். உடல் வியர்த்துக் கொட்டியது.

"பல்லவரையா! எனக்கெப்படித் தெரியவந்தது என்று பார்க்கிறீரா? பல்லவரையர் மட்டுமே எனக்கு எதிராக

மாறியிருக்கிறாரே ஒழிய மற்றவர்கள் இன்னும் மாறாமல் என்னிடம் உண்மையாகவே உள்ளனர்."

பல்லவரையன் இளவரசிமுன் மண்டியிட்டமர்ந்து பதைபதைப்போடு பணிவோடு மெல்லப் பேசினான்.

"இளவரசியார் என்னை அருள்கூர்ந்து பொறுக்கவேண்டும். உங்களிடம் எதையும் மறைக்கும் எண்ணம் ஒருபோதும் எனக்கு இருந்ததில்லை. இளவரசியார் அதை அறியாமல் இருப்பதே நல்லது என்று நான் நம்பினேன். ஆம்; இளவரசி. பாண்டிய இளவல் பராந்தகரைச் சோழநாட்டிற்கு அழைத்துவரும்படி நான் பணிக்கப் பட்டேன். மிகக் கடினமான பணி அது!"

"உம். மேலே தொடருங்கள்."

"எப்படியும் பராந்தகரை அழைத்துவரவேண்டுமென்று தலைவர் கட்டளை இட்டிருந்தார். பராந்தகர் தஞ்சைக்கு வர எளிதில் ஒப்புக் கொள்ளவில்லை. இளவரசியாரின் இனிய பண்புகளையும் அழகினையும் எடுத்துரைத்தேன். இளவரசியார் தன்னை மணந்து கொள்ளக்கூடும் என்ற எண்ணம் மனதில் எழுந்தபோதே, பராந்தகர் இங்குவர இசைவளித்தார்."

இளவரசி கடம்பமாதேவி நெடுநேரம் பேசவில்லை. அவள் ஆழ்ந்த சிந்தனையில் நிலைத்தாள். விக்கியண்ணனின் முரணான போக்கு அவளுக்கு விளங்கவில்லை. அவனின் எண்ணம்தான் என்ன? அவள் அவனை விரும்புகிறாள் என்பதை அறிந்திருந்தும் அரசியல் சூதாட்டத்தில் அவளையும் ஓர் அங்கமாக ஆக்கமுயலும் அவன் செயலின் பொருள்தான் என்ன? அவனை நேரில் சந்தித்து நிலைமையை அறிந்தால் அன்றி அவள் நெஞ்சம் அமைதி அடையாது.

"பராந்தகப் பாண்டியர் எப்பொழுது வருகிறார்?"

"துர்க்கைவிழாவின்போது எப்படியும் இங்கிருப்பதாகச் சொல்லியுள்ளார்."

"ஆனால், பல்லவ இளவரசர் அபராசிதர்மட்டும் இன்றே வந்துவிடுகிறார்?"

"ஆம் இளவரசி ."

'நல்லது. பல்லவரையா! நீங்கள் போகலாம். ஆனால், நினைவிருக்கட்டும். உங்கள் தலைவரை உடனே என்னை வந்து பார்க்கச் சொல்லுங்கள், என்ன?"

"அப்படியே, அம்மா."

பணிந்து வணங்கிப் பல்லவரையன் விடைபெற்று விரைந்தான். இளவரசியின் பார்வையினின்றும் நீங்கி வெளியே வந்தபோதே அவனுக்கு உயிர் மீண்டது. இனியும் ஒருமுறை எக்காரணங்கொண்டும் இளவரசியாரின் சீற்றத்திற்கு இலக்காகி விடக் கூடாது.

விக்கியண்ணனுக்காகப் பல்லவரையன் மனம் இரக்கங் கொண்டது. இளவரசியாரை யாரும் பகைத்துக் கொள்ளக்கூடாது. அவர் எண்ணினால் எதையும் எப்படியும் நிறைவேற்றும் ஆற்றலுற்றவர். அவருக்கெதிராக ஈடுகொடுத்து எதிர்த்து நிற்கும் ஆற்றல் உள்ளவன்தானா விக்கியண்ணன்?

பல்லவரையன் விரைந்தான். விக்கியண்ணனைச் சந்திக்கக் குறித்திருந்த காலம் கடந்துவிட்டிருந்தது. தலைவர் கொள்ளும் சினத்தைத் தணிக்க அவனிடம் காரணம் இருந்தது. நெற்றியில் முத்துகளெனத் துளிர்த்த வியர்வைத் துளிகளைப் பொருட்படுத்தா வனாய் அவன் ஓடினான்.

வண்டார்குழலியின் இருப்பிடத்தைப் பல்லவராயன் அடைந்தபோது விக்கியண்ணன் ஏற்பாடாக இருந்தான். விக்கியண்ணன் அருகமர்ந்திருந்த வண்டார்குழலி, பல்லவரையனைக் கண்டதும் எழுந்து ஒதுங்கி நின்றாள்.

"பல்லவரையா; ஏன் இத்தனை நேரம்?"

"தலைவரே! நான் இப்போது வரமுடிந்ததே வியப்பு."

"ஏன்?"

"இளவரசியார் வரச் சொல்லியிருந்தார். சென்றபிறகே அவர் சினத்தை அறியமுடிந்தது. தலைவர் செய்பவை அனைத்தும் இளவரசியார் தெரிந்துவைத்துள்ளார். அவரெதில் நின்ற ஒவ்வொரு வினாடியும் அனலில் நின்ற நிலைமையையே நான் அடைந்தேன்."

"அப்படியா?"

"ஆம், தலைவ. இளவரசியார் சினம் முற்றும் உங்கள்மேல்தான். உடனே நீங்கள் அவரைப் பார்க்கவேண்டும். அஃது அவர் ஆணை."

"இப்போதே நேரம் வெகுவாகக் கடந்துவிட்டது. இளவரசியாரைச் சந்தித்துவிட்டுச் செல்வதென்பது இயலக்கூடிய தில்லை."

"இளவரசியாரை முதலில் பார்த்துவிட்டுச் செல்வதே நல்லது."

"அதைப் பின்னர்ப் பார்ப்போம். ஏற்பாடுகள் எப்படி உள்ளன?"

"நாங்கள் அணியமாய் உள்ளோம். ஆனால், தாங்கள் இளவரசியாரைப் பார்த்துவிட்டுப் புறப்படுவதே சாலச் சிறந்தது. அரசருடைய ஆணையை மீறினாலும் தப்பிக்கக்கூடும்; இளவரசியின் ஆணைக்கு எதிர் எதுவுங் கிடையாது."

"ஆமாம். அவர் சொல்வதைக் கேளுங்கள். இளவரசியாரை எனக்கு நன்கு தெரியும். அவர் சினம் மிகவும் கொடியது. முதலில் அவரைச் சந்தியுங்கள்."

இடையில் குறுக்கிட்டுப்பேசிய வண்டார்குழலியை விக்கியண்ணன் வியப்போடு நோக்கினான்.

"இளவரசி என்றால் உனக்கும் அச்சம்தானா?"

""எனக்கென்ன? இந்த நாட்டில் அவருக்கு அஞ்சாதவர் யார்?"

விக்கியண்ணன் பல்லவரையனுக்காய்ப் பார்வையைத் திருப்பினான்.

"பல்லவரையா! இளவரசியை நான் கவனித்துக் கொள்கிறேன். நான் சொன்னவை நினைவில் இருக்கட்டும். நீ சென்று செய்யவேண்டியவைகளைப் பார்."

பல்லவரையன் விரைந்து நீங்கினான்.

"செந்தாமரை! செந்தாமரை!"

உரக்க அழைத்தான் விக்கியண்ணன்.

"ஏன் அவளை அழைக்கிறீர்கள்? ஏதேனும் வேண்டுமென்றால் நான் செய்யமாட்டேனா?"

"வேறொன்றுமில்லை. சிறிது தண்ணீர் வேண்டும்."

செந்தாமரை அவன் அழைப்பைக் கேட்டு அவ்விடம் அணுகிக் கொண்டிருந்தாள். அதைக் கவனிக்காதவனாய் விக்கியண்ணன் கிளம்பினான்.

"குழலி! திருவையாறு செல்கிறேன். இரவு எந்நேரமாயினும் திரும்பிவிடுவேன்."

"தனியாகவாச் செல்கிறீர்?"

"போகும்போது தனியாகத்தான் போகிறேன். திரும்பும்போது இளவரசர் அபராசிதவர்மர், பல்லவரையன், எல்லோரும் இணைந்தே வருவோம். நான் இங்கிருந்து புறப்பட இன்னும் இரண்டு நாழிகைகள் ஆகும். உணவு ஏற்பாடாக இருக்கட்டும். முடிந்தால் வந்து உண்டு செல்வேன். என்ன?"

"சரிங்க. கொஞ்சம் பொறுங்கள். தண்ணீர் கொண்டு வருகிறேன்."

"வேண்டா. நான் வருகிறேன்."

விக்கியண்ணன் வெளியேறினான். அவன் சென்றதையே பார்த்துக் கொண்டு நின்றிருந்த வண்டார்குழலி, செந்தாமரைக்காகத் தன்பார்வையைத் திருப்பினாள்.

"செந்தாமரை, ஐயா சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தாய் இல்லையா?"

"ஆம் அம்மா. உணவு இப்போதும் ஏற்படாகச் சுடச்சுட உள்ளது."

"சரி. நான் அறையுள் இருப்பேன்; ஐயா வந்ததும் உடனே சொல்."

வண்டார்குழலி அறையினுள் நுழைந்தாள். அவள் அகங்குளிர்ந்திருந்தது. யாழெடுத்து இசை எழுப்பியபோது, எழுந்த இன்னிசையில் அவள் எண்ணம் ஒலித்தது. இமைகள் மூடியிருப்பினும் அவள் நெஞ்சம் அகலத் திறந்திருந்தது.

நேரம் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. எத்தனை நேரம் தன்னை மறந்து இசையில் ஆழ்ந்திருந்தோம் என்பதை வண்டார்குழலி அறியாள். அவள் கண்களைத் திறந்து புறப்பொருள் களைக் கண்டபோது, எதிரே அவள் எண்ணத்தில் நீக்கமற நிறைந்தவன் நின்றுகொண்டிருந்தான்.

"வந்து நெடுநேரமாகிவிட்டதா?"

"இல்லை. இப்போதுதான் வந்தேன்."

அறையை விட்டு வெளியே நடந்தாள் வண்டார்குழலி. அவள் அடியொட்டி விக்கியண்ணனும் பின்தொடர்ந்தாள். அவனகத்தில் அப்போது ஓடிக்கொண்டிருக்கும் எண்ணங்களை அவள்

அறியமாட்டாள். அறிந்திருப்பின் அவளின் அந்த அழகு நடையிலே அத்துணை நளினம் அமைந்திருக்க முடியாது.

"செந்தாமரை! செந்தாமரை!"

வண்டார்குழலியின் அழைப்பிற்கு விடை இல்லை. விக்கியண்ணனே பேசினான்.

"இன்னும் அவள் திரும்பவில்லை."

"திரும்பவில்லையா? இங்குத்தானே இருந்தாள்?"

"நீ அனுப்பிய பணியைச் செய்யச் சென்றவள் அதற்குள் திரும்பிட முடியுமா? என்ன?"

அவள் திரும்பி அவனை நன்கு நோக்கினாள். அவன் கண்களில் அவளால் அன்பைக் காணக்கூடவில்லை.

"என்ன சொல்கிறீர்கள்? நீங்கள் வந்தவுடன் என்னிடம் சொல்லுமாறு பணித்திருந்தேன், அவ்வளவே!"

"நீ இப்போது சொல்வது உண்மைதானே?"

வண்டார்குழலியின் முகம் அகத்தைப்போலவே மிகவும் வாட்டம் அடைந்தது. எனினும், நேருக்குநேர் நிமிர்த்தி நோக்கி எவ்வித அச்சமும் தயக்கமும் இன்றி விடையளித்தாள்.

"இப்போதென்ன? நான் எப்போதுமே உண்மையைத்தான் பேசுகின்றேன்."

"அப்படியா? நல்லது! அதோ செந்தாமரையே வந்துவிட்டாள். இப்போது எல்லாமே வெளிச்சமாகிவிடும்."

வண்டார்குழலி தன் பார்வையைத் திருப்பினாள். அவளுக்குப் புரியாதவை பல. செந்தாமரை ஏன் கலக்கத்தோடு வருகிறாள்? அவள் நடையில் மருட்சி; பார்வையில் அச்சம்! என்ன நடக்கின்றன

இங்கே? பல்லவரையர் செந்தாமரையைத் தொடர்ந்து வருவதேன்? வெளியே நிழலாடுகிறதே; ஏன்? காவல்வீரர்கள் அல்லவா அவர்கள்? அவர்களுக்கென்ன இங்கு வேலை?

"அம்மா! என்னைக் காப்பாற்றுங்கள்."

வண்டார்குழலியின் திகைப்பு அதிகமாகியது. மண்டியிட்டுத் தன் கால்களைப் பிடித்துக்கொண்டு கெஞ்சிய பணிப்பெண்ணின் செய்கையின் பொருள்தான் என்ன? வண்டார்குழலி எதுவும் புரியாது தடுமாறினாள்.

"உன்னைக் காப்பாற்றுவதா? என்ன சொல்கிறாய் நீ?"

பணிப்பெண் செந்தாமரையிடமிருந்து கண்ணீரே விடையாக இருந்தது. விக்கியண்ணன் பேசினான்.

"பல்லவரையா! என்ன நடந்தது?"

"எல்லாமே நீங்கள் எண்ணியவாறே நடந்தன. நீங்கள் வீட்டைவிட்டு வெளியேறிய சிறிது நேரத்திற்கெல்லாம் இந்தப் பணிப்பெண் புறப்பட்டுவிட்டாள். முன்னேற்பாட்டின்படி இவள் அறியாமல் பின்தொடர்ந்தோம். வணிகர் வீதியின் குறுகிய சந்தொன்றில் பழைய வீடொன்று; அங்கு இந்தப்பெண் திருவையாறு செல்லும் உங்கள் பயணத்திட்டத்தைப் பகைவர் களிடம் விளக்கிக் கொண்டிருந்ததை என் செவிகளால் நானே கேட்டேன். அவர்களைச் சிறைப்படுத்த நான்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை. பகைவர்கள் தப்பித்துவிட்டனர். இந்தப் பெண்ணோடு நானிங்கு மீண்டேன். அவ்வளவுதான்! இவளை என்ன செய்யவேண்டும்?"

"அம்மா! அம்மா! ஐயாவிடம் சொல்லி என்னைக் காப்பாற்றுங்கள்."

செந்தாமரை கெஞ்சினாள். வண்டார்குழலியின் முகத்தில் எந்த மாற்றமும் விளையவில்லை. அவள் கண்களும் முகமும்

அமைதியாய் உணர்ச்சியற்றுத் தோன்றின. அவள் பேசியபோது குரல் தெளிவாக உறுதியாக இருந்தது.

"படைத்தலைவர் சொல்பவை உண்மைதாமா?"

செந்தாமரை மெல்ல ஆமென்றமுறையில் தலையை அசைத்தாள். அவள் கண்களினின்று வழிந்தகண்ணீர் வண்டார்குழலியின் கால்களை நனைத்தது.

"ஐயா பழையாறை சென்று திரும்பும் செய்தியைச் சொன்னவளும் நீதானா?"

"என்னைப் பொறுக்கவேண்டும்."

"உன்னையா? சீச்சீ! என் படுக்கையறைக்குள் என்னாணையின்றி அன்று அவர்களை அனுப்பியவளும் நீதானா? உனக்காக நானெப்படி இரக்கப்படுவேன்? உன்னாலன்றோ இவர் என்னை ஐயப்படுகிறார்! செய்த தவற்றின் பயனை நீயே அடைக. என் கால்களை விடு."

கால்களை உதறிக்கொண்ட வண்டார்குழலி மறுசொல்லின்றி உள்ளே சென்றாள். தரையில் முகத்தைப் புதைத்துக்கொண்ட செந்தாமரை தேம்பித்தேம்பி அழுதாள். அவள் அப்படிக் குலுங்கிக் குலுங்கி அழுதபோது அவளுடல் வெகுவாக அசைந்து அதிர்ந்தது; பார்த்துக்கொண்டிருந்த பல்லவரையனை வெகுவாகப் பாதித்தது. அவன் அந்தப் பணிப்பெண்ணிற்காக மிகவும் இரங்கினான்.

"இரக்கத்திற்கு உரியவள் இந்தப் பெண்."

பல்லவரையன் வாயினின்று சொற்கள் அவனையும் அறியாமல் வெளியேறின. அவன்கண்கள் அவள் மேலேயே பதிந்திருந்தன.

விக்கியண்ணன் வியப்போடு பல்லவரையனை நோக்கினான்; பின்னர்ப் பணிப்பெண்ணை நோக்கினான். பல்லவரையனின் பார்வை தரையிலே கிடந்த பணிப்பெண்ணின் தளிருடலிலே

பதிந்திருந்ததைக் காண விக்கியண்ணன் வியந்தான். பல்லவரையனின் எண்ணத்தை அவனால் பகுந்தறிந்து கொள்ளக் கூடவில்லை. அந்தப் பார்வையில் வெளிப்படுவெது பரிவா? காதலா? பல்லவரையனும் தன்னைப்போல் எளிய மனிதன்தானா?

விக்கியண்ணன் தன்னிடத்தினின்றும் புறப்பட்டான்.

"செந்தாமரை, எழுந்திரு. உள்ளேபோய் அம்மாவைக் கவனி. பல்லவரையா! வா; போகலாம்."

விக்கியண்ணன் முன்னே நடந்தான். நடந்தபடி திரும்பிப் பார்த்தபோது, பணிப்பெண்ணின் கண்கள் பல்லவரையன் கண்களோடு கலந்து உறவாடுவதைக் கண்டு புன்முறுவல் கொண்டான். பல்லவரையனைக் கண்ட கண்கள் நன்றியை வெளிப்படுத்தினாலும், நாள்கள் கழியக்கழிய நடக்கவிருப்பவை என்னவென்பதை விக்கியண்ணன் தெளிவாகப் புரிந்து கொண்டான்.

# 20. களிறு தரு காதல்

*"ஓசனை கமழும் வாச மேனியர்*
*மடமா மிசையோர்*
*பிடிமேல் அன்னப் பெரும்படை அனையோர்*
*கடமா கடவுவோரும் களிறுமேல் கொள்வோரும்*
*வடிமணி நெடுந்தேர் மாமுன் பாய்குநரும்*
*விரைபு விரைவு மிகைமிகை ஈண்டி..."*

வளிபொரு வான் மின்னொடு இருள்பரப்பிக் கடந்த நாள்களிலே இடையறாது குடதிசை மலைகளைச் சூழ்ந்து மழையைப் பொழிந்ததனாலே பெருகிய வெள்ள நீரானது, அம்மலைச்சாரல்களிலே உதிர்ந்த மல்லிகை, மௌவல், மணங்கமழ் சண்பகம், அல்லி, கழுநீர், அரவிந்தம், ஆம்பல், குல்லை, வகுளம், குருக்கத்தி, பாதிரி, நல்லிணர்நாகம், நறவம், சுரபுன்னை ஆகிய எல்லா மலர்களும் தன்மேல் படர்ந்து இன்மணத்தை எங்கும் வாரியிறைக்கக் காவிரியின் கரைகளை நிறைத்துப் பொங்கும் புதுப்புனலாய்ப் பெருகி வழிந்து விரைந்துகொண்டிருந்தது.

பொன்னியாற்றில் புதுப்புனல் வரவால் தஞ்சை மக்கள் தாங்கொண்ணா உள்ள மகிழ்ச்சியால் புனலாடிக் களிக்கப் புறப்பட்டுச் சென்றனர். அவர்களிடை எந்த வேற்றுமையும் இல்லை. அடுத்த சில நாள்களில் தஞ்சையிலே பெருவிழா. அதனால் உண்டாகிய பெருமகிழ்ச்சியும் அவர்கள் நெஞ்சங்களை ஆட் கொண்டிருந்தன.

பெண்கள் தங்கள் மேகலை அணியை இறுக அணிந்திருந்தனர். நீர் விளையாட்டிற்கான நீர்வீச்சு துருத்திகளையும் சந்தனத்தையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டனர். அவர்கள் தங்கள் பயணத்திற்கெனப் பயன்படுத்திய ஊர்திகள்தாம் எத்தனை வகை!

குதிரை ஏறிக் குதித்துச் சென்றனர் ஒரு சாரர்; எருதுகள் பூட்டிய வண்டிமீது எழுச்சியோடு சென்றனர் ஒரு சாரர். சிவிகை ஊர்ந்தனர் செல்வமிக்கோர். குதிரைகள் பூட்டிய வண்டிகளிலோ கூட்டங் கூட்டமாகச் சென்றனர். தேடிப்பெற்ற காதல் பெண்ணைத் தேர்மேல் ஏற்றிப் பறந்துசென்றனர் காளைப் பருவத்தினர்.

முல்லை முகையொத்த நல்லிளம் பெண்களும், புத்தம்புது மலரொத்த புன்னகை சிந்தும் மின்னல் இடையினரும், முகில் கூட்டம் படர்வதொப்பப் பறந்து செல்லும் மொய்குழலமைந்த பருவத்திள மகளிரும், நரை விரைவினும் நகில் தளரா உடலமைந்த நங்கையர்களும் அவர்தம் தோழியரும் எனப் பெண்களின் கூட்டங்கள் தடந்தொறும் விரைந்து சென்றன. அவர்களின் நடை தாளவிதியோடமைந்த இசைக்கருவிகளின் மென்னடைக்கு ஏற்ப இயல்பாக இருந்தது.

பொன்னிப் புதுப்புனலிலே தன்னாசைக்குரியவனுடன் ஆடிமகிழ ஆசை கொண்ட வண்டார்குழலியின் விருப்பை ஏற்று அவளுக்கு இன்பத்தைச் சேர்க்க இயலாத் தன்நிலைக்கு வருந்தியவனாய் விக்கியண்ணன் அமைதியோடு சென்று கொண்டிருந்தான். பக்கத்திலே பல்லவரையன் உடன் வந்து கொண்டிருந்தான்.

வண்டார்குழலியின் வாடியமுகம் விக்கியண்ணன் கண்களை விட்டு விலகவில்லை. அவனோடு ஐயக்கியமாகித் திங்கள்கள் பல

கழிந்திருந்தும் அவள் அவனிடம் அதற்குமுன் ஆசைகொண்டு எதையுமே கேட்டவள் இல்லை. அவளுக்கு எல்லாமே அவன்தான். அவன் விருப்பறிந்து அவள் நடந்துகொண்டாள். அவளுக்கென்று எதிலும் ஆசைகொண்டதில்லை. அவன் எதை விரும்பினானோ, அதையே அவளும் விரும்பினாள்; அவன் எதை வெறுத்தானோ, அதை அவள் வெறுக்காவிட்டாலும் ஒதுக்கினாள். அவனின் உள்ளம் உணர்ந்து ஒழுகினாள்; அதனால், அவன் உள்ளத்தில் உயர்ந்தாள்.

அப்படிப்பட்ட வண்டார்குழலி முதன்முதலாகத் தன் ஆசையைத் தெரிவித்தபோது, அதை நிறைவேற்ற விக்கியண்ணனால் முடியவில்லை. அந்த அழகு உடலாளொடு நீராடுவதைவிட வேறு இன்பம் அவனுக்கு இருக்கமுடியுமா? நிச்சயம் முடியாது. ஆனால் அவன்தான் என்னசெய்வான்? அன்றன்றோ அவனாற்ற வேண்டிய மிக இன்றியமையாக் கடமைகள் நிறைய இருந்தன! ஏமாற்றம் நெஞ்சில் இருந்தாலும் இனிய முகத்தோடு விடைகொடுத்த வண்டார்குழலியின் எழிலுருவம் அவன் நெஞ்சில் தங்கி இறும்பூது சேர்த்தது.

"இளவரசியாருமா உடன் வருகிறார்?"

"ஆம்; தலைவரே!"

"இளவரசியார் வருகிறார் என்றால் நிச்சயம் இடையூறுதான்! நாம் நினைப்பவை நடக்காமல் வேறுவிதமாக நிகழ்ந்தால் என்ன செய்வது? பல்லவரையா! இளவரசியாரும் மாதேவியும் ஒன்றாக எதிரே நிற்பின், அபராசிதர் எண்ணம் யாரை மிகவும் நாடக்கூடும்?"

"இயல்பாக இளவரசியாரைத்தான் நாடக்கூடும். ஆனால், அதிலும் ஒரு பெரிய தடங்கல் உள்ளது. இளவரசியார் எதிரில் எப்பேர்பட்ட இளைஞர்களுக்கும் தாழ்வெண்ணமே ஏற்பட வழியிருக்கிறது. இளவரசியாரின் தோற்றம், அவரின் பார்வை எப்படிப்பட்டவர் மனத்திலும் ஒரு தாழ்வை ஏற்படுத்திவிடும். தம்மைவிட உயர்வாக மதிக்கும் பெண்களை எந்த ஆண்மகனும் அடைய விரும்புவதில்லை. இது மனதின் இயல்பு. எனவே, பல்லவ இளவரசர் எண்ணம் மாதேவியார் பக்கம் நாம் எண்ணுவதுபோலவே திரும்பும் என்றே நம்புகிறேன்!"

"உண்மைதான். அதுவுந்தவிர, மாதேவி மனத்தளவிலே ஒரு குழந்தை. உள்ளத்தில் கள்ளமில்லா அவருடைய கண்கள் குழந்தையின் கண்களைப்போன்ற குறுகுறுப்பானவை; குளிர்ச்சியை உடையவை. அப்போதுதான் மலர்ந்த அழகு மலரொத்த மென்மையான உடல் அவருடல். அவரைக் கண்டபிறகு அபராசிதர் அவரிடம் ஆசை கொள்ளாமல் இருக்க இயலாது. பல்லவரையா! நீ உடனே புறப்பட்டுச் செல். எல்லாம் நம்திட்டப்படி இனிது நடக்கவேண்டும். யாவும் உன் திறமையில்தாம் உள்ளன. நான் அபராசிதருடன் தேரில் வருவேன். என்ன?"

"என்னை நம்புங்கள். உங்கள் திட்டம் கட்டாயம் நிறைவேறும்."

"சரி; நீ முன்னே புறப்படு."

பல்லவரையன் இளவரசியாரின் இருப்பிடத்தை நோக்கி விரைந்தான். விக்கியண்ணனோ, பல்லவ இளவரசன் அபராசிதன் தங்கியிருந்த விருந்தினர் மனையை நோக்கி மெல்லச் சென்றான்.

தஞ்சையிலிருந்து திருவையாறு செல்ல அமைந்திருந்த பாதையிலே அழகிய வேலைப்பாடமைந்த தேரொன்று உருண்டு கொண்டிருந்தது. அந்தத் தேரின் அமைப்பு அரிவையர்தம் மார்பை ஒத்து அழகாக விளங்கியது. குதிரைகளின் ஓட்டம் சீராக இருந்ததால் தேரின் அசைவில் ஓரழகு தெரிந்தது.

"இளவரசர் தன்னை மறந்து அமர்ந்திருக்கிறார் போலும்?"

தேரை நடத்திக்கொண்டிருந்த விக்கியண்ணன், மெய்மறந்து பல்லவ இளவரசன் அபராசிதன் வியப்போடு அனைத்தையும் நோக்கியபடி அமர்ந்திருந்ததைக் கண்ணுற்றுக் கேட்டான். இயற்கை அழகிலே தன்னை முற்றும் இழந்துவிட்டிருந்த அபராசிதனின் கவனம் அப்போது மீண்டது.

"ஆமாம், வீரரே! என் சொந்த நாடான தொண்டை நாட்டோடு சோழநாட்டை ஒப்பிட்டுப்பார்க்கிறேன். சோழ நாடா? இல்லை,

உம்பர் அகமா? கண்கள் பெற்ற பயனை இன்றே கண்டேன்! என்ன அழகு! என்ன அழகு! இயற்கையில் இத்துணை அழகா?"

"இளவரசே! இதற்கே இப்படித் தாங்கள் வியப்படைகிறீர்களே, இந்த நாட்டு இளம்பெண்களைக் கண்டால் எப்படி ஆவீர்களோ?"

"எதுவும் ஆகமாட்டேன். இயற்கையைவிட எந்தப் பெண்ணும் எழிலாக இருந்துவிட முடியாது."

"உங்கள் முடிவு சரியில்லை. இயற்கைவேறு; பெண்கள் வேறு என்பதில்லை. பெண்களும் இயற்கையின் படைப்பே! இளவரசே! நீங்கள் இன்னும் சோழநாட்டுப் பெண்களில் ஏங்கவைக்கும் எழிலமைந்த இளவரசிகளைப் பார்க்கவில்லை; பார்த்திருந்தால் இப்படிப் பேசமாட்டீர்கள்."

"விக்கியண்ணரே, உங்கள் பேச்சு எனக்கு விளங்கவில்லை. நீங்கள் சேரநாட்டைச் சேர்ந்தவராயிற்றே! உங்கள் நாட்டுப் பெண்களைவிட உடலமைப்பிலோ உருவப் பொலிவிலோ வேறுயாரும் இருக்கமுடியாதென்றன்றோ எல்லோருமே வியந்து பாராட்டுகின்றனர். நீங்களோ சோழநாட்டுப் பெண்களை அழகிகள் என்கிறீர்கள்?"

"இளவரசே! நானும் அப்படித்தான் நம்பி இறுமாந்திருந்தேன். அஃதாவது, இந்தச் சோழநாட்டில் காலடி எடுத்து வைப்பதற்கு முன்னாள்வரை! சேரநாட்டுப் பெண்களின் ஓரங்கூட வேறுயாரும் நிற்கமுடியாதென்று வீரம் பேசியிருக்கிறேன். தந்தத்தில் தொழில்வல்லார் தமக்கென்றே கடந்தமைத்ததுபோன்ற கட்டான மேனி சேரநாட்டுப் பெண்களின் மேனி! பளிங்கின் பளபளப்பை அவர்கள் உடலின் அங்கங்களில் பழதற்றுக் காணலாம். தண்ணிலவை ஒத்தக் குளிர்ந்த முகம்; முல்லை முகையன்ன வெள்ளைப் பற்கள்; கார்மேகமென சுருள் கூந்தல்; இன்னும் என்னென்னவோ அடுக்கிக்கொண்டே செல்லலாம். சேரநாட்டு இளம்பெண்களைக் கண்டால், பற்றினைத் துறந்த நற்றவ முனிவரும் பாலுணர்ச்சி கொள்வது நிச்சயம். அப்படிப்பட்ட பருவத்தின் திரட்சியையும் எழுச்சியையும் ஒருங்கே அவர்களிடம் பார்க்கலாம்."

"உங்கள் பேச்சே உள்ளக்கிளர்ச்சியை உண்டாக்குகின்றன! நன்று; மிகநன்று."

"ஆனால், சோழ நாட்டுப் பெண்கள் வேறான திறனமைந்தவர்கள். சேரநாட்டுப் பெண்களின் மேனியைப்போல் முற்றும் மஞ்சள்நிறமின்றிச் சோழநாட்டுப் பெண்களின் மேனியில் சற்றுச் செம்மையும் கலந்திருக்கும். சிற்பி செதுக்கிய செம்பவளச் சிலையொப்பார் சேரநாட்டுப் பெண்கள் என்றால் இயற்கையே உவந்து இயற்றிய எழிலுருவினர் சோழநாட்டுப்பெண்கள். கொடிபோன்ற அவர்கள் மேனியின் குறுகிய இடையொன்றே போதும் இளைஞர்களைப் பித்தர்களாக மாற்ற! நூலிடை என்பதொப்பக் காலெடுத்து நடக்க நுடங்கும் மெல்லிடை அசைவொன்றே போதும் அவர்கள் மேன்மையை எடுத்துரைக்க!"

"அப்படியா சொல்கிறீர்கள்?"

அபராசிதன் வியப்பால் விளித்து விக்கியண்ணன் முகம் நோக்கினான்.

"ஆம்; இளவரசே! இயற்கையின் கைவண்ணத்தை இந்த நாட்டுப் பெண்கள்தம் உடலமைப்பில் கண்டு நாம் இன்புற வேண்டும். அவர்களின் உடல்வளர்ச்சியில் அமைந்திருக்கும் எழுச்சியின் ஆற்றல்தான் என்னே! வஞ்சிக்கொடியொத்த இந்த நாட்டுப் பெண்களின் வாளிப்பான தொடைகள் வழவழப்பிலும் வடிவிலும் வாழைமரங்களுக்கு வழிகாட்டியாய் அமைந்தவை. அவர்கள் இடைகள் சிற்றிடைதாம்; ஆனால், அந்த இடைகளின் உறுதி நம்மை வியப்பில் ஆழ்த்த வல்லன. இருபெரு இளநீர்க்காய்களொத்த மார்பகங்களால் இற்றிடுமோ இந்த இடையென நம்நெஞ்சத்தில் இரக்கத்தைத் தோற்றுவித்தாலும், அசைந்து நெளியுமேயன்றி அச்சத்தைச் சேர்ப்பதில்லை. கோவைக்கனியும் ஒவ்வாச் சிவந்த திரண்ட இதழ்கள்! அந்த இதழ்களில் ஈரப்பசை எப்போதும் இருந்துகொண்டே இருக்கும். மார்பகங்களின் அமைப்பிற்கும் கூர்மைக்கும் ஒப்புமைத்தேடி ஓய்ந்துவிட்டேன். இடமுழுதும் படர்ந்து இடையே காற்றும் ஊடுருவ இடமுமின்றித் திரட்சியோடு திமிரி எழுச்சியோடு யாரையும் மிரட்டுபவையாய் அமைந்த இருபெரும் மார்பகங்களுக்கு

இவ்வையத்தில் இணையும் உண்டோ? அடியெடுத்து நடக்க அவை அசைகின்ற அழகைக் காணப்பெறாக் கண்களும் கண்களோ? விழிகளின் கூர்மைக்கு வேலின் கூர்மையைக் கூறுவர்; ஆனால் வெகுண்டெழும் கொங்கைகளின் கூர்மைக்கு? மூங்கில் முளையைக் கூறக்கூடுமோ? நானும் எத்தனையோ பெண்களோடு இங்கு வருவதற்குமுன் பழகியிருக்கிறேன்; ஆனால் இந்தச் சோழநாட்டுப் பெண்களுக்கு..."

விக்கியண்ணன் பேச்சை இடையில் மறித்தான் அபராசிதன். அவன் பேச்சில் விரைவு தெரிந்தது.

"வீரரே, அங்குப் பாருங்கள்."

யானையின் பிளிறல் எல்லா திக்குகளையும் எட்டுவதாய் இருந்தது. பெண்கள் எழுப்பிய அச்சம்நிறைந்த அலறலும் கேட்டது.

"குதிரைகளை விரட்டுங்கள். அந்த யானைக்கு மதம்பிடித்து விட்டது போலும்! யானைமீது அமர்ந்திருப்பவர்கள் பெண்கள் அல்லவா?"

"ஆம்; அப்படித்தான் தெரிகிறது."

குதிரைகள் பறந்தன. மதம்பிடித்ததுபோல் ஓடிக்கொண்டிருந்த யானையின் விரைவு தேரின்விரைவைவிடக் குறைவாக இருந்ததால், தேர்சற்று நேரத்திற்குள் யானையை அடைந்தது.

யானையின் மீதமர்ந்திருந்த அந்த இளம்பெண்ணை அபராசிதன் அறிந்திருக்கவில்லை. அச்சத்தால் அலறும் அந்த அழகி யாராக இருக்கக்கூடும்? மற்றவர் சோழ இளவரசியார் கடம்பமாதேவி என்பதில் ஐயமில்லை. இளவரசியார் ஒருவரால்தான் அச்சமின்றி அமைதிகாப்பதுடன் அலறித்தவிக்கும் மற்றவர்க்கு ஆறுதல் கூறவும், முடியும்.

"வீரரே, தேரை யானையின் பக்கமாய்ச் செலுத்துங்கள்."

யானையைச் செலுத்திவந்த பல்லவரையன் மதம்பிடித்த யானையை அடக்கி நெறிப்படுத்துவதில் முயற்சி மேற் கொண்டிருந்தான். இருப்பினும், அவன் பார்வை அருகில் பக்கம் படர்ந்த தேரினைப் பார்க்கத் தவறில்லை.

"அம்மா, குதித்துவிடுங்கள்."

அமர்ந்திருந்த இடத்தினின்று மெல்ல நழுவி இறங்கினாள் மாதேவி. அப்படி நழுவி இறங்கிவளைத் தேரின் ஓரத்தைப் பிடித்துக்கொண்டு அணியமாக இருந்த அபராசிதன் தாங்கிக் கொண்டான். மாதேவி எவ்வித இன்னலுமின்றித் தேரினை அடைந்ததைக் கண்ட பல்லவரையன், இளவரசியாரை நோக்கி இரைந்தான்.

"அம்மா! நீங்களும் குதித்துவிடுங்கள்."

கடம்பமாதேவி அவன் சொன்னதைக் கேட்டதாகவும் காட்டிக் கொள்ளவில்லை. அமைதியாக, அதேசமயம் உறுதியாகவும் அவள் பேசினாள்.

"பல்லவரையா! போதும் இந்த நாடகம். யானையை நிறுத்துங்கள்."

இளவரசியின் சொற்கள் பல்லவரையன் செவிகளை மட்டுமே எட்டின. திகைத்துச் செயலற்றுத் திரும்பிநோக்கிய பல்லவரையன், ஒரு கணமே இளவரசியின் கண்களைக் கண்டான். அவன் அடுத்துச் செய்யவேண்டியதறியாது தடுமாறினான். எல்லாமே இளவரசியார் அறிந்துள்ளார் என்பதா? அவன் பெரிதும் குழம்பினான்.

மிகமுயன்று யானையை அடக்கி ஒருநிலைக்குக் கொண்டுவருபவன்போல் பெருமுயற்சியைத் தன் செயல்களிலே காட்டி யானையைப் பல்லவரையன் நிறுத்தினான். யானை அமைதியாக நின்றது.

விக்கியண்ணன் தேரினை ஒரு பக்கமாக நிறுத்திவிட்டு அருகே ஓடிவந்தான். அவன் முகத்தில் அதிர்ச்சியும் கவலையும்

வெளிப்படையாகத் தெரிந்தன. அவன் பேசியபோது பேச்சில் பதட்டம் தெரிந்தது.

"பல்லவரையா! என்ன நடந்தது?"

"திடீரென்று யானைக்குச் சிறிது மதம் பிடித்துவிட்டது."

பல்லவரையனின் விடையிலிருந்த தயக்கத்தின் காரணம் என்னவாக இருக்கும்? இளவரசி கடம்பமாதேவியின் இதழ்களிலே இளநகை தவழ்வதேன்?

விக்கியண்ணன் ஏதும் விளங்காது குழம்பினான்.

"நல்லவேளை! பல்லவ இளவரசர் மட்டும் பக்கத்தில் இல்லாதிருந்திருப்பின் என்ன ஆகியிருக்கும்?"

"ஒன்றும் நடந்திருக்காது. முதலில் யானைக்கு மதமே பிடித்திருக்காது. என்ன பல்லவரையரே, நான் சொல்வது சரிதானே?"

கடம்பமாதேவியின் பேச்சால் விக்கியண்ணன் அதிர்ச்சி யடைந்து சற்றுப் பின்வாங்கினான். திரும்பிப் பார்த்தபோதே அவன் அமைதி அடைந்தான். மாதேவியின் மலரொத்த விழிகளின் மயக்கத்தில் தன்னை இழந்துகொண்டிருந்த பல்லவ இளவரசன் அபராசிதன், இளவரசி இறுதியாக உரைத்த மொழிகள் எதையும் தன்செவிகளில் கொள்ளவில்லை என்பதை அறிய விக்கியண்ணன் நிறைவாக மூச்சுவிட்டான்.

"மாதேவி! வந்து ஏறிக்கொள்; நாம் போகலாம்."

மாதேவி அச்சத்தால் நடுங்கியது கடம்பமாதேவிக்கு நன்கு தெரிந்தது. மாதேவி உண்மையிலேயே அஞ்சுகிறாளா? இல்லை, அஞ்சுவதுபோல் நடிக்கிறாளா?

"யானையிலா? ஐயோ! நான் மாட்டேன்."

பல்லவ இளவரசன் பண்போடு குறுக்கிட்டான்.

"இளவரசியார் விரும்பினால் இந்தத் தேரிலேயே நீங்கள் இருவரும் செல்லலாம்."

"நன்றி, ஐயா, எனக்கு யானைப் பயணமே மிகப்பிடிக்கும்."

"அப்படியெனில், இந்தப் பெண் என்தேரிலேயே பயணம் செய்ய இளவரசியார் ஒப்பவேண்டும்."

இளவரசி விடையளிக்குமுன் விக்கியண்ணன் குறுக்கிட்டான்.

"ஆம் இளவரசி; அதுதான் நல்லது. மாதேவி மிகவும் அச்சத்தோடு இருக்கிறார்."

மாதேவியின் அசைவுகளையே அபராசிதனின் கண்கள் ஆர்வத்துடன் நோக்குவதை அங்கிருந்த மற்ற மூவரும் கண்டனர்.

"இளவரசே! மாதேவியும் நீங்களும் செல்லுங்கள். நாங்கள் பின்னால் தொடர்ந்து வருகிறோம் . "

அபராசிதனையும் மாதேவியையும் தன்னகத்தே கொண்டு தேர்விரைந்து சென்றது. தேரின் வேகத்தைவிட அபராசிதனின் நெஞ்சத்துடிப்பே அங்கு மிகுதியாக இருந்தது.

தேர் விரைந்து சென்று திருப்பத்தில் மறைந்த பிறகே விக்கியண்ணன் தன் கண்களை யானைமீதமர்ந்திருந்த வேல் விழியாளுக்காகத் திருப்பினான். நெஞ்சின் அச்சம் அவன்கண்களில் தெரிந்தது. இளவரசியின் ஆணையைப் பல்லவரையன் அவனிடம் உரைத்துப் பலநாள்கள் கடந்திருந்தும் விக்கியண்ணன் அவளைச் சென்று பார்க்கவில்லை. தன் தலைவனைப் பார்க்கப் பல்லவரையனுக்கு இரக்கமாக இருந்தது.

"பல்லவரையரே! நீங்கள் இருந்தால் யானைக்கு மீண்டும் மதம் பிடிக்கக்கூடும். நீங்கள் இறங்கிக் கொள்ளுங்கள். உங்கள் தலைவர் இந்த யானையை நடத்தி வருவார்."

விக்கியண்ணனுக்கு வேறுவழி இருக்கவில்லை. யானை மீது ஏறியமர்ந்து இயக்கியபோது, அவன் அறிந்திருந்தான் தன்னை இயக்கியாளப் பின்புறம் ஒரு தளிருடலாள் அமர்ந்துள்ளாள் என்பதை.

# 21. வலையில் சிக்கிய வரிப்புலி

*திங்கள் நுதல்வியர்க்கும் வாய்துடிக்கும் கண்சிவக்கும்*
*அங்கைத் தளிர்நடுங்குஞ் சொல் லசையும் - கொங்கை*
*பொரு காலும் ஊடிப் புடை பெயருங் காலும்*
*இருகாலும் ஒக்கு ம் இவர்க்கு.*

பல்லவ இளவரசன் அபராசிதனின் நெஞ்சம் வாடி வதங்கியது. அவனென்ன மற்றவர்களைப்போல எளிமையானவனா? அகண்டு படர்ந்த தொண்டைமண்டலப் பேரரசின் இளவரசன் அவன்! இளவரசன் என்றால் எப்படி? சோழ இளவரசன் ஆதித்தனைப் போன்றா?

அபராசிதன் பெயருக்குத்தான் இளவரசன்; ஆனால், உண்மையில் பல்லவ ஆட்சியின் முடிசூடா மன்னன் அவனே! ஆம்; அது முற்றும் உண்மையே. முதுமையை அடைந்துவிட்ட பல்லவ மன்னன் நிருதுபங்கவர்மன், ஆட்சியை நடத்தும் பொறுப்புக்கள் அனைத்தையும் தன்மகன் இளவரசன் அபராசிதனிடம் ஒப்படைத்திருந்தான்.

எல்லாமே அவன்! அவன் எண்ணியதை எண்ணியாங்கு அடைவது திண்ணம்! ஆனால், அது பல்லவ நாட்டில்! சோழ நாட்டில் அவன் கேட்பது கிடைக்கப் பெறுமா? அரும்பொத்த பல்லும் கரும்பொத்த சொல்லும் அந்தக் கன்னியிடமன்றோ ஒருங்கே கருத்தைக் கொள்ளும்வண்ணம் பொருந்தியிருக்கின்றன!

அபராசிதனின் நெஞ்சமன்றோ அவனுக்கு வேதனையைப் பெரிதும் உண்டாக்கியது. அந்த அழகுப் பெட்டகம் எப்படியானால் அதற்கென்ன? ஐயோ! இஃதென்ன கொடுமை! அவளுடைய கருங்குழல் காற்றில் அசைந்தாடினால் அவன் நெஞ்சமும்

அசைந்தாட வேண்டுமா? மாங்கனிகள் ஒத்த அவள் மார்பகங்கள், தாங்கள் கொண்டிருக்கும் திரட்சியின் தருக்கால் திமிரி விம்மி எழுந்தால், அதை உணரா அவன் நெஞ்சம் ஏன் அஞ்சி மயங்கவேண்டும்? குறுநகையைத் தோற்றுவித்த அவனைக் கொல்லும் திறன்வாய்ந்த கோவை இதழ்களினூடே தெரியும் முத்துப்பற்கள் வெளுப்படைந்தால், தானும் துவளும் சிறுமை அவன் நெஞ்சிற்கெதற்கு? போரால் சிறந்த நந்தியின் காஞ்சி நாட்டுக் கன்னியில்லை அவளென்பதை அறியாதா அது? அறிந்திருந்தும் அவளோடு நெருங்கிப் பழக ஆசை கொள்கிறதே, நடக்கக் கூடியதா?

"பெண்ணே!"

மாதேவியின் கண்கள் சுழன்றோடிக்கொண்டிருந்த வெள்ளத்தில் நிலைத்திருந்தன. அபராசிதன் அருகிருந்து அழைத்தபோதும் அவள் திரும்பவில்லை.

"பெண்ணே, உன்னைத்தான் அழைத்தேன்."

மாதேவி திரும்பி நோக்கினாள்; ஆனால், அவள் விடையளிக்க வில்லை.

"என்னோடு பேசமாட்டாயா?"

அமைதியாக நின்றிருந்தாள் அவள்.

"நீ என்ன ஊமையா? இல்லை, செவிடா?"

மாதேவியின் இதழ்களிலே இளநகை மெல்லப் படர்ந்தது.

"நன்று! நன்று! சிரிக்கவாவது தெரிந்துள்ளாயே!"

மாதேவியின் இதழ்கள் மலர்ந்தன; முத்துப் பற்கள் மின்னின.

"அழகான பற்கள்! அமைவான இதழ்கள்!"

மாதேவி தன்னுடைலைத் திருப்பிக் கொண்டாள். அவள் கண்கள் மீண்டும் நீரில் பதிந்தன. அவளின் அந்தச் செய்கை அபராசிதனின் அடிமனத்தில் வேதனையை உண்டாக்கியது.

"ஏன் திரும்பிக்கொண்டாய்? என் பேச்சில் ஏதேனும் தவறுண்டா?"

"தவறில்லை இளவரசே. தொடக்கக் காலத்தில் ஆண்களின் கண்களுக்கு எல்லா இளம்பெண்களும் அழகாகத்தான் தோன்று வார்களாம்."

அவள் விடையால் அபராசிதன் சிலவினாடிகள் அதிர்ந்து நின்று விட்டான்.

"யார் சொன்னார்கள்?"

"என் அக்காதான்."

"உன் அக்காவா? யார் அவர்?"

"வேறு யார்? சோழநாட்டின் இளவரசியார் கடம்பமாதேவிதான்."

"அப்படியானால் நீங்கள்..."

சொற்களை அபராசிதன் முடிக்கவில்லை. அவன் கொண்ட ஐயத்தையும் அதனால் அவனிடம் விளைந்த தடுமாற்றத்தையும் மாதேவி அறிந்து கொண்டாள்.

"இளவரசே! நீங்கள் எனக்கு மதிப்புக் கொடுக்கத் தடுமாறவேண்டா. நான் எளிய குடும்பத்தைச் சேர்ந்தவள்; இளவரசியின் அன்பிற்குரியர்வர்களில் நானும் ஒருத்தி. அவ்வளவே."

"ஓகோ!"

பராந்தகன் எழுந்தான். அப்போதே விக்கியண்ணனை ஆதித்தன் கவனித்தான். மாதேவியிடம் விடைபெற்று நீங்கிய பராந்தகனைத் தொடர்ந்து விக்கியண்ணனும் புறப்பட்டான்.

"அக்கா! இஃதென்ன நான் இங்குக் காண்பதும்?"

"தம்பி, என்னை எதுவும் கேட்காதே. உன் தலைவர் பராந்தகருடன் இங்குத்தான் வருகிறார். அவரை நீயே கேட்டு அறிந்துகொள்."

கடம்பமாதேவியின் கண்கள் குரவைக்கூத்தில் பதிந்தன; ஆனால், அவள் கவனமோ வருவோர்தம் காலடி ஓசையில் பதிந்திருந்தது.

"இளவரசியாருக்கு என் வணக்கங்கள்."

கடம்பமாதேவியின் தலைமட்டும் திரும்பியது.

"ஓ! பராந்தகரா? வாருங்கள்; வாருங்கள். உங்களை நேரில் பார்த்துப்பேசி எத்தனை ஆண்டுகள் ஆகின்றன!"

"ஆம், இளவரசி. உங்களைப் பார்க்காத காலம் என்வாழ்வின் பாழான காலம். இளவரசியின் அருள் எளிதில் கிடைக்கக் கூடியதில்லையே ! "

"இன்றும் அன்றுபோலவே இருக்கிறீர்கள். தோற்றத்திலோ பேச்சிலோ எந்த மாற்றமும் ஏற்படக் காணோம். நிற்கிறீர்களே? அமருங்கள்."

பராந்தகன் இளவரசியின் அருகில் அமர்ந்தான்; கடம்பமாதேவி பக்கத்தில் அமர்ந்திருந்த ஆதித்தன் பக்கம் திரும்பிப் பேசினாள்.

"ஆதித்தா! இதோ வந்திருக்கிறார் உன் தலைவர்; ஏதோ கேட்க வேண்டுமென்றாயே, அவரிடம் கேளேன்."

ஆதித்தன் பேசவில்லை; அமைதியாக அமர்ந்திருந்தான்.

தனித்தமர்ந்திருந்த தமக்கையைக் கண்ட ஆதித்தன் வியப்படைந்தான். எங்கே சென்றாள் மாதேவி? இளவரசியை நீங்கி எப்போதும் இருக்கமாட்டாளே! இன்றுமட்டும் என்ன ஆனாள்?

"அக்கா, மாதேவி எங்கே?"

கடம்பமாதேவி சொற்களால் விடையளிக்கவில்லை. அவளின் கண்கள் ஒருபுறமாய்த் திரும்பின. அந்தக் கண்கள் திரும்பிய திக்கை நோக்கிய ஆதித்தன் திடுக்கிட்டான். மாதேவியா அவள்? அவன் காண்பது உண்மையா? அவனுடன் அன்றி வேறொரு ஆடவனுடனும் பேசியும் அறியாத மாதேவியா அவள்?

ஆதித்தனால் நம்பமுடியவில்லை. அவள் கண்களில் இத்துணை ஒளியா? முகமா? முழுமதியா? அந்த முகத்தில் தான் எத்துணை மகிழ்ச்சி! எப்படி அகமலர்ந்து சிரிக்கிறாள்! இந்த மலர்ச்சியை ஆதித்தன் பார்த்ததில்லையே! காரணம் என்ன? அவளின் இரு பக்கங்களில் அமர்ந்திருக்கும் இளைஞர்களில் யார் காரணமாகக் கூடும். பராந்தகனா? அபராசிதனா?

மாதேவியின் மகிழ்ச்சிக்குக் காரணம் யார்? பராந்தகனைப் பகைவனை ஒப்பவன்றோ பல்லவ இளவரசன் அபராசிதன் பார்க்கிறான்; அதன் பொருள் என்ன? பொறாமைதானே? அப்படியென்றால், மாதேவி பராந்தகனை விரும்புகிறாள் என்பதா?

பாண்டிய இளவல் பராந்தகன் முகம் எதையும் வெளிப்படுத்த வில்லையே? அதனால் என்ன? அவன்தான் எப்படிச் சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறான்! அந்தப் பேச்சில் மாதேவியின் மனம் ஈர்க்கப்படுவது இயல்பே. அந்தச் செயல் பல்லவ இளவரசன் அபராசிதனுக்கு மனப்புழுக்கத்தை உண்டாக்குவது உண்மையே!

அபராசிதன் மட்டுமா கலக்கம் அடைந்தான்? ஆதித்தன் கண்கள் சிவந்தன. அவனுடைய மாதேவியா அப்படி நடந்து கொள்கிறாள்? அவனால் பொறுக்கக் கூடவில்லை. எப்படிப் பொறுக்கக் கூடும்? அவன் கொண்டிருந்த எண்ணம் என்ன? அவள் நடந்துகொள்ளும் முறை என்ன? சோழ இளவரசனுக்குச் சொந்தமாக வேண்டியவள் பிறரோடு பேசுவதும் தவறில்லையா?

அந்தப் போக்கற்ற பெண்ணின் வேதனைக்குக் காரணமாய் விளங்குவது? எண்ணியார் எண்ணியாங்கு இன்பத்தைத் தரவேண்டிய இறைவனா, எண்ணமே அவனாகக் கொண்ட அவளெண்ணத்தைப் புண்ணாக்குவது?

'கண்ணே, மணியே, கரும்பே, தேனே; என் எண்ணமெல்லாம் நீக்கமற நிறைந்தவள் நீயன்றோ? நீயின்றி நானில்லை. என்னாசைக்கு ஏற்றவளே! உன்னையன்றி என்னுள்ளம் இன்னொருத்தியை எண்ணிடுமோ? அழகு மயிலனையாய், அன்பிலான் நானில்லை. உன்னை ஒருபோதும் உறங்கையிலும் நான் மறவேன். பெண்ணே, பெட்டகமே; பிரிவேன் நானென்ற பேதைமையும் உனக்கெதற்கு? கண்ணை இமை காப்பதுபோல் உன்னை நான் காத்திடுவேன். அஞ்சற்க அருமருந்தே அணைத்தின்னே கலந்திடுக', என ஆசை மொழிகளை அள்ளி இறைத்துக்கூடி மகிழ்ந்த குமரன், 'வருகிறேன்' என்றுரைத்த வண்ணம் மீண்டும் வரக்காணோம் என்றால் அந்த வஞ்சி உடல்மட்டுமா? உள்ளமும் வருந்தத்தானே செய்யும்.

எங்கும் மக்கள் வெள்ளம்! எழிலுற அமைக்கப்பட்டிருந்த ஆடலரங்கு எல்லோர் உள்ளத்தையும் ஈர்த்தது. எல்லாம் சிறப்புற நடந்துகொண்டிருந்தாலும் அங்கு ஒரு சிறுகுறை இருக்கவே செய்தது. இத்தனை ஆண்டுகளாக நடந்துவந்த ஆடலரசி வண்டார்குழலியின் நடனம் இல்லாதது கலை ஆர்வம் மிக்கோரிடம் சிறு வருத்தத்தை உண்டாக்கியது. வண்டார்குழலியின் ஆடலுக்கு மாற்றாகக் குரவைக் கூத்து நடந்து கொண்டிருந்தது.

ஆடலரங்கின் சுற்றுப் பகுதியில் உயரே அரசகுடும்பத்தினர் அமர்ந்து சுவைப்பதற்கென மாடங்கள் அருகே அமைக்கப் பட்டிருந்தன. அம்மாடங்களில் அழகிற்கு அழகுசெய்வாரென அரசகுல அணியிழையினரும் பெருங்குடி மக்களும் அமர்ந்திருந்தனர்.

இளவரசி கடம்பமாதேவி தனித்தமர்ந்திருந்தாள். அவளின் நாட்டம் குரவைக் கூத்திலே பதிந்திருந்தது. 'நலனுண்டு நல்காதான்' என்ற சொற்றொடர் அவளின் எண்ணத்தை விரித்து எங்கெங்கோ அழைத்துச் சென்றது.

மறுத்துவிட்டாளாம். அப்படியென்றால் அவள் உங்கள்மேல் கொண்டுள்ள ஆழ்ந்த அன்பு அளப்பரும் தன்மைத்தன்றோ! என் நெஞ்சம் எங்கே குற்றம் செய்துவிட்டோமோ என்று குறுகுறுக்கிறது. அவள்மேல் நீங்கள் கொண்ட அன்பின் திறமும் மிகுதியாகத்தான் இருக்க வேண்டும். அதனாற்றான் இளவரசி அழைத்துவரும்படி ஆளனுப்பியும் அவள் வீட்டிலேயே இருந்துகொண்டு வராமல் இருந்துவிட்டீர்."

"தேவி, காரணம் அஃதில்லை."

"உங்கள் காரணம் எதுவும் எனக்குத் தேவை இல்லை. என் ஆணையைக் கேட்டும் கீழ்ப்படியாத முதல் ஆள் இந்த நாட்டிலே நீங்கள் ஒருவராகத்தான் இருக்கமுடியும். உம்! என்னில் ஒன்றாய் ஒன்றிவிட்ட உங்களை நான் என்ன செய்யக்கூடும்?"

## 23. காதல் தந்த வேதனை

*"ஆடுதுமே தோழி ஆடுதுமே தோழி*
*அஞ்சலோம் பென்று நலனுண்டு நல்காதான்*
*மஞ்சுசூழ் சோலை மலையருவி ஆடுதுமே."*

பாட்டின் பொருள் அதைப்பாடிய பாவையின் நெகிழ்ந்த குரலில் மட்டுமின்றி முகத்தோற்றத்திலிருந்தும் நன்கு தெரிந்தது. ஆற்றாமையால் அவள் வெளிப்படையாக அழவில்லைதான்; ஆனால், அவள் உள்ளம் உருவழிந்து கொண்டிருந்ததைப் பாடலில் வெளிப்பட்ட நெகிழ்ச்சி அனைவருக்கும் அறிவிக்கத் தக்கதாய் அமைந்திருந்தது.

எல்லா ஆண்களுமே இப்படித் தாமா? சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியாத வீரர்கள் தாமா அனைவரும்? அடடா! அந்தப் பெண்ணின் கண்களில் தோன்றும் அவலத்திற்கு அவன்தானே காரணம்! அவனென்ன மற்றவரைப்போல் பொதுமையானவனா?

ஆதிமூலா எனவழைத்த யானையின் அல்லலைப் போக்க அன்று ஓடோடி வந்த அந்தமில்லாதவனின் அரிய மருமகனா,

"இளவரசியாக நான் இல்லாது எளிமையான ஏழைக் குடும்பத்துப் பெண்ணாக இருந்திருந்தால்?"

"ஏழைக் குடும்பத்துப் பெண்ணென்றில்லை, இழிந்த குடும்பத்துப் பெண்ணாக நீங்கள் இருந்திருப்பினும் என்மனம் பொருட்படுத்தியிருக்காது. உண்மையான அன்பிற்கு உயர்வு தாழ்வும் உண்டோ? அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்பதை நீங்கள் அறிவீர்களே!"

"அதையும் பார்க்கலாம்! அதற்கான காலம் வெகுதொலைவில் இல்லை."

கடம்பமாதேவி எழுந்து கொண்டாள். விக்கியண்ணன் அசையாது அமர்ந்திருந்தான்.

"வாருங்கள்; போகலாம்."

"அதற்குள்ளாகவா?"

ஆசை அவன் பேச்சில் வெளிப்பட்டது. அதனால் உள்ளம் நெகிழ்ந்த கடம்பமாதேவி தன்னிரு கைகளை நீட்டினாள். அவற்றைப் பற்றுக்கோடாய்க் கொண்டெழுந்த விக்கியண்ணன் அவளைப் பின்தொடர்ந்தான்.

"என் தங்கையின் ஆடலும் பாடலும் இவ்வாண்டு இல்லையாமே? உண்மைதானா?"

விக்கியண்ணன் ஏதும் புரியாது திகைத்தான்.

"உங்கள் தங்கையா? யார் அவர்?"

"வேறு யார்? வண்டார்குழலியைத்தான் குறிப்பிடுகிறேன்! அவள் எனக்குத் தங்கை உறவன்றோ? உங்களுக்குள் இத்துணை ஈடுபாடு இருக்கும் என்று நான் எண்ணியவள் இல்லை. எட்டாண்டுகளாகத் தொடர்ந்து, துர்க்கை விழாவில் ஆடிவந்திருந்த வண்டார்குழலி, உங்கள் தொடர்பால் இந்த ஆண்டு ஆட

"ஏன் தேவி? உங்களைத் தொடும் உரிமையை நான் இன்னும் பெறவில்லையா?"

"உங்களுக்கிலாத உரிமையா? உலகறிய அந்த உரிமையைத் தாங்கள் பெறுவதன்றோ உங்களுக்குப் பெருமை! அதற்குள் என்ன தேவை? ஆசைக்கென உங்களுக்கு அவளொருத்தி போதாதா?"

விக்கியண்ணன் வேதனை கலந்த குரலோடு விடையளித்தான்.

"பேச்சுக்கொருமறை அந்தப் பெண்ணைக் குறிப்பிட்டு என்னைத் துன்புறுத்த வேண்டா. நீங்கள் முதலில் கேட்டதற்கு விடைசொல்கிறேன். உங்களை யாரென்று நான் அறிவதற்கும் முன்பாகவே என்னுள்ளத்தைத் தந்துவிட்டேன் என்பது உங்களுக்கு நினைவிருக்கலாம்?"

"நினைவிருக்கிறது. அதேபோல், எந்தப் பெண்ணிடமும் எண்ணத்தை இழந்துவிடும் உங்கள் இயல்பும் நினைவிருக்கிறது. நான் கேட்பது, இளவரசி இவளென்று அறிந்தபிறகுதானே என்னை மணந்துகொள்ள நீங்கள் விழைந்ததும்?"

"தேவி! நீங்கள் நம்ப வேண்டுமென்பதற்காக நான் இப்போது சொல்லவில்லை. பெண்களின் அழகு என்னைப் பேதலிக்கச் செய்யும் என்பது உண்மைதான்! ஆனால், உங்களைப் பார்த்ததும் என்னுள்ளத்தில் உயர்வான எண்ணமே ஓங்கியது. மற்ற பெண் களைக் கலந்தபோதும் ஏற்படாத எண்ணம் உங்களைக் கண்ட கணமே ஏற்பட்டது. உங்களைக் கண்டபோதே உங்களைத் தான் மணந்துகொள்ள வேண்டுமென்ற நினைப்பு எனக்கு முதன்முதலில் உண்டாகியது. வாழ்க்கைத் துணை என்ற சொல்லே அன்றுதான் என் கருத்தில் வேரூன்றியதெனின், அது பொய்யில்லை; என்னை நீங்கள் நம்பவேண்டும்."

விக்கியண்ணன் பேச்சால் கடம்பமாதேவியின் நெஞ்சம் நெகிழ்ந்தது; அவள் கண்களில் மெல்லக் கண்ணீர் திரையிட்டது.

"இருபத்தி எட்டா? என்னிடம் தேவிக்கு எப்போதுமே விளையாட்டுதான்!"

"போதும்; பேச்சை மாற்ற வேண்டா."

கடம்பமாதேவி சீறினாள்.

"என் உயிருக்குயிரான உங்களுக்குச் சினமும் ஓர் அழகுதான்!"

கன்னத்தை மெல்லக் கிள்ளினான் விக்கியண்ணன்.

"உம்! என் வயதில் நான் சந்தித்தவர்களின் எண்ணிக்கை ஏராளம். ஓரளவிற்குப் பெரும்பாலான ஆண்களின் எண்ண ஓட்டங்களைச் சரியாகவே கணித்து வந்திருக்கிறேன். அப்படியிருக்க, என்னோடு ஐக்கியமாகிவிட்ட உங்கள் உள்ளத்தைமட்டும் நான் அறிந்துகொள்ளாதிருப்பேனா? ஐயா, உண்மையாக ஒளிவு மறைவின்றிச் சொல்லுங்கள். நான் மட்டும் இந்நாட்டு இளவரசியாக இல்லாதிருந்தால், என்னை மணந்துகொள்ளுமாறு வேண்டியிருப்பீர்களா? அறிந்தோ, அறியாமலோ உங்களோடு நான் ஒன்றாகிவிட்டேன்! இனிமேல் எனக்கென நீங்களின்றி வேறு வாழ்வில்லை. எனவே, உங்கள் நெஞ்சத்தைத் தொட்டு உண்மையைச் சொல்லுங்கள்."

"தேவி! எனக்கென்று ஏது தனி எண்ணம்? என் எண்ணத்தையும் தன்னுள் கொண்டுவிட்ட உங்கள் உள்ளத்தைத் தொட்டு உண்மையைச் சொல்கிறேன்."

விக்கியண்ணனின் வலக்கை கடம்பமாதேவியின் நெஞ்சில் படிந்தது. கடம்பமாதேவி அதிர்ச்சியோடு அவன் கண்களை நோக்கினாள்.

"உம்! கையை எடுங்கள். முறையற்று நடப்பதில் திறமை மிக்கவர் நீங்கள்!"

விரைந்து கையை விக்கியண்ணன் விலக்கிக் கொண்டான்.

"போதும்; கால்களை விடுங்கள்! பொல்லாதவர் நீங்கள்! இதுதான் விடையா?"

"வேறென்ன? இத்தனை ஆசைகளை என்னகத்தில் சுமந்துகொண்டு நாம் ஒன்றாக இணையும் இன்ப இரவுகளுக்காக ஏங்கிக் காத்துக் கொண்டிருக்கும் நான், உங்களை வேறொருவர் உரிமை கொண்டாட விட்டுவிடுவேனா? கையில் வாளும் மெய்யில் உயிரும் உள்ளவரை, உங்களை நானடைவதை எந்த ஆற்றலும் தடுத்து நிறுத்தமுடியாது."

"உண்மைதானா நீங்கள் சொல்வது?"

கடம்பமாதேவியின் கண்கள் மூடியிருந்தன; கனவுலகிலே அவளெண்ணம் பறந்துகொண்டிருந்தது.

"வீரரே! நீங்கள் ஒரு தன்னலவாதி."

அழகுக் கால்களோடு விளையாடிக் கொண்டிருந்த அவன் கைகள் அவளின் பளிங்கு முகத்தை நாடின. முகத்தைக் கைகள் தாங்க, கண்கள் வேதனையைக் காட்ட விக்கியண்ணன் பேசினான்.

"தேவி! இஃதென்ன புதுக்குழப்பம்? நானா தன்னலவாதி?"

"ஆம்; நீங்களே தான்! உறவுக்கு ஒருத்தி உங்களுக்குத் தேவை; அதற்கு அமைந்தவள் ஆடலரசி வண்டார்குழலி! உயர்விற்கு ஒருத்தி உங்களுக்குத் தேவை; அதற்கு நான் அமைந்திருக்கிறேன்! உண்மைதானே?"

"தேவி; என்னை மிகவும் புண்படுத்துகிறீர்கள்."

"எனக்கென்ன வயது?"

"நானெப்படி அறிவேன்?"

"இருப்பத்தி எட்டு."

மாறாக அவளுடைய அழகு சிந்தும் செந்தாமரை அடிகளிலே பதிந்தன.

"என்ன இது? கால்களை விடுங்கள்."

"எத்துணை அழகான அமைவான அடிகள்! தாமரை மலரின் மென்மையும் தண்மையும் இங்கன்றோ இருக்கின்றன!"

"ஐயா! நீங்கள் ஓர் ஆண்மகன்; அதிலும் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உயர்ந்த வீரர்! அப்படிப்பட்ட நீங்கள், பெண்ணொருத்தியின் கால்களை உங்கள் கைகளால் பற்றுவது பெருமையுடைய செயலில்லை."

"தவறு, தேவி. இதைவிடப் பெருமை வேறு என்ன இருக்க முடியும்?"

"நான் உங்களைக் கேட்டதொன்று; நீங்கள் செய்வதோ ஒன்று."

"உண்மைதான். ஆனால், என் செய்கையில் உங்கள் கேள்விக்கு விடை உள்ளது."

"என்ன உளறுகிறீர்கள்?"

"தேவி! உளறல் இல்லை. நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். அமைதியான இரவு! நிலவு பால்போல் ஒளிவீசுகிறது. நிலவின் ஒளிக்கற்றைகள் சாளரத்தின் வழியாகப் பாய்ந்து அறையின் நடுவே அழகுற அமைந்திருக்கும் மஞ்சத்தைக் குளிர் விக்கின்றன. நீங்களும் நானும் அங்கே தனியாக இருக்கின்றோம். தண்ணென்ற தென்றல் தனித்தணைத்திருக்கும் நம்முடலைத் தழுவிச் சிரிக்கிறது. இப்போது கொண்டிருக்கிறீர்களே சினம், அதே சினம் உங்களுக்கு அப்போதும் என்மேல். பஞ்சுபோன்ற இந்த அழகு அடிகளால் மஞ்சத்தில் அருகே படுத்திருக்கும் என்பரந்த நெஞ்சில் உதைக்கிறீர்கள். ஐயோ! வலிக்குமே என்று நான் இந்த மலரடிகளைப் பற்றி அன்போடும் ஆசையோடும் என்னிதழ்களைப் பொருத்தி இன்னலைப் போக்குகிறேன்."

எழுந்திருக்க முயன்ற விக்கியண்ணனின் கையைப் பற்றிக் கடம்பமாதேவி தடுத்தாள். வேறுவழியின்றிக் குழப்பத்தோடு அவன் அமர்ந்தான்.

"மாதேவி அபராசிதரோடு தனியாக இருப்பாரே; நாம் போக வேண்டாவா?"

"நீங்கள் ஏற்பாடு செய்த சந்திப்பாயிற்றே; நீங்களே அதில் குறுக்கிடப் போகிறீர்களா? ஏன் அதிர்ச்சி? இவளுக்கு எப்படித் தெரிந்தது என்று திகைக்க வேண்டா. இந்தச் சோழ நாட்டின் எந்த மூலையில் எது நடந்தாலும் செய்தி என்னை வந்து சேரும் என்பதை இன்னுமா நீங்கள் அறிந்து கொள்ளவில்லை? எல்லாம் நான் அறிவேன். யானைக்கு மதம் ஏன் பிடித்தது? சரியாக அந்த நேரத்தில் நீங்கள் பல்லவ இளவரசரோடு எப்படி வந்தீர்கள்? அனைத்தும் அறிவேன்; நீங்கள் வீணே மறுக்க வேண்டா. ஐயா, உங்களுக்கு உகந்த செய்கைகளா இவை? உண்மையான வீரர் செய்யக்கூடிய செயல்களா இவை? பாணர்கள் தங்கள் வயிற்றுக்காகச் செய்யும் இழிவான செயல்கள் உங்களுக்கு ஏற்றவையா?"

"தேவி! நீங்கள் இன்னும் என்னை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. மாதேவி எனக்கு உடன்பிறவாத் தங்கை என்றது வெறும் ஒப்புக்கன்று. அவளின் நல்வாழ்வில் எனக்குப் பெரும் நாட்டம் உண்டு. அபராசிதர் எப்படிப்பட்டவர் என்பதை நீங்கள் அறிந்திருக்கக்கூடும். அவர் நேற்றுவரை எந்தப் பெண்ணையும் நேர்நின்று பார்க்காதவர்; மேலும் பல்லவப் பேரரசின் ஒரே வழித்தோன்றல்! அப்படிப்பட்டவரை அடைந்தால் மாதேவியின் வாழ்வு மகிழ்ச்சியில் திளைக்குமில்லையா?"

"அது சரி; பராந்தகர் நாளை இங்கு வருகிறாரே, அதன் பொருள் என்ன? பாண்டியப் பேரரசின் மரபுரிமை அவருக்கில்லை. பாண்டியப்படையின் தலைவர்களில் அவரும் ஒருவர். அப்படிப் பட்டவரை எனக்கு மணாளனாக ஆக்கி என் வாழ்வில் எதை மலர வைக்கப் போகிறீர்கள்?"

ஆழ்ந்து நோக்கிய அவள் கண்களை எதிர்த்து நோக்கும் ஆற்றல் விக்கியண்ணனுக்கு இருக்கவில்லை. அவன் கண்கள்

நந்திவர்மர் மீது அவர்தம்பி காடவரால் பாடப்பெற்ற பாடல் அது. பல்லவர் ஆட்சியில் தமிழ் வளர்க்கப்படவில்லை; வடமொழியே வளர்க்கப்பட்டது. பெருந்தேவர் பாரதம் பாடினார்; ஆனால், அவர் பாட எடுத்துக்கொண்ட பொருள் வடவர்க்கே உரியது; அதனால் அந்த நூல் வாழ்விழந்து கொண்டிருக்கிறது. நந்திவர்மரைப்பற்றி அவர் தம்பியால் பாடப்பெற்ற கலம்பகமும் தமிழை வளர்க்கப் பாடப்பட்டதன்று; தன்னண்ணனை அழிக்கவென்று அறம் வைத்துப் பாடப்பட்டது."

"ஐயா! என் அறியாமைக்காக வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் நிறையவே அறிந்துவைத்திருக்கிறீர்; நான் ஒப்புக்கொள்கிறேன்."

"நீங்கள் சொன்ன பாடலின் உட்கருத்து எனக்குப் புரியாமல் இல்லை. தலைவனின் காதற்பரத்தையின் வீட்டிலிருந்து பாடிய பாணனைத் தலைவி வெளிப்படையாகத் திட்டாமல் திட்டுகிறாள். ஆனால், நீங்களோ என்னை நேரிடையாகவே பேயென்றீர்; நரியென்றீர்; மேலும் நாயென்றீர். அதனாலென்ன? அனைத்தும் எனக்குத் தகும்."

"ஐயா வீரரே! உங்களைப் பழிக்க நான் யார்? எந்த உரிமையில் உங்களை நான் எதுவும் சொல்லக்கூடும்?"

"தேவி! என்னைப் பழித்துப்பேச விழைந்தால் நேரிடையாகவே பேசுங்கள். ஆனால், இப்படியெல்லாம் பிரித்துப் பேசி எரித்துக் கொல்ல வேண்டா."

"நானா உங்களைக் கொல்கிறேன்?"

"ஆம், ஆம்."

"பொய்! நானா உங்களைக் கொல்கிறேன்? இல்லை! நீங்கள்தாம் என்னை உயிரோடு எரித்துக் கொல்கிறீர்கள்! உதட்டால் ஒன்று சொல்கிறீர்கள்; உள்ளத்தால் வேறு எண்ணுகிறீர்கள். பஞ்சணைக்கு ஒருத்தி; பகட்டிற்கு மற்றொருத்தி! அப்படித்தானே? எங்கே எழுந்திருக்கிறீர்கள்? அமருங்கள்."

"புரியவில்லை? என்னை ஏற்றுக்கொள்ளத்தான்."

அவன் பிடியினின்றும் விடுபட்டு மாதேவி முன்னே நடந்தாள்.

"அக்கா என்னைக் காணாமல் இந்நேரம் தேடிக் கொண்டிருப்பார்; வாருங்கள்."

ஊசி செல்வழி நூல் செல்வதொப்ப, அபராசிதன் மாதேவியைப் பின்தொடர்ந்து மகிழ்வோடு நடந்தான்.

## 22. இழிந்த இதயம்

*"ஈட்டு புகழ்நந்தி பாண!நீ எங்கையர்தம்*
*வீட்டிருந்து பாட விடிவளவும் - காட்டிலமும்*
*பேயென்றாள் அன்னை; பிறர்நரியென் றார்;தோழி*
*நாயென்றாள்; நீயென்றேன் நான்."*

"வேளிர்குல வீரரே! இந்தப் பாடலை நீங்கள் கேள்விப் பட்டதாவது உண்டா?"

இளவரசி கடம்பமாதேவியின் குரலிலே ஏளனம் இழையோடியது.

"தேவி, என்னைத் தாழ்த்துவதால் உங்களுக்கு இன்பம் விளைகின்றதென்றால் அப்படியே செய்யுங்கள். எனக்கு மகிழ்ச்சிதான்."

விக்கியண்ணன் பேச்சில் வேதனை வெளிப்பட்டது.

"நானா உங்களைத் தாழ்த்துகிறேன்?"

"ஆம், தேவி, என்னை ஒரு கவிஞனாக நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை; அஃது உங்கள் விருப்பம். ஆனால், என்னை ஏளனம் செய்யாமல் இருக்கலாம்; இல்லையா? முப்பது ஆண்டு களுக்கு முன்னர்ப் பாடப்பெற்ற பாடலைச் சொல்லி என்னைக் கீழ்மைப்படுத்துகிறீர்கள். தெள்ளாறெறிந்த பல்லவ மன்னர்

அவன் அவளுடலை அணைத்து மார்போடு சேர்த்துக் கொண்டான். தடுத்து விலக முயன்ற மாதேவியின் செயலில் முன்னைய வலிவு அப்போது இருக்கவில்லை.

"என்ன புரிந்ததாம்?"

"உன்னை நான் தொடுவதை ஏன் நீ முதலில் வெறுத்தாய் என்பதுதான்."

"ஏனாம்?"

தேன்துளிகள் சிந்தின.

"வேளிர் குலத்துப்பெண், சேர சோழ பாண்டியர் இனத்தன்றி வேறொரு இனத்தில் உறவுகொள்ள விரும்புவது மரபில்லைதான்."

"அப்படியொன்றும் நான் நினைக்கவில்லை."

நாணத்தால் மாதேவி அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

"உண்மையாகவா?"

"உம். எனக்கும் உங்கள் குலத்தைப்பற்றித் தெரியும். பாண்டியர் குலத்திலே மணவுறவு கொண்டவர் உங்கள் தந்தை. அப்படியிருக்க உங்களை மணக்கக் குலம் குறுக்கே நிற்கக் கூடுமா?"

"மிகச் சரியாக உரைத்தாய். மாதேவி?"

"சொல்லுங்கள்."

"சரிதானே?"

"எதற்கு?"

"என் நாட்டில் நான் இட்டதே சட்டம். இப்போதே என்னுடன் வா; உன்னை நாளைக்கே என் மனைவியாக எல்லோரும் வாழ்த்த ஏற்றுக் கொள்கிறேன். பெண்ணே, உன் பெயர் என்ன?"

"உங்களுக்குத் தெரியாதா?"

"தெரிந்தால் கேட்பேனா?"

"இளவரசியார் என்னைப் பெயரிட்டழைத்தபோது என் பக்கத்தில்தானே இருந்தீர்கள்? அப்போதில்லா அக்கறை இப்போது எதற்காம்?"

"இளவரசியார் உன்னைப் பெயரிட்டழைத்தாரா? அப்போது நான் அருகில் இருந்தேனா? நீ சொல்வது உண்மையெனில், அதை நான் செவிமடுக்கவில்லை. அதற்குக் காரணம் நீதான். உன்னைக் கண்ட அக்கணமே என் உணர்வுகள் அத்தனையும் உன் வசமாயின."

"பேசக் கற்றவர் நீங்கள்!"

நாணத்தால் நகர்ந்து நின்றாள் மாதேவி. நெருங்கி அணைக்க முயன்றான் அபராசிதன். ஆனால், அவன் அணைப்பைத் தவிர்த்து மாதேவி பிரிந்து நின்றாள்.

"பெண்ணே?"

'உம்."

"உன் பெயர்?"

"மாதேவி."

"மாதேவி? இப்போது எல்லாம் புரிகிறது."

"புரிகிறது இளவரசே! இளவரசியார் கடம்பமாதேவி ஆண்களைப்பற்றி நிறையவே கூறியிருந்தார். அவைகள் எனக்கு முன்னர்ப் புரியவில்லை; ஆனால், இப்பொழுது நன்கு புரிகின்றன. தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள ஆண்கள் தகாத வழிகளையும் நாடத் தயங்க மாட்டார்கள் என்பது எத்துணை உண்மை!"

"பெண்ணே! நீ என்னையும் பிறரைப் போல் எண்ணுகிறாய். நான் உன்னை என் மனைவியாக ஏற்றுக்கொள்கிறேன். ஏன் சிரிக்கிறாய்? அழகில் மயங்கிய ஆண்மகனின் ஆசைமொழிகள் இவையென்று எண்ணுகிறாய்; அப்படித்தானே? நீ என்னை அறியமாட்டாய். பெண்களின் பின்னே சுற்றித்திரியும் பேயனன்று நான். என்னுள்ளத்தில் இடம்பெற்ற முதல்பெண் நீதான். உன்னை நான் துணையாக அடைந்துவிட்டால், என் வாழ்க்கையில் முதலும் முடிவுமானவள் நீயாகவே இருக்கமுடியும். என்ன சொல்கிறாய்?"

மாதேவி தென்றலென மெல்ல அசைந்து நடந்தாள். நிழலென அபராசிதனும் தொடர்ந்தான்.

"ஆசை மட்டுமன்று, வேகமும் அறிவுக்கு எதிரிதான். எளிதாகச் சொல்லிவிட்டீர் என்னைத் தங்கள் மனைவியாக ஏற்றுக் கொள்வதாக. அதை நம்பி ஏற்று அகமகிழ்வேனாயின், என்னைவிட ஏளனத்திற்குரியவர் யாரும் இருக்கமுடியாது. நீங்களோ இளவரசர், நானோ..."

"எளிமையானவள்! அவ்வளவுதானே? பெண்ணே! எங்குல வரலாறு உனக்குத் தெரியுமா? என் தந்தைக்குத் தந்தையை அறிவாயா? அவர்தான் என் பாட்டன் தெள்ளாறெறிந்த நந்திவர்மன்! அவரைப் பெற்றெடுத்த தாய் அரசகுலத்தைச் சேர்ந்தவர் இல்லை. ஒருவருடைய உயர்வு அவர் பிறப்பில் இல்லை; நடந்துகொள்கின்ற செயல்களில்தான் உள்ளது. பிறப்பில் உயர்வுதாழ்வு பார்த்து என்னை ஒதுக்கிவிடாதே. பெண்ணே, என் கண்களைப் பார்."

அபராசிதன் கைகள் மாதேவியின் கைகளைப் பற்றின. அவன் பிடியினின்று விடுபட மனமின்றி அவள் அவன் கண்களை நோக்கினாள்.

"ஏன்? சப்பென்று போய்விட்டதோ? இயற்கைதான்! பல்லவப் பேரரசின் முடியைத் தாங்கவேண்டிய இளவரசர் எளிய ஏழைப் பெண்ணிடம் ஈடுபாடுகொள்வது சரியில்லைதான். அதனால்தான், இளவரசருக்கு என்நிலையை முதலிலேயே விளக்குகிறேன்."

அபராசிதன் அரசகுலத்தைச் சேர்ந்தவனாக இருப்பினும் எளிதில் உணர்ச்சிக்கு இடங்கொடுப்பவன் என்பதை அவன் கண்கள் எடுத்துக்காட்டின. அடுத்து அவன் கொண்ட செய்கை அந்த எண்ணத்தை உறுதிப்படுத்துவதாய் இருந்தது. இல்லை யென்றால், சற்றுமுன்னரே சந்தித்திருந்தவளின் கைகளைப் பற்றத் துணிவு ஏற்பட்டிருக்குமா? துணிவே ஏற்பட்டிருப்பினும் சற்றேனும் தயக்கமாவது இருந்திருக்க வேண்டாவா?

"பெண்ணே, நீ என்னைப் பற்றி என்ன எண்ணிக் கொண்டிருக்கிறாய்?"

"அருள்கூர்ந்து உங்கள் கைகளை அகற்றிக் கொள்கிறீர்களா?"

அமைதியாகப் பேசினாள் மாதேவி.

"ஏன்? என் கைகள்பட்டால் உன் தூய்மைக்குக் குறைவந்து விடுமா?"

மாதேவி பதிலளித்தபோது அவளின் பேச்சில் அமைதியும் உறுதியும் கலந்து ஒலித்தன.

"இல்லை. எளியவளான என்னைத் தொட்டு, அதனால் இளவரசருக்கு எந்த இழுக்கும் ஏற்பட்டுவிடக்கூடாதில்லையா?"

"வேண்டா பெண்ணே. நீ கூறும் பழிப்புரையைத் தாங்கும் உரம் என் நெஞ்சிற்கில்லை. உன்னைத் தொடுவதால் ஒருவன் உயர்வே அடையக் கூடும்! இளவரசன்தான்; பல்லவ நாட்டிற்கு! உனக்கில்லை. உன்னைப் பொருத்தவரை உன் அருளை இரைஞ்சி நிற்கும் ஒரு பக்தன். புரிகிறதா?"

"இளவரசருக்கு என்ன ஐயம்?"

விக்கியண்ணன் கேட்டும் ஆதித்தன் விடையளிக்கவில்லை.

"தம்பி, உன் வீரம் இவ்வளவுதானா? எண்ணியதை எடுத்துச் சொல்லும் உன் திண்ணிய நெஞ்சம் என்னானது? இருக்கட்டும்; நானே கேட்கிறேன். ஐயா, வீரரே! அங்கு அந்த மாடத்தைப் பாருங்கள்; அவர்கள் யார்?"

விக்கியண்ணின் பார்வை கடம்பமாதேவி காட்டிய மாடத்திற்குத் திரும்பியது. அவன் பேசினான்.

"அமைச்சர் நாங்கூர் வேளிர் அவர்களின் மகள் மாதேவி; அவருடன் அமர்ந்திருப்பவர் பல்லவ இளவரசர் அபராசிதவர்மர். ஏன் இளவரசி?"

"மிகச் சரியாகச் சொன்னீர்கள்! அவர்களிடையே என்ன உறவு?"

"உறவா? இளவரசியார் கேள்வி எனக்குப் புரியவில்லை."

கடம்பமாதேவி கலகலவென்று சிரித்தாள். அவள் சிரிப்பின் பொருள் அங்கு யாருக்கும் புரிந்திருக்கவில்லை. விக்கியண்ணன் செய்வதறியாது நெளிந்தான்.

"விந்தை! இன்று இந்த நாட்டில் நீங்கள் இட்டதே சட்டம்; எல்லாம் உங்கள் எண்ணப்படியே நடக்கின்றன. அப்படி இருக்க நீங்கள் அறியாதது எதுவும் இருக்கக் கூடுமா?"

"உண்மையிலேயே இளவரசியார் எதைச் சொல்கிறார் என்பது எனக்குத் தெரியவில்லை."

"உங்களுக்காத் தெரியவில்லை? ஏன் ஐயா? எப்போதேனும் நீங்கள் உண்மையைப் பேசுவது உண்டா?"

விக்கியண்ணன் தலையைத் தாழ்த்திக்கொண்டு மெல்லப் பேசினான்.

"இளவரசியாருக்கு என்னைப் பிடிப்பதில்லை என்பது யாரும் அறிந்ததே!".

"அப்படியா? வியப்பாக உள்ளதே! தங்களைத் தன்னுடைய தனித்தலைவரென்று ஏற்றுப்போற்றும் ஆதித்தனுக்கு நீங்கள் ஆற்றும் நன்றிக்கடன் மிகவும் நன்று!"

"இளவரசியார் எதைச் சொல்கிறீர்கள்?"

"எப்படி நீங்கள் அறிவீர்கள்? ஆதித்தனுடைய ஆசைகளை அறிந்தே அழித்தவர் ஆயிற்றே நீங்கள்! இந்த நாட்டு இளவரசன் ஆதித்தனை மணக்கவேண்டிய மாதேவியை மற்றொருவருக்கு அறிமுகப்படுத்தி இரண்டகம் செய்திருக்கிறீர்; அடுக்குமா இது? ஏன் ஐயா மௌனம்? என் தம்பியின் எண்ணத்தை அறிந்திருந்தும் இப்படி ஏன் நடந்து கொண்டீர்? இளமையில் கொண்ட எண்ணங்கள் ஈடேறாமல்போகின் எதிர்காலமே வழிமாறிப்போம் என்பதை அறியாதவரா நீங்கள்? சொல்லுங்கள், ஐயா; ஒன்றுமே உணராதவரா நீங்கள்? எதுவுமே தெரியாமலா இந்தச் செயலை நீங்கள் செய்தீர்கள்?"

விக்கியண்ணன் பார்வை தலைகுனிந்தமர்ந்திருந்த ஆதித்தன் முகத்தில் நிலைத்தது. அங்கிருந்த மற்ற இருவரின் கவனமும் தன்மேல் நிலைத்திருந்ததை விக்கியண்ணன் உணர்ந்தே இருந்தான். இளவரசன் ஆதித்தனிடம் விக்கியண்ணனுக்கு அக்கறை இருந்தது; எனினும் அவனிலும் சோழ அரசு அவனுக்கு இன்றியமையாததன்றோ!

"இளவரசியார் எண்ணம் சரிதான். அனைத்தும் அறிந்தே மாதேவியை அபராசிதவர்மருக்கு அறிமுகப்படுத்தி வைத்தேன்."

"வெட்கமாயில்லை?"

"எதற்கு?"

"இந்த நாட்டு இளவரசனுக்கு இப்படியொரு தீங்கைச் செய்ததற்கு"

"இல்லை. என் செயல்கள் யாவும் இளவரசரின் எதிர்காலத்தை எண்ணியே செய்யப்படுகின்றன. உண்மையான வீரனுக்கு ஒரு நேரத்தில் ஒரு குறிக்கோளே இருக்கவேண்டும். இளவரசர் செய்ய வேண்டியவைகள் ஏராளம்! இளவரசருக்கு அவர் ஆற்ற வேண்டியுள்ள கடமைகளை நான் நினைவுறுத்தத் தேவை இல்லை என்பதை அறிவேன். என்னைப் பற்றி ஆதித்தர் அறிவார். மாதேவியையே எண்ணி மனங்கலங்க இளவரசர் இன்னும் உலகத்தை உணராதவர் இல்லை. இளவரசர் விழைந்தால் எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள். ஒருத்தியையே எண்ணி உள்ளம் சோர்வது உயர்வைத் தராது. எண்ணத்தைப் புலன்கள் விருப்பிற்கு விட்டுவிட்டால், எண்ணியதை எண்ணியாங்கு எய்தல் அரிது. ஆசைகளை அடக்கிவைத்தலோ அடுக்கிக் கொண்டு போவதோ அறிவுடையார் செயல் இல்லை. ஆசைகளைத் தூசென மதிக்கப் பழகவேண்டும்; இல்லையேல், இன்னலில் முடியும். பெண்களைப் பெரிதாகக் கொள்ளாதவர்களால்தாம் பெரும்பெரும் செயல்களை முடிக்க முடியும். ஆயிரம் பெண்களை ஆசைக்கு வைத்துக்கொள்ளலாம்; ஆனால் எந்த ஒரு பெண்ணிடமும் தன்னை இழந்துவிடக் கூடாது."

கடம்பமாதேவி விக்கியண்ணனை வேதனையோடு பார்த்தாள்.

"பராந்தகரே, பார்த்தீர்களா இவரின் அறிவுரையை? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படவேண்டும்; இது வள்ளுவர் வாய்மொழி."

"இவருக்கு அது நன்றாகவே தெரியும். நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஆற்றற்க என்பதை அறிந்தவர்தான்; இருந்தும், என்ன பயன்? தான் செய்யும் தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டியவர், குறைந்தது தன்னைத்தலைவனாக ஏற்றுப் போற்றும் என் தம்பிக்கு நல்லதைப் போதிக்காவிட்டாலும் தவறான வழியினையாவது காட்டாமல் இருக்கலாம் இல்லையா?"

"இளவரசியார் என்னைப் பொறுத்து அருள வேண்டும். பெண்களால் உண்டாகும் மனப்போராட்டம் என்னைப் பொருத்த வரை அறவே இல்லை; காரணம், பெண்களே அனைத்தும் என்ற பேதைமை எனக்கில்லை. ஒருவனுக்கு உணவு, உடை, உறைவிடம் எப்படித் தேவையோ பெண்களும் அந்த அளவிற்கே தேவை என்பது என் எண்ணம். அதனால்தான் வாழ்க்கையை என்னால் இன்பமாக நடத்திச் செல்ல முடிகிறது; எந்தக் கவலையும் இன்றி கடமைகளை முறைப்படச் செய்யவும் முடிகிறது."

"உண்மைதான், ஐயா. உங்கள் எண்ணம் உங்களுக்குச் சரியானதாக இருக்கலாம்; ஏனென்றால். நீங்கள் ஒரு போர் வீரர். ஆனால், ஆதித்தன் இன்று இளவரசன்; நாளையே நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டிய ஓர் அரசன்! அவன் உங்களைப்போல் வரம்பின்றி நடந்துகொள்ளல்தகுமா?"

ஆதித்தன் தன்னிடத்தினின்றும் எழுந்துகொண்டான். அவன் முகம் அகத்தின் துயரைத் துல்லியமாய்க் காட்டியது.

"அக்கா, நான் போகிறேன்."

விக்கியண்ணனும் உடன் புறப்பட்டான், கடம்பமாதேவியின் பேச்சு அவர்களை நிறுத்தியது.

"வீரரே, நீங்கள் எப்படி விரும்புகிறீர்களோ, அப்படி நடந்து கொள்ளுங்கள். உங்கள் வழியில் குறுக்கிட நான் யார்? ஆனால், என் தம்பியை உங்கள் எண்ணப்படி தவறான பாதையில் அழைத்துச் செல்ல வேண்டாவென்று உங்களை வேண்டிக் கொள்கிறேன். மாதேவியை ஆதித்தன் மணந்து கொள்ள வேண்டா; அவன் அவளை மறந்துவிடட்டும்; நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த நெறியினின்றும் அவன் பிறழ நீங்கள் ஒரு கருவியாக இருக்க வேண்டா. ஆதித்தன் பிறந்தது நலங்கிள்ளி பிறந்த நற்சோழர்குடி! ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்."

ஆதித்தனைத் தொடர்ந்து விக்கியண்ணன் வெளியேறினான். அவன் நெஞ்சில் முன்பிருந்த அமைதி இல்லை. இளவரசி தன்னை

எல்லோர் நடுவிலும் இகழ்ந்ததற்காகவோ, ஆதித்தனிடம் விளைந்துள்ள மாற்றத்தை அறிந்ததாலோ அவன் கவலை கொள்ள வில்லை. அவன் கவலை எல்லாம் பாண்டிய இளவல் பராந்தகனைப் பற்றியே!

பராந்தகனை விக்கியண்ணனால் புரிந்துகொள்ள முடியவில்லை. பராந்தகனுக்குக் கடம்பமாதேவியிடம் இருந்த பழக்கத்தின் நெருக்கம் அவன் நெஞ்சில் நெருப்பாய்ச் சுட்டது. விதையொன்று போட்டால் செடிவேறு முளைப்பதோ? பராந்தகனைச் சோழநாட்டிற்குத் தான் வரவழைத்தது எங்கே தனக்கே எதிராக மாறக்கூடுமோ என்ற அச்சம் விக்கியண்ணன் நெஞ்சில் நிறைந்து வேதனையை மெல்ல மெல்லப் பெருக்கித் தொல்லையை விளைத்தது.

# 24. விருந்தும் மருந்தும்

*"மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி*
*ஈயென இரக்குவார் ஆயிற் சீருடை*
*முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்*
*இன்னுயிர் ஆயினும் கொடுக்குவன்..."*

திருவிழா முடிந்த எட்டாம் நாள். தஞ்சை மாநகர் பழையபடி தன்னிலையை அடைந்துவிட்டிருந்தது. விழாவிற்காக அணி செய்யப் பயன்பட்ட தோரணங்கள் கொடிகள் போன்ற அழகுப் பொருள்கள் மட்டுமே ஆங்காங்கே காட்சியளித்து விழாநடைபெற்ற அடையாளத்தை விளக்கின. அவைத்தவிர விழா நடந்துமுடிந்ததற்கான அடையாளங்கள் வேறு எங்கும் இல்லை.

தஞ்சை நகர்தான் அப்படி விளங்கியது; ஆனால், அரண்மனை அன்று விழாக்கோலம் கொண்டிருந்தது. திருவிழாவிற்காகத் தஞ்சைக்கு வந்திருந்த பல்லவ இளவரசன் அபராசிதவர்மருக்கு சோழமன்னர் பரகேசரி விசயாலய சோழர் விருந்தளித்து விடைகொடுத்து அனுப்புகிறார். அரசர் அளிக்கும் விருந்தென்றால் அதன் தன்மையைக் கேட்கவும் வேண்டுமோ!

நடைபெற்றுக் கொண்டிருக்கும் விருந்து, பாண்டிய இளவல் பராந்தகன் இருந்து கலந்துகொண்டிருப்பானேயாயின் மிகவும் சிறப்பாக அமைந்திருக்கும். ஆனால், விக்கியண்ணனின் அழைப்பை ஏற்று விழாவிற்கு வந்திருந்த பராந்தகன், விழாமுடிந்த மறுநாளே விடைபெற்றுச் சென்றுவிட்டான்.

விழா மிகச்சிறப்பாக நடந்துகொண்டிருந்தது. சோழ அரசில் பங்குகொண்டிருந்த தலைமையானவர்கள் அனைவரும் விருந்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். அனைவரும் மிகு மகிழ்ச்சியோடு விருந்தில் ஆழ்ந்திருந்தனர். ஆனால், விக்கியண்ணன் மட்டும் ஏதோ சிந்தனையில் மூழ்கியிருந்தான். தந்தை தாய்க்கருகில் அமர்ந்திருந்த இளவரசி கடம்பமாதேவி அதைக் கவனிக்கத் தவறவில்லை. அந்த நேரத்திலும் அவனுக்கு அப்படி என்ன சிந்தனை?

கலகலப்பான அந்தச் சூழல் பல்லவரையன் வரவால் சிறிது தடைப்பட்டது. எல்லோர் பார்வையும் தன்மேல் பதிந்ததைப் பல்லவரையன் கவனிக்கவே செய்தான்.

கடம்பமாதேவியின் மனம் விரைந்து வேலைசெய்தது. பல்லவரையனின் வருகைக்குக் காரணம் என்ன? அரசர் அளித்துக் கொண்டிருக்கும் விருந்தின் இடையே தடையாக உள்ளே நுழையு மளவிற்கு அப்படி என்ன இன்றியமையாமை இருக்கக்கூடும். விக்கியண்ணனிடம் பல்லவரையன் தெரிவிக்கும் செய்தியின் திறம்தான் என்ன? விக்கியண்ணனின் முகம் இத்தனை மாற்றங் களை அடைவானேன்?

விருந்து முடிவை நெருங்கிக் கொண்டிருந்தது. விக்கியண்ணன் எழுந்து அமைதியாக அரசர் இருந்த இடத்தை நோக்கி நடந்தான். அவன் அடிதொடர்ந்து பல்லவரையனும் பணிவோடு சென்றான்.

அங்கு அமைதி சூழ்ந்தது. அப்படி என்ன செய்தியைப் பல்லவரையன் கொண்டு வந்திருப்பான்? ஏதோ தேவை இருக்க வேண்டும்; இல்லையென்றால் விக்கியண்ணன் இன்னும் சற்றுநேரம் விருந்துமுடியும்வரைக் காத்திருக்கக்கூடுமன்றோ!

இன்றியமையாமை அங்கு இருக்கவே நேரங்காலம் நோக்காது விக்கியண்ணன் அரசரிடம் விரைந்து உரைக்கிறான் போலும்.

"என்ன? சடையவர்மர் வரகுண பாண்டியரிடமிருந்து ஓலையா?"

பரகேசரி விசயாலயச் சோழரின் கண்களும் வியப்பைக் காட்டின.

"ஆம், அரசே."

"சரி; வரச் சொல்லுங்கள்."

விக்கியண்ணன் பல்லவரையனை நோக்கினான். குறிப்புணர்ந்த பல்லவரையன் வெளியே விரைந்தான். மீண்டும் பல்லவரையன் திரும்பியபோது அவனைத்தொடர்ந்து புதியவன் ஒருவன் பணிவோடு வந்து சேர்ந்தான்.

பணிவோடு தலையைத் தாழ்த்தி அரசருக்குத் தன் வணக்கங்களைத் தெரிவித்துக் கொண்ட அந்தப் புதியவன் தான் கொண்டுவந்த ஓலையை நீட்டினான். விக்கியண்ணன் அவ்வோலையைப் பெற்று அரசரிடம் சேர்த்தான்.

ஓலையைப் பிரித்துப் படித்த விசயாலயர் இதழ்களிலே இளநகை படர்ந்ததை அனைவரும் கண்டனர். அரசர் ஓலையை விக்கியண்ணனுக்காக நீட்டினார்.

"படித்துப் பாருங்கள்."

ஓலையைப் பெற்றுப்படித்த விக்கியண்ணனின் கண்கள் எவ்வித உணர்ச்சியையும் வெளிக்காட்டவில்லை என்பதைக் கடம்பமாதேவி கவனித்தாள். அரசரின் பார்வை அவன் முகத்திலேயே பதிந்திருந்ததையும் அவள் கவனித்தாள். ஓலையைப் படித்துமுடித்த விக்கியண்ணன் அமைதியாக ஓலையைச் சுருட்டினானேயன்றி எந்தப் பேச்சையும் தொடங்கவில்லை.

"என்ன செய்யலாம்?"

"அரசர்தான் சொல்லவேண்டும்."

"உங்கள் எண்ணம் என்ன?"

"அரசர்தான் முடிவு செய்யவேண்டும். நீங்கள் எடுக்கும்முடிவு நல்லதாகவே அமையும் என்பது என் நம்பிக்கை."

அரசர் சிறிது அமைதிகொண்டார். விக்கியண்ணன் பல்லவரையனைப் பார்த்தான்.

"பல்லவரையா, ஓலைதாங்கியை அழைத்துச் செல்; அவர் தங்கத்தக்க ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வா."

ஓலைதாங்கி பின்தொடரப் பல்லவரையன் வெளியேறினான்.

அரசர்க்கும் விக்கியண்ணனுக்கும் இடையே நிகழ்ந்த பேச்சினை அருகே அமர்ந்திருந்த கடம்பமாதேவி அறிவாள்; ஆனால், அந்த ஓலையின் செய்தி என்னவென்று அவளால் அறியக் கூடவில்லை. பாண்டிய மன்னர் அனுப்பியிருந்த செய்தியினை அறிந்துகொள்ள அனைவருமே விழைந்தனர் என்பது குழுமியிருந்தோர் கண்களில் தெரிந்த ஆர்வமும் அவர்கள் காட்டிய அமைதியும் வெளிப்படுத்தின.

அரசரின் பார்வை சற்றுத்தள்ளி எதிரே அமர்ந்திருந்த தலைமை அமைச்சர் நாங்கூர்வேளிர் நற்குணப் பேரெழிலார் மீது பதிந்தது.

"அமைச்சருக்கு ஒரு நற்செய்தி. பாண்டிய மன்னர் சடையவர்மர் வரகுணப்பாண்டியர் உங்கள் ஒரே மகள் நம் மாதேவியைத் தன்தம்பி பராந்தகருக்கு வாழ்க்கைத் துணையாக்க நம் ஒப்புதலைக் கேட்டிருக்கிறார்; மகிழ்ச்சிதானே?"

எல்லோருடைய கண்களும் மாதேவியின்மேல் பதிந்தன. அரசரின் பேச்சால் அவளடைந்தது அதிர்ச்சியா? மகிழ்ச்சியா?

வேதனையா? வியப்பா? வெறுப்பா? விருப்பா? யாருக்கும் அவள் கொண்ட உணர்வுநிலை புரியவில்லை.

அபராசிதனுக்கு எதுவும் புரியவில்லை. அவனுள்ளம் தாங்கொணா அதிர்ச்சியால் தளர்ந்துவிட்டிருந்தது. பல்லவ இளவரசன் அபராசிதன் மட்டுமா அத்தகைய அதிர்ச்சிக்கு உள்ளானான்? இல்லை; இளவரசி கடம்பமாதேவியும் அதிர்ச்சிக்கு உள்ளாகி அமைதியாக அமர்ந்திருந்தாள். ஆனால், இளவரசன் ஆதித்தன் கண்கள் மட்டும் எதையும் காட்டவில்லை. அவன் தன் தந்தையை நோக்கிப் பேசியபோது அவன் பேச்சில் தெளிவிருந்தது.

"தந்தையே, அந்த ஓலையை நான் பார்க்கலாமா?"

விசயாலயர் தன் ஒரே மகன் இளவரசன் ஆதித்தனை வியப்போடு பார்த்தார்.

ஆதித்தனா இப்படிப் பேசினான்? எதிலுமே பொறுப்பின்றி விளையாட்டுத்தனமாய்ச் சுற்றிக்கொண்டிருந்த ஆதித்தனா இவன்? எப்படி இப்போது மாறிவிட்டான்!

"ஆகா! இந்த நாட்டு இளவரசன் நீ பார்க்காமலா? விக்கியண்ணரே, அந்த ஓலையைக் கொடுங்கள்; ஆதித்தன் பார்க்கட்டும்."

வெளியே சென்று மீண்டிருந்த பல்லவரையனுக்காய் விக்கியண்ணன் ஓலையை நீட்டினான். தலைவன் கருத்தறிந்த பல்லவரையன் ஓலையைப் பெற்று இளவரசன் கையிற் சேர்த்தான்.

"அமைச்சர் அவர்களே, பாண்டிய மன்னரின் இந்த ஓலை பல சிக்கல்களைத் தீர்த்துவிட்டதென்று நான் கருதுகிறேன். இந்த மணவுறவினால் பாண்டியர் பகை நீங்கும்; போரின்றி நம் சோழநாடு மேலும் பொலிவுறும்."

"அப்பா! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"புரியவில்லையா மகளே? பாண்டியர்க்கும் நமக்கும் உள்ள பகைமையை நீ அறியாதவளா? பாண்டியருடன் மணவுறவு கொண்டால், பகைமை ஒழியும்; போர் நீங்கும். இது நாம் என்றோ ஏற்றுக்கொண்ட உண்மை. ஆனால், நீ அந்த மணவுறவை அன்று ஒப்புக்கொள்ளவில்லை. வேறுவழியின்றி நாம் பல இன்னல் களிடையே இந்த நாட்டைக்காக்கப் போருக்கு அனைத்து ஏற்பாடு களையும் செய்து கொண்டுவருகிறோம். போர்நடைபெறுமேல் வெற்றி எப்பக்கம் விளையும் என்பது எல்லோருக்கும் வெளிச்சம். இந்த நிலையில் பாண்டிய மன்னரின் இந்த ஓலை அலைகடலிலே நிலைதடுமாறுபவனுக்குக் கிடைத்த ஓர்அரிய மிதவை! அமைச்சரே, உங்கள் கருத்தை நீங்கள் உரைப்பின் நலமாக இருக்கும்."

"நீங்கள் ஒன்றைச் சரியென்று உரைத்தபிறகு அதை மறுப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை. அதிலும், அரசர் அனைத்தையும் ஆய்ந்து முடிவுசெய்யும்போது எந்தத் தவறும் எழ வாய்ப்பில்லை. பாண்டியரின் வேண்டுகோளை நான் பெரும்பேறாகக் கொள்கிறேன்."

"மாமா, நீங்கள் என்ன பேசுகிறீர்கள்? மாதேவியின் மணம் பற்றியது இது!"

"தெரியும், அம்மா. நீ இந்த நாட்டு இளவரசி; உனக்கு இந்தச் சோழநாட்டை அழிவினின்றும் காக்க வழியிருந்தும் நீ முன்வர வில்லை. ஆனால், என் மகள் மாதேவி இந்தத் தாய்நாட்டிற்காக எந்த இழப்பையும் ஏற்க அணியமாக உள்ளார். மாதேவி, வேளிர்குலத்து வீரத்திருமகள்; சோழ நாட்டிற்காகத் தன் வாழ்வை மட்டுமன்று, உயிரையும் தேவை ஏற்பட்டால் தரவேண்டியது அவள் கடமை."

கடம்பமாதேவி குழம்பினாள். அவளுக்கு மேலே என்ன செய்வதென்று தெரிந்திருக்கவில்லை.

"மாமா, நான் சொல்லவிழைவது என்னவென்றால்..."

ஆதித்தன் தன் தமக்கையின் பேச்சைத் தடைசெய்தான்.

"அக்கா, சற்றுப்பொறுங்கள்."

ஆதித்தனின் பார்வை அரசர் விசயாலயச் சோழருக்காய்த் திரும்பியது. மற்றனைவர் பார்வைகளும் ஆதித்தன் மேல் பதிந்தன.

"தந்தையே, பாண்டிய மன்னரின் இந்த ஓலை, உண்மையில் மணவுறவை வேண்டி எழுதப்பட்டதாக எனக்குப் புலப்படவில்லை. ஓலையின் ஒவ்வொரு சொல்லும் அவர்களின் அதிகாரத்தையே காட்டுகிறது. பாண்டிய மன்னரின் எண்ணம் மாதேவியைத் தன்தம்பிக்கு மணமுடிக்கப் பெண் கேட்பதில் இல்லை; போரினை மேற்கொள்ள ஒரு காரணத்தை ஏற்படுத்துவதில்தான் உள்ளது. அதனால்தான், மணவுறவு இல்லையேல், போரென்று எச்சரித்து எழுதியனுப்பியிருக்கிறார். அவர் நாடுவது நம் நட்பை இல்லை; பகைமையை! சோழர்கள் கோழைகள் இல்லை. நாம் எந்த நிலையிலும் போருக்கு அணியமாக இருப்பதே முதல் கடமை."

விக்கியண்ணன் மெல்லப் பேசினான்.

"இளவரசர் உணர்ச்சிக்கு இடங்கொடுத்துப் பேசுகிறார் என்று நான் எண்ணுகிறேன். உணர்ச்சிக்கு இடங்கொடுத்தால் அறிவார்ந்த சிந்தனை தடைபடும். அமைச்சர் நாங்கூர்வேளிர் நற்குணப்பேரெழிலாரின் அருமை மகள்மீது கொண்ட ஆசையால், இளவரசர் இருக்கின்ற நிலைமைகளை ஆராய்ந்துகாணக் கூடவில்லை ."

"தலைவரே, என்பேச்சில் தவறிருப்பின் பொறுத்துக் கொள்ளவும். நீங்கள் சொல்வது தவறு. மாதேவியை நான் மணந்து கொள்ளவேண்டுமென்பது என்ஆசைமட்டுமில்லை; இங்குள்ளோர் பலரின் ஆசையும் ஆகும். இப்போது இங்குள்ள சிக்கல் மாதேவியின் மணம் அன்று; சோழர்களின் மானம்பற்றியது! என்னைவேண்டா; மாதேவி வேறுயாரையும்கூட மணந்துகொள்ளட்டும்; அதைப்பற்றி எனக்கு அக்கறையும் இல்லை; கவலையும் இல்லை. நாம் அன்பிற்கு அடிபணியலாம்; ஆனால், அதிகாரத்திற்கு இம்மியும் அசையக் கூடாது. உறவிற்குக் கைகொடுக்கலாம்; ஆனால், உயர்வினை இழந்துவிடக்கூடாது."

ஆதித்தனையே அனைவரும் வியப்போடு நோக்கினர். பொறுப்பற்றுச் சுற்றித்திரிந்த இளைஞனா இப்படிப் பேசுகிறான்?

அரசு செயல்களில் இம்மியும் அக்கறைகாட்டி அறியாத ஆதித்தனா, பெரியவர்கள் குழுமிய சூழலிலே பிழையின்றி நிமிர்ந்து பேசுகிறான்? ஆதித்தன் தன்பேச்சைத் தொடர்ந்தான்.

"தந்தையே, போரென்று பூச்சாண்டி காட்டும் பாண்டியருக்கு அறிவு புகட்டவேண்டும். சோழநாடு சோறுடைத்துதான்; ஆனால், சோழவீரர்கள் சோற்றுபிண்டங்கள் இல்லை. போரென்றால் பின்வாங்காப் புறநானூற்றுப் பரம்பரை நம் பரம்பரை! 'மெல்ல வந்தென் நல்லடி பொருந்த ஈயென இரக்குவராயின் இந்த அரசை மட்டுமில்லை; என்னுயிரையும் ஈவேன்' என்ற சோழன் நலங்கிள்ளி வழிவந்த நாம் கோழைகள் இல்லை மாற்றாரின் அச்சுறுத்தலுக்கு அடங்கிப் போக! எதில் நாம் யாருக்கு இளைத்தவராகி விட்டோம்? தன்போல் வேந்தனாகிய கரிகால்பெருவளத்தான் வெண்ணிப் போர்க்களத்தெறிந்த வேல் மார்பை ஊடுருவி உண்டாக்கிய புறப்புண்ணுக்கு நாணி வடக்கிருந்து உயிர்விட்டுப் புகழெய்திய பெருஞ்சேரலாதனின் பெருமையிலும் நம்பெருமை எவ்வகையில் குறைந்தது? தந்தையே, பகைவனின் தாள்பணிந்து நாடாள்வதினும் ஓடேந்திப் பிழைப்பது சிறந்தது! தந்தையே, அமைதி ஏன்? இளையவன்தானே இவனென்ற ஏளனமா?"

இளவரசி கடம்பமாதேவியின் கண்களை நீர் மறைத்தது. உணர்ச்சியால் அவள் உதடுகள் துடித்தன; உவகையால் மார்பகங்கள் விம்மித்தாழ்ந்தன.

தன் தம்பி ஆதித்தன் இவன்தானா? எப்படி இத்தனை மாற்றங்கள் இவனிடம் நேர்ந்தன? விக்கியண்ணனால் ஏற்பட்ட விளைவுகளா இவை? கடம்பமாதேவியால் தன்னையே நம்பக்கூட வில்லை. கண்ணீரை யாரும் காணாவண்ணம் துடைத்துக் கொண்டாள்.

"ஆதித்தா, இன்றுதான் முதன்முதலாக என்னுள்ளம் நிறைவடைந்தது. உன் தமக்கை கடம்பமாதேவி உன்னிடம் எதை எதிர்பார்த்து ஏங்கினாரோ அதை இன்று நீ அடைந்துவிட்டாய். ஈன்ற எங்களினும் உன் தமக்கையே உன் பேச்சால் பெரிதும் மகிழ்ந்திருக்கக்கூடும். எனக்கு இனி இந்த ஆட்சியைப் பற்றிக் கவலை இல்லை."

பரகேசரி விசயாலயச் சோழனின் பேச்சால் அங்கு அமைதி நிலவியது. கடம்பமாதேவி தன்தம்பி ஆதித்தனைக் கனிவோடு நோக்கினாள். அவளுள்ளம் ஆதித்தனிடம் பெருகிய அன்பின் நிறைவால் பூரிப்படைய, அதன்விளைவாய் இயல்பாய் அகண்டு திரண்ட அவள்பெரு அங்கங்கள் அழகாய் விம்மித்தாழ்வதை எதிரே அரசர் அருகே நின்றிருந்த விக்கியண்ணன் கண்டு வியந்து அந்தச் சூழ்நிலையிலும் தன்னகத்தை இழந்தான்.

பல்லவ இளவரசன் அபராசிதன் ஆதித்தனைப் பார்த்த பார்வையில் பாராட்டு தெரிந்தது.

"அரசே, பாண்டிய மன்னருக்கு என்ன விடையை அனுப்பி வைப்பதென்பதைத் தாங்கள் சொன்னால் நல்லது."

விக்கியண்ணனுக்கு விடை மெல்லவே வந்தது

"விடையை இளவரசர் ஆதித்தரே சொல்வார்."

விக்கியண்ணனைப்போலவே அனைவரும் ஆதித்தனின் விடையை எதிர் நோக்கி அவனையே பார்த்தனர்.

"பெண்ணில்லையேல் போரென்ற பாண்டியரின் அச்சுறுத்தலுக்குச் சோழநாடு என்றும் பணியாது. போர்தான் முடிவென்றால் சோழநாடு சோர்ந்துவிடாது. எதற்கும் அணியம் யாம் என்ற செய்தியை அனுப்புங்கள்."

"இளவரசர் இளமை வேகத்தில் எண்ணாமல் பேசுகிறார். நம்படை நிலைமையை எண்ணிப்பார்த்தல் நல்லது என்பது என் கருத்து."

"எல்லாவற்றையும் எண்ணிப்பார்த்தே இங்குச் சொல்கிறேன். தலைவரே, நீங்கள் சொல்லித்தந்த அரசியல் பாடங்களை அதற்குள் நான் மறந்துவிடவில்லை. 'வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல்' என்பதை இப்போதும் நான் எண்ணிப்பார்க்கிறேன். அதேபோல், 'தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர் நிலையின் இழிந்தக் கடை' என்ற

இயல்பினையும் எண்ணிப் பார்க்கிறேன். பாண்டியர்படை அணையுடைந்த வெள்ளநீர்போல் ஆற்றல் மிகுந்ததென்பதை நான் அறிவேன். அப்படையை எதிர்த்து நம்படை பலநாள்கள் நிற்க முடியாதென்பதையும் அறிவேன். குடமூக்கில் நிகழ்ந்த போரில் பல்லவர், கங்கர், மகதர் ஆகியவர்களின் படையோடு நம்படையும் இணைந்து போரிட்டும் பாண்டியர் படைமுன் நிற்கமுடியாது தோல்விகண்டதை யாரும் மறந்திருக்க முடியாது. அரிசிலாற்றுப் போரில் பாண்டியர் தோற்றனரென்றால், பாண்டியருக்கு எதிராக அப்போது இலங்கைப்படையும் உதவிக்கு இருந்தது. ஆனால் இன்று? எல்லாம் நினைவிருந்தும் போரின் பின்விளைவுகள் புரிந்திருந்தும் போர்தான் முடிவு என்று ஏன் நான் சொல்கிறேன்? இதைத்தவிர நமக்கு வேறு எந்த வழியும் கிடையாது; அதனால்தான். தலைவர் அடிக்கடி சொல்வது போல், வீரன் வாழ்நாளில் ஒருமுறைதான் சாகிறான். கோழையாக ஒவ்வொருநாளும் செத்துமடிவதைவிட, வீரனாக ஒருநாள் - ஒரேநாள் உண்மையாக வாழ்ந்துமடிவது மிகவும் மேல்! தந்தையே, சரிதானே?"

விசயாலயச் சோழர் தன்மகன் இளவரசன் ஆதித்தனை அகங்குளிர கண்டார். அவர்கண்கள் ஒளிவிட்டன. அவர் நிமிர்ந்து அமர்ந்தார்.

"ஆதித்தா, மிகவும் சரிதான். பகைவருக்குத் தாள்பணியும் பரம்பரையில் நீ பிறக்கவில்லை. போரைத் தேடிப் போகும் நிலையில் நாமில்லை; உண்மைதான்! ஆனால், தேடிவரும் போரை நாடி எதிர்கொள்வதே நம் மரபு! ஓடிஒளிவதோ உறவென்று ஒன்றிப்போவதோ உயர்வைச் சேர்க்காது! விக்கியண்ணரே! இளவரசர் கருத்தே என் கருத்தாகும். ஏற்புடையதை மேலே செய்யுங்கள்."

## 25. பெண்ணின் பெருந்தக்க யாவுள?

*"அணிமுகம் மதியேய்ப்ப அம்மதியை நனியேய்க்கும்*
*மணிமுக மாமழைநின் பின்னொப்பப் பின்னின்கண்*
*விரிநுண்ணூல் சுற்றிய ஈரிதழ் அலரி*
*அரவுக்கண் அணியுறழ் ஆரல்மீன் தகையொப்ப"*

மலர்மஞ்சம் அந்த அழகு மேனியை அணைத்து மகிழ ஆவலோடு காத்துக்கொண்டிருந்தது. ஆனால், அதை ஏறிட்டு நோக்கினாள் இல்லை மாதேவி. அவளிருந்த நிலையில் கண்கள் உறக்கத்தை நாடுவதென்பது ஏது? நீர்ச்சுழல்போல் சுழன்று கொண்டிருந்த எண்ணங்களின் ஓட்டத்திற்கு ஈடுகொடுக்க இயலாதவளாய்த் தொல்லைகளால் அந்தப்பேதைப்பெண் துடிதுடித்துக் கொண்டிருந்ததை அந்த அழகுமஞ்சம் அறிந்திருக்க வாய்ப்பில்லைதான்.

எதுவுமே அறிந்திராத மதுமலர் அவள்! ஆம்; அது சில நாள்களுக்கு முன்னர்வரை! ஆனால், இன்று?

மாதேவியைச் சுற்றி ஓர் அரசியல் நாடகம் உருவாகி அரங்கேறி நடந்துகொண்டிருப்பதை அவள் நன்கு அறிவாள். அந்த நாடகத்தின் நாயகியே அவளன்றோ! நாடகம் திட்டமிட்டவாறு இனிதே நடந்தேறக்கூடுமேயாயின் எத்துணை நன்றாக அமையும்; அப்படி அமையுமா? அதற்கு அவள் என்னென்ன செய்யக்கூடும்? எல்லாமே அவன்செயல் என்று மாதேவி நம்பினாள்.

பல்லவ இளவரசன் அபராசிதன் இன்று அவள் காதலன். அவனைப்பற்றி எண்ணும்போது அவளகம் குளிர்ந்ததென்பது உண்மைதான். ஆனால், அவனிடத்து அவள் கொண்டிருந்த அன்பு முழுமையானதுதானா? முழுமையானதுதான் என்பதை அவள் நெஞ்சமே ஏற்றுக்கொள்ளவில்லை. தன்னெஞ்சறிந்து பொய்யுரைத்தல் தகாதன்றோ?

விக்கியண்ணன் எண்ணி ஆராய்ந்து இயற்றிய நாடகம் இதுவரைத் திட்டமிட்டபடியே அரங்கேறி வெற்றியோடு நடந்து வந்துள்ளது. எனினும், யாரும் எதிர்பாராவகையில் பராந்தகனின் குறுக்கீடு இடையே சிறிது குழப்பத்தைத் தோற்றுவிட்டதே!

பராந்தகப்பாண்டியனுக்கு மாதேவியின்மேல் மையலா? மாதேவியால் நம்பக்கூடவில்லை.

பராந்தகனோடு அவள் பழகியது சில நாழிகைகள்தாம்; இருந்தாலும் அவனிடத்து ஓர்ஈடுபாட்டை அவளால் உணர

முடிந்தது. பழகுதற்கு எத்துணை எளிமையானவன் அவன்! சிரிக்கச் சிரிக்கப் பேசும் அவன் திறன்தான் என்னே! கள்ளமில்லா வெள்ளை யுள்ளம் கொண்டவன் அவனென்பதைப் பழகிய சிறிது நேரத்திலேயே கண்டுகொண்ட மாதேவியின் நம்பிக்கையும் பொய்யாகக் கூடுமா?

மாதேவிக்குப் புரியாதவை பல. தீட்டப்பட்டு நடைமுறையில் கொண்டுவரப்பட்ட திட்டம் ஒன்று; ஆனால், திடீரென்று ஏற்பட்டிருக்கும் மாற்றம் வேறு. விக்கியண்ணனின் அரசியல் நடவடிக்கைகளில் இனியும் மாறுதல் ஏற்படக்கூடுமா?

இளவரசன் ஆதித்தனை மாதேவி மறக்கவேண்டும் என்பதே விக்கியண்ணனின் அடிப்படையான நோக்கம் என்று அவள் நம்பினாள். அதன் விளைவாகவே, விக்கியண்ணனின் எண்ணப்படி அபராசிதனை அவள் சந்திக்க ஒப்புக்கொண்டாள். யாரையும் என்றும் எண்ணியிராத் தன்மையால், தன்னிடம் உள்ளத்தை இழந்த பல்லவ இளவலை ஒப்பி ஏற்றுக்கொண்டாள்.

அபராசிதனின் அன்பைத் தான் ஏற்றுக் கொண்டதற்காக மாதேவி தன்னை நொந்து கொள்ளவில்லை. ஏனென்றால், அவன் அழகனாகவும் இருந்தான்; அவள் எதிர்பார்ப்பிற்கு ஏற்றவனாகவும் இருந்தான். எல்லாவற்றையும்விட அவளை அவன் தன்னுயிரினும் மேலாக விரும்பினான். அதைவிட ஒரு பெண்ணுக்கு ஆணிடம் தன்னை ஒப்படைக்க வேறென்ன அரிய காரணம் இருந்துவிட முடியும்?

எங்கும் அமைதி நிலவியது. இரவு நடுயாமத்தை நெருங்கி விட்டிருந்தது.

மாதேவி அறைக்குள்ளாகவே மெல்ல நடை பழகினாள். அவள் நெஞ்சில் அமைதி இல்லை. அவள் நினைவு சில நாழிகைகளுக்கு முன்னர் நடந்துமுடிந்த நிகழ்வுகளால் பெரிதும் பாதிக்கப் பட்டிருந்தது.

நினைவில் கொண்ட நிகழ்ச்சிகளால் விளைந்த குழப்பங்களால், அவள் கால்கள் அவளையும் அறியாமல்

தோட்டத்திற்கு இட்டுச் சென்றன. தண்ணென்ற தென்றல் அவளுடலைத் தழுவிக் குளிர்வித்தபோதே மாதேவி தன் நினைவிற்கு வந்தாள்.

மாதேவி பெருமூச்சொன்றை வெளியிட்டாள். எப்படி இருந்தவள் இன்று எப்படி மாறிவிட்டாள்? கவலைகளை இதற்குமுன் அவள் கண்டதும் உண்டா? அவள் நெஞ்சு கனத்தது; கண்கள் கலங்கின.

விரும்பியோ, விரும்பாமலோ மாதேவி தன்னைப் பல்லவ இளவரசன் அபராசிதனுடன் இணைத்துக் கொண்டுவிட்டாள்; இனி, அவள் வாழ்வும் வளமும் அவனோடுதாம். அபராசிதனிடம் தன்னை இழந்துவிட்டதற்காக அவள் வருந்தவில்லை. அவள் கொண்ட வருத்தமெல்லாம் ஆதித்தனையும் பராந்தகனையும் எண்ணித்தான்.

ஆதித்தனால் அவளை அத்துணை எளிதில் மறந்துவிட இயலுமா? ஐயம்தான். பல்லவ இளவலோடு அவள் பழகுவதை அவன் ஒப்புக்கொள்வதுபோல் வெளியே காட்டிக்கொள்வது உண்மைதான். எனினும், மாதேவி அதை நம்பவில்லை. இளமை யிலிருந்தே ஒன்றாக வளர்ந்து பழகியவளாயிற்றே அவள்; அவளா அறியமாட்டாள் ஆதித்தனின் எண்ண ஓட்டங்களைப்பற்றி?

எரியென உள்ளுக்குள் புகைந்து கொண்டிருக்கும் ஆதித்தனின் உள்ளக்குமுறல் என்றேனும் நிச்சயம் கொழுந்துவிட்டு வெளியே எரியப்போவது திண்ணம். அன்று அந்தத் தீயின் நாக்குகளால் அவளின் அழகிற்கு அடிமையான அபராசிதன் தீண்டப்பட்டு அழிவது உறுதி.

அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும் என்பது வழக்கு. இன்று ஆதித்தன் தெய்வத்திற்கு ஒப்பானவன்; தன் சினத்தைக் கட்டுக்குள் காக்கும் திறன்படைத்தவன். எண்ணும் எண்ணத்தை மற்றவர் எளிதில் தெரிந்துகொள்ளக்கூடாத அளவிற்குக் கடந்த சில திங்கள்களிலேயே சிறந்த பயிற்சியைப் பெற்றுள்ளான். ஆதித்தனின் அனைத்து மாற்றங்களுக்கும் தலைவர் விக்கியண்ணனிடம் அவன்பெற்ற இடையறாத பயிற்சியே! ஆனால், பாண்டிய இளவல் பராந்தகன்?

பராந்தகன் ஒரு சராசரி மனிதன்! அதனால்தான், அவளில்லையேல் போரென்று அச்சுறுத்தி ஓலையை அனுப்பி யிருந்தான். போரில் சோழநாடு தோற்று, அவள் பராந்தகன் பாதுகாப்பில் அகப்பட்டால், விளைவு மிக இழிவானதாகவன்றோ அமையும்!

மாதேவி அதைப்பற்றி அச்சங்கொள்ளவில்லை. அவளொரு தமிழ்ப்பெண். அவளின் எண்ணத்தைத் தொட்டவனேயன்றி இன்னொருவன் அவளுடலைத் தொடுவதென்பது என்றும் எந்த நிலையிலும் இல்லை. அபராசிதன் இல்லையேல் மாதேவியும் இல்லை.

"மாதேவி."

திரும்பினாள் அவள்; திடுக்கிட்டான் அவன்.

"என்ன இது? அழுகிறாயா?"

மாதேவி விடை சொல்லவில்லை. அபராசிதனின் விரல்கள் அவள் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தன. அந்தச் செய்கை அவள் அதுவரைத் தாங்கியிருந்த பெருஞ்சுமையை இறக்கிவைத்தாற்போன்ற இதத்தைச் சேர்த்தது.

"பெண்ணே?"

"உம்."

"நானிருக்கும்போது உனக்கேன் அச்சம்?"

"அச்சமே உங்களைப் பற்றியன்றோ! எங்கே உங்களை இழந்து விட வேண்டியிருக்குமோ? அப்படி ஏற்படின் எப்படி உயிர்வாழ்வது? இவையே என் அச்சத்தின் காரணம்."

அபராசிதன் கைகள் மாதேவியின் மலரொத்த மேனியைச் சேர்ந்தன. பச்சிளங்குழவியைப் பரிவோடு அணைக்கும் பக்குவமாக அவளைத் தன்னுடலோடு சேர்த்துக் கொண்டான். தாயின் மார்பில்

ஒட்டிக்கொள்ளும் சேயினையொத்து, அபராசிதனின் பரந்த மார்பிலே தன்பருவச் செழிப்பை மாதேவி மறைத்துக் கொண்டாள். அவளுடைய கைகள் அவன் கழுத்தைச் சுற்றிப்படர்ந்து மகிழ்ந்தன; கண்கள் அவன் கண்களோடு கலந்து காவியம் படைத்தன.

நிலவின் ஒளிக்கற்றைகள் நீண்டுயர்ந்து நெருக்கமாய் வளர்ந்திருந்த அசோக மரங்களின் ஊடே பாய்ந்து ஒன்றிய உள்ளங் களை மகிழ்வித்து உவந்தன. மலர்களின் இன்மணத்தையெல்லாம் ஏற்றுவந்த தென்றற்காற்று, இடையே சிறிதும் இடமின்றி ஒன்றியிருந்த உருவங்களைக் கண்டு, நன்றென்று விலகி நகர்ந்து சென்றது. கொடியொன்றில் கூடுகட்டிக் குடியிருந்த குருவிகள் இரண்டு, உள்ளத்தால் ஒன்றான உடல்களை எட்டிப்பார்த்து இன்பங் கொண்டது.

"அன்பே!"

"சொல்லுங்கள்."

"உன் இதழ்கள் தரு இன்சுவைக்கு இவ்வுலகில் எதை ஈடு சொல்லலாம்?"

"அமிழ்து?"

"அமிழ்தினும் ஆற்ற இனிதே! மேலும் இவ்வுலகில் இல்லாதது அது; அதன் சுவையை அறிந்தார் யாரே? வேறு சொல்."

"தேன்?"

"சுவை ஒப்பும்; ஆனால் திகட்டக்கூடியது. மேலும் ஈக்கள் எச்சில்பட்டது; நாட்பட்டது."

"மதுவென்னலாமா?"

"மது உண்டாருக்கே மயக்கத்தைத் தரவல்லது. ஆனால், உன்னிதழ்களோ எண்ணும்போதே இன்பத்தில் ஆழ்த்துவன. மது

மயக்கத்தை அளிப்பினும் அருந்தச் சுவைப்பதில்லை; மருந்தினும் கசப்பதாயிற்றே!"

"நானென்ன கண்டேன்? நீங்கள்தாம் எல்லாம் தெளிந்தவராயிற்றே; நீங்களே சொல்லுங்கள்."

"மாதேவி! தெரிந்திருந்தால் நான் எப்போதே சொல்லி யிருப்பேன். பெண் வியப்புகள் புதைந்த ஒரு பெட்டகம்! உள்ளே என்னவென்ன வியத்தகு பொருள்கள் உள்ளன என்பதைக் கண்டவர் யார்? கண்டு மற்றவர்க்கு விண்டவர் யார்? உன்னிதழ்கள் இந்த இரவின் அரையொளியிலும் செந்தளிர்களென ஒளிர்வதன் விந்தையும் என்னே! இதழூறும் இனியநீர் எத்துணை எழிலைக் கூட்டுகின்றன. இந்த இனிய பனிநீர்க்கு அமிழ்தோ, தேனோ, மதுவோ, மற்று வேறெதுவுமோ நிச்சயம் ஈடாகப் போவதில்லை! உன்னிதழ் ஊறும் எச்சில்நீரும் இதமாக உன்மேற்பறகள் இதழ்களைத் தழுவும் எழில்கோலமும் தலைதாழ்த்தி ஓரக்கண்களால் நாணம்படர எனைத் தழுவும் ஈரப்பார்வையும் அப்போது கன்னங்களிரண்டிலும் குழிந்து குடிகொள்ளும் கொள்ளை அழகும் என்னை எங்கெங்கோ கொண்டு செல்கின்றன."

மாதேவியின் விரல்கள் அவன் வாயை மூடின.

"போதும்; போதும். உங்களைத் தடுக்காவிடில் நீங்கள் பேசிக் கொண்டே இருப்பீர்கள்! எல்லா ஆண்களுமே உங்களைப் போல்தாமா? காலம் கழிவதை நீங்கள் கவனிக்கவில்லையா?"

"ஆம், கண்ணே! கவனிக்கவே செய்தேன். இந்த இரவு நீங்கா இரவாக நீடிக்கக் கூடாதா? உன்னிதழ் ஊறும் அமுத ஊற்றிலே என் உயிர் உறைவதை நீ உணரவில்லையா? விடிந்தால் நான் புறப்பட்டாக வேண்டும்."

அவன் அணைப்பினின்றும் விலக மாதேவி அசைந்தாள். ஆனால், அபராசிதன் அதற்கு இடங்கொடுக்கவில்லை.

"இனியவளே, ஏனிந்த எதிர்ப்பு? நாளை இவன் நம்மைவிட்டுப் பிரிகிறானே என்ற சினமா? நானிங்கு வந்து நாள்கள் பலவாகி

விட்டன என்பதை நீ அறியமாட்டாயா? மாதேவி, என் மனக் குழப்பங்களை நீ அறிய வாய்ப்பில்லை. நான் ஓர் இளவரசனாக மட்டுமே இருந்திருப்பின் இங்கேயே நீ விரும்பும்வரை இருக்க முடியும். ஆனால், நானோ வயதுமுதிர்ந்த தந்தைக்காக நாட்டாட்சியை நடத்தும் பொறுப்பில் உள்ளவன்; ஆகவே உடனே திரும்பவேண்டியுள்ளது. எனக்குமட்டும் உன்னைப் பிரிந்துசெல்ல இனிக்குமா? உன்னையும் என்னோடு அழைத்துச் செல்ல உள்ளம் விழைகிறது; ஆனால் நீ அதற்கு ஒப்புக்கொள்ளமாட்டாய் என்பதை நான் அறிவேன்."

"அப்படியானால் இதற்கு வழி?"

"உன் தந்தையைச் சந்தித்துப் பேசவே நான் உண்மையில் இப்போது இங்கு வந்தேன்."

"அவரைப் பார்த்துப்பேசி ஆகப்போவது என்ன?"

'நீ சொல்வது புரியவில்லையே! மாதேவியைப் பல்லவ நாட்டின் பட்டத்தரசியாக்குகிறேன்; எனக்கு மணமுடித்துவைக்க ஒப்புதல் தாருங்கள் என்று கேட்பேன். ஏன் தலையை அசைக்கிறாய்? ஒப்புக் கொள்ளாதிருக்க நான் தப்பேதும் செய்தேனா? அன்றிப் பாண்டியன் பராந்தகனைப்போல் பெண்ணில்லையேல் போரென்று பரணி பாடினேனா? நீ என்னை விரும்புகிறாய்; நான் உன்னை விரும்புகிறேன். உள்ளார்ந்த நம் உறவிலே யார் குறுக்கிடக்கூடும்? விடை சொல், மாதேவி; ஏன் அமைதியாக நிற்கிறாய்?"

அபராசிதனிடமிருந்து விலகி மாதேவி அருகேயிருந்த மேடையிலே அமர்ந்தாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன. ஏறிட்டு அவனை நோக்கியபோது முத்துகளெனக் கண்ணீர்த் துளிகள் கீழே சிதறின. அவன் நெஞ்சு பதைபதைத்து அஞ்சி வாடியது. மாதேவி மெல்லப் பேசினாள்.

"எப்படிப் புரியவைப்பதென்பது எனக்குப் புலப்படவில்லை. நீங்கள் எதிர்பார்ப்பதுபோல் வாழ்க்கை எளிதாக அமைந்துவிடுமேல் இனிமையாகத்தான் இருக்கும். அன்பரே, என்னை உங்களிடம்

இழந்துவிட்டிருந்தாலும், நான் ஒரு சோழநாட்டுப்பெண் என்பதை எந்தக் கணமும் மறப்பது கிடையாது. என்னுடைய வாழ்வும் தாழ்வும் இந்த மண்ணோடு இரண்டறக் கலந்துவிட்டவை. இந்த நாடு வாழ்ந்தால் நான் வாழ்வேன்; இது தாழ்ந்தால் நான் அழிவேன்."

அபராசிதன் இடைமறித்துப் பேசினான்.

"எதற்காக இவற்றைச் சொல்கிறாய்? நாட்டுப்பற்று ஒவ்வொருவருக்கும் கட்டாயம் இருக்கவேண்டியதுதான்?"

"எளிய மக்களுக்கே நாட்டுப்பற்று கட்டாயம் என்றால், பரம்பரையாகச் சோழ அரசர்குலத்தோடு சொந்தங்கொண்டாடும் வேளிர்குலத்துப்பெண், அதிலும் இளவரசி கடம்பமாதேவியால் வளர்க்கப்பட்ட என்னுடைய நாட்டுப் பற்றை நான் உங்களுக்கு விளக்கிச் சொல்லவும் வேண்டுமா? என் ஒருத்தியை மையமாகக் கொண்டு சோழநாடு போருக்கு அணியமாகிக் கொண்டிருக்கும் நிலையில், நான் உங்களோடு உறவை வளர்த்துக்கொள்ளல் அறமாகுமா? ஐயா, தாங்கள் என்னை மறந்துவிடுங்கள்."

அபராசிதன் பதறியவனாய் மாதேவியின் கைகளைப் பற்றினான்.

"மாதேவி, இஃதென்ன பிதற்றல்? உன்னை மறப்பதா?"

"ஆம். கிட்டாதாயின் வெட்டென மற. கேள்விப் பட்டிருப்பீர்களே?"

"எல்லாம் அறிவேன். ஆனால், அந்த மொழி எனக்கன்று. உன்னை மறப்பதென்பது நான் என்னை மறந்தால்தான் முடியும். மாதேவி, என்னெஞ்சம் துடிப்பது உன் காதுகளை எட்டவில்லையா? என்னுள் இரண்டறக் கலந்துவிட்ட இனியவளே! உன்மேல் ஆணையிட்டு இப்போது உறுதியளிக்கிறேன். என்று உன்னை இழக்க நேரிடுகிறதோ, அன்று நான் இறந்தவனாவேன். நீ இல்லாத வாழ்க்கையை என்னால் நினைத்தும் பார்க்க இயலவில்லை."

"வேண்டா; நான் சொல்வதை எண்ணிப் பாருங்கள். உங்கள் எண்ணம் தவறானது. நாம் உடலாலும் உள்ளத்தாலும் வளர்ந்தவர்கள்; எது நடக்கும், எது நடக்காதென்பதை நன்கு தெரிந்தவர்கள். வீணான உறுதிமொழிகள் எந்த விளைவினையும் அளிப்பதில்லை."

"மாதேவி! என்னை ஏறிட்டுப்பார்."

அபராசிதன் மாதேவியின் இடையை அணைத்து அருகே இழுத்தான்.

"பராந்தகன் உன்னை அடைவதை நான் பார்த்துக் கொண்டிருப்பேன் என்றா நீ அஞ்சுகிறாய்?"

மாதேவி சிரித்தாள். அவள் சிரிப்பில் வேதனை சிந்தியது.

"நான் தமிழ்ப்பெண். அச்சம் என்ற சொல்லை அறியாதவள். என்னுள்ளத்தில் உங்களையன்றி இன்னொருவருக்கு இடம் கிடையாது. ஐவர்க்கும் ஒருத்தியாம்; அவளோ பத்தினியாம்! அஃது ஆரியர்க்கு அடுத்த வாழ்க்கை நெறியாக இருக்கலாம். ஆனால், ஒருத்திக்கு ஒருவன் என்பது தமிழரின் வழிவழி வந்த பண்பாடாகும். உடலால் மட்டுமில்லை, உள்ளத்தாலும் ஒருவனுக்கே உரிமை பூண்டவள் தமிழ்ப்பெண்! உங்கள் உள்ளத்தோடு ஒன்றி உவந்த என்னை இந்தப் பராந்தகர் இல்லை; அந்தப் பரந்தாமரே அணுகினாலும் அடைய முடியாது."

அபராசிதன் அவளை மார்போடு அணைத்துக்கொண்டான். பெருமிதத்தால் அவன் மார்பு விம்மியது.

"என் கண்ணே! உயர்ந்தவளாகிய உன்னையடைய நான் என்னதவம் செய்தேனோ! பெண்ணின் பேரெழிலே, நான் எண்ணி வந்ததை இப்போது கேள். பாண்டியரின் படைவரட்டும். அந்தப் படையை முறியடிக்கவேண்டியது என் கடமை. பல்லவர்க்கும் பாண்டியர்க்கும் இடையே பகை தொடர்கதையாய் வந்து கொண்டிருக்கிறது. நான் இப்போது என் நாட்டிற்குத் திரும்புவது படையைத் திரட்டிக்கொண்டு வருவதற்குத்தான். அஞ்சாதே!

எங்கள் படை எப்போதும் போரை எதிர்நோக்கிப் புறப்படு நிலையிலேயே உள்ளது. அது குறித்தே உன் தந்தையிடம் பேசவந்தேன்."

"நீங்கள் உரைப்பவை உண்மைதாமா?"

"என் விழிகளைப்பார்; அவை சொல்லும் நானுரைப்பவை முற்றும் உண்மையே என்று."

மாதேவி மகிழ்ச்சியால் அவன் மார்பிலே தன்முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அன்போடு தன்னெஞ்சில் அடைக்கலம் கொண்ட அந்த அழகு சிலையாளின் கருங்குழலை ஆசையோடு தடவிக்கொடுத்தான் தன்னையே முழுதுமாய் அந்தத் தையலிடம் ஒப்படைத்துவிட்டிருந்த அபராசிதன்.

"அன்பரே! நீங்கள் இப்போது பார்க்கவேண்டியது என்தந்தையை இல்லை."

"என்ன சொல்ல வருகிறாய்? உன்தந்தைதானே இந்நாட்டின் தலைமை அமைச்சர்? சில ஆண்டுகள் முன்னர்வரைப் படைத் தலைவராகப் பணியாற்றியவரும் அவரன்றோ?"

"உண்மைதான். ஆனால் இன்று நிலைமை வேறு. இந்த ஆட்சியில் எல்லா நிலைகளிலும் முழு பொறுப்புடையவர் இன்று ஒருவரே உண்டு. அவர்தான் தலைவர் விக்கியண்ணன். நீங்களே அறிந்திருப்பீர்கள் என்று நினைத்திருந்தேன். அவனின்றி ஓரணுவும் அசையாது என்று ஆண்டவனைப்பற்றி சொல்வார்கள்; அது சரிதானா என்பதை நானறியேன். ஆனால், நானறிந்தவரை இன்று நாட்டில் விக்கியண்ணன் எண்ணம்போலவே எல்லாம் நடைபெற்று வருகின்றன. அமைச்சர்களுக்கும் அமைச்சர்; படைத்தலைவர் களுக்கும் படைத்தலைவர்; அரசியல் அதிகாரிகளுக்கும் உயர்அதிகாரி! இப்படி எத்தனையோ! எல்லாமே அவர் ஒருவர்தான். நீங்கள் நம்நிலை குறித்துப் பார்க்கவேண்டியது தலைவர் விக்கியண்ணனைத்தான்; என் தந்தையை அன்று."

"நன்று! நன்று!"

# 26. இளவரசியா இப்படி?

*"அளிநிலை பொறாது அமரிய முகத்தள்,*
*விளிநிலை கொள்ளாள், தமியள், மென்மெல*
*நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅ*
*குறுக வந்துதன் கூறெயிறு தோன்ற*
*வறிதுகத் தெழுந்த வாயல் முறுவலள்"*

காலம் கடந்துகொண்டிருந்தது. விக்கியண்ணனின் எண்ணம் நிலையிழந்து தவித்துக் கொண்டிருந்தது. அவனால் ஓரிடத்தில் அமைதியாக நிற்கவும் கூடவில்லை. சோழநாட்டின் எதிர்காலம் எந்தக் கணமும் கணிக்கப்படக்கூடும். நிலைமை அத்துணை ஏற்றதாக அமைந்திருக்கவில்லை என்பதை எல்லோரையும்விட அவனே நன்கு அறிந்து வைத்திருந்தான்.

இடவையில் அன்றைய போர் இந்நேரம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும். பாண்டியரின் படை முதலில் இடவை நகரையே தாக்கும் என்பதை விக்கியண்ணன் முன்னரே அறிந்திருந்தான். அதையே ஒற்றர்கள் கொண்டுவந்த செய்திகளும் உறுதி செய்தன.

இடவை காவிரியின் வடகரையில் மண்ணிநாட்டில் அமைந்திருந்த நகரமாகும். அங்குத்தான், பாண்டிய மன்னன் சடையவர்மன் வரகுணபாண்டியனின் பாட்டன் கட்டிய அரண்மனைக் கட்டடங்கள் இருந்தன. இடவை நகரைப் பாண்டியர் கைப்பற்றிவிட்டால், அதைச் சோழர் மீட்டல் எளிதன்று. அத்துணை வசதிகள் அந்த நகரிலே அமைந்திருந்தன.

பிற்பகலில்தான் போர் தொடங்கியிருக்கக் கூடும். எந்தப் பிரிவில் அதிக சேதம் விளைந்திருக்கக் கூடுமோ? அதை அறியவே விக்கியண்ணன் ஆர்வத்தோடு காத்திருந்தான். போர்முகத்தி லிருந்து ஒற்றர்படைத்தலைவன் சேந்தன்கீரன் அவ்வப்போது செய்திகளை அனுப்பிக்கொண்டிருந்தான். அன்றைய இறுதிச் செய்திகளைத் தெரிந்துகொள்ளவே அவன் நாட்டங் கொண்டிருந்தான்.

போர்க்களத்தினின்று ஒற்றன் கொண்டுவரும் செய்திகளை அறிய எத்துணை ஆவலோடும் விரைவோடும் காத்திருந்தானோ, அதைவிடப் பன்மடங்கு ஆவலோடும் விரைவோடும் பல்லவரையன் வரவிற்காக விக்கியண்ணன் காத்திருந்தான். சோழராட்சி நிலைப்பதும் அழிவதும் பல்லவரையன் கொண்டு வரும் செய்திகளிலேயே உள்ளன.

இத்தனைநேரம் பல்லவரையன் இங்கு வந்துசேர்ந்திருக்க வேண்டும்; ஏன் இன்னும் வரவில்லை? பல்லவநாட்டில் அப்படி என்ன நடந்திருக்கும்? ஏனிந்தக் காலநீட்டிப்பு? பல்லவ இளவல் அபராசிதன் காஞ்சிக்குத் திரும்புமுன் கூறிவிட்டுச் சென்ற உறுதிமொழிகள் என்னாயின? எல்லாமே நீர்மேல் எழுத்துகள்தாமா? மாதேவியை மறந்துவிட அபராசிதன் முடிவுகொண்டுவிட்டானா? அப்படியானால் தான் அடுத்துச் செய்யவேண்டியவை என்ன?

விக்கியண்ணன் மீண்டும் மீண்டும் எண்ணி ஓய்ந்தான். அவனுக்கும் விளங்காதவை பல. பல்லவர்படை குறிப்பிட்ட நாளில் புறப்பட்டிருந்தால், இரண்டு நாட்களுக்கு முன்னரே சோழநாட்டிற்கு வந்து சேர்ந்திருக்க வேண்டும். பலவகைகளிலும் பன்மடங்கு வலிமையுடைது பாண்டியர்படை. எத்தனை நாள்களுக்கு அந்தப்படையைச் சோழர்படை எதிர்த்து ஈடுகொடுக்க இயலும்? பல்லவர்படை வந்து போரில் கலந்துகொண்டாலும் பாண்டியர் படையை வெல்வது எளிதன்று என்ற எண்ணம் எங்கும் பரவலாக நிலவும்போது, சோழர்படை எதில் சேர்ப்பு?

நல்லவேளை! கங்கரின் படையும் பல்லவர்படையுடன் கலந்துகொள்ளும் என்று அபராசிதன் உறுதி செய்திருந்தான். கங்க அரசர் பிருதிவிபதி தன்பேரன் பல்லவ இளவரசன் அபராசிதனின் உதவிக்கு நிச்சயம் வருவார். அத்துடன் பல்லவர் படைக்குப் பேராற்றல் மிகுந்த கச்சியாண்டான் தலைவராக உள்ளார். விரைவில் பல்லவர்படையும் கங்கர்படையும் சோழநாட்டை வந்தடைந்து போரில் கலந்துகொள்ளுமேல், வெற்றி பெறுவது எளிதாக இல்லாவிட்டாலும் அரிதாக இருக்கமுடியாது.

பாண்டியர்படையை எந்த வகையிலும் குறைத்து மதிப்பிட முடியாது. எப்படிப் பேராற்றல் வாய்ந்த பெரும்படைத்தலைவர்கள்

சோழர்படையில் இருக்கின்றனரோ, அப்படியே பாண்டியர் படையிலும் பேராற்றலால் பெரும்புகழ்பெற்றவர்கள் இருக்கவே செய்தனர். நடுநிலையாக எண்ணி ஆராய்ந்தால் பாண்டியரின் படையைத் தாங்கும் வலிமிக்க இருதூண்களாகப் பராந்தகப் பள்ளிவேளாளன் நக்கன்புள்ளனும் பாண்டிய மன்னரின் தம்பியான பராந்தகனும் விளங்கினர். அந்த இருவர்க்கும் ஈடாகச் சோழர்படைத்தலைவர் பொலன்மாரர்பரோ, பல்லவர்படைத்தலைவர் கச்சியாண்டானோ நிச்சயம் இல்லை என்றே உறுதி செய்யலாம்.

பராந்தகப்பாண்டியனைப் பற்றி எண்ணும்போதெல்லாம் விக்கியண்ணனின் நெஞ்சில் வியப்பே மிகுந்தது. அவன்தான் எப்படிப்பட்டவன்! ஓர் அரசனுக்கு அமையவேண்டிய அருங்குணங் களும் அரசியல் சூழ்ச்சியும் பொருபுலியெனப் பொங்கியெழும் வீரமும் ஒருங்கே பொருந்தியவனன்றோ பராந்தகன். விக்கியண்ணன் பராந்தகனோடு பழகியதோ ஒரேநாள்; அந்த ஒருநாளே அவனைப்பற்றி அனைத்தையும் அறிந்துகொள்ளப் போதுமானதாக இருந்தது. பாம்பின் கால் பாம்பறியுமன்றோ?

பராந்தகனின் உடலில் சோழர்குருதி கலந்திருப்பினும் அவன் முழுக்கமுழுக்கப் பாண்டியனே. அவன் நெஞ்சில் ஆசையை விதைக்க முயன்ற விக்கியண்ணனின் முயற்சிகள் அனைத்துமே வீணாயின. பாண்டியர் ஆட்சி பார்முழுதும் பரவவேண்டுமென்ற பேராசையைப் பராந்தகனிடம் காணமுடிந்தது; ஆனால், தான் பாண்டியரின் ஆட்சித்தலைமையைப் பறிக்க வேண்டுமென்ற எண்ணத்தைச் சிறிதளவும் காணக் கூடவில்லை.

பராந்தகன் சிறந்த அரசியல் அறிவு மட்டுமா உடையவன்? அவன் மிகச் சிறந்த பண்பாளனுமன்றோ! பெண்களைக்கண்டு மனம்பிறழும் பேதைமை அவனிடம் சிறிதும் இல்லை. விக்கியண்ணன் அந்த முயற்சியிலும் வெற்றியடையக் கூடவில்லை. மாதேவியின் அழகிலும் குழந்தைக் குணத்திலும் மயங்காதவர் இருக்கமுடியாதென்ற விக்கியண்ணனின் நம்பிக்கையும் பொய்த்துப் பழங்கதையாய் முடிந்தது. அவன் எதிர்பார்த்ததுபோல், பல்லவ இளவரசன் அபராசிதன் மாதேவியின் அழகிலே மயங்கித் தன்னை இழந்தான்; ஆனால், பராந்தகனோ அனைத்திற்கும் அப்பாற்பட்டுத் தனித்து நின்றான்.

"தலைவரே?"

"என்ன?"

"போர்க்களத்தின்று ஆள் வந்திருக்கிறான்."

"செய்திகளைச் சொல்லுங்கள்."

"நான் சொல்வதைவிட, அந்த வீரனே நேரில் சொல்வது நல்லது. இதோ வரச்சொல்கிறேன்.'

தஞ்சைக்கோட்டையின் புகழ்மிக்கக் காவற்றலைவன் கடியநெடுவேட்டுவன் கைகளைத் தட்டி ஒலி எழுப்பினான். உள்ளே நுழைந்த வீரன் பணிந்து நின்றான்.

"செய்திகளைத் தலைவருக்குத் தெரிவியுங்கள்."

"ஐயா; இடவை நகர் நடுப்பகலுக்குப் பிறகுதான் தாக்கப் பட்டது. ஆட்சேதம் இரண்டு பக்கமும் அதிகம் இல்லை. இன்னும் பல நாள்களுக்கு நம்படையால் எளிதில் ஈடுகொடுக்க இயலும் என்று ஒற்றர்தலைவர் உங்களுக்குச் சொல்லியனுப்பினார்."

"அப்படியா?"

"ஆம் ஐயா. மற்றும் ஒன்று. பாண்டியர் படைத்தலைவர்களில் நாயகமான பராந்தகப் பாண்டியர் இன்று நடந்தபோரில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் படையுடன் அவர் வந்திருந்தாரென்பது உறுதி. நம்முடைய படைத்தலைவர் செங்கண்ணர் எல்லாப் பொறுப்புகளையும் இளவரசரிடமும் பொலன்மார்பரிடமும் ஒப்படைத்துவிட்டு விரைவில் வந்துவிடுவதாகக் கூறிப் போர்முனையினின்றும் புறப்பட்டுச் சென்றுள்ளார்."

விக்கியண்ணன் நெடுநேரம் பேசவில்லை. அவன் சிந்தனை சிதறியது. எதையும் முடிவு செய்யக்கூடாமல் அவன் குழம்பினான்.

"வேறெதுவும் உண்டா?"

"இல்லை; அவ்வளவே."

"நல்லது; நீங்கள் செல்லுங்கள்."

செய்தி கொண்டுவந்த வீரன் வெளியேறினான். கடியநெடுவேட்டுவன் தான் கொண்டுவந்த செய்தியைக் கூறத் தகுந்த நேரம் நோக்கித் தயங்கி நின்றிருந்தான்.

அறையின் குறுக்கும் நெடுக்குமாக அடிபோட்டுக் கொண்டிருந்த விக்கியண்ணனின் எண்ண ஒட்டத்தைக் கலைக்கக் காவற்றலைவன் கடியநெடுவேட்டுவனுக்குத் துணிவு இல்லை. யாருக்கும் அஞ்சியறியா இளவரசியார் கடம்பமாதேவியாரே விக்கியண்ணனை எண்ணி அஞ்சக்கூடுமேல், காவல்தலைவன் அவனெங்கே?

"கடிய நெடுவேட்டுவரே! பராந்தகருக்கு என்ன ஆகியிருக்கக் கூடும்? நம்படைத்தலைவர் செங்கண்ணர் எங்கே புறப்பட்டுச் சென்றார்? ஏன் சென்றார்?"

"உங்கள் கேள்விகளுக்கு விடைகள் எனக்குத் தெரியுமென்று நம்புகிறேன்."

"உங்களுக்குத் தெரியுமா? எங்கே? எங்கே? சொல்லுங்கள்."

விரைவைக் காட்டினான் விக்கியண்ணன்.

"தலைவரே! இரண்டு நாழிகைகளுக்கு முன்னர் இரண்டு வீரர்கள் கோட்டைக்குள் நுழைந்திருக்கின்றனர். அவர்களிருவரும் தங்களைப் பிறர் தெரிந்துகொள்ளாவகையில் உடையுடுத்தி யிருந்தனராம். அசைவில் ஓராள் நம் படைத்தலைவர்போல் இருந்தாராம்."

"அப்படியென்றால் இன்னொருவர்?"

"பராந்தகராக இருக்கக்கூடும் என்பது என் எண்ணம்."

"எனக்கு எதுவும் புரியவில்லையே! போர்நடக்கும் இடத்தை விட்டு இங்கென்ன பராந்தகருக்கு வேலை? அப்படியே அவரே இருப்பினும், அவருக்கும் செங்கண்ணருக்கும் என்ன தொடர்பு?"

"தலைவரே, சற்றுமுன்னர் எனக்குக் கிடைத்த செய்தியின்படி, அவர்கள் இருவரும் அரண்மனைப் பூந்தோட்டத்திலே காத்துக் கொண்டிருந்தனர். எல்லாவற்றையும் எண்ணிப்பார்த்தால் அவர்கள் இருவரும் இங்கு யாரையோ சந்திக்க வந்துள்ளனர்."

மேலே தொடரக் கடிய நெடுவேட்டுவன் தயங்கியது ஏன் என்பது விக்கியண்ணனுக்கு விளங்கவில்லை.

"ஏன் நிறுத்திவிட்டீர்கள்? முழுவதையும் சொல்லி முடியுங்கள்."

"ஒருவேளை இளவரசியாரைச் சந்திக்க அவர்கள் வந்திருக்கக் கூடும் என்பது எனக்குள்ள ஐயம்."

"இளவரசியாரைச் சந்திக்கவா? அதுவும் படையெடுத்து வந்துள்ள பராந்தகரா? என்ன சொல்கிறீர்கள்?"

"அனைத்துப் படைக்கும் பொறுப்புவகிக்கும் செங்கண்ணர் உங்கள் ஒப்புதலின்றிப் போர்க்களத்தைவிட்டுப் புறப்பட்டிருக்கிறார் என்றால், அதற்கு ஒரே காரணம் இளவரசியாராகத்தான் இருக்க முடியும்! சரியில்லையெனின் அரசர் ஆணையையும் எதிர்த்து அரசரிடமே வாதிடும் அஞ்சாமை உடையவர் செங்கண்ணர்! அப்படி இருந்தாலும் இளவரசியார் ஆணை என்பதில்லை, சிறிய விருப்பம் எனினும் அவர் எந்தநிலையிலும் எப்போதும் மீறிநடக்கும் இயல்புடையவர் இல்லை."

விக்கியண்ணன் நின்ற இடத்திலேயே விக்கித்து நின்றான். அவன் உடல்மட்டுமன்றி இமைகளும் அசைய மறந்தன. அவன் முகத்தில் கடுமை நிறைந்ததைக் கடியநெடுவேட்டுவன் கண்டான்.

"கடிய நெடுவேட்டுவரே, நீங்கள் இங்கே இருங்கள். நான் இளவரசியாரைச் சந்தித்துவிட்டு வருகிறேன். காஞ்சிக்குச்

சென்றிருந்த பல்லவரையர் எக்கணமும் மீளலாம். அவர் வந்ததும் உடனே நான் சந்தித்தாக வேண்டும்; என்ன?"

"அப்படியே செய்கிறேன்."

விக்கியண்ணன் விரைந்து சென்றுகொண்டிருந்தான். அவன் கண்கள் எதையும் வழியில் ஏறிட்டும் நோக்கவில்லை. இருள் தஞ்சைநகரை அணைத்துக் கொண்டிருந்தது. அங்குமிங்கும் ஓரிரு விளக்குகள் வீதியில் சிறிது வெளிச்சத்தைத் தந்துகொண்டிருந்தன. அவனெண்ணம் அரசியல் சிக்கல்களிலே ஆழ்ந்துபோய்க்கிடந்தது.

அரண்மனைப் பூந்தோட்டத்தை அடைந்ததும் அவன் தன்னிலை அடைந்தான். அவனின் ஐம்புலன்களும் கூர்மை அடைந்தன.

காற்றில் கலந்து கனிவோடு அவனை நாடிவந்த நறுமலர் களின் மணத்தை விக்கியண்ணன் உணரவில்லை. நறுமணமலர் களின் நட்புறவால் மயக்கமுற்று வண்டுகள் ஒலித்துக் கொண்டிருந்த இன்னிசையையும் அவன் கேட்கவில்லை. பூத்துக் குலுங்கித் தம்மெழிலைப் புறமெல்லாம் வெளிப்படுத்திக் கொண்டிருந்த வண்ண மலர்களை அவன் காணவில்லை. தண்ணென்ற தென்றல் அவன் மெய்தொட்டுப் பயின்றதையும் அவன் உணரவில்லை. அவனின் நினைப்பு, அந்த அழகுத் தோட்டத்தில் எங்கோ ஒரு பகுதியில் காத்துக்கொண்டிருக்கும் இருமனிதர்களின் இருப்பிடத்தை அறிவதில்தான் நிலைத்திருந்தது.

அதோ! அந்த மல்லிகைப் புதரேன் அசைகிறது? விக்கியண்ணனின் கண்கள் மேலும் கூர்மையாயின. அது மனித உருதான்! ஆனால், ஓருருதானே அசைகிறது? மற்றொரு உரு எங்கே? விக்கியண்ணன் ஒலியெழுப்பாது விரைந்தான்.

விக்கியண்ணன் சட்டென்று திடுக்கிட்டு நின்றான். இந்தக் கொடி எப்படி இடையே குறுக்கில் வந்தது? தொலைவில் ஊர்ந்து செல்லும் உருவைக் கவனிக்கக்கூடா வகையில் அன்றோ இந்தப் பூங்கொடி அவன் பார்வையின் குறுக்கே நிற்கிறது! அவன் இப்போது என்ன செய்வான்?

அந்த உருவின் அமைப்பும் அசைவும் பராந்தகப் பாண்டியரை ஒத்திருப்பது உண்மையே! இந்த வாய்ப்பை நழுவவிட்டால் எதிரி நிச்சயம் தப்பித்துவிடுவான்; இனி வேறு வழி இல்லை. விக்கியண்ணனின் வலக்கை இடையிலிருந்த குறுவாளை உருவியது. ஆனால், இன்னொருகை அந்தக் கையை மருவியது.

"யார்?"

"தெரியவில்லையா?"

குரல் குழல்போல் குழைந்து நெளிந்தது.

"தேவி?"

"ஆம்; நான்தான்."

"இந்த நேரத்தில்? அஃதும் இங்கு...?"

"வியப்பாக இருக்கிறதா?"

"ஆம், தேவி சற்று வழியை விடுங்கள்."

விக்கியண்ணன் இளவரசி கடம்பமாதேவியைச் சுற்றி விலகிச் செல்ல விரைந்தான். அவன் நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது. ஒவ்வொரு வினாடி நேரமும் அவனுக்கு வேண்டியதாக இருந்தது. எந்த வினாடியும் எதிரி தப்பித்துக் கொள்ளக்கூடும். அந்த நிலையை ஏற்க விக்கியண்ணன் அணியமாக இல்லை.

விலகிச்செல்ல விரைந்த அவன் கையைப்பற்றி இளவரசி தடுத்து நிறுத்தியபோது அவன் தவித்தான். அவளைத் தள்ளி விட்டுத் தன் செயலைத் தொடர விக்கியண்ணனால் முடியவில்லை.

"ஏன்?"

மயக்கப் பார்வையை அவன்மேல் செலுத்தினாள் அவள். இருளிலும் ஒளிகூட்டிய முத்துப்பற்களின் மோகனப் புன்னகையில் தன்னையிழக்கும் நிலையில் விக்கியண்ணன் அப்போது இருக்கவில்லை.

"தேவி; என்னை விடுகிறீர்களா?"

கடம்பமாதேவி அவனுடைய மார்பில் ஆசையோடு வந்து பொருந்தினாள். அவளுடைய காந்தள் விரல்கள் அவன் காதோடு விளையாடின; அழகு அங்கங்கள் விம்மிப்புடைத்து அவன் மார்பைத்துளைத்து வேதனையை உண்டாக்கின; செம்பவள இதழ்கள் மெல்ல அவனிதழ்களை நெருங்கின.

"என்னைவிடச் சிறந்தது எது உலகத்தில் உண்டு? என்னைப் பாருங்கள்; என் கண்களைக் காணுங்கள். உங்களை அணைத்து மகிழத்துடிக்கும் என்னழகு உடலின் எழுச்சி உங்களுக்குப் புரியவில்லையா? அன்பரே! என் கண்களில் நீங்கள் உங்களைக் காணக்கூடுமே! பேசாமை ஏன்? என் தேவை உங்களுக்குத் தெரியவில்லையா?"

"தேவி! உங்கள் பேச்சு மிகவும் வியப்பாக உள்ளது! வாழ்வா? சாவா? என்ற போரிலே நம் வீரர்கள் அங்கே ஈடுபட்டிருக்கின்றனர்; அந்த வீரர்களின் அன்பிற்கு அணியான இந்த நாட்டின் இளவரசியான நீங்களோ, கடமையை ஆற்றவந்த என்னைத் தடுத்துக் காதலைப் பற்றிப் பேசுகிறீர்கள்! உங்கள் செய்கையின் உயர்வுதான் என்னே! அப்பால் நகருங்கள்."

விக்கியண்ணன் மேலும் நேரத்தை விரையமாக்கவில்லை. இளவரசி அவளென்ற எண்ணம் சிறிதும் இல்லாதவனாய், அவளை அப்பால் தள்ளிவிட்டு முன்னேறினான்.

எல்லாமே வீண்! அடியெடுத்து வைத்தவன் அப்படியே நின்றான். அவன் கண்கள் குத்திட்டு நின்றன. சுற்று மதிலைச் சற்றுந் தயக்கமின்றித் தாண்டிக் குதித்துக் கொண்டிருந்தான் எதிரி! இனி விக்கியண்ணனால் அவனை ஒன்றும் செய்யமுடியாது.

விக்கியண்ணனின் கண்கள் அழல்பிழம்பாய்ச் சிவந்தன. எதிரி தப்பித்துவிட்டான். அவன் தப்ப மூலக்காரணம் இளவரசி கடம்பமாதேவி! அவன் பேசியபோது சொற்கள் கனலாய்ச் சுட்டன.

"தேவி! உங்கள் காதல் கனிமொழிகளை ஏன் நிறுத்தி விட்டீர்கள்? மேலே தொடருங்கள். நீங்கள் எண்ணியதுபோலவே எதிரி தப்பித்துவிட்டான் என்பதால், இனி எதற்கு இவனிடம் காதல்பேச்சு என்று எண்ணுகிறீர்கள்; அப்படித்தானே?"

"என்ன பிதற்றுகிறீர்கள்?"

"உண்மைக்குப் பிறிதொரு பெயர் பிதற்றல்தானே! இப்போது எனக்கு எல்லாமே புரிகிறது. உங்கள் ஒருவரைக்கண்டு இந்த நாட்டில் அரசர் முதற்கொண்டு அனைவரும் ஏன் அஞ்சி அடங்கு கின்றனர் என்பதை இப்போது நான் அறிகிறேன். உங்களிடம் நான் தோற்றுவிட்டேன்; உண்மைதான். வாய்மையை வஞ்சகத்தால்தான் வெல்லக்கூடும். உங்கள் அழகிலும் ஆசைமொழிகளிலும் நான் என் அறிவை இழந்துவிட்டேன். அதனால்தான், இத்தனை எளிதாக என்னை ஏமாற்றிட உங்களால் இயன்றது!"

கடம்பமாதேவியின் கைவிரல்கள் அவனிதழ்களை மூடின.

"நானா உங்களை ஏமாற்றினேன்?"

அவள் குரலில் வேதனை தெரிந்தது. ஆனால், அது விக்கியண்ணனின் மனதைச் சிறிதும் மாற்றவில்லை.

"ஆம்! நீங்கள்தாம் என்னை ஏமாற்றினீர்கள்! அழகான பெண்களைக் கண்டால் அலையுறும் என்னியல்பை அறிந்து கொண்ட நீங்கள் என்னை அடுத்துக் கெடுத்துவிட்டீர்கள்! நான் நினைத்தது என்ன? நீங்கள் நடந்துகொண்டது என்ன? என்னன்பிற்கு ஆளானதுபோல், காதலில் கட்டுண்டதுபோல் என்னிடம் நாடகம் ஆடினீர்கள்; என்செயல்களை அறிந்தீர்கள்; இன்று என்னை ஏமாற்றி விட்டீர்கள். நீங்கள் என்னைக் காதலிக்க வில்லை; காதலிப்பதுபோல் நடித்தீர்கள்! ஏன் தேவி பேசாமல் நிற்கிறீர்கள்? பாண்டியமன்னனின் தம்பி பராந்தகர் இருக்கையிலே

இந்த நாடோடியிடம் என்ன பேச்சு என்று எண்ணுகிறீர்களா? சிறுதுரும்பும் பல்குத்த உதவும் என்பதுபோல் என்னைப் பயன்படுத்திக் கொண்டு இப்போது தூக்கி எறியப் பார்க்கிறீர்கள்; சரிதானே? சிறுதுரும்பு பல் குத்துவதற்குப் பயன்படுவதோடு, சிலசமயங்களில் உயிருக்கே ஊறு விளைவிப்பதும் உண்டு; மறந்துவிடாதீர்கள்."

கடம்பமாதேவி மெல்ல அரண்மனைக்காகத் திரும்பி நடந்தாள். விக்கியண்ணன் அவளைத் தொடர்ந்து சென்றான்.

"நான் வஞ்சகி என்பது உங்கள் எண்ணம்?"

"ஆமாம்!"

"நானா வஞ்சகி?"

"ஆம்! நிச்சயமாக! எனக்கு வஞ்சகம் செய்ததைக்கூட நான் ஏற்றுக் கொள்கிறேன்; ஆனால் இந்த நாட்டிற்கு ஏன் இந்த வஞ்சகம்? இந்த நாட்டின் இளவரசி நீங்கள்; இந்த நாட்டின் வாழ்வும்தாழ்வும் எல்லோரையும்விட உங்களையே மிகவும் பாதிக்கக்கூடும். அங்கே பாண்டியர் பிடியினின்றும் இந்த நாட்டை விடுவிக்க இடவைநகரில் போர் நடந்துகொண்டிருக்கிறது; ஆனால், இங்கே நீங்களோ எதிரி பராந்தகப்பாண்டியரோடு உறவாடிக் கொண்டிருக்கிறீர்கள்! இதன் பொருள் என்ன? செய்தி அறிந்து சிறையிட நான் விரைந்து வருகிறேன்; ஆனால், நீங்களோ என் கடமையைத் தடுத்து எதிரியைத் தப்பவைக்கிறீர்கள்! இது வஞ்சகமில்லையா? ஏன் அமைதி? சொல்லுங்கள்."

"ஐயா, வீரரே! மாதேவி இல்லையேல் போரென்று ஓலை அனுப்பியது யார்? பாண்டிய மன்னரா? இல்லை, ஐயா; பாண்டிய மன்னரில்லை. எல்லாம் நானறிவேன். அந்த ஓலை உங்களால் உருவாக்கப்பட்டது. உங்கள் அரசியல் நாடகத்திலே அதுவும் ஒரு பாகம் என்பது எனக்குத் தெரியும். நீங்கள் மறுக்க வேண்டா. பாதிக்கப்பட்ட நாம் இருவருமே நடுவர்களாக இருப்பின் உண்மை எப்படிச் சரியாகக் கிடைக்கும்? இஃது என் நாடு. இந்த நாட்டின் வாழ்வோடு என்னுயிர் இணைந்துள்ளதைச் சேரநாட்டைச் சேர்ந்த

நீங்கள் எப்படித் தெரிந்துவைத்திருக்க முடியும்? நானா இந்தச் சோழநாட்டிற்கு வஞ்சகம் இழைக்கக் கூடியவள்? நான் எது சொன்னாலும் உங்களுக்கு விளங்காது. சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி உங்கள் சிந்தையைப் பாதித்திருப்பதால், எதையும் எண்ணி ஆயும்தன்மையை இழந்துவிட்டிருக்கிறீர்கள்."

"எதையும் எண்ணி ஆயும் திறமையை இழந்தவன் என்று என்னையா சொல்கிறீர்கள்?"

விக்கியண்ணன் குறுக்கிட்டான்.

"ஆமாம்; உங்களைத்தான் சொன்னேன். பாண்டியர் ஆதிக்கத்தினின்றும் இந்தச் சோழத் திருநாட்டை மீட்கப் பாடுபடுவதாக நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால், நானோ, இந்தச் சோழநாட்டை மட்டுமின்றி இந்தத் தமிழகத்தையும் தமிழ் மொழியையும் தமிழர் இனத்தையும் அவர்தம் தனிப்பண் பாட்டையும் பல்லவர்களின் மிகப்பெரும் கேட்டினின்றும் விடுவித்துக் காக்க உழைக்கின்றேன். யாரிந்தப் பல்லவர்கள்? எங்கிருந்து வந்தவர்கள்? சேரசோழபாண்டியர் வழிவந்தவர்களா? என்றுமிள செந்தமிழுக்குச் சொந்தக்காரர்களா? அவர்கள் ஆட்சியால் தமிழ் வளர்ந்ததா? தமிழர்கள் வாழ்வு பெற்றனரா? பல்லவர்களால் வடமொழி இங்கு வளர்கிறது; வடவர்கள் வலிமை பெறுகின்றனர். தமிழுக்கு அவர்கள் ஆற்றிய ஒரு தொண்டினை உங்களால் சொல்லக்கூடுமா? மூன்று தமிழ்ச்சங்கங்களை மதுரையில் நடத்தித் தமிழை வளர்த்தவர் யார்? பாண்டியரா? பல்லவரா? தம்நாடெங்கும் வடமொழியை வளர்க்கப் பாடுபடுபவர் யார்? பாண்டியரா? பல்லவரா? தமிழே நாளுமென வாழும் பாண்டியரா? எங்கிருந்தோ வந்து இங்குத் தங்களாட்சியை அமைத்துக் கொண்ட பல்லவரா? ஏன் ஐயா, அமைதி? காஞ்சியிலும் பாகூரிலும் வடமொழிக் கல்லூரிகளை அமைத்த பல்லவர், தமிழுக்காகக் கல்லூரி ஒன்றை எங்கேயாவது அமைத்ததுண்டா? வடமொழியை வளர்க்க ஆரியப் பார்ப்பனருக்கு நிலங்களையும் ஊர்களையும் மானியமாகவிட்ட பல்லவ மன்னர்கள், தமிழை வளர்க்கத் தமிழ்ப்புலவர்களுக்குத் தகுந்த எந்த உதவியையாவது செய்திருப்பதாக யாராவது சொல்லி யாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"

"ஏன் பாரதம்பாடிய பெருந்தேவனார் உண்டே! நந்திக் கலம்பகம் என்ற நற்றமிழ்நூல் ஏற்றமிகுந்ததன்றோ!"

"பல்லவர் ஆட்சியில்தான் பாரதம் பாடினார் பெருந்தேவனார்; ஆனால் அவர் எடுத்துக்கொண்ட பொருள் வடவரின் ஏற்றத்திற்கு உரியதேயன்றித் தமிழர் பண்பாட்டிற்குத் தகுந்ததன்று. நந்திவர்ம பல்லவரின் தம்பி காடவர் பாடிய நந்திக்கலம்பகம் தமிழின் சுவைகளைக் கொண்டதாக இருக்கலாம்; ஆனால், அது தமிழின் வளர்ச்சிக்காகப் பாடப்பட்டதன்று; தன் உடன்பிறந்தோன் நந்திவர்மனின் அழிவிற்காக ஆக்கப்பட்டது. பல்லவர் ஆட்சியில் வடமொழி வளர்கிறது; வடவர் வளம் பெறுகின்றனர். தமிழர்தம் நிலை தாழ்கிறது; தமிழ்மொழி சிறப்பு இழக்கின்றது. இப்போது சொல்லுங்கள்! பல்லவர்களின் ஆட்சி அழிக்கப்படவேண்டுமா? நம்மவர்களாகிய பாண்டியர்களின் தமிழாட்சி தகர்க்கப் படவேண்டுமா? நீங்கள் நினைப்பதுபோல், பல்லவர்களுடன் சேர்ந்து பாண்டியரை அழித்துவிடுகிறோம் என்று வைத்துக் கொள்வோம்; என்னாகும் தெரியுமா? பல்லவர் ஆட்சி நிலையாகத் தமிழ்நாட்டில் நிலைத்துவிடும். பிறகு, சேரசோழபாண்டியர் மூவரும் ஒருங்கு சேர்ந்து முயன்றாலும் பல்லவரை வெல்ல முடியாது. அந்நிலை தேவைதானா? பல்லவருக்குத் துணையாகப் படைநடத்தி வருபவர்கள் யார்? தமிழ்நாட்டுச் சிற்றரசர்களா? இல்லை, வீரரே! வருகிறவர் அனைவரும் வடபுலத்தைச் சேர்ந்தவர்கள்! கங்கரும் மகதரும் இராட்டிரகூடரும்தாம் துணையாக வருகிறார்கள். யார் அவர்கள்? அத்தனை பேர்களும் அயலார்கள்! காலத்தால் முன்தோன்றிய மூத்தகுடி தமிழர்குடி என்கிறோமே, அந்த நற்றமிழர் குடிக்கு ஒரு தீய முடிவைத் தேடுகிறீர்கள் நீங்கள்; நானோ நல்ல விடிவைத் தேடுகிறேன். பாண்டியரைத் தோற்கடிக்கப் பல்லவர்க்குக் கங்கரும் மகதரும் சோழரும் உதவியும் பயனில்லை. அதனால்தான், குடமூக்கில் நடந்த போரில் பல்லவர் தோல்வி எய்தினர். என்ன இருந்தாலும் பாண்டியர் தமிழர்; அவர்களை அழிக்க அயலாரோடு கூட்டுச் சேர்வது இறுதியில் நமக்கே இழிவாய் முடியும். அரிசிலாற்றங்கரையில் நடைபெற்ற போர் அதைத்தானே நமக்கு அறிவுறுத்தியது. பல்லவரோடு இலங்கைவேந்தனும் இணைய அன்றோ பாண்டியர் தோற்றனர்? அதனால்தானே பல்லவர் ஆட்சி சோழமண்டலப் பெரும்பகுதிகளில் நிலையுற்றது? தேவைதானா நமக்கு? ஆயிரங் குழப்பங்கள் நம்வீட்டிற்குள்

இருக்கலாம்; அதில் அடுத்த வீட்டுக்காரன் தலையிடுவானே ஆயின், பயன்பெறுபவன் அவனாகத்தான் இருக்கமுடியும். அதனால்தான், பாண்டியருடன் சேர்ந்து பல்லவரை ஒழிக்கத் திட்டங்கள் தீட்டிச் செயலாற்றி வருகிறேன். நாளை கிடைக்கும் பலாப்பழத்தினும் இன்று கிடைக்கும் கலாக்காய் நன்று என்பது உங்கள் முடிவு. நானோ நிலையான தமிழாட்சியே தலையானது என்கிறேன். இதை நான் இந்த நாட்டிற்குச் செய்யும் இரண்டகம் என்று நீங்கள் எண்ணினால் எனக்குக் கவலை இல்லை. என் நோக்கம் தூய்மையானது. ஆனால், என் அன்பை, காதலை ஏமாற்று என்கிறீர்களே, அதைத்தான் என்னால் தாங்கிக்கொள்ள இயலவில்லை. ஏன் நிற்கிறீர்கள்? என்னறைக்கு இப்போது வாருங்கள்; மீதியையும் நான் சொல்கிறேன். உங்களை வஞ்சித்தேன் என்றீர்களே; அஃது எத்துணைப் பொருளற்ற அப்பட்டமான குற்றச்சாட்டென்பதை நீங்களே உணரும்வழி செய்கிறேன். வாருங்கள்."

அசைந்து நடந்த அந்த ஆரணங்கின்பின்னே இசையில் கட்டுண்ட அரவொப்ப விக்கியண்ணன் தொடர்ந்தான். அரண்மனைக்குள் நுழைந்தவனுக்கு வியப்பே காத்திருந்தது.

இளவரசியின் இருப்பிடத்தில் இத்துணைக் கட்டுக்காவலா? எப்போது, யாரால் இந்தக் காவல் ஏற்படுத்தப்பட்டது? விக்கியண்ணனுக்குத் தெரியாமல் காவற்றலைவன் கடியநெடுவேட்டுவன் செய்திருக்கமுடியாது. அப்படியானால் இதன் பொருள் என்ன? இளவரசியின் அறைவாயிலைக் காக்க இத்தனை வீரர்கள் உருவிய வாள்களோடு நிற்கக் கூடுமேயானால், அரண்மனையைச் சுற்றி இன்னும் எத்தனை வீரர்கள் நிற்கக் கூடுமோ?

"ஏன் இந்தக் கடுமையான காவல்?"

"தேவையாகத்தான். உள்ளே வாருங்கள்; சொல்கிறேன்."

திறக்கப்பட்ட கதவைத் தாண்டி அவன் முதலில் உள்ளே நுழையுமாறு கடம்பமாதேவி ஒதுங்கி வழிவிட்டு நின்றாள்.

விக்கியண்ணன் முதலில் உள்ளே சென்றான். அவனைத் தொடர்ந்து அவளும் உள்ளே சென்றாள்."

உள்ளே நுழைந்த விக்கியண்ணன் ஒரு நொடிதான் நிதானித்தான். அவன் கை இடையில் தொங்கிய நீண்ட வாளுக்காக விரைந்தது. ஆனால் அவனின் கை விரைவைவிடப் பக்கங்களில் அருகிலிருந்த வீரர்களின் கைவாள்களின் விரைவு மிகையாக இருந்தது. அவ்வாள்களின் நுனிகள் விக்கியண்ணனின் கழுத்தையும் மார்பையும் தொட்டுக் கொண்டிருந்தன. விக்கியண்ணன் செயலற்று நின்றான்.

விக்கியண்ணன் தன்னிலை எண்ணித் தவிக்கவில்லை. எதிர்பாராச் சூழ்நிலை அது! இளவரசியின் தனியறையில் இத்தனை வீரர்கள்! அஃதும் அவன் வரவை எதிர்நோக்கி!

விக்கியண்ணன் பின்பக்கம் திரும்பிப் பார்த்தான். நிலைமையை அவன் நன்கு புரிந்துகொண்டான். வழியை அடைத்துக்கொண்டு வாளொடு பலரும் நின்று கொண்டிருந்தனர்! அவனுக்கு எதிராக மிகநன்றாகவே அனைத்தும் செய்யப் பட்டுள்ளன. அவனைக் கடம்பமாதேவி அல்லவா ஏமாற்றி விட்டாள்? அவனுமன்றோ எளிதில் அவளிடம் அகப்பட்டுக் கொண்டுவிட்டான்!

கடம்பமாதேவி கலகலவென்று சிரித்தாள். விக்கியண்ணன் திரும்பி அவளைப் பார்த்தான். அவளின் சிரிப்பொலி அறையை நிறைத்தது.

அந்த அறையில் இளவரசி கடம்பமாதேவி மட்டுமே சிரித்தாள். படைத்தலைவர் செங்கண்ணரும் மற்றைய படைவீரர்களும் உருவிய வாள்களுடன் விக்கியண்ணனை விழிப்போடு கவனித்துக் கொண்டிருந்தனர். அவர்களின் நாட்டம் அனைத்தும் அவன் மேலேயே பொருந்தியிருந்தன. இளவரசியின் சிரிப்பிலே அங்கு யாருமே கலந்துகொள்ளவில்லை.

விக்கியண்ணனின் நெஞ்சம் எரிமலையாய் வெடித்தது.

# 27. இப்படியும் ஒரு சிறையா?

*"காதல் பெருகிக் களிசெய்ய அக்களியாற்*
*கோதையும் தாரும் இடைகுழைய - மாதர்*
*கலந்தாள் கலந்து கடைக்கண்ணாற் கங்குல்*
*அலந்தாள் புலரியம் போது."*

விக்கியண்ணன் விழிப்படைந்தான். காலைப்பொழுது மலர்ந்து மூன்று நாழிகைகளாவது கழிந்திருக்க வேண்டும். உடலின் களைப்பு உறக்கத்தின் பின்பும் உடனிருந்ததை அவன் உணர்ந்தான். ஆனாலும் அவன் நெஞ்சில்தான் எத்துணை நிறைவு! உடலின் உணர்வில்தான் எத்தகை புத்துணர்வு! இந்தப் புத்துணர்வினை அவன் இதற்கு முன்னர் என்றாவது எண்ணியும் அறிந்ததுண்டா?

அருகே அவனுடலை அணைத்தவாறு கடம்பமாதேவி ஆழ்ந்த உறக்கத்திலே இருந்தாள். அப்படிப்படுத்திருந்த அவளைப் பார்க்கப் பார்க்க அவனுள்ளம் களிகொண்டது. கள்ளமில்லா அந்தக் கன்னியுடலாளை அவன் கடிந்துகொண்டது முட்டாள்தனமே. சிறிதேனும் சிந்திக்கும்திறன் அவனுக்கு இருந்திருக்கவில்லை. சிந்தித்திருந்திருந்தால் தித்திக்கும் அந்தத் தேனிதழாளைச் சிறிதும் ஐயப்பட்டிருக்கமாட்டான்.

வஞ்சகி! நஞ்சினும் கொடிய சொல்லன்றோ? அவளா வஞ்சகி? அவனிடம் அவள்கொண்ட அன்பையும் ஆசையையும் நாடகமென்றன்றோ அவன் சாடினான்! ஆனால் அவளோ அவனுடைய இழிந்த எண்ணத்தைப் பொறுத்து ஏற்றுக்கொண்டது மட்டுமா? எண்ணிஎண்ணி என்றும் இன்பமுறும் இன்ப உலகத்திற் கன்றோ இட்டுச்சென்றாள்! அந்த இனியவளுக்கு விக்கியண்ணன் என்ன கைம்மாறு செய்ய இயலும்?

இரவெல்லாம் இணைந்து மகிழ்ந்த இன்ப விளையாட்டுகளால் அவளுடைய அழகுமேனியை ஆரத்தழுவிக்காத்த ஆடைகள் கலைந்து தங்கள் கடமையைச் சரிவரச் செய்யும் திறனற்றுச் சோர்ந்து கிடந்தன. மஞ்சள் வண்ணமேனியிலே அளவோடு செம்மைநிறமும்

சேர்ந்திருந்ததால், அவளுடலழகு அந்தக் காலைவேளையிலும் அவன்கண்களுக்கு எல்லையில்லா ஈர்ப்பினைச் சேர்த்து, இரவெல்லாங் கொண்ட இன்பவுறவால் உறங்கி ஓய்வு கொண்டிருந்த உணர்வலைகளை உலுக்கி எழுப்பி அவனை உணர்ச்சிக்கு மீண்டும் ஆட்படுத்தியது.

அழகோ அழகு! அவளழகே அழகு! விக்கியண்ணனின் உள்ளம் கவிதை பாடியது. பிறந்தது முதல் பாலிலும் பன்னீரிலும் நாளும் குளித்துப் பழகியவளோ? உடலின் மென்மையும் தண்மையும் வேறெங்கே இருந்து அவள் பெற்றிருக்க முடியும்? எத்துணை எடுப்போடு ஆடையால் மறைக்கப்பட்டிருப்பினும் அவளங்கங்கள் விம்மிவிம்மித் தாழ்கின்றன! தென்னை இளநீரின் திரட்சி, தேரின் அமைப்பு, வேலின் கூர்மை ஆகிய அனைத்தும் ஒருங்கே ஒரே பொருளிடத்து பொருந்தக்கூடுமோ? பொருந்தக் கூடும் என்றன்றோ படர்ந்து பருத்துக்கூம்பிய அவளின் பருவச் செழிப்பு எடுத்துரைக்கிறது! அந்த அங்க அமைப்புகளிலே அவனால் எந்தக் குறையும் காண முடிந்ததா? மெழுகூட்டப்பட்ட பளிங்கின் வழவழவப்பு! மெருகூட்டப்பெற்ற பொன்னின் பளபளப்பு! கண்களை மட்டுமா? கருத்தையுமன்றன்றோ களி செய்தன.

"கண்ணே!"

மெல்ல அழைத்தவாறு விக்கியண்ணன் உறங்கிக் கொண்டிருந்தவளின் மூங்கில் தோளை மெல்லத் தொட்டான். அவன் கை அவள் மேல் பட்டதும், விழித்துக் கொண்டிருந்தவள் போல், மேலும் நெருங்கி அவனை அவள் வலிய அணைத்துக் கொண்டாள். அவள் கொண்ட ஆசைத்தீ இன்னும் அணைய வில்லைபோலும்.

"உம்."

சிறு குறிப்பொலி அவள் இதழ்களினின்று சிந்தியது. அவளுடைய கால்கள் அவனுடலைப் பின்னிப் பிணைத்தன. விக்கியண்ணன் அவளுடலைச் சேர்த்துத் தழுவி மகிழ்ந்தான்.

"விடிந்து விட்டதா?"

அவன் கைகளின் இறுக்கம் அவள் உறக்கத்தை முற்றும் கலைத்துவிட்டது போலும். ஆனால், அவள் கண்கள் மூடியே இருந்தன.

"ஆமாம்."

"அதற்குள்ளாகவா?"

அவளுடைய ஆற்றாமையை அவன் புரிந்துகொண்டான். அவள் கொண்ட முதலுறவாயிற்றே! காலை விடிந்தால் கன்னியர்க்கு ஆற்றாமை வருதல் இயல்புதான். ஓரிரவில் ஒருநாளில் முற்றும் பெற்றுவிடக்கூடிய உறவில்லையே ஆண்பெண் உறவு!

கடம்பமாதேவியிடம் எழுந்த சீரான மூச்சு அவள் மீண்டும் உறங்கிவிட்டாள் என்பதை விக்கியண்ணனுக்கு விளக்கியது. அவள் உறக்கத்தைக் கலைக்க விரும்பாதவனாய் விக்கியண்ணன், கடந்த இரவு நடந்தவைகளை மீண்டும் கருத்தில் கொண்டு ஆய்ந்தான். நடந்தவைகளை எண்ண எண்ண, ஒரு பக்கம் வேதனையையும் மறுபக்கம் மகிழ்ச்சியையும் உணர்ந்தான். என்னவெல்லாம் அந்த இரவில் நடந்துவிட்டன!

கலகலவென்று வாய்விட்டுச் சிரித்துக் கொண்டிருந்த கடம்பமாதேவியைக் காணக் கடுஞ்சினம் கொண்டான் விக்கியண்ணன். எப்படிப்பட்ட நம்பிக்கை இழப்பை அவள் அவனுக்குச் செய்துவிட்டாள்! சீறும் எரிமலைபோல் சினத்தால் புகைந்து கொண்டிருந்தான்; எனினும், விக்கியண்ணன் தன்பேச்சில் அமைதியை வெளிப்படுத்தினான்.

"இளவரசி! இஃதென்ன விளையாட்டு?"

கடம்பமாதேவி சிரிப்பதை நிறுத்தினாள்; கட்டிலுக்காக மெல்ல அசைந்து சென்று அமர்ந்தாள். சற்றுமுன்னர்வரை வாய்விட்டு உரக்கச் சிரித்துக் கொண்டிருந்த அவளிடம் அப்போது அணுவேனும் சிரிப்பின் சாயல் தெரியவில்லை. அவள் கண்களும் முகமும் அவள் கொண்ட எண்ணத்தின் ஆழத்தைக் காட்டின. அவனை நேருக்குநேர் ஏறிட்டு நோக்கிய கண்களினின்று விக்கியண்ணனால்

அவள்கொண்ட எண்ண ஓட்டத்தை அறிந்து கொள்ளக் கூடவில்லை.

"விளையாட்டில்லை, வீரரே. நீங்கள் இப்போது சிறைப் படுத்தப்பட்டு இருக்கிறீர்கள்."

விக்கியண்ணன் வாய்விட்டுச் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

"வேறென்ன செய்வது? என்னைச் சிறைச் செய்ய நீங்கள் யார்?"

"நானிந்த நாட்டு இளவரசி!"

"உண்மைதான்! மறுக்கவில்லை. ஆனால், என்னைச் சிறைப்படுத்தவோ என்வழியில் குறுக்கிடவோ உங்களுக்கு ஏது உரிமை? நான் யாருக்கும் கீழ்ப்பட்டவன் இல்லை என்பதும் என் ஆணைக்கே மற்றவர்கள் கட்டுப்படவேண்டும் என்பதும் மன்னர் அவர்களின் ஆணை. அப்படியிருக்க, என்னைச் சிறைப்படுத்த நீங்கள் எண்ணுவது அரசர் ஆணையை மீறுவது மட்டுமன்று; அப்பட்டமான அரசியல் இரண்டகம் ஆகும்."

செங்கண்ணரின் கண்கள் சீறின; விக்கியண்ணனின் நெஞ்சைத் தொட்டுக் கொண்டிருந்த வாளின் நுனி மேலும் அமுந்தியது.

"தலைவரே! யாரிடம் என்ன பேசுகிறோம் என்பது நினைவிருக்கட்டும். இந்நாட்டின் இளவரசியார் எல்லோர்க்கும் உயிர்போன்றவர்! அவரைப்பற்றி இழிந்த வார்த்தை இனியும் வருமேல் உங்கள் மார்பை இந்த வாள் ஊடுருவத் தயங்காது."

விக்கியண்ணனின் இதழ்களிலே இளநகை விளையாடியது. அவன் கண்கள் செங்கண்ணரை நோக்கியபோது சிரித்துக் கொண்டிருந்தன.

"தலைவரா? நானா? நல்ல வேடிக்கை! தலைவருக்குத்தரும் மதிப்புதானோ நீங்கள் உங்கள் வீரரோடு என்னைச் சிறைப்படுத்த இங்குவந்திருக்கும் செய்கை? தலைவருக்குத் தலைப்பணியும் வீரனுடைய பண்புதானோ நீங்கள் ஒப்புதலின்றிப் போர்க்களத்தை விட்டுப் புறப்பட்டு இங்குச் சேர்ந்ததும்? ஏன், செங்கண்ணரே அமைதி? உங்களுடைய தலைமையின்கீழ் உள்ள ஒவ்வொரு வீரனும் உங்களைப்போல்தானா? உங்களைப் போல்தான் எனின், இந்தச் சோழநாட்டிற்கு ஏற்றம் எந்தக்காலத்திலும் கிடையவே கிடையாது."

"இளவரசியாரின் ஆணைக்குமுன்னர் வேறு எந்த ஆணையும் எடுபடாது; எடுபடவும் கூடாது. அஃதே அரசரின் ஆணையுங்கூட! அரசரின் ஆணையைக்கூட ஒருவர் மீறலாம்; அதற்கான தண்டனையின்றும் தவிர்க்கப்படலாம். ஆனால், இளவரசியாரின் ஆணையை மீறினால், அரசர் எந்த நிலையிலும் பொறுத்துக் கொள்ளமாட்டார்."

"ஓ! அப்படியா? மிகவும் சரி. என்னைச் சிறைப்படுத்த உங்களால் முடியும் என்று நம்புகிறீர்களா? சீறிப்புறப்படும் ஆடிக்காற்று நான்; நீங்களோ சின்னஞ்சிறிய சிட்டுக்குருவிகள்! என் வழியைத் தடைசெய்ய உங்கள் வாள்களில் வலிமையிருக்குமேல், அதையும் பார்த்துவிடுவோம்."

செங்கண்ணன் திரும்பி இளவரசியை நோக்கினான். அவள் கண்கள் மகிழ்ச்சியால் சிரித்துக் கொண்டிருந்தன.

"வேளிர்குலத்து வீரரே, உங்கள் வீரத்தை நானோ இங்குள்ள மற்றவர்களோ யாரும் சிறிது குறைத்தும் மதிப்பிட்டிருக்கிறோம் என்று நீங்கள் எண்ணவேண்டா. உங்கள் வீரத்தையும் உறுதியையும் ஒவ்வொருவரும் நன்கு தெரிந்து வைத்திருக்கிறோம். இங்குள்ள இந்த வீரர்கள் என்னிடம் பற்றுள்ளவர்கள்; எனக்காக எதையும் எண்ணாமல் செய்யத் துணிந்தவர்கள்; தேவையெனில் தங்கள் உயிரையும் தரத் தயங்காதவர்கள்! அவர்களுக்கு நானிட்டுள்ள ஆணை என்ன தெரியுமா? நீங்கள் தப்பிக்க முயல்வீர் களேயானால் உங்களைத் தடுத்துநிறுத்த வேண்டும். அம் முயற்சியில் அவர்கள் உயிர்மட்டுமில்லை, உங்கள் உயிரே

போயினும் கவலைவேண்டாவென்று கூறியிருக்கிறேன். நீங்கள் வீரர்மட்டுமன்று; சூழ்ச்சித்திறனும் உடையவர். அஃது உண்மை தான் எனில் அமைதியாக இருங்கள். இங்கு வெளியே இருபது வீரர்கள் எப்போதும் உருவிய வாளோடு காவலிருப்பர். அழைத்தால் உதவிக்குவர இன்னும் பலர் அருகிலேயே தங்கியிருக்கின்றனர். உங்களுக்கு நான் சொல்லவேண்டுமென்பதில்லை. நெடும் புனலுள் வெல்லும்முதலை நீரைவிட்டு வெளியே வந்தால், அதை மற்றவெல்லாம் எளிதில் வென்றுவிடும். அந்த நிலையில்தான் நீங்கள் இப்போது இருக்கிறீர்கள். வீணாக உங்கள் உயிரை விரையம் செய்யாதீர்கள். அமைதி அடையுங்கள். செங்கண்ணரே! நீங்கள் புறப்பட்டு விரைந்து செல்லுங்கள். நான் சொன்னவை நினைவில் இருக்கட்டும். வீரர்கள் வெளியே காவலிருக்கட்டும். என் ஒப்புதலின்றி யாரையும் உள்ளே விடக்கூடாது. நான் அழைத்தால் மட்டுமே வரவேண்டும். புரிகிறதா?"

"அப்படியே இளவரசி."

"வீரரே, உங்களுக்கு வேறொன்றையும் இப்போதே சொல்லி விடுகிறேன். வாய்ப்பு அமையின், என்னைக் கொன்றுவிடுவதாகக் கூறி மிரட்டி இங்கிருந்து தப்பிச் செல்லலாம் என்ற எண்ணம் உங்களுக்கு ஏற்படுவது நல்லதில்லை. உங்கள் திறமையை நான் உணர்ந்துள்ளேன். எனக்கு என்ன நேரினும் இந்த வீரர்கள் பொருட் படுத்தமாட்டார்கள். அவர்களுடைய ஒரே கடமை, உங்களைத் தப்பவிடாமல் காவல்காப்பதே! நினைவில் கொள்ளுங்கள். செங்கண்ணரே, வீரர்களை அழைத்துக் கொண்டு நீங்கள் செல்லலாம்."

அறைக்கதவு மூடித் தாழிடப்பட்டது. அங்கு விக்கியண்ணனையும் கடம்பமாதேவியும் தவிர வேறுயாரும் இல்லை. அவன் அமைதியாய் அமர்ந்திருந்தான். விக்கியண்ணனுக்கு நிலைமை தெளிவாக விளங்கியது.

"இளவரசி, இந்தச் சோழநாட்டில் என்னைக் காவலில் வைக்க ஏற்ற சிறைச்சாலைகள் ஏதும் இல்லையா? இளவரசியாரின் படுக்கையறைதானா இந்த எளியோன் இருக்கவேண்டிய இடம்?"

"ஐயா, இந்தக் காவல் சிலநாள்களுக்கு மட்டுமே. போர் முடியட்டும்; பிறகு, இந்தச் சிறையிலிருந்து மட்டுமன்று, நீங்கள் விரும்பினால் என்னைக் கொன்றுவிட்டு என் உள்ளச் சிறையினின்றும் விடுபட்டுச் செல்லலாம்."

"நன்றி, இளவரசி. இன்னுமா உங்கள் இனிய சொற்களை என்னை நம்பும்படி சொல்கிறீர்கள்? 'வாருங்கள் நான் வஞ்சகி இல்லை என்பதைத் தெளிவித்துக் காட்டுகிறேன்' என்று என்னை இங்கு அழைத்து வந்தீர்களே, எதற்காக? வஞ்சகி என்பதை உறுதி செய்வதற்குத் தானே! இளவரசியாருக்கு என்னைப்பற்றி ஏதும் புதிதாகச் சொல்லவேண்டியதில்லை; எல்லாமே அறிவீர்கள். எத்தனையோ பெண்களை என்வாழ்வில் நான் சந்தித்திருக்கிறேன்; ஆனால், அவர்களில் ஒருவர்கூட என்னை வஞ்சிக்க நினைத்ததும் இல்லை; என் விருப்பை மீறி நடந்ததும் இல்லை. வஞ்சிப்பதில் ஆண்களே வல்லவர்கள் என்கிறார்கள்; நீங்களோ அவர்களையும் விஞ்சிவிட்டீர்கள்."

கடம்பமாதேவி அவனுக்கு உடனே விடையளிக்கவில்லை. அவள் கண்கள் கலக்கத்தைக் காட்டின. பேசுவதற்குமுன் சிந்திப்பது நன்கு தெரிந்தது. அவள் பேசத் தலைப்பட்டபோது அமைவாகவே பேசினாள். குரலில் துயரம் சிறிது குழைந்தொலித்ததை விக்கியண்ணன் உணர்ந்தான்.

"ஐயா, உங்களைப் பொருத்தவரை அகமும் புறமும் ஒன்றோடொன்று இணைந்தவையாய் இருக்கலாம். எனக்கோ அகவாழ்வு வேறு; புறவாழ்வு வேறு. ஒன்றில் ஒன்று குறுக்கிடுவதை நான் வெறுப்பதுமட்டுமன்று; பொறுப்பதும் இல்லை. உங்களை இந்த அறைக்கு அழைத்து வந்து சிறைப்படுத்தியது என்னக வாழ்வோடு தொடர்புடையதில்லை. உங்களை நான் என் அகத்தால் வஞ்சிக்க வில்லை. அதைத்தான் உங்களுக்கு உறுதிபடுத்த இங்கு அழைத்து வந்தேன். வேளைக்கு ஒருத்தியைத் தேடும் வேட்கை உங்களைப் போன்று வீரருக்கு இருக்கக்கூடும்; அப்படியே வேல்விழியரும் இருப்பார்கள் என்று ஏன் எண்ணுகிறீர்கள்? என்னையும் ஏன் உங்களை ஒப்புநோக்கி எடைபோடுகிறீர்கள்? அரசியல் வேறு; நான் கொண்ட காதல் வேறு. இருபத்தெட்டு ஆண்டுகளை அடைந்துவிட்ட என் எண்ணத்தில் இடம்பெற்ற ஒரே ஆண்மகன்

நீங்கள்தான்! உங்களை வஞ்சிக்க என்னால் கூடுமா? ஏன் அங்கேயே நிற்கிறீர்கள்? அருகே வாருங்கள் ."

விக்கியண்ணன் அவளருகில் சென்று நெருங்கி நின்றான்.

"ஏன் நிற்கிறீர்கள்? அருகில் அமருங்கள்."

அவன் கையைப்பிடித்து அருகமர்த்திக் கொண்ட கடம்பமாதேவி அவன் கையை உடனே விட்டுவிடவில்லை. அவளுடைய செய்கை விக்கியண்ணனுக்கு அதிர்ச்சியை விளைவித்தது. இஃதென்ன வெட்கமற்ற செயல்! தன் கையை அவள் பிடியினின்றும் விடுவித்துக் கொள்ள வெகுவாய் முயன்றான் அவன். ஆனால், தன்னிட மார்போடு அவன் கையை இறுகச் சேர்த்திருந்த கடம்பமாதேவி விடுபவளாய் இல்லை.

"ஏன் இந்தத் தடுமாற்றம்? வெட்கமற்று இவள் இப்படி நடந்து கொள்கிறாளே என்று வேதனையா? வெறுக்கத் தோன்றுகிறதா? என் நெஞ்சின் மேல் உங்கள் கை இருக்கிறதன்றோ? இப்போது கேளுங்கள் அந்த நெஞ்சை இவள் வஞ்சகியா என்று. நான் வேறு, நீங்கள் வேறு இல்லை. எண்ணெய்யில் நீர் கலந்ததைப்போல் அன்று நீங்கள் என்னோடு இணைந்துள்ளது. செம்புலப்பெயல் நீரொப்ப நீங்கள் என் உயிரில் ஒன்றாய் உறைகின்றீர்கள். காட்டில் முதன்முதலாக உங்களைக் கண்டபோதே நான் உங்களுக்கு உரியவளாகிவிட்டேன். அதை இப்போது நாம் உறுதிசெய்து கொள்வோம். ஏன் பதறுகிறீர்கள்? நான் வஞ்சகி இல்லை என்பதை உங்களுக்கு வேறெப்படி விளக்கக் கூடும்? அன்பரே, உள்ளத்தைச் சொந்தமாக்கிக் கொண்ட நீங்கள், இப்போது இந்த உடலையும் உங்கள் சொந்தமாக்கிக் கொண்டு எனக்கு உவப்பைத் தாருங்கள். களவு வாழ்க்கை கசப்பதும் உண்டோ? இன்றிரவு மட்டுமில்லை; இனிவரும் ஒவ்வொரு இரவிலும் நான் உடனிருப்பேன். ஆகவே, நீங்கள் அஞ்சிப் பயனில்லை. பெண் நான்; நானே இன்னும் பேசிக்கொண்டே இருக்க வேண்டுமா?"

அவளிதழ்கள் அவனிதழ்களில் பதிந்தன.

"இளவரசி?"

"எப்போதும்போல் தனிமையிலிருக்கும்போது என்னைத் தேவியென்றே அழையுங்கள். இந்த நாட்டிற்குத்தான் நான் இளவரசி; உங்களுக்கோ உரிமைபூண்ட தேவி!"

"தேவி?"

"உம்."

விக்கியண்ணன் மிகமிக எளிய மனிதன். அவன் நெஞ்சம் மிகவும் இளகிய ஒன்று. அதிலும் அவன் கவிஞன்! அழகான பெண்களை ஆடையில் தொலைவில் காணும்போதே உணர்ச்சிக்கு உட்பட்டுவிடுபவன் அவன்! பக்கத்திலேயே பருவமங்கை; போதாதற்குத் தோதாக அவள் பொன்மேனி கண்முன்னே புத்தம்புது பொலிவோடு தெளிவாகத் தெரிந்தது! அவன்தான் என்ன செய்யமுடியும்?

கடம்பமாதேவியின் கட்டுக்கடங்காக் கட்டான உடல் அவன் கைகளுக்குள் தானே வந்து காதலுணர்ச்சிகளைத் தூண்டி எழுப்பியது. மனதைக் கட்டுப்படுத்திக் கற்றிராத விக்கியண்ணன் அவளின் அசைவிற்கும் ஆசைக்கும் ஈடுகொடுக்க இயலாத வனாய்க் காதல்களியாட்டங்களிலே தன்னை முற்றும் இழந்தான். அந்த இரவு அவர்களுக்கு நீண்ட இரவாக நிலைத்து இனித்தது.

வெளிக்கதவு தட்டப்படும் ஒலி அறையை நிறைத்தது. தன்நினைவுகளினின்றும் விக்கியண்ணன் விடுபட்டுக் கடம்பமாதேவிக்காகத் தன் பார்வையைத் திருப்பினான்.

கண்களோடு கண்கள் கலந்தன. அவனைக் கண்ட அவள் விழிகளில் அன்பும் ஆசையும் பெருமையும் நிறைவும் ஒளிவிட்டன. அத்துடன் நாணமும் தெரிந்தது. அந்த நாணம் அவள் தன்னிதழ்களில் அப்போது கொண்டிருந்த இளநகையின் சுழற்சியிலும் கன்னங்களில் படர்ந்த செழுமையிலும் இனிது விளங்கியது.

"யார் அங்கே?"

"படைத்தலைவர்கள் வந்திருக்கிறார்கள், அம்மா."

கதவின் மறுபக்கத்திலிருந்து பணிப்பெண்ணின் விடை வந்தது.

"கொஞ்சம் பொறுக்கட்டும்."

கடம்பமாதேவி அவனணைப்பினின்று விடுபட்டு எழுந்தாள். அவளுடைய விரைவு அவனை வியப்பில் ஆழ்த்தியது. இத்துணை விரைவாக எப்படி ஒருபெண்ணால் குளித்து முடித்துப் புத்தாடையணிந்து புதுமெருகோடு பொலிவோடு தன்னை ஏற்பாடு செய்து கொள்ள முடிகிறது? எல்லாம் சில மணித்துளிகளிலே முடிந்துவிட்டன.

"வரச்சொல்."

திறக்கப்பட்ட கதவின்வழி அறையினுள் பணிப்பெண் முன்னர் வந்தாள். தொடர்ந்து பல்லவரையன், ஒற்றர்படைத் தலைவர் சேந்தன்கீரன், காவற்தலைவர் கடியநெடுவேட்டுவன் ஆகிய மூவரும் உள்ளே நுழைந்தனர். உள்ளே வந்ததும் தலையைத் தாழ்த்திப் பணிவோடு இளவரசியாரை வணங்கி ஒதுங்கி நின்றனர். அவர்கள் பார்வை பஞ்சணையில் அமர்ந்திருந்த விக்கியண்ணன் மேல் நிலைத்தது. அதைக்கண்டு விக்கியண்ணன் மெல்லச் சிரித்தான்.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? போர்க்களத்தில் சோழநாடு; அதன் தலைவனோ பொறுப்பற்றுப் பஞ்சணையில்! அதுதானே?"

பல்லவரையன் பதில் சொன்னான்.

"அப்படி இல்லை, தலைவரே."

"இல்லையா?"

விக்கியண்ணன் வியப்பால் நிமிர்ந்தெழுந்தான்.

"ஆம், தலைவரே. இளவரசியார் அவர்களால் நீங்கள் சிறைப் படுத்தப்பட்டுள்ளதை நாங்கள் அறிவோம்."

"ஓகோ! அப்படியானால் நீங்கள் என்னைப்பார்க்க வரவில்லை?"

"உங்களைப் பார்க்கத்தான் வந்திருக்கிறோம். இதுவரை நடந்தவற்றை உங்களுக்கு விளக்கியும் இனி நடப்பிக்க வேண்டியதற்கான உங்கள் ஆணையைப் பெறவும் நாங்கள் இங்கு வந்திருக்கிறோம்."

விக்கியண்ணன் வாய்விட்டுச் சிரித்தான்.

"தலைவரே, என் பேச்சில் ஏதும் தவறுண்டா?"

"இல்லாமல் என்ன? பல்லவரையா, இந்த நாட்டின் இளவரசியாரால் நான் சிறை வைக்கப்பட்டுள்ளேன்! இந்த நிலையில் என் ஆணைக்கு ஏது மதிப்பு?"

பல்லவரையன் விடையளிக்குமுன் காவல்தலைவன் கடியநெடுவேட்டுவன் பேசினான்.

"தலைவர் ஆணையைத் தலையைக் கொடுத்தும் நிறைவேற்ற வேண்டியது எங்கள் கடமை! அதுவுந்தவிர, தலைவர் இப்போது எந்தக் காவலிலும் இல்லை."

விக்கியண்ணன் ஒரு வினாடியே நின்றான்; அடுத்தகணம் விரைந்து அவர்கள் அருகே வந்தான்.

"பல்லவரையா, என்ன இது? காவல்தலைவர் சொல்வதும் உண்மையா?"

"ஆம், ஐயா. இரண்டு நாழிகைக்கு முன்னர்த்தான் காஞ்சியினின்றும் என்னால் திரும்பமுடிந்தது. கடந்த இரவு இளவரசியாரைக் காணச்சென்ற நீங்கள் இன்னும் திரும்பவில்லை என்று காவல்தலைவர் சொன்னார். அவரோடு பேசிக் கொண்டிருந்த

போது போர்க்களத்தினின்றும் ஒற்றர்படைத்தலைவர் உங்களைப் பார்க்க என்று விரைந்து வந்தார். அவர் கொண்டுவந்த செய்திகள் எங்களுக்கு அதிர்ச்சியை அளித்தன. சோழர்படை இரவோடு இரவாக இடவை நகரை நீங்கிக் காவிரியின் தென்கரைக்குப் பின்வாங்கிவிட்டதாம். காரணம், நம் இளவரசியார் கைப்பட இளவரசர் ஆதித்தருக்கு எழுதி அனுப்பியிருந்த ஓலைதானாம். உங்களைப்பற்றிச் செய்தி அறிந்துவரும்படி அனுப்பியிருந்த ஒற்றரும், நீங்கள் இங்கே காவலில் வைக்கப்பட்டிருந்ததைத் தெரிந்துவந்து கூறினார். உடனே நாங்கள் ஓடோடி இங்கு வந்தோம்."

"ஆம், தலைவரே. பல்லவரையர் தகுந்த நேரத்தில் வராமலிருந்தால் எங்களால் எதுவும் மேற்கொண்டு செய்ய முடியாமல் போயிருக்கும். நாட்டுநலன்கருதி நாங்கள் எதையும் செய்ய அணியமாய் இருக்கிறோம். வெளியே காவல் இருப்பது செங்கண்ணர் ஆட்கள் இல்லை; எல்லோரும் என்பிரிவைச் சேர்ந்தவர்கள்."

இளவரசி கடம்பமாதேவியின் கண்களை ஏறிட்டு நோக்கும் அஞ்சா நெஞ்சம் அறையுள் அங்கிருந்த படைத்தலைவர்களுக்குக் கிஞ்சித்தும் இல்லை. கடம்பமாதேவி எதிரே வந்துநின்றபோது படைத்தலைவர்கள் மூவரும் தலையைத் தரைக்காகத் தாழ்த்திக் கொண்டனர்.

"காவல்தலைவரே! என்னையா எதிர்க்கிறீர்?"

"இளவரசியார் என்னைப் பொறுத்தருள வேண்டும். எப்போதுமே நாங்கள் இளவரசியார் ஏவல்கேட்கும் பணியாளர்கள் தாம்! இன்று நாட்டு நலனை முன்னிட்டு எதைச் செய்ய வேண்டுமோ அதையே செய்கிறோம். தலைவர் ஆணையிட்டால், இன்றியமையாதெனின் உங்களையும் அறைக்காவலில் வைக்க நான் தயங்கமாட்டேன."

"கடிய நெடுவேட்டுவரே! என்ன சொன்னீர்? என்னையா காவலில் வைப்பேன் என்றீர்?"

கடம்பமாதேவியின் முகம் கறுத்ததையும் கண்கள் சிவந்ததையும் விக்கியண்ணன் கவனித்தான். அவள் உள்ளுக்குள் கொதித்தாலும் பேசியபேச்சுகளில் அமைதி இருந்ததை அனைவருமே அறிந்தனர்.

"இளவரசியார் காவல்தலைவரை பொறுக்கவேண்டும். அவர்கள் தம் கடமைகளைச் செய்கின்றனர்; அதை நாம் பாராட்ட வேண்டும். உங்களைக் காவலில் வைக்கும் கட்டாயத்தை நீங்கள் எனக்கு ஏற்படுத்தமாட்டீர்கள் என்பதை நான் அறிவேன். கடியநெடுவேட்டுவரே, இளவரசியாரைச் சுற்றிக் காவல் திறம்பட இருக்கட்டும். ஆனால், அவர் விருப்பப்படி எங்கே வேண்டு மானாலும் செல்லட்டும்; யாரை வேண்டுமானாலும் பார்க்கட்டும்; எதையும் யாரும் தடுக்கக்கூடாது. எப்போதும் நம் வீரர்கள் மட்டும் இளவரசியார் அருகிலேயே சுற்றிப் பாதுகாப்பாக இருக்கவேண்டும். சரிதானே?"

"அப்படியே செய்கிறேன்."

கடம்பமாதேவியின் கண்களில் திரை படர்ந்ததை விக்கியண்ணன் கண்டான்.

"பல்லவரையா, நீங்கள் சென்றது என்னாயிற்று?"

"வெற்றிதான் தலைவரே. பல்லவர்படையும் கங்கர்படையும் புறப்பட்டுவிட்டன. காஞ்சியிலிருந்து புறப்பட்டு, நான் தனியே கடுகி வந்தேன். இன்னும் அரைத் திங்களுள் கொள்ளிடக் கரையைப் பல்லவப் படைகள் வந்தடைந்து விடுவது உறுதி. சேந்தன்கீரர் சொல்வதை நோக்கின், வெற்றி யாருக்கு விளையும் என்பது அறுதியிட்டுச் சொல்வதற்கு அரிதென்று எண்ணுகிறேன்."

'உங்கள் கணிப்பு சரியானதே. எல்லாவற்றையும் எண்ணியே நாம் அடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். சேந்தன்கீரரே, நம்படை கள் இப்போது எங்கே தங்கியிருக்கின்றன?"

"நம்படைகள் இடவையிலிருந்து புறப்படுவதை அறிய வந்ததும் நான் இங்கு வரப் புறப்பட்டுவிட்டேன். இளவரசருடைய எண்ணம், திருப்புறம்பியத்திற்குத் தெற்கே மண்ணியாற்றின் தென்கரையில் தங்குவதாக இருக்கலாம் என்று நம்புகிறேன். நாங்கூர் வேளிரின் படைகள் பந்தணைநல்லூர் அருகே வந்து தங்கியுள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன."

விக்கியண்ணன் வெகுநேரம் பேசவில்லை. அறைக்குள் அமைதியாக மெல்ல அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தான். ஆழ்ந்த சிந்தனைக்குப்பிறகு ஒருமுடிவிற்கு வந்தவனாய் அவன் பேசியபோது அவன் குரலில் உறுதி தெரிந்தது.

"ஒற்றர்படைத்தலைவர் உடன் புறப்பட்டுச் செல்லட்டும். இளவரசருக்கு ஓலை ஒன்று தருகிறேன். செங்கண்ணரை உடன் காவலில் வைக்கட்டும். பல்லவர்படையும் கங்கர்படையும் பாண்டியர்படையுடன் மோதும்வரை, நம்படை இருக்கும் இடத்திலேயே இருக்கட்டும். போரை நடத்த ஏற்ற இடம் திருப்புறம்பியமே! மேடான இடம்; மேலும் பரந்த நிலத்தை உடையது. அங்குள்ள மக்கள் வேறிடங்களுக்குக் குடிபெயர ஆவன செய்யுங்கள். பல்லவர்கள் மேற்கினின்று தாக்கும்போது நம்படை தெற்கிலிருந்தும் நாங்கூர்வேளிர்படை கிழக்கிலிருந்தும் தாக்கட்டும். வடக்கே கொள்ளிட ஆறு; எனவே கவலை இல்லை. புரிகிறதா?"

"ஐயா!"

தழுதழுத்த குரல்கேட்டு அனைவரும் ஒருமுகமாய் இளவரசியை நோக்கினர். கண்களில் முத்துகளெனக் கண்ணீர் அரும்பிக் கீழேவிழக் காத்துக் கொண்டிருந்தது.

"நம்படை பாண்டியரோடு மோதாமலிருக்க வழியே இல்லையா?"

"இல்லை."

"மிக்க மகிழ்ச்சி! வேளிர்குலத்து வீரரே, சோழர்படை வாளெடுத்துப் பாண்டியரோடு மோதும் அதே நேரம் என் வாழ்வும் முடிந்துவிட்டிருக்கும்."

விக்கியண்ணன் கடம்பமாதேவியை வியப்போடு நோக்கினான்.

"இளவரசி, இஃதென்ன பேச்சு? நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்?"

"ஆம், ஐயா. நானேதான் இப்படிப் பேசுகிறேன். இதுவரைக் கொடுத்த உறுதிமொழியைக் காப்பற்றத் தவறியதில்லை. பாண்டிய மன்னருக்கு நான் உறுதியளித்திருக்கிறேன். சோழர்படை பாண்டியர் படையோடு மோதாது; எந்த நிலையிலும் பல்லவர்படைக்கு உதவாது என்று கூறியுள்ளேன். அந்த உறுதி அழிக்கப் படுமேயானால், அது என் உயிருக்கு இறுதியாகவே அமையும்."

கண்கள் முத்துகளை நழுவவிட்டன.

"உங்களை யார் உறுதியளிக்கச் சொன்னார்கள்?"

"எனக்கு யார் சொல்ல வேண்டும்? இந் நாட்டின் இளவரசி நான்! இதற்குமுன் என் பேச்சுதான் இந்த நாட்டில் ஆணையாக இருந்துவந்திருக்கிறது. நான் கீறிய கோட்டை அரசரும் மீறி அறியாதவள் நான். எனக்கெப்படித் திடீரென்று தெரியவரும் எனக்கே எதிரிகளாக இப்படைத்தலைவர்கள் இடம் மாறுவார் களென்று? நான் ஏன் உயிர்வாழவேண்டும்? மற்றவரை நம்பி வாழ்பவள் நானில்லை. நான் காலாலிட்ட வேலையையும் தலையாற் செய்யவும் இதற்குமுன் தயங்கியும் அறியாக் காவல் தலைவர் இன்று என்னையே காவலில் வைக்கிறாராம்! எத்துணை நெஞ்சுரம் வேண்டும் அவர்க்கு? இஃதெதைக் காட்டுகிறது? என்னுடைய இழிந்த நிலையையன்றோ? மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார், மானம் அழுங்கரின் உயிர்நீப்பரே அன்றி வாழ்வதும் உண்டோ? மற்றவர்கள் என்னை மதிக்கவேண்டா; இகழ்ந்தால் இகழட்டும்; ஆனால் நீங்கள்? என்னை இழித்துப் பழித்துப் பேசுபவர்களைக் கண்டித்துத் தண்டிக்க வேண்டியவர்!

இருந்தும் நீங்கள் அமைதி காக்கின்றீர்கள்; மேலும் எனக்கு இழிவைச் சேர்க்கும் வழிகளைத் தேடிச்செய்கிறீர்கள்! இதைவிட வேறு எனக்கு என்ன வேண்டும்? இருப்பதினும் இறப்பதே மேல்!"

கடம்பமாதேவியின் கண்கள் அருவியென நீரைக் கொட்டின. அதைக்கான விக்கியண்ணன் வேதனை கொண்டான். அழும் அவளை அன்போடு அணைத்துக் கண்ணீரைத் துடைக்கக் கைகள் துடித்தன.

"எல்லோரும் வெளியே இருங்கள்."

அவன் சொற்களுக்காகவே காத்திருந்ததைப்போல் அனைவரும் விரைந்து வெளியேறினர். இளவரசியின் பேச்சு படைத் தலைவர்கள் மூவரையும் தலைகுனிய வைத்துவிட்டிருந்தது. கடம்பமாதேவியின் முகத்தை ஏறிட்டுக்காணும் அஞ்சாமை அவர்களுக்கு இல்லை. விரைந்து வெளியேறிய அவர்கள் அறைக் கதவை மூடிச்சென்றனர்.

தனித்துவிடப்பட்ட விக்கியண்ணன் கடம்பமாதேவியை நெருங்கி அவளின் மதிமுகத்தைக் கைகளால் தாங்கினான். அவன் கண்களை எதிர்த்து நோக்காது அவள் பார்வையைப் பக்கத்தில் திருப்பிக் கொண்டாள்.

"தேவி."

அவன் மெல்ல அழைத்தான். குரலில் அன்பு நெகிழ்ந்து குழைந்தது.

"விடுங்கள் என்னை. நீங்கள் தொடவேண்டா."

அவள் விம்மியபோது மார்பகங்கள் வெகுவாக விம்மி விக்கியண்ணனின் நெஞ்சில் வேதனையைச் சேர்த்தன. அவளை நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். கைவிரல்களால் பட்டு போன்ற அவள் கன்னங்களில் படிந்திருந்த கண்ணீரைத் துடைத்துவிட்டான்.

"தேவி, என்மேல் தவறில்லை."

அமைதி நிலவியது.

"நான் செய்பவை அனைத்தும் இந்த நாட்டுநலனை முன்னிட்டுத்தாம். உங்களுக்கு வேண்டாத எதையும் நான் விரும்புவேனா? தேவி, இப்போது நான் என்ன செய்ய வேண்டு மென்று எதிர்பார்க்கிறீர்கள்?"

கடம்பமாதேவி அப்போதே அவன் கண்களை நேருக்குநேர் எதிரிட்டு நோக்கினாள்.

"சொன்னால் செய்வீர்களா?"

"சொல்லுங்கள்."

"பாண்டியரோடு நம்படை எந்தக் காரணம் கொண்டும் போர் செய்யக்கூடாது. என்ன சிந்தனை? தெரிந்தோ தெரியாமலோ; நன்மைக்கோ அன்றித் தீமைக்கோ நான் அவர்களுக்கு உறுதியளித்துவிட்டேன். அதைக் காப்பாற்றாவிட்டால் அஃது எனக்கு இழுக்கன்றோ? அந்த இழுக்கில் உங்களுக்கும் பங்குண்டன்றோ?"

அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அசைத்தாள் கடம்பமாதேவி. விக்கியண்ணன், அவள் முகம் மார்பில் விளைவித்த மாற்றத்தால் விளக்கமுடியா உணர்வினால் தன்னை இழந்து கொண்டிருந்தான்.

"பங்குண்டுதான். ஆனால், தேவி! முதன்முதல் இதே அறையில் நீங்கள் என்னிடம் என்ன சொன்னீர்கள் தெரியுமா? பல்லவரையும் பாண்டியரையும் வென்று உங்கள் தம்பி இளவரசர் ஆதித்தர், கரிகால்வளவரைப்போல் சோழரின் பேராட்சியை நிலை நிறுத்தவேண்டுமென்றீர்களே; நினைவிருக்கிறதா?"

"அன்பரே! எதையும் நான் எப்போதும் மறப்பதில்லை. என்னால் எதையும் மறக்கக் கூடுமேயானால் எத்துணை

அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பேன்! ஏன் இந்த அரசு ஆளுகையில் ஈடுபட்டோம் என்று எத்தனை நாள்கள் என்னையே நொந்துகொண்டிருப்பேன் என்பதை எத்தனை பேர் அறிவர்? என் உயிரையும்விட எனக்கு ஒரு இன்றியமையாக் குறிக்கோள் என்னுள்ளே புதைந்து புகைந்து கொண்டிருக்கிறது. அதை நீங்கள் மட்டுமன்று யாருமே அறியமாட்டார்கள். அந்தக் குறிக்கோள் என்ன தெரியுமா? இன்று உங்களுக்குமட்டும் வெளிப்படையாக உரைக்கிறேன். பல்லவ இனத்தைப் பூண்டோடு அழிக்க வேண்டும்! அஃதும் என் வாழ்நாளுக்குள்! காரணமா? பிறகு ஒருநாள் சொல்வேன். ஆதித்தன் இந்தச் சோழராட்சியைப் பேராட்சியாக மாற்ற வேண்டுமென்பதைவிட, இந்தப் பல்லவர் களைத் தமிழகத்தில் இல்லையென அழிப்பதே என் முதல் விருப்பம். அதனால்தான், பாண்டியருடன் தொடர்புகொண்டேன். இப்போது புரிந்திருக்குமே?"

"புரிகிறது. மிகவும் இக்கட்டான நிலை என் நிலை."

விக்கியண்ணன் விலகி எழுந்து நின்றான். தன்பேச்சு அவன் எண்ணத்தில் விளைவித்த மாற்றத்தைக் கடம்பமாதேவியால் அறிந்து கொள்ளக்கூடவில்லை. நெஞ்சம் கடுத்ததைக் காட்டும் முகம் என்பதும் உண்மைதானா? விக்கியண்ணனின் முகத்திலே உள்ளத்தில் விளைந்த உணர்வின் பயனான எந்த மாற்றமும் இல்லை. அவன் அமைதியாகத் தொடர்ந்து பேசினான்.

"நீங்களோ பாண்டியருக்கு உறுதியளித்துவிட்டீர்கள்; நானோ பல்லவரின் படைஉதவியைக் கேட்டுப் பெற்றுள்ளேன். இந் நிலையில், முத்தரையரும் போரில் நமக்கு எதிராகக் கலந்து கொள்ளக்கூடும் என்று செய்தி வந்துள்ளது."

விக்கியண்ணன் கைகளைத்தட்டி ஒலி எழுப்பினான். ஒலிகேட்டுப் படைத்தலைவர்கள் மூவரும் உள்ளே நுழைந்தனர்.

"ஒற்றர்தலைவர் உடன் புறப்பட்டுச் செல்லலாம். நம்படை இப்போது இருக்குமிடத்திலேயே எதற்கும் அணியமாய் இருக்கட்டும். நீங்கள் அடிக்கடி என்னோடு தொடர்பு கொள்ளுங்கள். பல்லவரையா, தஞ்சையுள் உள்ள வீரர்களை அழைத்துச் சென்று

கொள்ளிடத்தில் நீர் வராமல் கல்லணையில் முடிந்த அளவு தேக்கி வையுங்கள். பல்லவர்படை வரும்போது கொள்ளிடம் வறண்டு இருக்கவேண்டும். என்ன?"

"ஓர் ஐயம்! கொள்ளிடத்தின் நீரைத் திருப்பிவிடுவது அத்தனை எளிதல்லை. ஒரு புதிய அணையையே குறுக்கே கட்டியாக வேண்டிவரும்."

"உண்மைதான். படையின் ஒரு பிரிவினர் கல்லணைக்குச் சென்று கொள்ளிடத்து நீரைக் கட்டுப்படுத்தி அணையில் தண்ணீரைத் தேக்கி வைக்கட்டும். தேவையெனில், நம்மாட்கள் காவிரியிலிருந்து கொள்ளிடம் பிரிகிறதல்லவா, அங்கேயே செல்லட்டும்; இயன்ற அளவு அணையை எழுப்பி நீரைத் தேக்கிவைக்க வேண்டும். மேலும் ஒன்று, நாம் என்ன செய்கிறோம் என்பது யாருக்கும், குறிப்பாக முத்தரையருக்குத் தெரியவே கூடாது. முடியுமில்லையல்லவா?"

"முடியும்; ஆனால்..."

"நீங்கள் ஏன் தயங்குகிறீர்கள் என்பது புரிகிறது. போதிய வீரர்கள் இல்லையேல் மக்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். அரசின் கருவூலம் உங்களுக்குத் திறந்தே இருக்கும். அதற்கான ஆணையை நான் இட்டுச் செல்வேன். பல்லவரையா, என் எதிர்பார்ப்பின்படி, இந்தச் சோழநாட்டின் எதிர்காலம் இப்போது நீங்கள் செய்யப்போகும் செயல்களிலேயே உள்ளன. அதிலும், இன்றியமையாதது கொள்ளிடத்தின் குறுக்கே அணைக்கட்டி நீரைத் தேக்கும் திட்டத்திலேயே உள்ளது. அணையைக் கட்டிவிட்டால் மட்டும் போதாது; என் ஆணை கிடைக்கும்வரை உடையாது பாதுகாப்பதிலேயே உங்கள் திறமை உள்ளது. உங்கள் திறமையில் எனக்கு எப்போதுமே நம்பிக்கை உண்டு. மனித முயற்சிக்கும் அப்பாற்பட்டது எதுவுமே இல்லை! அயராது முயன்றால் இயற்கையையும் வெல்லலாம். முடியுமில்லையா?"

"முடித்துக் காட்டுகிறேன், தலைவரே."

"எனக்குத் தெரியும். எண்ணம் இருப்பின் எதுவும் முடியும். காவல்தலைவரே, இந்தக் கோட்டையைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு. பல்லவரையரோடு இங்குள்ள உங்கள் வீரர்களே போகவேண்டும். இளவரசியாருக்கோ, மற்றவர்களுக்கோ மிகு காவல் தேவை இல்லை. போர்முடியும்வரைக் கோட்டை வாயில்கள் மூடியே இருக்கட்டும். நானும் போர்க்களத்திற்கு உடன் புறப்படுகிறேன். முத்தரையர் படை கோட்டையை முற்றுகை இடலாம் என்று தெரிகிறது; அதைப்பற்றிய அச்சம் வேண்டா. எத்தனை திங்களாயினும் முற்றுகையால் தீங்கில்லை. போர் முடிந்ததும் நம்படை நேரே இங்கு வரும். சரிதானே?"

"சரிதான். அப்படியே செய்கிறேன்."

"நீங்கள் போகலாம். பல்லவரையா, உங்கள் செயல்களில்தாம் விரைவு தேவை. உங்கள் பணியே மிகப்பொறுப்பு மிகுந்தவை. நீங்களும் செல்லலாம்."

அனைவரும் அறையை விட்டு உடன் அகன்றனர். விக்கியண்ணன் இளவரசி கடம்பமாதேவி பக்கமாகத் திரும்பினான்.

"தேவி, நானும் சென்றுவருகிறேன். நீங்கள் சொன்னவைகள் யாவும் என் நினைவில் இருக்கின்றன. இயன்றவரையில் உங்கள் எதிர்பார்ப்பிற்கு இழுக்கு ஏற்படாமல் நடந்துகொள்ள முயல்வேன். எனக்கு விடைகொடுங்கள்."

இளவரசி கடம்பமாதேவியின் கண்கள் அவனுக்குப் பிரியா விடை கொடுத்தனுப்பின. அவள் கண்கள் ஒளிவிட்டு மின்னின. அவள் உள்ளம் அமைதி கொண்டதை விக்கியண்ணன் அவள் கண்களில் கண்டான். மனநிறைவோடு அந்த அழகுப் பெட்டகத்தை அகத்தில் தாங்கி விரைந்து வெளியேறினான்.

# 28. திருப்புறம்பியப் போர்

*"இன்முகத்தான் புலியனையான் ஏதும் இன்றி*
*எதிர்த்திட்டான் மதகளிற்றை! இயைந்த போரில்*
*தன்னுடலில் புதைந்திருந்த குறுவாள் மீட்டுத்*
*தாழ்கையைப் போக்கிட்டான்! தறுகண் யானை*
*உன்னுடனே மடிவதுதான் உயர்வாம் என்ன*
*உரைப்பதொப்பப் பிளிறிட்டு வீரன் அஞ்சான்*
*பொன்னுடலை மண்மீது புதையத் தேய்த்துப்*
*புரண்டிட்ட போதுமவன் சிரிப்பை நீங்கான்.'*

இருபது நாள்களாய் இடைவிடாத போர்! அஃதென்ன சிறிய போரா? பல்லாயிரக்கணக்கில் வீரர்கள் நில்லா உடல் நீங்கி நிலைத்த புகழ் நிறுத்திப் போர்க்களத்திலே பேராற்றல் காட்டி உயிர் விட்டு இருக்கின்றனர். செத்து மடிந்தவர் எண்ணிக்கையே பல்லாயிரங்களை எட்டியதெனின், பகைவர் வாளுக்கும் வேலுக்கும் இலக்காகி உடலின் பலபாகங்களிலும் புண்தாங்கி ஊனமுற்றோரின் எண்ணிக்கையை எண்ணி உரைக்கவும் வேண்டுமோ! நடு இரவை நோக்கி விரைவாக நேரம் நெருங்கிக்கொண்டிருந்த அந்த நேரத்திலும் புண்தந்த வேதனை பொறாது புலம்பிக் கொண்டிருந்த வீரர்களின் துன்பஒலி எங்கும் மெல்லென ஒலித்துக் கொண்டிருந்தது.

பல்லவர்களின் பாசறையில் தனித்தமர்ந்திருந்த விக்கியண்ணன் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். கடந்த பல நாள்களாய்க் கடும்போரிலே பாண்டியரை எதிர்த்துப் போரிட்டு வந்திருந்தும், அவனிடம் களைப்பு இல்லை. உடலில் சோர்ந்திருக்க வேண்டிய அவன் உள்ளத்தால் சோர்ந்திருந்தான்.

பாண்டியர்க்கு எதிரான போரிலே, விக்கியண்ணனும் நாங்கூர்வேளிரின் படை வீரர்களுமே கலந்து கொண்டிருந்தனர். சோழர்படை முழுதும் வெகுதொலைவில் இல்லையெனினும், மண்ணியாற்றில் கரைபுரண்டு சென்ற நீர்ப்பெருக்கால் ஆற்றைக் கடந்து போரில் வந்து கலந்து கொள்ளக்கூடவில்லை என்ற விக்கியண்ணனின் விளக்கத்தைப் பல்லவர் ஏற்றுக்கொள்ள

வேண்டியதாயிற்று. உண்மைக்காரணத்தைப் பாண்டியர் தலைவர்கள் அறிந்திருந்தனர்.

தன் வாழ்நாள்களில் அதற்குமுன்னர் எத்தனையோ போர்க் களங்களில் கலந்துகொண்டவனே விக்கியண்ணன்; ஆனால், அவன் முன் என்றும் கண்டிராத அளவிற்குப் பெரும்போராகத் திரும்புறம்பியப்போர் அமைந்து விட்டிருந்தது. நேருக்கு நேர் திறந்த வெளியில் நிகழும் போர்கள், பெரும்பாலும் தொடங்கிய ஒருசில நாள்களிலேயே முடிவினைத் தெரிவித்துவிடும். திரும்புறம்பியப் போரோ, இருபது நாள்கள் முடிந்தும் வெற்றித்தோல்வி எந்தப்பிரிவை எதிர்நோக்கிச் சென்றுகொண்டுள்ளன என்பதையும் எடைபோட முடியா அளவிற்குத் தொடர்ந்துகொண்டுள்ளது. அதன்காரணம், இரண்டு பிரிவினரின் படைவலிமைதாம்.

பதினெட்டு ஆண்டுகளாகப் படையைப் பெருக்கிப் பயிற்சி அளித்து வந்தவன் பாண்டியன் சடையவர்மனாகிய வரகுணவர்மன்! பிறகு சொல்லவும் வேண்டுமோ பாண்டியர் படையின் எண்ணிக்கை அளவை?

பல்லவர்படையும் பாண்டியர்படையின் எண்ணிக்கையில் சிறிதும் தாழ்ந்திருக்கவில்லை. எண்ணிக்கை மிகுதியே வெற்றியை ஈட்டிக்கொடுத்துவிடக் கூடுமோ? பல்லவர்படை எண்ணிக்கையில் பாண்டியர் படையை மிஞ்சியிருந்தது; ஆனால், பயிற்சியில் சற்றுத்தாழ்ந்தே இருந்தது. முதல்நாள் போர் முடிவிலேயே விக்கியண்ணன் அதைக் கண்டுகொண்டுவிட்டான்.

பல்லவனிடமும் கங்கனிடமும் இருந்த வீரர்கள் மட்டும் விக்கியண்ணனிடம் ஆறு திங்கள்கள் பயிற்சி பெற்றிருந்திருந் திருப்பின், இந்தப்போர் இத்தனை நாள்கள் தொடர்ந்திருக்காது. பாண்டியரின் இப்போதைய படையை மட்டுமன்று; இதைப்போன்ற இருமடங்கு படையினையும் எளிதில் வெற்றிபெறக்கூடும்.

எத்துணைக் கொடுமையான போர் அது! இடிவிழுந்த பனைமரங்கள் போல் ஒன்றோடொன்று மோதப் பிளந்துவிழுந்த தேர்கள்தாம் எத்தனை! கருங்குன்றுகள் உருண்டனபோல் களிறுகள் அங்குமிங்கும் பிளிறியோடி விளைவித்த அழிவுகளின் தன்மைதாம்

என்னே! கூரிய வெண்கொம்புகளிலே குருதி படிந்து கொட்டக் கொட்ட அவை திரிந்த காட்சி அச்சத்தையன்றோ எளிதில் யார்க்கும் ஊட்டும்! அஞ்சி ஓடாது எதிர்த்து நின்றவர்களைத் தூக்கி எறிந்து தொலையுலகுக்கன்றோ அனுப்பின! நெஞ்சில் பதிந்திருந்த வேலைப்பிடுங்கி நேரே தன்னைக் குறித்துவந்த மதவேழத்தைத் தாக்கிக் கொன்று, அதன் உடலின் கீழே தானும் அகப்பட்டு வீரச்சாவு அடைந்தானே ஒருவீரன், அவன் வெற்றிப் பெருமிதத்திற்குமுன் வேறெதுவும் ஈடாக முடியுமா? செத்தபிறகும் அவனிதழ்களினின்று சிரிப்பு மறையவில்லையே, அவன் திறம்தான் என்னே!

போர் நடந்த திருப்புறம்பிய நிலம் வீரர்கள் சிந்திய குருதியால் செம்மையடைந்து மாலைக்கதிரவனின் மஞ்சள் ஒளியில் நெருப்புப் பிழம்புபோல் நெடுந்தொலைவிற்கும் தெரிந்த நிலைமையை விக்கியண்ணனால் மறக்கக் கூடவில்லை. பல கற்கள் சுற்றளவிற்கு வானத்தை அடைத்துக்கொண்டு பறந்துகொண்டிருந்த பிணந் தின்னுங் கழுகுகள் அவன் கண்கள் முன்னர் நின்றன.

விக்கியண்ணன் அத்துணை எழுச்சியோடு அப்போது இருக்கவில்லை. அவனெண்ணம் முழுதும் அடுத்துச் செய்ய வேண்டியவைகளைப் பற்றியே எண்ணி ஆய்ந்து குழம்பியது. இனி அவன் என்ன செய்ய இயலும்? காலையில் நிலவிய நம்பிக்கை மாலைக்குள் ஒரேயடியாக மாறிவிடும் என்று யார்தாம் எண்ணினார்கள்!

பராந்தகன் உண்மையில் மிகவும் திறமையுடையவன்தான்! பார்த்தால் பசு; பாய்ந்தால் புலி என்பது பராந்தகனைப் பொறுத்த வரைப் பொருத்தமே. இங்கங்கு எனாது எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன் இறைவன் ஒருவனே என்பார்கள் இறை நம்பிக்கையாளர்; அஃது உண்மையோ? பொய்யோ? அவன் உணரான். ஆனால், போர்நிகழ்ந்து கொண்டிருந்த எல்லா இடங்களிலும் பம்பரம்போல் பராந்தகன் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தான்!

பராந்தகனின் வாளோட்டத்தின் வல்லமைதான் என்ன! அவனின் வாள்நுனிபட்டு அன்றுமட்டும் வாழ்விழந்த வீரர்கள் எண்ணிக்கை நூற்றினைத் தாண்டியிருக்கும். அவன் வாள்

வன்மையும் இங்கெங்கெனாதபடி எங்கும் நிறைந்து விளங்கிய திறமையும் அல்லவோ, பாண்டிய வீரர்களை வீறு கொண்டெழுந்து போரிட்டு விக்கியண்ணனின் நம்பிக்கையை அந்த மாலைக்குள் வீணடித்துவிட்டன.

சோழர்படை உடன் போரில் கலந்துகொண்டால் பாண்டியரைத் தோற்கடிக்கக்கூடும் என்று விக்கியண்ணன் நம்பினான். ஆனால், அவன் கொண்ட எதிர்காலத் திட்டம் பாழ்பட்டுவிடும்; அதனால், இளவரசி கடம்பமாதேவியை அவனிழக்க வேண்டியதாய் முடியும். விக்கியண்ணன் அதற்கு அணியமாய் இல்லை. ஆயின், அபராசிதனோ பல்லவர்படையைப் பின்னோக்கித் திருப்பப்போவதாக முடிவாக அறிவித்துவிட்டான். அவன்தான் என்ன செய்வான்?

பல்லவருக்குத்தாம் எப்படிப்பட்ட இழப்பு! பல்லவர்க்கு உதவியாகக் கங்கர் படையை நடத்திவந்தவர் கங்க அரசர் பிரிதிவிபதி. அவர் நட்பிற்காகவா படையைக் கொண்டுவந்து களத்தில் கலந்து கொண்டார்? அபராசிதனைப் பெற்ற தாயின் தந்தையன்றோ? தன்படை வலிமையைப் பெரிதும் இழந்திருந்த அபராசிதன் அன்றைய போரில் தன்பாட்டன் பிரிதிவிபதியை இழக்கவன்றோ நிலைகுலைந்து போனான்! அவர் இறக்காதிருந்திருப்பின் ஒருவேளை அபராசிதன் அந்த முடிவிற்கு வராமல் இருந்திருப்பானோ?

உறுதியாக எதையும் உரைக்க இயலாது. அபராசிதன்தான் அந்தச் சூழ்நிலையில் என்ன செய்யக்கூடும்? அபராசிதனே மேலும் போரைத்தொடர்ந்து நடத்த ஒப்புக்கொண்டிருந்தாலும், பல்லவர் படைத்தலைவனான கச்சியாண்டான் கண்டிப்பாய் ஒப்புக் கொண்டிருக்கப்போவதில்லை. கச்சியாண்டான் இடத்தில் தானே பல்லவர்படைக்குத் தலைவனாக அப்போது இருந்திருந்தால், அதே முடிவைத்தான் தானும் எடுக்கவேண்டியிருக்கும் என்பதை விக்கியண்ணன் அறிந்தே இருந்தான். தன்வலிமையையும் மாற்றான் வலிமையையும் சீர்தூக்கித் தகுமெனில் போர்தொடர்வது தான் படைத்தலைவரின் தலையாய கடமையாகும். வீணே வீரர்களைப் போரில் இழப்பதில் பயனென்ன? வெற்றி அல்லது சாவு என்பதெல்லாம் தனியொருவனுக்குத்தானேயொழிய, பல்லாயிரம்

வீரர்களைக் கொண்ட படைத்தலைவனுக்கு இல்லை என்பது கச்சியாண்டான் எண்ணம்.

"தலைவரே."

விக்கியண்ணன் திரும்பினான். சோழர்களின் ஒற்றர்படைத்தலைவன் சேந்தன்கீரனைக் கண்டதும் அவன் முகம் மலர்ந்தது.

"நல்ல நேரத்தில் வந்தீர்கள். உங்களை எதிர்பார்த்தே காத்திருந்தேன். செய்தி தெரியுமன்றோ?"

"பல்லவர்படை நாளை வைகறையில் பின்வாங்கிச் செல்லப் போவதைச் சொல்கிறீர்களா? அது பொருட்டே இளவரசர் ஆதித்தர் என்னை உங்களிடம் அனுப்பிவைத்தார். அவருக்குத் தங்கள் ஆணை என்ன?"

"ஏதும் இல்லை. இந்தப் போரால் நமக்கு எந்த இழப்புங் கிடையாது. பல்லவர் பின்வாங்கினால் பாண்டியர் வென்றவர் ஆவர். பாண்டிய இளவல் பராந்தகரோடு நம் இளவரசியார் முன்னமே ஏதோ உடன்பாடு செய்து கொண்டிருக்கிறார். எனவே, அவ்வழியில் நமக்குப் பயன்தான். காலையில் போர்தொடர்ந்து பல்லவர் வெற்றி பெறினும் நமக்குப் பயன்தான். நம்படைகள் எப்பக்கமும் சாராமல் கடந்த நாள்களாக இருந்ததுபோலவே இனியும் அணிய நிலையில் இருக்கட்டும்."

விக்கியண்ணன் சிந்தித்தப்படியே மெல்லப் பேச்சைத் தொடர்ந்தான்.

"இப்போது நான் சொல்வதை மிகக் கவனமாகக் கேளுங்கள். போர் தொடர்ந்து நடந்து ஒரு முடிவிற்கு வந்தால்தான் சோழராட்சியின் எதிர்கால எழுச்சிக்கு நல்லது. போர் தொடர்ந்து யார் வெற்றிபெறினும் நம்முடைய வலிமை அப்படியே இருக்கும். இதுவரை நடந்தபோரில் இரண்டு பகுதியிலும் இழப்பு மிகுதியே. தொடர்ந்து போர் நடப்பின் மேலும் இழப்புப் பெருகும். யார் வெற்றிபெறினும், படை எண்ணிக்கையைப் பெருக்கிப் பழைய

நிலையைப்பெற பல ஆண்டுகள் தேவை. இடைக்காலத்தே, சோழர்படை எளிதில் பல்லவரையும் பாண்டியரையும் தனித்தனியே எதிர்கொள்ள முடியும்; இளவரசியார் எண்ணி ஏங்குவதற்கேற்பப் பரந்துவிரிந்த சோழரின் பேராட்சியைத் தமிழகம் முழுதும் அமைக்கவும் இயலும். அதற்கு நாம் செய்யவேண்டியது ஒன்றே ஒன்றுதான்."

"என்ன அது? உடனே செய்வோம்."

"பல்லவர் படையும் கங்கர் படையும் களத்தினின்றும் வெளியேறக்கூடாது; நாளைக்காலை போர் தொடர்ந்து நடந்தே ஆகவேண்டும்."

"நீங்கள் எண்ணுவது முடியக்கூடியதா? எதைச் சொன்னாலும் எண்ணிக் கேட்கக் கூடிய நிலையில் பல்லவ இளவரசர் இல்லையே."

"உண்மைதான். நானும் நன்கு அறிவேன். சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். இப்போது பாண்டியர் கை ஓங்கியுள்ளது. வெற்றியின் விளிம்பில் நிற்கும் அவர்கள் பின்வாங்கப் போவதில்லை. பல்லவர்படையும் கங்கர்படையும் நாளைக்காலை விடிவதற்கு ஆறுநாழிகை இருக்குமளவில் புறப்படத் திட்ட மிட்டுள்ளனர். நீங்கள் உடனே விரைந்து பல்லவரையனைச் சந்தியுங்கள். கொள்ளிட ஆற்றின் குறுக்கே நம் வீரர்களால் கட்டப் பட்டுக் காத்துவரப்படும் அணை தகர்க்கப்படவேண்டும்; கல்லணையிலும் நீர் திறக்கப்படவேண்டும்; கொள்ளிடத்திலே வெள்ளமென நீர் கரைபுரள வேண்டும்; பல்லவரும் கங்கரும் பின்வாங்கமுடியாது திகைக்க வேண்டும்; வேறுவழியற்று அவர்கள் பாண்டியரை எதிர்த்தே ஆகவேண்டும். என்ன? ஏன் திகைக்கிறீர்?"

"தலைவரே, உங்களைப் பாராட்டச் சொற்களே இல்லை. உங்கள் கீழ்ப்பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தமைக்கு அரசர்க்கு நன்றி செலுத்தக் கடமைபட்டுள்ளேன். நான் இப்போதே நேரில் விரைகிறேன்."

"அப்படியே! இன்னுமொன்று. முத்தரையரின் படைகள் நம்கோட்டையை முற்றுகை இட்டிருக்கிறதல்லவா? அணையைத் தகர்த்ததும் அங்கே உள்ள நம்வீரர்கள் தஞ்சைக்குப் புறப்படட்டும்."

"அப்படியே."

சேந்தன்கீரன் புறப்பட்டுச் சென்றான். அவன் சென்று மறைந்த மறுவினாடி விக்கியண்ணன் விரிப்பில் சாய்ந்தான். அவன் கண்கள் தாமே மூடிக்கொண்டன. அவனிடமிருந்து சீரான மூச்சு வெளிவந்தது. அவன் அமைதியாக எந்த அசைவுமின்றி ஆழ்ந்த உறக்கத்தில் வீழ்ந்தான்.

## 29. வெள்ளம் விளைத்த வெற்றி

*"எஞ்சினார் இல்லை எனக்கெதிரா இன்னுயிர்கொண்(டு)*
*அஞ்சினார் அஞ்சாது போயகல்க - வெஞ்சமத்துப்*
*பேரா தவராகத்(து) அன்றிப் பிறர்முதுகிற்*
*சாராஎன் கையிற் சரம்."*

விக்கியண்ணன் கண்விழித்தான். அந்த விழிப்பு இயல்பாய் ஏற்பட்டதில்லை. உறக்கத்தினின்றும் விழித்த அவன் கண்களில் முதலில் தெரிந்தவர்கள் பல்லவ இளவரசன் அபராசிதவர்மனும் படைத்தலைவர் கச்சியாண்டானும் ஆகும்.

அங்கு அந்த இருவரையும் கண்டதும் அதிர்ச்சி அடைந்தவன் போல் விக்கியண்ணன் விரைந்து எழுந்தான். அந்த விரைவு வந்திருந்த இருவரையும் ஏமாற்றவே செய்தது.

"என்ன செய்தி? ஏதேனும் நிகழக்கூடாதது மேலும் ஏதும் நடந்துவிட்டதா? இளவரசே, ஏன் இப்படி இருக்கிறீர்கள்?"

"எல்லாம் பாழ்! நான் எண்ணிவந்த எல்லாமே பாழாகிவிட்டன!"

அபராசிதனின் குரலில் வேதனையும் வெறுப்பும் நிறைந்திருந்தன.

"புரியும்படி சொல்லுங்கள்."

"எதைச் சொல்வேன்? எப்படிச் சொல்வேன்? விக்கியண்ணரே, பாண்டியரோடு மீண்டும் மோதவேண்டிய இரக்கத்தகு நிலை என் நிலை! பல்லவர் படையிலோ, கங்கர்படையிலோ ஒரு வீரன்கூட இந்தப் போருக்குப்பின் உயிர் பிழைத்துச் சொந்த ஊர் திரும்ப முடியாது."

"ஏன்?"

அதிர்ச்சியையும் வியப்பையும் விக்கியண்ணன் திறம்படத் தன்குரலில் வெளிப்படுத்தினான்.

"கொள்ளிடத்திலே திடீரென்று பெருவெள்ளம்! வெள்ளநீர் கரைபுரண்டு கட்டற்று ஓடுகிறது. இப்போது எதிர்த்துப் போரிட்டு இறப்பதைத் தவிர வேறுவழியில்லை."

"கவலைப்படாதீர்கள். மண்ணியாற்றின் குறுக்கே சிறுசிறு மரப்பாலங்கள் அமைக்கும்பணி முடிந்துவிட்டதாக அறிகிறேன். சோழர்படையை விரைந்துவரச் செய்கிறேன். அப்படையும் சேருமேல் வெற்றி நிச்சயம்."

"விக்கியண்ணரே, காலங்கடந்த முடிவு அது. கொள்ளிடம் கொள்ளாத அளவிற்கு வெள்ளமெனில், மண்ணியாற்றில் வெள்ளப் பெருக்கில்லாமல் போகுமா? அமைக்கப்பட்டு வந்த அத்தனை பாலங்களும் வெள்ளநீர் அடித்துக் கொண்டுபோய்விட்டதாக அறிகிறேன். இனி எல்லாமே அழிவுதாம்!"

பல்லவர் படைத்தலைவர் கச்சியாண்டான் அப்போதே முதன்முதலாகப் பேசினான். அவன் முகம் மிகவும் கடுமையாக இருந்தது; குரலில் எதற்கும் துணிந்த உறுதி தெரிந்தது.

"இளவரசர் எதற்கும் அஞ்சவேண்டிய தேவை இல்லை. கொள்ளிடத்தில் வந்த வெள்ளமும் நம் நல்லதற்கே! வெற்றி! இல்லையேல், சாவு! சாகத் துணிந்துவிட்டால், இந்தப் பாண்டியர் படையென்றில்லை, எந்தப் படையையும் வெற்றிகொண்டு

விடலாம். இன்று மாலைக்குள் இந்தப் பாண்டியர்படையை முறியடித்து வெற்றியை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன். முடியவில்லையேல், என் முயற்சியில் இந்த உயிரையும் விடுவேன்; இஃது உறுதி!"

இளவரசன் அபராசிதன் பேசியபோது அவன் குரல் தழுதழுத்தது; கண்கள் குளமாயின.

"ஐயா, உங்கள் வீரத்தைக் குறைத்துக் கணிக்க எனக்குத் தகுதி இல்லை. உங்கள் முடிவை நான் உள்ளார ஏற்கிறேன். எப்படியும் பாண்டியரை வென்றே ஆகவேண்டுமென்ற கட்டாய நிலையில் நாம் உள்ளோம். இந்த நிலையை நம்முடைய ஒவ்வொரு வீரனும் உணரவேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யுங்கள். தாங்கள் இருக்கும் நிலைமையை ஒவ்வொரு வீரனும் உணர்ந்தால்போதும்; அந்த ஒருவன்முன் பத்து பகைவர்கள் மாள்வது திண்ணம்!"

அபராசிதன் வெளியேறினான்.

"விக்கியண்ணரே, உங்கள் வீரத்தைப்பற்றி இங்கு வருவதற்கு முன்னரே நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். கடந்த இருபது நாள்களாகக் களத்தில் நேரில் நானே கண்டிருக்கிறேன். தங்கள் அரசரின் தலைமையை இழந்து தவிக்கும் கங்கர் படைக்கு உங்கள் தலைமை கிடைக்குமேல், அப்படை தனித்துவம் பெறும். உங்கள் உதவி கிடைக்குமன்றோ?"

"இஃதென்ன கேள்வி? இப்படி ஒரு வாய்ப்பை எனக்களித்த உங்களுக்கு நானன்றோ நன்றியைத் தெரிவிக்க வேண்டும்! இதோ புறப்பட்டுவிட்டேன்."

பல்லவ வீரர்களும் கங்க வீரர்களும் பம்பரமெனச் சுழன்று போரிட்டனர். அவர்களுடைய எழுச்சி முன்னர் ஈடுகொடுக்க இயலாத பாண்டியவீரர்கள் வெட்டுண்டு வீழ்ந்தனர். என்ன நடக்கின்றது இங்கே என்று எண்ணவும் பாண்டியவீரர்களுக்கு நேரம் இருக்கவில்லை. பாண்டியர் படையின் ஒழுங்கு குலைந்தது. வாழ்வா? சாவா? பல்லவ வீரர்களுக்கும் கங்க வீரர்களுக்கும் அமைந்திருந்த குறிக்கோள் ஒன்றாக இருந்தது; அதை அவர்கள்

ஒவ்வொருவரும் தெளிவாக உணர்ந்திருந்தனர். எனவே, எதுவரினும் சரியே என்ற உள்ளத்திண்மையோடும் உறுதியோடும் அவர்கள் உயிர்க்கஞ்சாது போரிட்டனர். ஆனால், பாண்டிய வீரர்களின் மனநிலை அப்போது மாறாக இருந்தது.

வெற்றி பெற்றுவிடுவோம் என்று எதிர்பார்ப்பின் மகிழ்ச்சியால் விளைந்த மயக்கத்தால் அன்று போர் தொடக்கத்தில் பாண்டியப் படையினர் ஆரவாரத்தோடு களம் சேர்ந்தனர். அதே நேரம், பல்லவர்படையின் வலிமையையும் ஆற்றலையும் குறைத்து மதிப்பிட்டிருந்தனர். அதனால் நிகழ்ந்த இயல்பான பொறுப்பற்ற போக்கோடு போரில் ஈடுபட்டனர். எல்லாம் சில நாழிகைகள்தாம்! என்ன நடக்கிறது என்பதைப் பாண்டியர்படை வீரர்கள் புரிந்து கொள்ளுமுன்னரே, நிலைமை கட்டுக்கடங்காமல் போய்விடவே, முன்னரே வரையறுக்கப்பட்ட முறைப்படி பகைவரை வளைத்து ஒன்று சேர்ந்து தாக்கும் ஆற்றலை இழந்து பாண்டியர்படை கலைந்து சிதறி அல்லல் கொண்டது. முறையற்று அங்குமிங்கும் அலைந்த தம்படையை ஒழுங்குபடுத்தி ஒருமுகமாய்ப் பகைவர் களை எதிர்க்க வகைசெய்வதற்குள் பாண்டியர் படையின் தலைவர் களான பராந்தகனுக்கும் நக்கன்புள்ளனுக்கும் பெரும்பாடாய்ப் போய்விட்டது. அப்படி இருந்தும் அவர்கள் முயற்சி பயனற்றுப் போயிற்று. சூறாவளியெனச் சுழன்று போரிட்ட பல்லவ கங்கர் படைகள் முன்னர்ப் பாண்டியரின் படைத்திறம் பயனற்றுப் போயிற்று. நடுப்பகல் கழிந்து நான்கு நாழிகைக்கெல்லாம் பாண்டியர் படையின் எண்ணிக்கை பாதியாகக் குறைக்கப்படவே, பாண்டியர்படை வேறுவழியின்றி மெல்லப் பின்வாங்க வேண்டியதாயிற்று.

அழுது கொண்டிருந்தவன் அடுத்த வினாடி சிரிக்கிறான்; அதே போல், சிரித்துக் கொண்டிருந்தவன் மறுவினாடி அழுகிறான். எல்லாம் அந்த அந்த நேரத்தையும் விளைவுகளையும் மனநிலை களையும் பொருந்து அமைவன. வெற்றியும் தோல்வியும் அப்படிப்பட்டனவே! என்னே வாழ்க்கையின் விளையாட்டுகள்!

அன்று காலை போர் தொடங்கும்போதுகூட வெற்றி நிச்சயம் என்று உறுதியாக நம்பியிருந்த பாண்டியர்படை, பகைவரை எதிர்த்து நிற்றல் ஆற்றாது மாலையில் தோல்வியால்

பின்வாங்குமென்று யாரே எதிர்ப்பார்த்தார்? பாண்டியர் படையின் தோல்விக்குக் காரணம் என்ன? பாண்டியரின் வீரம் அந்த ஒருநாளுக்குள்ளா உரமற்றுப் போய்விட்டது?

இறக்கும் நேரத்திலே தங்கள் இயல்பு மறந்து இறைவனை நினைப்போர் ஏராளம்! உண்மைதான்! ஆனால் பல்லவகங்கப் படைவீரர்கள் பரந்தாமனை எண்ணிச் சிவனே என்றிருந்தார் இல்லை; அவர்கள் சக்தியை நம்பினர். ஆம்; அவர்கள் தங்கள் ஆற்றலில் நம்பிக்கை வைத்துத் தங்கள் வலிமை முழுதையும் அன்றைய போரிலே ஒருங்கிணைந்து பயன்படுத்தினர். விளைவு வெற்றியாய் மலர்ந்தது.

அன்று நடந்துமுடிந்த போர், கடந்த நாள்களில் விளைந்த கடுமையான ஆள்கள் இழப்பைவிட மிகவும் இழப்பை விளை வித்திருந்ததை அறியாதவர் இருக்க முடியாது. அவ்வளவுதானா? அந்தத் திருப்புறம்பியப் போரோடு அதற்குமுன்னர் நிகழ்ந்த அரிசிலாற்றுப்போரையும் குடமூக்குப் போரையும் ஒப்பிட்டு நோக்க, மலைக்கும் மடுவிற்கும் உள்ள வேறுபாடு எளிதாகத் தெரிகிறதன்றோ!

கூடார் முனைகலங்கக் கொல்லேற்றின் வலியோடு வேலோடு வாளேந்தி வீறுகொண்டு போரிட்ட கச்சியாண்டானைக் காண விக்கியண்ணனின் நெஞ்சு விம்மிதங் கொண்டது. செங்குருதியில் குளித்தெழுந்த செங்கதிரவன் ஒப்பப் பகைவர்தம் குருதியாலும் அவர்தம் வாள்பட்டுப் பீறிட்ட தன்குருதியாலும் சிவந்திருந்த கச்சியாண்டானின் கண்கள் நெருப்புக் குழம்பாய்ச் சிவந்து சீறிய நிலைமையைக்காண, நேரார் அவனைக் கூற்றுவனின் மாற்றுரு எனக்கொண்டு அலறியடித்துக்கொண்டு அங்குமிங்கும் அலைந்து ஒளிந்ததில் வியப்பு என்ன இருக்கக்கூடும்! அப்படிப்பட்ட வீரனுக்கா இறுதியில் அந்த முடிவு?

வெற்றியால் விளைந்த வீரமுழக்கம் விண்ணை எட்டும் என்று எண்ணிய விக்கியண்ணன், போர்முடிந்த பிறகும் அதற்கான அறிகுறியைக் காணாது அமைதி இழந்தான். பல்லவர் படைப் பிரிவை அடைந்தபோதே அவனால் காரணத்தை அறிய முடிந்தது.

பல்லவ இளவரசன் அபராசிதன் தன் நிலை கலங்கிக் கண்ணீர்விட்டு அழுதுகொண்டிருந்தான். வெற்றிபெற்றும் மகிழ்ச்சி கொள்ள முடியாச் சூழ்நிலை! சென்றநாள் போரில் தன் பாட்டனாகிய கங்க அரசன் பிருதிவிபதியை இழந்தவன் அவன்! ஆனால், அன்றோ அவனுக்கு வெற்றியை ஈட்டித்தந்த பல்லவப் படையின் தலைவன் கச்சியாண்டானை இழந்து கொண்டிருந்தான். அவனின் நிலை விக்கியண்ணன்பால் இரக்கத்தைச் சேர்த்தது. அபராசிதன் மட்டுமா அழுது கொண்டிருந்தான்? சுற்றிலும் சூழ்ந்திருந்த பல்லவ வீரர்கள் அத்தனைபேருமன்றோ அழுதுகொண்டிருந்தனர்!

கச்சியாண்டான் பெரும் வீரன்தான்! சோழமன்னர் விசயாலயர் போரிலே பெற்ற விழுப்புண்கள் தொண்ணூற்றாறாக இருக்கலாம்; ஆனால் அவர்கூட ஒரே நாளில் கச்சியாண்டான் கண்டிருந்த அத்தனை புண்களைக் கண்டிருக்கமுடியாது. ஒன்றா? இரண்டா? எப்படிக் கணக்கெடுப்பது? உடலின் ஒவ்வொரு பகுதியினின்றும் அன்றோ குருதி வடிந்துகொண்டிருக்கிறது! எய்போல் கிடந்தான் ஏறு என்பதொப்பக் கச்சியாண்டான் உடலை அம்புகளும் குறுவாள்களும் தரையில் படவிடாமல் விண்ணிலன்றோ தாங்கிக் கொண்டுள்ளன! அத்தனை புண்களைப் பெற்றும் அவனுயிர் அகலாது மேலும் காத்திருப்பதும் எதற்காக?

"விக்கியண்ணரே."

குரல் அந்த நிலையிலும் உறுதியாக ஒலித்தது. விக்கியண்ணன் கச்சியாண்டான் அருகே அமர்ந்தான்.

"உங்களிடம் தனித்துப் பேசவேண்டும்."

விக்கியண்ணன் சுற்றியிருந்தவர்களை நோக்கினான். அவர்களை அப்பால் போகச்சொல்லத் தேவை இருக்கவில்லை. கச்சியாண்டான் சொன்னவை அவர்கள் காதிலும் ஒலித்திருந்தன. அபராசிதன் உள்ளிட்ட அனைவரும் அவர்கள் இருவரையும் தனியே விட்டு நகர்ந்து அப்பால் சென்றனர்.

"சொல்லுங்கள்"

"இப்போது எண்ணினால் சோழர்படை பல்லவகங்கப் படைகளை எளிதில் வெற்றி கொள்ள இயலும்."

"உண்மைதான்."

"அப்படி ஏதும் நிகழக்கூடாது. உங்கள் உதவி எனக்குத் தேவை."

"நிச்சயமாக. நான் செய்ந்நன்றி மறப்பவன் இல்லை. அதேபோல் சோழர்களும் நன்றியற்றவர் இல்லை."

"இருக்கலாம். ஆனால், பல்லவர் இனத்தையே இல்லையென ஆக்க உள்ள உறுதி கொண்ட ஒருவர் சோழநாட்டில் உண்டு. அவரை எண்ணியே நான் மிகவும் அஞ்சுகிறேன்."

"உங்கள் பேச்சு எனக்குப் புதிராக உள்ளது. யார் அவர்?"

"சோழ இளவரசியார் கடம்பமாதேவி! ஏன் திகைக்கிறீர்கள்? எனக்கெப்படி இது தெரியவந்தது என்று எண்ணுகிறீர்களா? எனக்கு இன்னமும் தெரியும். ஐயா, உங்கள் இளவரசியாரால் உருக்குலைந்து இன்றுநிற்கும் பல்லவர்படைக்கு எந்தப் பாதிப்பும் வரக்கூடாது. அதுவும் இன்றியமையாது பல்லவ இளவரசர் அபராசிதருக்கு நீங்கள் பாதுகாப்பளிக்க வேண்டும். அவர் மிகவும் நல்லவர். தன்பாட்டன் செய்த தவறுக்காக அவர் தண்டிக்கப்படுவது அறமில்லை. உங்கள் இளவரசியாரின் பழிவாங்கு உறுதியினின்று பல்லவ வழித் தோன்றலைக் காப்பதாக உறுதிகொடுங்கள்."

விக்கியண்ணன் குழம்பினான்.

"ஐயா, நீங்கள் சொல்பவை எனக்குப் புரியவில்லை. பல்லவரைப் பழிவாங்கும் எண்ணம் இளவரசியாருக்கு உண்டானது ஏன்?"

"அது பெரும் மறைவான செய்தி. உங்களிடம் அனைத்தையும் விளக்கவே விரும்புகிறேன். ஆனால், என்னுயிர் எக்கணமும் அடங்கிவிடக்கூடும் எனத் தெரிகிறது. அபராசிதரைக் காப்பதாக

எனக்கு உறுதி அளியுங்கள்; நான் அமைதியோடு செல்வேன். இளவரசியார் கடம்பமாதேவியார் உடலில் ஓடுவது சோழர்குலக் குருதி மட்டுமன்று; பல்லவர்குலக்குருதியும் கலந்துள்ளது. விக்கியண்ணரே, நான் போகிறேன். எனக்குத் தாங்கள் உறுதி... உறுதி..."

கச்சியாண்டான் உயிரோடு தடுமாறியது நன்கு தெரிந்தது. விக்கியண்ணன் அவன் கையைத் தன்னிரு கைகளாலும் ஆதரவாய்ப் பற்றிக்கொண்டான்.

"வீரரே, இந்தப் படையையும் பல்லவ இளவலையும் பாதுகாத்துக் காஞ்சிக்கு அனுப்பிவைப்பேன். அது மட்டுமன்று; பல்லவ அரசின் பட்டத்தரசியாக நாங்கூர் வேளிரின் பெண் மாதேவியை அபராசிதரோடு அனுப்பிவைப்பதும் என் பொறுப்பு. மகிழ்ச்சிதானே?"

கச்சியாண்டானின் மூச்சு தடுமாறியது; உடல் உதறியது; கண்கள் ஒளிர்ந்து சுழன்று சொருகிக்கொள்ளத் தலைப்பட்டன.

விக்கியண்ணன் பிடியிலிருந்த தன்னொரு கையொடு மற்றகையையும் சேர்த்துக்கொண்டு பெருமுயற்சியோடு விக்கியண்ணனைக் கச்சியாண்டான் பெருமையோடு நோக்கினான். கண்கள் மின்னின. அந்தக் கண்களில் அவன் உள்மனத்தில் ஓடும் எண்ண ஓட்டங்களை விக்கியண்ணன் உணர்ந்து கொண்டான்.

"மிக்க மகிழ்ச்சி; விக்கியண்ணரே."

கச்சியாண்டானின் தலை இருமுறை அசைந்தது. அவ்வளவே! பிறகு எந்த அசைவும் இல்லை. விக்கியண்ணன் மெல்ல எழுந்து பலவினாடிகள் தலை வணங்கி அமைதியாக நின்றான்.

# 30. யார் இந்த இளவரசி?

*"பலவுறு நறுஞ்சாந்தம் படுபவர்க் கல்லதை*
*மலையுளே பிற்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்?*

*சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை*
*நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்?"*

தஞ்சைக்கோட்டை மதிலின் தரம்தான் என்னே! பகைவர்கள் பலதிங்கள்கள் தாக்கினும் கொள்ளுதற்கு மிகவும் அரியது; மிகுந்த பொருள்களை உள்ளே உடையதாய் அகத்திருப்பார் மகிழ்ந்து அச்சமின்றி வாழ எளியது. அப்படிப்பட்ட அரண் முத்தரையரின் முற்றுகைக்கு வளைந்து கொடுத்தல் என்பதும் ஏது?

தஞ்சையை முற்றுகையிட அப்போது முத்தரையன் முடிவுகட்டியதன் காரணம் அமைந்திருந்த அரசியல் சூழ்நிலையே. சோழநாடு வலிமைமிக்க பாண்டியப் படையோடு போரில் ஈடுபட்டுள்ளது. எனவே, தஞ்சைக்கோட்டை தகுந்த காவலின்றி இருக்கும். அந்த நேரமே, முன்பு தன்னாட்சியின் கீழிருந்த தஞ்சையைப் போரிட்டு வென்று தலைநகராக்கிக்கொண்ட சோழன் விசயாலயனை வெற்றி கொள்ள வாய்த்த நேரம் என்று முத்தரையன் கருதினான். ஒற்றர்களும் அவன் கருத்தையே உறுதி செய்தனர்.

தஞ்சைக் கோட்டையை ஒருமுறை கைப்பற்றக்கூடுமேல், பின்னர் அதை இழத்தல் என்பது இல்லை. பாண்டியரோடு போரிட்டு வென்று திரும்பினும் சோழர்படை அத்துணை வலுமிகுந்ததாக மீளாது என்பது முத்தரையன் அறிந்ததே. முன்னர் எத்தனையோ முறைகள் அவன் சோழர்களோடு மோதித் தோற்றிருக்கிறான், அப்போதெல்லாம் அமையாத வாய்ப்பு இப்போது எளிதாக அமைந்ததாக எண்ணினான். ஆனால், முத்தரையன் எண்ணங்கள் யாவும் மண்ணாயின.

முத்தரையனுக்கு இனி வேறு வழி இருக்கவில்லை. முற்றுகையை உடனே முடித்துக்கொண்டு தன் தலைநகர் வல்லத்திற்கு அவன் திரும்பவேண்டும். இல்லையேல், அவனுக்கு இருக்க இடமும் இல்லாமல் போகக் கூடும்.

முத்தரையன் நினைத்ததென்ன? நடந்ததென்ன? தஞ்சைக் கோட்டை முற்றுகை சில திங்கள்கள் நீளலாம் என்பதை அவன் அறிவான். பாண்டியரோடு நடக்கும் போரில் சோழர்படை தோற்பது உறுதி என்பது அவன் நம்பிக்கை. அன்றி, சோழர்படை வென்று மீளினும் அதன்படைத்திறம் பெரிதாகக் குறைக்கப்பட்டிருக்கும்; பெரும்போரில் ஈடுபட்டுத் திரும்பும் சோர்வாலும் படைக் குறைவாலும் திரும்பும் சோழரை எளிதில் வெற்றி கொள்வதும், பின்னர்த் தஞ்சைக்கோட்டையைத் தடையின்றிக் கொள்வதும் எளிதுதாம்! ஆனால், எல்லாமே எண்ணியவாறே நடந்து விடுவதில்லையே!

ஒற்றர்கள் கொண்டுவந்த செய்திகள் முத்தரையனை வெகுவாகப் பாதித்தன; அவன் கொண்ட நம்பிக்கையைச் சிதறடித்தன.

"பல்லவர் வெற்றி பெற்றனர்; பாண்டியர் தோற்றனர். நடந்து முடிந்த போரில் ஆதித்தன் தலைமையிலான சோழர்படை கலந்து கொள்ளவில்லை. சோழர்படை முற்றும் தஞ்சையை நோக்கிப் புறப்பட்டுவிட்டன. விக்கியண்ணனும் பல்லவகங்கர் படையோடு வந்துகொண்டிருக்கிறான். பல்லவரையனும் சிலவாயிரம் வீரர்களுடன் கல்லணையிலிருந்து புறப்பட்டுவிட்டான்.'

முத்தரையன் தெளிந்த அறிவுடையவன். அவன் சிறிதும் குழப்பம் அடையவில்லை. வேறுவழியில்லை என்பதை அவன் நன்கு உணர்வான். சோழர்படையைமட்டுமே வெற்றி கொள்ள முடியாத அவனால் பல்லவகங்கர் படை உதவியோடுவரும் சோழர்படை முன் சிலநாழிகைகள் கூட எதிர்த்து நிற்க இயலாது. பலமுறை சோழர்களோடு முன்னரே போரிட்டுத் தோற்ற வனாயிற்றே அவன். சூழ்ச்சியாலன்றி நேருக்குநேர் சோழரை வெல்லும் படைவலிமை தன்னிடம் இல்லை என்பதை முத்தரையன் உணர்ந்து பலவாண்டுகள் ஆகிவிட்டன.

கிட்டாதாயின் வெட்டென மற. தேவையற்ற எந்த ஒரு வீரனையும் போரில் வீணே இழக்க முத்தரையன் விரும்பவில்லை. எண்ணிய எண்ணியாங்கு எய்திடத் தன்னிடம் திண்ணிய நெஞ்சுரம்

மட்டும் இருந்துபயனில்லை; தேவையான பக்க உதவியும் வேண்டும் என்பதில் முத்தரையன் தெளிந்த முடிவோடு இருந்தான்.

சோழர்படை தஞ்சைக்கோட்டைக் கீழ்வாயிலை அடைந்த போது முற்றுகை நடந்ததற்கான அறிகுறிகளே இல்லை. முற்றுகையை நீட்டித்திருந்திருந்தால், சோழர் பல்லவர் கங்கர் படைகளால் சூழப்பட்டுத் தோற்கடிக்கப்படுவதுடன், ஒருவீரனும் உயிரோடு மீளமுடியாதென்பதையும் வல்லமும் தாக்கப்பட்டு எளிதில் எதிரிகளால் கைப்பற்றப்படும் என்பதையும் தெளிந்த முத்தரையன் தன் முற்றுகையை முடித்துக் கொண்டு எப்போதோ சென்றுவிட்டிருந்தான். கோட்டை வாயிலைக் கடந்து உள்ளே நுழைந்த வீரர்களை மக்கள் வெள்ளம் மகிழ்ச்சியோடு வாழ்த்தி வரவேற்றது.

விக்கியண்ணனுக்கு உடனடியாக நிறைய கடமைகள் இருந்தன. அமைச்சர் நாங்கூர்வேளிர் நற்குணப் பேரெழிலாரை அவன் சந்திக்க வேண்டியிருந்தது. மாதேவியைப் பல்லவ இளவரசன் அபராசிதனின் பட்டத்து அரசியாக்குவதாகப் பல்லவப் படைத்தலைவன் கச்சியாண்டானிடம் அவன் சாகும் நேரத்தில் உறுதியளித்திருந்தான். அதை எப்பாடுபட்டும் விக்கியண்ணன் முடித்தாக வேண்டும். காலங்கடக்குமேல் கருமம் கெடக்கூடும். இளவரசி கடம்பமாதேவி மாதேவியைத் தன்தம்பி ஆதித்தனுக்கு மனைவியாக்க ஆசை கொண்டுள்ளாள். ஆதித்தனும் இளமைமுதல் தன்னோடு இணையாக வளர்ந்திருந்த மாதேவியையே மணக்க விரும்புகிறான். அவர்கள் இருவரும் அவன் கடமைக்கு இடையூறாக எதையும் செய்ய முனையலாம்.

மணத்தை முடித்துப் பின்னர் மாதேவியைப் பல்லவ நாட்டிற்கு அனுப்பிவைப்பதென்பது அப்போதைய சூழ்நிலையில் ஆகாத ஒன்று. எனவே அபராசிதனுடன் அனுப்பிவைத்து, காஞ்சிக்குச் சென்றதும் மணத்தை முடித்துக் கொள்ளுமாறு ஏற்பாடு செய்வதே தகும் என்று விக்கியண்ணன் நம்பினான்.

நாங்கூர் வேளிர் அவன் எண்ணத்திற்குத் தடையாக இருக்கவில்லை. தொடக்கம் முதற்கொண்டு தொடர்புடைய அரசு செயல்களில் விக்கியண்ணன் அவரைக்கலந்து வந்துள்ளான்.

மதிநலமும் நாட்டுப்பற்றும் மிக்க தலைமை அமைச்சரான நற்குணப் பேரெழிலார் விக்கியண்ணனின் தலைமையிலும் திறமையிலும் முழு நம்பிக்கைக் கொண்டிருந்தார். மேலும் மகள் மாதேவியின் மன ஓட்டத்தையும் அறிந்த காரணத்தால், தடையேதும் கூறாது மாதேவியை மன்னர் விசயாலயர் முன்னர் அழைத்துவந்தார். மன்னர் மாதேவியை மனமுவந்து வாழ்த்தி வழியனுப்பிவைப்பார் என்பதில் அவருக்கு எந்த ஐயமும் இல்லை. அவர் எண்ணம் பொய்யாகவில்லை.

"மாதேவி, நீ என் மகளுக்கு ஒப்பானவள். நீ இந்தச் சோழநாட்டு அரசியாக முடிசூடவேண்டுமென்ற எங்கள் எல்லோருடைய எண்ணமும் ஆசையும் நிறைவேறாதது எனக்குப் பெருங்குறை மட்டுமன்று; பெரும் இழப்புங்கூட. அம்மா, நீ உன் வாழ்க்கையில் எல்லா நலங்களையும் பெற்று இனிது வாழ்க. உன்னால் பல்லவ அரசு பெருமை பெறவேண்டும். அஃதொன்றே எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். போய்வா, மகளே. அபராசித வர்மரே, எங்கள் பெண்ணை அடைய நீங்கள் தவம் செய்திருக்க வேண்டும். கண்ணின் மணியொப்பானவள் எங்கள் மாதேவி; அவளை மனங்கோணாமல் மகிழ்ச்சியாக நடத்திவாருங்கள். உங்கள் இருவர் வாழ்க்கையும் நாளும் உயரட்டும்."

"அப்படியே நடப்பேன். வருகிறோம், மன்னா."

"நல்லது. போய் வாருங்கள்."

அபராசிதன் மாதேவி அருகில்வரப் புறப்பட்டான். இரண்டடிகள்தாம் அவன் கால்கள் எடுத்துவைத்தன; அதற்குமேல் அவை அசைய மறுத்தன. அங்கு அனைவரின் கண்களும் அபராசிதனின் பார்வை பதிந்த இடத்தையே நோக்கின; அதிர்ச்சி அடைந்தன.

அபராசிதனின் கண்களிலே அச்சமோ, வியப்போ குடி கொண்டிருக்கவில்லை. எதிரே அறையின் வாயிற்கதவை அடைத்துக்கொண்டு கையில் உருவிய வாளுடன் கண்களில் சினத்தீ தெரிக்க நின்றுகொண்டிருந்த சோழ இளவரசன்

ஆதித்தனைக் கண்டும் அபராசிதன் அமைதியாகவே நின்றிருந்தான்.

தன்னை எதிர்நோக்கிக் காத்திருந்த இன்னலை அபராசிதன் எண்ணியும் பார்த்ததாகத் தெரியவில்லை. திருப்புறம்பியப் போருக்குப்பின் எந்த நிலையில் ஒளியிழந்து அவன்கண்கள் காணப் பட்டனவோ, அதே நிலையில் அவை அப்போதும் காணப்பட்டன. கலக்கமென்பது காணப்படவில்லை.

அபராசிதன் போரிலே கண்ட இழப்பு என்ன ஏற்றுக்கொள்ளக் கூடியதா? இறுதியில் வெற்றி பெற்றதால் விளைந்த பயன் என்ன? படைமறவர்களில் பெரும்பான்மையோரை இழந்திட்டானே, அந்த இழப்பு தாங்கும் தகைமத்தா? பாதி வீரர்கள் களத்தில் உயிரை இழந்தனர்; எஞ்சியோரில் பாதிபேர்கள் விழுப்புண் அடைந்துள்ளனர். விழுப்புண் பெற்றோர் யாவருமே மீண்டும் படையில் நீடிப்பது இயலாது.

படைவலிமையை மட்டும் இழந்திருந்தாலும் அபராசிதன் வெகுவாகப் பாதிப்பிற்கு உள்ளாகி இருக்கமாட்டான். உயிருக் குயிரான பாட்டன் கங்கமன்னன் பிருதிவிபதியைப் போர்க்களத்தில் இழந்தது அவன் நெஞ்சில் ஆறா வடுவை ஏற்படுத்திவிட்டது. அம்மட்டோ? இளமை முதல் அவனுக்குப் படைக்களப் பயிற்சியையும் அரசியல் பயிற்சியையும் அளித்துவந்த பல்லவப் படைத்தலைவன் கச்சியாண்டானையும் அன்றோ அவன் இழக்க வேண்டியதாயிற்று!

கடைசிநாளில் வெற்றியை ஈட்டித்தந்த அந்த வீரத் தலைவனேனும் உயிரோடு உடனிருந்திருந்தால், அபராசிதன் உயிரிருந்தும் உணர்வற்ற நடைப்பிணம் ஒப்ப உலவும் நிலை ஏற்பட்டிருக்காது. பழைய நிலைமையில் அவனிருந்திருந்தால், உருவிய வாளொடு வழிமறித்து நின்றிருந்த ஆதித்தனைக் கண்டதும் அபராசிதனும் அடுத்த கணமே வாளை உருவியிருந் திருப்பான். ஆனால், மாறாக விக்கியண்ணன் அப்போது தன்னிடை வாளை உருவவேண்டியவனானான்.

"இளவரசே, அவர்கள் செல்ல வழியை விடுங்கள்."

"நான் இளவரசன்!"

"தெரியும்."

"தெரிந்துமா எனக்கு ஆணை இடுகிறீர்கள்?"

"ஆமாம். இளவரசர் ஆதித்தர் எப்போதும்போல் என்பேச்சை மீறி எதுவும் செய்யமாட்டார் என்ற நம்பிக்கை."

"உங்கள் பேச்சைக் கேட்பேன் என்று எப்படி நம்புகிறீர்கள்?"

"நீங்கள் பிறந்த குடியின் நெறிவழுவாத்திறத்தால் நம்புகிறேன்! நலங்கிள்ளி சோழரின் வழிவந்தோர் பிறனில் விழையும் பேதைமையை ஒருபோதும் கொள்ளமாட்டார்கள்."

"மாதேவி எனக்குச் சொந்தமானவள். அவள் என்னுடன் பழகி வளர்ந்தவள். அவளை மற்றொருவன் அடைவதை நான் பொறுத்துக் கொள்ள முடியாது."

"இளவரசே, நீங்கள் அங்குதான் தவறு செய்கிறீர்கள். சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அன்றி நீருள்ளே பிறப்பினும், நீர்க்கு அவைதாம் என்ன செய்யும்? நீங்கள் படித்திருப்பீர்களே! மாதேவி, உங்களுடன் பழகியவர்தான்; உடன் நாளும் விளையாடியவர்தான். ஆனால், அவர் மனம் விழைவது இதோ நிற்கும் பல்லவ இளவரசர் அபராசித வர்மரைத்தான்; உங்களை அன்று. அன்புகொண்டு அவர்கள் செல்ல வழியை விடுங்கள்."

"வழியை விடாவிட்டால்?"

பல வினாடிகள் அங்கு அமைதி நிலவியது. எல்லோர் கண்களும் விக்கியண்ணன் முகத்திலேயே பதிந்திருந்தன. அவன் விடையை அறிய அனைவரும் ஆர்வமுடன் காத்திருந்தனர். அவனோ சோழ அரசின் ஓர் அலுவலன்; எதிர்த்து நிற்பவனோ சோழகுலத்து இளவரசன்! சோழ இளவரசனை எதிர்த்து விக்கியண்ணனால் என்ன செய்யக்கூடும்?

"இளவரசே! மாதேவியைப் பல்லவ இளவரசருக்கு மணம் முடித்து வைப்பதாகச் சாகும் நிலையிலிருந்த பல்லவப் படைத்தலைவருக்கு நான் உறுதி அளித்திருக்கிறேன். கொடுத்த உறுதியைக் காப்பாற்ற இயலாதவன் இறப்பதே இனிது. இளவரசர் என்வாளுக்கு வேலை கொடுக்கமாட்டார் என்று எண்ணுகிறேன்."

"நீங்கள் இந்த நாட்டின் ஓர் அரசியல் அலுவலர்! நீங்கள் இளவரசரையே எதிர்ப்பதென்பது எப்படிப்பட்ட குற்றம் தெரியுமா?"

"தெரியும், இளவரசே. எல்லோருமே ஒருநாள் இறப்பதென்பது உறுதி. அப்படி இருக்க, இன்றே இறப்பதால் இழப்பதற்கு என்ன உண்டு? பல்லவரையா, இதோ அரசரின் முத்திரை மோதிரம்; அரசரிடம் பணிந்து சேர்த்துவிடு."

பல்லவரையன் முன்வந்து கணையாழியைப் பெற்றுக் கொண்டான்.

"இளவரசே, நான் இப்போது எந்தப்பொறுப்பும் இல்லாத தனிமனிதன். சொன்ன சொல்லைக் காப்பதற்காகச் சோழர்குலத் தோன்றலுக்கு எதிராக என்வாளைச் சுழற்ற நான் தயங்கேன். மாதேவியையும் பல்லவ இளவரசரையும் பாதுகாப்போடு பல்லவ நாட்டிற்கு அனுப்பிவைப்பதொன்றே எனக்கு இப்போதுள்ள பெரும் பொறுப்பு; மற்றவை குறித்து எனக்கு அக்கறை இல்லை. என் உயிரும் எனக்கு ஒரு பொருட்டில்லை."

"அண்ணா !"

விக்கியண்ணனே அன்றி மற்றனைவரும் மாதேவியை நோக்கினர். விக்கியண்ணனுக்கும் இளவரசன் ஆதித்தருக்கும் இடையில் அதுவரை நடந்துவந்த பேச்சுக்கிடையே அனைவரும் அமைதிகாக்க, மாதேவியே முதன்முதலில் குறுக்கிட்டுப் பேசினாள். மன்னர் விசயாலயர் முகத்தில் இளநகை விளையாடிக் கொண்டிருந்த விந்தையை விக்கியண்ணன் அந்நிலையிலும் கண்டு வியந்தான்.

"என்னம்மா?"

"உங்கள் வாளை முதலில் உறையுள் சேருங்கள்."

"மாதேவி, நீ என்ன சொல்கிறாய்?"

"அண்ணா, உங்களுக்குப் புரியவில்லையா? இளவரசர் உங்களோடு விளையாடிக் கொண்டிருக்கிறார்! அவர் எண்ணத்தை நீங்கள் யாருமே அறிய மாட்டீர்கள். என் நலத்தில் என்தந்தையினும் அவருக்கே நாட்டம் மிகுதி. என்னுடைய மகிழ்ச்சிதான் அவருடைய மகிழ்ச்சி! என் கண்களில் நீர் வடிந்தால் அவர் கண்களில் குருதி கொட்டும்! அப்படிப்பட்டவர் என் இன்ப வாழ்விற்கு என்றும் எந்த நிலையிலும் இடையூறாக நிற்கமாட்டார்."

ஆதித்தன் கண்கள் மட்டுமா? அனைவரின் கண்களுமே மாதேவியின்மேல் நிலைத்தன. அன்னமென அசைந்து ஆதித்தனை அடைந்த மாதேவி ஒரு வினாடி அவன் கண்களை அன்போடு நோக்கினாள்; பின் மெல்லத் தரையில் அமர்ந்து அவனை வணங்கினாள்.

"உங்கள் மாதேவியை வாழ்த்தி மகிழ்ச்சியுடன் அவரோடு அனுப்பி வையுங்கள்"

ஆதித்தனின் கண்களில் முத்துகளெனக் கண்ணீர்த்துளிகள் தோன்றின. தன் கையிலிருந்த வாளை உறையுள் இட்டுவிட்டு நிமிர்ந்து அனைவரையும் நோக்கியபோது, அவன் கண்கள் அன்பையும் அருளையும் பொழிந்தன.

"மாதேவி, எழுந்திரு. நீ விரும்புவதுபோல் அபராசிதவர்மரோடு உன்னை அனுப்பிவைக்கிறேன்; ஆனால் இன்றன்று. உங்கள் இருவர் திருமணத்தையும் நடத்தி முடித்த பிறகு! மகிழ்ச்சிதானே! அபராசிவர்மரே, மாதேவியை உங்களுக்கு நான் விட்டுத்தருகிறேன்; ஏன் தெரியுமா? அவள் மகிழ்ச்சி உங்களோடு ஒன்றி இருக்கின்ற ஒரே காரணத்தால்! ஆனால் ஒன்று! அவள் துன்பப்படுவதை நான் எந்த நாளும் பொறுத்துக் கொள்ளமாட்டேன்; அதை நினைவில் கொள்ளுங்கள். மாதேவி, அவரை அழைத்துச் சென்று முறைப்படி வரிசை செய். உங்கள் திருமணம் உடன் நடைபெற எல்லாம் செய்யப்படும்."

மாதேவி முன் நடந்தாள். தொடர்ந்து பல்லவ இளவரசன் அபராசிதன் வெளியேறினான்.

அவர்கள் வெளியேறியபின் சிலவினாடிகள்கூட அந்த அறையில் அமைதி நிலவவில்லை. அதற்குள் ஒற்றர்படைத் தலைவன் சேந்தன்கீரன் விரைந்து உள்ளே ஓடிவந்தான்.

"அரசே, பேரிடர்!"

"என்ன சொல்கிறீர்?"

"நம் இளவரசியாரை முத்தரையரின் ஆட்கள் வல்லத்திற்குக் கடத்திச் சென்றுவிட்டனர்."

"என்ன?"

ஒரே நேரத்தில் எல்லோரும் அதிர்ச்சி அடைந்து ஒன்றும் தோன்றாது உறைந்து நின்றனர். எல்லாம் சில வினாடிகள்தாம்! ஆதித்தனின் கை வாளை உருவியது; அவன் வாய் ஆணையை உதிர்த்தது.

"பல்லவரையரே, புறப்படுங்கள்! நம்படை எதுவும் இங்குத் தங்கத் தேவைஇல்லை. முத்தரையர் இனத்தையே இம்முறை முற்றும் அழித்தாக வேண்டும்."

இளவரசன் ஆதித்தன் புறப்பட்டான். அவனைத் தொடர்ந்து செல்லப் பல்லவரையனும் அடியெடுத்து வைத்தான். ஆனால் அரசர் விசயாலய சோழரின் ஆணை அவர்களைத் தடுத்து நிறுத்தியது.

"பொறு, மகனே! ஒற்றர் தலைவரே, உற்றது என்ன? விளக்கமாகச் சொல்லுங்கள்."

"அரசே, முத்தரையரின் படையைத் தொடர்ந்து சென்ற நம் ஒற்றன் ஒருவன், முத்தரையரிடம் நம் இளவரசியார் சிறை பட்டிருப்பதை அறிந்து விரைந்து வந்து தெரிவித்தான்.

உண்மையைத் தெளிய, இளவரசியார் அரண்மனைக்கு விரைந்தேன். இளவரசியார் வண்டார்குழலியின் மாளிகைக்குச் சென்றதாகத் தெரியவரவே, அங்கே ஓடிச் சென்றேன். இளவரசியார் உடன்சென்ற பணிப்பெண்களும் வீரர்கள் இருவரும் கட்டப்பட்டு உள்ளறையில் அடைக்கப்பட்டிருந்தனர். ஒற்றன் கொண்டுவந்த செய்தி உண்மையெனத் தெளிந்து இங்கு உடனே ஓடிவந்தேன்."

விக்கியண்ணன் குறுக்கிட்டுப் பேசினான்.

"எங்கே கடியநெடுவேட்டுவர்?"

"காவல்தலைவரும் செங்கண்ணரும் நம் படைகளைக் திரட்டிக் கொண்டிருக்கின்றனர்."

"வண்டார்குழலியின் மனையைக் கடுமையாகக் கண்காணித்து வரும்படி கட்டளை இட்டிருந்தேனே! அப்படி இருந்துமா இப்படி நடந்தது?"

"ஆம்; தலைவரே. முத்தரையர் முற்றுகையை முடித்துக்கொண்டு சென்றுவிடவே, காவலர்கள் கவனக்குறைவாக இருந்துவிட்டனர். இப்போதே நாம் புறப்பட்டால், இளவரசியாரை எளிதில் மீட்டு விடலாம்."

"தேவை இல்லை."

அரசரை அனைவரும் கேள்விக்குறிப்போடு நோக்கினர். அவர் முகத்தில் அமைதி தவழ்ந்தது. அதைக்காண விக்கியண்ணன் வேதனை கொண்டான். ஆனால், ஆதித்தனோ சீற்றங் கொண்டான்.

"தந்தையே! இஃதென்ன தாங்கள் சொல்வது? இந்த நாட்டின் இளவரசியார் மாற்றாரின் பிடியில்! அப்படியிருந்துமா இந்த அமைதி?"

"ஆதித்தா, பொறுமையாய் இரு. இந்தச் சோழநாட்டு மண்ணிற்குச் சொந்தக்கொண்டாட இளவரசன் நீ ஒருவனே உண்டு; இளவரசி என்று யாரும் இல்லை."

எல்லோரும் இயல் மறந்து நின்றனர். அரசர் என்ன சொல்கிறார்? அமைச்சர் நாங்கூர்வேளிர் ஒருவரே அமைதியாக இருந்தார். அவர் முகத்தில் மட்டுமே தெளிவு வெளிப்பட்டது. அப்படியாயின் அவருக்கு அரசர் என்ன சொல்கிறார் என்பது தெரிந்திருக்க வேண்டும்.

விக்கியண்ணன் திகைத்தான். இஃதென்ன புதுகுழப்பம்? உயிரை விடுவதற்குமுன் கச்சியாண்டான் ஏதேதோ கடம்பமா தேவியைப்பற்றி அவனிடம் கூறி அவன் கருத்தைக் குழப்பியிருந்தான். போதாததற்கு அரசர் வேறு புதிர்போடுகின்றாரே!

"ஆம், ஆதித்தா. அதிர்ச்சியாக உள்ளதா? கடம்பமாதேவி இந்த நாட்டின் இளவரசி இல்லை என்பது மட்டுமன்று; அவள் என் மகளும் இல்லை."

## 31. மீட்சியும் வீட்சியும்

*"அண்ணாந்(து) ஏந்திய வனமுலை தளரினும்*
*பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த*
*நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்*
*நீத்தல் ஓம்புமதி............"*

குதிரை விரைந்து கொண்டிருந்தது; இல்லை, பறந்து கொண்டிருந்தது. அதைவிட விரைவாக அதன்மீதமர்ந்திருந்த விக்கியண்ணனின் உள்ளம் இயங்கிக் கொண்டிருந்தது. உயிர் அவளோடு இணைந்தஒன்று! அவளின்றி அவனில்லை. வாழ்ந்தால் கடம்பமாதேவியுடன்; இல்லையேல் வாழ்க்கையே இல்லை.

உண்மையை உணர்ந்துகொண்ட பின்னர் அன்றோ அன்பு மேலும் அவளிடம் மிகுதியாகின்றது! விக்கியண்ணனுக்கு இப்போது எல்லாமே விளங்கினபோல் தோன்றியது. அன்று கடம்பமாதேவி உரைத்தவை வெற்றுரை என்றே அவன் கொண்டான். ஆனால், இன்று? எத்துணைப் பொருள் புதைந்தவை அவைதாம்!

'இளவரசியாக நானில்லாதிருந்தால், அப்போதும் என்னை விரும்புவீர்களா?'

அன்று அவள் கேட்ட கேள்வியின் உட்பொருள் இன்றன்றோ அவனுக்குத் தெரியவந்துள்ளது. கடம்பமாதேவி பற்றிய கச்சியாண்டானின் கூற்றின் பொருளும் ஊற்றுநீரொப்பத் தெளிவாகத் தெரிந்துவிட்டதும் இப்போதன்றோ! கடம்பமாதேவி யின் உடலில் ஓடுவது சோழர்குலக் குருதிமட்டுமன்று; பல்லவரினக் குருதியும் கலந்துள்ளது என்ற கச்சியாண்டான் சொன்னவை என்னவென்பது சோழமன்னர் விசயாலயர் விளக்கமாய்ச் சொல்லவன்றோ அவனால் தெரிந்து கொள்ள முடிந்தது.

இளவரசியார் கடம்பமாதேவி தன் மகளில்லை என்பதை அரசரே கூறியதைக் கேட்ட அதிர்ச்சியில் அனைவரும் அமைதி காக்க, அரசர் தொடர்ந்து சொன்னவை அனைத்தும் விரைந்து குதிரையில் சென்றுகொண்டிருந்த அந்தக் குழப்பமான நிலையிலும் விக்கியண்ணன் நினைவில் பசுமையாய் நிலைத்துநின்றன.

"சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். முப்பது ஆண்டு களுக்கு முன்னர் நடந்தவை அவை. அப்போது பல்லவர்க்கும் நமக்கும் உறவு கிடையாது; பகைமையே நிலவியது. பல்லவ அரசன் நந்திவர்மன் நல்ல உரமுடையவனாகவும் திறமையானவனாகவும் விளக்கினான். அவனாட்சியில் மக்களுக்குக் குறைவென்பதே இருக்கவில்லை. அவன் போரிலே புலியாய் நேரின்றி நிலைத்த ஆட்சியைக் கொண்டிருந்தான். இருப்பினும், தன் மாற்றாந்தாய்க்குப் பிறந்தவர்கள் நால்வருக்கும் பகைவனாய் இருந்தான்.

உரிமைப்படி பல்லவராட்சி நந்திவர்மனுக்குச் சொந்தங் கிடையாது. நந்திவர்மன், பல்லவ அரசர் தந்திவர்மனின் பட்டத்தரசிக்குப் பிறந்தவனன்று. தந்திவர்மனின் பிள்ளைகளில் நந்திவர்மனே மூத்தவனாக இருந்த காரணத்தாலும், இளமையி லிருந்தே அரச அலுவல்களில் தன்னைத் தொடர்புபடுத்திக் கொண்டிருந்த இயல்பினாலும், உரிமையுடைய தன்தம்பிகளை வென்று நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான்; அவர்களை நாட்டை விட்டுத் துரத்தினான். இழந்த நாட்டை மீட்க அவன் தம்பிகள்

கொண்ட முயற்சிகள் யாவும் வீணாயின. அந்த நால்வரின் தாய் கதம்பர்மரபில் சிறந்த மணியாக விளங்கியவர்; நாட்டுமக்கள் எல்லோராலும் நாளும் போற்றப்பெற்றவர். அந்தத் தாயின் பெயர் அக்கள நிம்மடி. அன்பு, அருள், பண்பு அனைத்தும் நிரம்பிய பட்டத்தரசியான அவரின் பிள்ளைகளில் இறுதியானவன் காடவன். அவனுடைய அன்பு மகளே கதம்பமாதேவி என்ற கடம்பமாதேவி. பல்லவ அரசுடன் பகைமை கொண்டிருந்த நான் காடவனுக்குப் புகலிடம் கொடுத்தேன்.

"காடவன் மிகப்பெருந் தமிழறிஞன். நந்திக்கலம்பகம் என்ற நூலைத் தன் அண்ணனைத் தலைவனாகக்கொண்டு அறம் வைத்துப் பாடி அவனழிவிற்கு முடிவுகண்டான் என்று அனைவரும் சொல்வர். உண்மை நான் உணரேன். ஆனால், நந்திவர்மனின் இறப்பால் பெரிதும் மனநிலை பாதிக்கப்பட்டிருந்த காடவன் இங்குத் தங்கியிருந்த காலத்தில் சோழகுலப் பெண்ணொருத்தி யோடு கொண்ட தொடர்பால் எல்லோரும் மகிழப் பிறந்தவளே கடம்பமாதேவி. தன்தாயின் அன்பையும் பண்பையும் தன்தாய் தோன்றிய கதம்ப மரபையும் மறக்காத காடவன் தன்மகளுக்கு இட்ட பெயரே கதம்பமாதேவி; அதுவே நாளடைவில் கடம்பமாதேவி யாயிற்று.

"இளமையிலேயே தாயை இழந்த தன்மகளைக் காடவன் தானே கண்ணுங்கருத்தாய் வளர்த்தான்; தமிழ்மொழி அறிவை, வீரத்தை, பண்பாட்டை நாளும் பயிற்றுவித்தான். அம்மட்டோ? அரசியல் ஞானத்தை, உண்டாகும் சிக்கல்களை, அவைபோக்கும் அறநெறிமுறைகளை ஒவ்வொருநாளும் பாலூட்டும் தாயினும் பரிந்து ஊட்டிவந்தான். அவன் முயற்சியின் விளைவை அனைவருமே அறிவர்.

"இளம்வயதிலேயே நல்ல அழகும் ஆழ்ந்த அறிவும் படைப் பயிற்சியும் வாய்ந்தவள் கடம்பமாதேவி. மனமாற்றங்கொண்டு காடவன் துறவு பூண்டு பிரிந்தபோது, கடம்பமாதேவி என் மகளானாள். அப்போது எனக்குக் குழந்தையும் இல்லை. கடம்பமாதேவியும் சோழர்குலத்தைச் சேர்ந்தவள்தானே. அவளை என் பெண்ணாக ஏற்றுக் கொண்டதன் பலன்தான் போலும் அடுத்த ஆண்டே ஆதித்தன் பிறந்தான்.

"கதம்பமாதேவியைக் கடம்பமாதேவியாக இளவரசியாக ஆக்கினேன்; எல்லோரும் என்மகளென ஏற்குமாறு அன்பைக் கொட்டினேன்; அவளும் எல்லோரிடமும் அன்பைக் கொட்டினாள். உண்மையில், கடம்பமாதேவி என் மகளும் இல்லை; இந்தச் சோழநாட்டிற்குச் சொந்தக்காரியுமில்லை. அவளொருத்திக்காக, இந்த நாட்டைப் போரில் ஈடுபடுத்துவது எனக்குச் சரியாகப்பட வில்லை. ஆதித்தா, சினமும் சீற்றமும் என்றும் அறிவுடையோர்க்கு அழகல்ல. சற்றுப்பொறு. தலைவர் விக்கியண்ணன் ஏதோ சொல்ல விழைகிறார்; அவர் கருத்தைக் கேட்போம்."

விக்கியண்ணன் எல்லோரையும் ஒருமுறை ஏறெடுத்துப் பார்த்தான். அவன் அமைதியாக மெல்லப் பேசினான்.

"அரசே! என்னைப் பொறுத்துக் கொள்ளவும். கடம்பமாதேவியார் தங்கள் மகளா? இல்லையா? இந்நாட்டு இளவரசியார்தானா? இல்லையா? இவற்றைப்பற்றி அறிந்து கொள்ளவோ, ஆராய்ந்து உண்மை காணவோ இப்போது காலம் இல்லை. முத்தரையர்பிடியில் இளவரசியார் எந்த இன்னலை அடைந்துக்கொண்டிருகிறாரோ என்ற அச்சமே என்னை அலை கழிக்கிறது. நீங்கள் இந்நாட்டு அரசர்; நீங்கள் அவையைக்கூட்டி ஆய்ந்து ஒரு முடிவிற்கு வரலாம்; அதற்கான காலமும் இருக்கலாம். இன்று நான் தனிமனிதன்; இந்தச் சோழநாட்டையும் சார்ந்தவன் இல்லை. எனக்கென்று தனித்த கடமைகள் உள்ளன; அவற்றை நிறைவேற்ற விரைந்து செல்ல வேண்டிய நிலை என்நிலை. அரசர் விடைகொடுத்தால் நான் உடன் விரைவேன்."

விக்கியண்ணன் அரசரின் ஆணைக்காகக் காத்திருக்க வில்லை. அடுத்த சிறிது நேரத்திற்கெல்லாம் அவனுடைய புரவி கோட்டை வாயிலைக் கடந்து முத்தரையரின் தலைநகர் வல்லத்தைக் குறிவைத்துப் பறந்துகொண்டிருந்தது. அவன் சென்றபிறகு பேசிய ஆதித்தனின் பேச்சையும் அதற்கு அரசர் கூறிய மறுமொழியையும் விக்கியண்ணன் கேட்டிருக்கக்கூடுமேல், அவன் நெஞ்சில் சோழ அரசர்குலத்தைப்பற்றி அப்போது கொண்டிருந்த தாழ்வெண்ணம் எழுந்திருக்காது.

"தந்தையே! இளவரசியார் உங்களின் உண்மையான மகளாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், என் அன்புத் தமக்கையார்! என்னை இந்நாள் ஒரு வீரனாக ஆளாக்கியவர்! அவரால் பாலூட்டப் பெற்றுப் பாசத்தால் நாளும் பாராட்டப்பெற்ற என்னால், அவர் துன்பங்கண்டும் துடிக்காமல் இருக்க இயலாது. நான் வருகிறேன். உங்கள் படைவேண்டா. தமக்கையிடம் எனக்குள்ள அன்பு அனைத்தையும் இனிது முடிக்கும் ஆற்றலை எனக்குத் தரும்."

"ஆதித்தா, போய் வெற்றியோடு வா. உன் தமக்கையிடம் எனக்கு அன்பில்லை என்று நீ எண்ணாதே. அவள் என் மகள் இல்லைதான்; ஆனால் அவள்தான் இந்த உலகத்தில் எனக்கு எல்லாம். அவளை நான் உன்னைவிட, ஏன்? என் உயிரையும்விடப் பெரிதாக மதிக்கிறேன். காடவனுடைய மகளே அவள்; ஆயின், முழுக்க முழுக்க சோழகுல வீரப்பெண்மணி அவள்! கரிகாலன் காலத்தி லிருந்த சோழராட்சியைத் தன்காலத்தில் இங்குக் கொண்டுவர அனுப்பொழுதும் எண்ணிவரும் அவளைத் தெய்வமாகவே நான் கொண்டுள்ளேன். ஆதித்தா, உன் தமக்கையின் ஆசைகளை நிறைவேற்ற என் வாழ்நாள் முழுதும் நான் எதிர்கொண்ட போர்களுக்கு எண்ணிக்கை கிடையாது; ஆனால், அப்போர்களில் ஈடுபட்டு நான்பெற்ற விழுப்புண்களுக்கு எண்ணிக்கை உண்டு. தொண்ணூறும் ஆறுமெனப் புண்ணூறும் திருமேனி கொண்டவன் விசயாலயன் என நன்னூற் புலவர்களால் நாளும் பாடப்பெறும் நற்றவம் பெற்றது உன் தமக்கையாரால்! படைகள் அனைத்தையும் ஏற்றுச் செல். இளவரசியார்க்கு இம்மியளவு இடர் ஏற்பட்டிருப்பினும் முத்தரையரை முற்றும் அழித்துத் திரும்பு. முதலில் உன்னை ஏன் தடுத்தேன் என்று குழம்புகிறாயா? இளவரசியார் விக்கியண்ணனைப்பற்றியும் அவர் களிடை எழுந்துள்ள உறவைப்பற்றியும் எனக்கு விளக்கமாகச் சொல்லியுள்ளார். இளவரசி என்பதனால் உன் தமக்கையை அவர் விரும்புகிறாரா? இல்லை, உண்மையிலேயே அவளை அவளுக்காகவே விரும்புகிறாரா? உண்மை உணரவே அவரெதிரில் நான் அவ்வாறு பேசி நடந்துகொண்டேன். நீ உடனே புறப்பட்டுச் செல்."

வெள்ளம்போல் சோழர்படை முத்தரையர் தலைநகர் வல்லத்தை நோக்கிப் புறப்பட ஆதித்தனின் ஆணையை

எதிர்நோக்கி அணிவகுத்து நின்றுகொண்டிருந்தது. அதை அறிந்து கொள்ளும் நிலையிலே விரைந்து சென்றுகொண்டிருந்த விக்கியண்ணன் இல்லை. ஆனால், அந்த நேரத்தில் எதிரே வெகுதொலைவில் வந்துகொண்டிருந்த இரு குதிரைகள்மீது அவன் நாட்டம் பதிந்திருந்தது.

விரைந்து எதிரே வந்த குதிரைகள் அவனை நெருங்கியதும் நின்றன. விக்கியண்ணனும் தன்குதிரையை நிறுத்தினான். எதிரே நின்ற குதிரைகளில் வந்தவர்களின் அடையாளங்களை அறிந்ததும் மகிழ்ச்சியால் வியந்து நின்றான். அவன் நெஞ்சம் விம்மியது. அவன் காண்பது கனவில்லையே? தன் கண்களையே அவனால் நம்பக் கூடவில்லை!

"தேவி!"

விக்கியண்ணன் குதிரையினின்றும் இழிந்து விரைந்து ஓடினான். கடம்பமாதேவி தன்குதிரையினின்றும் தாவி அவன் மார்பிலே பூங்கொத்தெனத் தொத்திக்கொண்டாள். தாங்கிக் கொண்ட அவன் தாளாக் காதலால் தன்னிலை இழந்து அவளின் தாமரை முகத்திலும் தளிரிதழ்களிலும் தன்முரட்டு உதடுகளைப் பதித்துத் தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டான்.

"ஐயா! ஐயா!"

இஃதென்ன அவல ஓசை? அழுகுரலன்றோ? என்ன நேர்ந்தது?

விக்கியண்ணன் விலகாமலே பார்வையைத் திருப்பினான். தன்னை அழைத்தவள் செந்தா மரையா? அவளேன் அழுகிறாள்? தேம்பித்தேம்பி அழவேண்டியதன் தேவையும் என்ன?

"செந்தாமரை, ஏன் அழுகிறாய்?"

"ஐயா, நம் அம்மா அங்கே பெரும் இடரில் உள்ளார்கள். இளவரசியாரைத் தன்னைப்போல் உடையுடுத்திக் காவலிலிருந்து தப்பவைத்துவிட்டுச் சிறைக்குள் இளவரசியாரென அவரிருக்கிறார்.

இந்நேரம் என்னானதோ நானறியேன். அவரைத் தீயிட்டுத் தீயவர்கள் கொன்றிருப்பார்களோ? தெரியவில்லையே; நானென் செய்வேன்."

விக்கியண்ணன் பதறி நின்றான்.

"என்ன சொல்கிறாய் நீ?"

"வரையா வண்மைக்குப் பெயர்பெற்ற முத்தரையரின் இன்றைய இழிந்த நிலைக்கு மூலகாரணமே நம் இளவரசியார் தானாம்! பழிக்குப்பழிவாங்கப் பொது இடத்திலே தீமூட்டிக் கொல்ல மற்ற அரசியல் தலைவர்களின் முடிவை மன்னராலும் மாற்ற முடியவில்லை. வரும்வழியிலே நடந்துகொண்டிருந்த ஏற்பாடு களை என்னிரு கண்களாலே கண்டுவந்தேன். என்னாயிற்றோ என்று என்னுடல் பதறுகிறது. ஐயா, நீங்கள்தாம் அம்மாவைக் காக்க வேண்டும்."

செந்தாமரை விக்கிவிக்கி அழுதாள். விக்கியண்ணனின் முகத்தில் வேதனை குடிகொண்டது. அவன் கண்கள் கலங்கின.

"தேவி, நீங்கள் தஞ்சை செல்லுங்கள். உங்களைக் காத்து என்னிடம் சேர்த்த வண்டார்குழலியைக் காப்பது என்கடமை. அதுமட்டுமன்று. அவள் என்னை உண்மையாகவே விரும்புவள். அவளொரு குழந்தை. அனிச்ச மலரென அமைந்த கண்கள் அவள் கண்கள். நான் உங்களிடம் கொண்ட உறவைக்கூட குறைகூறக் கூடும்; ஆனால், அவள் என்னிடத்துக்கொண்ட அன்பை யாராலும் குறைத்து மதிப்பிடக்கூடாது. ஒருத்திக்கு ஒருவன்; ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயரிய உறுதியான எண்ணங்கொண்டவள் குழலி. ஆனால், என்னைக் கண்டபோதோ, எல்லாம் மறந்தாள்; என்னிடம் தன்னை முழுமையாக இழந்தாள். அப்படிப்பட்ட அன்பின் திருவுருவை நான் காப்பாற்றத்தவறின் அப்பழி நம்மிருவரையும் ஆண்டாண்டுகளாய்த் தொடர்ந்தே வரும். நீங்கள் நேரே செல்லுங்கள். செந்தாமரை, நீ வழிகாட்டி முன்னே செல்."

விக்கியண்ணன் விரைந்து குதிரை மீது தாவினான். கடம்பமாதேவி அவனையே கண்ணசைவின்றிக் கண்டாள். அவன்தான் எத்துணைத் திறமை உடையவன்!

"தனியாகச் செல்கிறீர்களே?"

"அச்சம் சிறிதும் வேண்டா. அரண்மனையில் உங்களைக் காலையில் சந்திப்பேன்."

செந்தாமரை பின்தொடர, விக்கியண்ணன் விரைந்தான்.

என்ன விரைந்து என்ன பயன்? அவன் விரைவு போதுமானதாக இருக்கவில்லை. பணிப்பெண் வழிகாட்ட வல்லத்தின் பொது விடத்தை விக்கியண்ணன் நெருங்கியபோது நெருப்பு கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. அவன் அஞ்சி நடுங்கியது அரங்கேறிவிட்டது. இனி அவளை யாராலும் காப்பாற்ற இயலாது. சுற்றிலும் தீ எரிய நடுவே நாயகமாய்க் கம்பத்தோடு கட்டப் பட்டிருந்த அவளைத் தீயின் நாக்குகள் இன்னும் தீண்டக்காணோம். ஆனால், அவள்பால் எந்தவித சிறு அசைவையும் அவனால் காணக்கூடவில்லை.

"குழலீ..."

விக்கியண்ணன் குரல் ஒலி கேட்டுக் கூட்டத்தில் சலசலப் பேற்பட்டது. அனைவர் கவனமும் அவன் பக்கம் திரும்பின. இருந்தோரை விலக்கிக் கொண்டு நெருப்பை நோக்கி ஓடினான் அவன். சுற்றிக் காவலிருக்கும் வீரர்கள் தன்னைத் தடுத்துத் தாக்கக்கூடுமே என்ற நினைப்பும் அப்போது அவனிடம் இல்லை.

காவலிருந்த வீரர்கள் விக்கியண்ணனின் நோக்கத்தை உணர்ந்து அவனுக்காக நெருங்க அசைந்தனர். அவர்கள் செயலை அருகே நின்றிருந்த முத்தரையனின் கையசைவு தடுத்து நிறுத்தியதை விக்கியண்ணன் காணவில்லை. அதுமட்டுமா? 'குழலி' என்ற அவன் குரலொலி கேட்டு, அதன்பயனாய் முத்தரையன் முகத்தில் குழப்பம் படர்ந்ததையும் முன்னர் அவன் கவனிக்கவில்லை. அவன் கவனம் அனைத்தும் எரிகின்ற

நெருப்பினைக் கலைந்து ஒதுக்கிக் கம்பத்தோடு கம்பமாய்ப் பிணைக்கப்பட்டுப் பிணம்போல் நின்றிருந்த வண்டார்குழலியை விடுவித்துப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்வதிலேயே பொருந்தி இருந்தது.

வண்டார்குழலியை மார்போடு அணைத்துச் சுமந்து விக்கியண்ணன் வெளியே வந்து சேர்ந்தான். அவன் அணைப்பிலிருந்த அவளுடலினின்றும் எந்த ஒரு சின்ன அசைவும் இருக்கவில்லை. இறந்துவிட்டாளா அவள்? அவன் மனம் அழுதது. மெதுவாகத் தரையில் கிடத்தினான்.

"குழலி!"

விடையில்லை. அவள் முகத்தைத் தடவிவிட்டான் விக்கியண்ணன். அப்போது யாரோ தண்ணீர்க் கலனை அவனிடம் நீட்டினர். தண்ணீர் முகத்தில் தெளிக்கப்பட்ட பின்னரும் அவளிடம் எந்த அசைவும் இருக்கவில்லை.

"குழலி! கண்ணைத் திறந்துபார்; என்னைப் பார்."

அவள் இமைகள் மெல்லத் துடித்தன.

"குழலி, என்னன்பே! கண்களைத் திறந்து என்னைப் பார்."

அவளுடல் மெல்ல அசைந்தது. கண்களைத் திறக்க அவள் முயல்வது வேதனையாய் முகத்தில் தெரிந்தது.

சுற்றிநின்றவர்கள் மெல்ல விலகி நன்கு இடம்விட்டதை விக்கியண்ணன் கண்டான். அதன் காரணம் என்னவென்று எண்ணிப்பார்க்கும் நிலையில் அவனில்லை. அவன் கவனம் முழுதும் வண்டார்குழலியின் வாடிய முகத்திலேயே நிலைத்திருந்தது.

"வண்டார்குழலி!"

புதியவனின் குரல்கேட்டுப் பார்வையைத் திருப்பினான் விக்கியண்ணன். வண்டார்குழலியைப் பெயர்சொல்லி அழைக்கும் மலையொத்த மனிதன் யாராக இருக்கக்கூடும்? விக்கியண்ணன் வியந்தான்.

"ஐயா, யார் நீங்கள்?"

"முத்தரையன்."

விக்கியண்ணன் மீசை துடித்தது; கண்கள் சிவந்தன. அவனின் ஒருகை முத்தரையனின் மேலாடையைப் பற்றியது; மறுகை தன் இடையிருந்த குறுவாளைப் பற்றியது.

"நீயும் ஒரு மன்னனா? உன்னை என் செய்கிறேன்? பார்."

வாளை உயர்த்த முயன்ற அவன் கையை வளைக்கையொன்று தடுக்கவே விக்கியண்ணன் திரும்பி நோக்கினான். வண்டார்குழலியின் கண்கள் அவன் கண்களில் கலந்தன.

"குழலி!"

அவள் தலை மெல்ல அசைந்தது.

"விடு என் கையை! உன்னை இந்த நிலைக்கு உள்ளாக்கியவனை இங்கேயே உன்னெதிரில் கொன்றாலே என் சினம் அகலும்."

வண்டார்குழலியின் தலை வேண்டாவென்ற குறிப்போடு அசைந்தது.

"ஏன்? ஏன் என்னைத் தடுக்கிறாய்?"

வண்டார்குழலியின் இதழ்கள் துடித்தன. அவனிடம் பேச அவள் கொண்ட முயற்சி அவள் கண்களில் வேதனையாய்த் தெரிந்தது.

"நான்...நான் அவர் மகள்."

"என்ன?"

அவள் ஆம் என்று தலையசைத்தாள். அதை உறுதிசெய்வதாய் முத்தரையனின் பேச்சு தொடர்ந்தது.

"ஆமாம். அவள் என் மகள்தான். விக்கியண்ணரே, உங்களைப் பற்றி நான் அனைத்தும் அறிவேன். இந்தக் கொடுமையைத் தடுக்க இயலாத கோழையாக இருந்துவிட்டது என் குற்றமே. என் தவறினால் இன்று என்மகளே இரையாகிவிட்டாள். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது உண்மையே."

"அன்பரே."

விக்கியண்ணன் வண்டார்குழலியைத் தூக்கித் தன் மார்புமேல் சாய்த்துக் கொண்டான்; அவள் தலையை அன்போடு வருடிக் கொடுத்தான்.

"சொல், குழலி."

"சோழரின் பெரும்படை இந்நேரம் புறப்பட்டிருக்கக்கூடும். இந்த நாட்டையும் என் தந்தையையும் நீங்கள்தான் அழிவினின்றும் காக்க வேண்டும்."

"அஞ்சாதே. படையைச் சோழமன்னர் கட்டாயம் அனுப்ப மாட்டார். படை எடுப்பதின்றும் ஆதித்தனுக்குச் சோழமன்னர் விசயாலயர் தடைவிதித்ததை நேரில் நானே அருகிருந்து கேட்டேன். எனவே, உனக்கு அச்சம் தேவை இல்லை."

"விசயாலய சோழரை நீங்கள் நன்கு அறியவில்லை. படைகள் கண்டிப்பாய்ப் புறப்பட்டிருக்கும். நான் வேண்டியதை நீங்கள் எனக்காக நிச்சயம் செய்ய..."

வண்டார்குழலியின் பேச்சு மெல்லத் தேய்ந்து இடையிலேயே நின்றது. அவள் முகம் அவன் மார்பிலே அடைக்கலம் கொண்டது.

விக்கியண்ணனின் விழிகள் கண்ணீரைக் கொட்டின. வாழ்நாளில் முதன்முதலாக அன்றே கண்ணீர்விட்டு அமைதியாக அவனழுதான். அவன் கண்களினின்றும் வடிந்த கண்ணீர் வண்டார்குழலியின் தளிர்முகத்தை நனைத்தது. பார்வையைத் திருப்பினான் விக்கியண்ணன்.

குன்றொன்று குலுங்கிக்குலுங்கி அசைவதுபோல் மலையொத்த முத்தரையன் மகளின் பிரிவால் மனங்குலைந்து அழுதுகொண்டிருந்தான்.

## 32. செம்பியன் தமிழவேள்

*"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்*
*யாண்டுள னோவென வினவுதி, என்மகன்*
*யாண்டுள னாயினும் அறியேன்; ஒரும்*
*புலிசேர்ந்து போகிய கல்லளை போல*
*ஈன்ற வயிறோ இதுவே*
*தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே."*

என்றுமில்லாத விழாக்கோலத்துடன் சேரநாடு எழிலோடு விளங்கியது. சேரநாட்டின் மேற்குக்கரை ஓரத்தில் அமைந்திருந்த அந்தச் சிற்றூர் மற்ற அனைத்து ஊர்களினும் மேலான எழிலோடு அன்று பொலிந்தது.

மக்கள் கூட்டங்கூட்டமாகச் சென்றுகொண்டும் வந்து கொண்டும் இருந்த வண்ணமாக இருந்தனர். மகிழ்ச்சியின் விளைவால் அவர்களின் முகங்கள் மலர்ந்து ஒளிவிட்டன. மகிழ்ச்சியின் பெருக்கோடு மதுவின் மயக்கமும் ஒருசில இளைஞர் களை ஆட்கொள்ள, அவர்கள் தங்களை மறந்தவர்களாய்த் தட்டுத் தடுமாறித் தளர்நடை பழகிச் சென்றனர். இத்தனைக்கும் காரணம் ஏதேனும் இருக்கக்கூடுமன்றோ?

அதோ! அங்கே என்ன ஆரவாரம்?

இப்போது எல்லாம் புரிகிறது. இளமை நலம் வாய்ந்த எழில்ரசிகள் எழுவர் இணைந்து நடத்தும் குரவைக் கூத்தைக் காணத்தான் இத்தனை கூட்டமா? இருக்க முடியாது. இதற்கு முன்னரும் இந்த எழிலரசிகள் எத்தனையோ முறைகள் குரவைக் கூத்தை நடத்தியிருக்கின்றனரே; அப்போதெல்லாம் கூடாத இம்மாபெரும் மக்கள்வெள்ளம் இம்முறைமட்டும் திரள்வானேன்?

கோடைக் குளிர்நிலவு. அந்தக் குளிர்நிலவின் ஒளியிலே தண்மையைத் தாங்கிவரும் தென்றலின் திறமைக்குத்தான் எத்தகைய வரவேற்பு! பால்போன்ற நிலவின் ஒளி; அந்த நிலவின் ஒளிக்கற்றையைத் தவிர உடையாக வேறெதையும் உடுக்காத இளங்காதல் மனைவியரைக் காணக்காணக் களிப்பால், கொண்டோர் உணர்வேயன்றி உடலெல்லாம் எழும் ஓர்எழுச்சி! அவ்வெழுச்சிப் பெருக்கால் தங்கொழுநர் நெகிழ்ந்துரைக்கும் காதற்பேச்சால் காரிகையர் உள்ளங்களிலெல்லாம் மகிழ்ச்சி! அந்த எழுச்சிக்கும் அதனால் விளைந்த மகிழ்ச்சிக்கும் காரணம்தான் எத்துணைப் புதுமையானது.

காதலும் வீரமும் தமிழர்தம் வாழ்வில் இரு கண்கள். வாளேந்திப் பகை முடிக்கத் தெரியுமே அன்றி வஞ்சகதைக் கருவியாகப் பயன்படுத்த அறியாதவர்கள் அவர்கள். அந்தத் தமிழ் வீரர் நெஞ்சங்கள் அன்று மகிழ்ச்சியால் மலர்ந்தன; தம் காதல் துணைவியருடன் அம்மகிழ்ச்சியைக் கலந்தளித்து மலர்ந்தன.

அவர்களின் மகிழ்ச்சிக்குக் காரணம் என்ன? அவர்களை ஒத்த வீரன் ஒருவனின் ஆற்றல்தான்!

ஆமாம்; அவனென்ன எல்லோரையும் போலவா? அவன் வாளெடுத்தால் இந்த வையகமே நடுங்காதா? தனியொருவனாக ஒரு பேரரசை நிறுவும் வல்லமை அவனுக்கன்றி வேறு யாருக்குண்டு? தாழ்ந்து இதுநாள் தலைவணங்கிச் சிற்றரசென விளங்கிய சோழவரசை, இன்றுப்பேரரசாக மாற்றிப் பெருமை பெறச் செய்த செய்கை, அவனொருவனின் அறிவின் திறத்தாலன்றோ! அப்படிப்பட்ட ஆற்றல்வாய்ந்தவன் அந்த ஊரைச் சேர்ந்தவன் என்றால் அவர்கள் அனைவருக்கும் பெருமை அன்றோ!

சேர நாடு தந்த செம்மல்! வீரத்தின் விளைநிலம்! காதற்சுவை பொங்கக் கவிபாடும் கவிவாணன்! பெண்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு அவர்களைப் பித்தாகச் செய்யும் பேரழகன்! ஆம்; அவன்தான் விக்கியண்ணன்!

விக்கியண்ணன்! அவன் காணாத களங்களே இல்லை எனலாம். சேரநாட்டுப் படைக்கு அவன்தான் உயிர்மூச்சு. அவன் புறமுதுகிடும் ஒரே களம் பெண்கள் அமைக்கின்ற காதற்களம் மட்டுமே! அங்கும் இறுதியில் அவனுக்கே வெற்றி!

சில திங்கள்களுக்குள் இத்துணைச் சிறப்பை அவன் பெறக்கூடும் என்று எண்ணியவர் யார்? பாண்டியர் படைதாம் எத்துணை வலிமை வாய்ந்தது? அந்தப்படையைத் தன் அறிவாற்றலால் வெற்றிகொண்டவன் விக்கியண்ணன் அன்றோ! நடக்க முடியாது என்று எல்லோராலும் ஒருமுகமாய் நம்பியதை நடத்திக்காட்டியவன் விக்கியண்ணன்! பாண்டியரை மட்டுமா அவன் வெற்றி கொண்டான்? பல்லவர்தம் படைதிறத்தையுமன்றோ தன்னறிவாற்றலால் பெருமளவுகுறைய வழிவகுத்து அரசியல் சூழ்ச்சியிலேயும் வெற்றிகொண்டுவிட்டான்!

அவன் வாளெடுத்தால் அஞ்சுவதும் துஞ்சுவதும் அவனோடு முரணியரே! அவன் வாய்திறந்தால் உதிர்வன கவிதைகள்; அத்தனையும் தேன்சிந்தும் காதல் மலர்கள்!

கைமாறு வேண்டாக் கடப்பாட்டினோடுதான் விக்கியண்ணன் தன்னறிவையும் வீரத்தையும் ஒருங்கிணைத்துச் சோழநாட்டிற்குப் பயன்படுத்தினான். ஆனால், அதற்காகச் சோழமன்னர் அரசசிங்கம் ஆதித்த சோழர் செய்ந்நன்றியை மறந்தவர் இல்லை. தன்நன்றியை வெளிப்படுத்த ஆதித்த சோழர் கடைபிடித்த வழிகள்தாம் அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தின.

"செம்பியன் தமிழவேள்!"

யாருக்குப் பெறக்கிடைக்கும் இந்தப் பெரும்பேறு! சேரமன்னர் சேரமான் தாணுரவியும் அரசசிங்கம் ஆதித்த சோழரும் ஒருங்கிருந்து

அளித்த இந்தச் சிறப்பினும் ஒருவீரன் வாழ்வில் வேண்டியது வேறென்ன இருக்கமுடியும்? செம்பியன் தமிழவேள்!

அம்மட்டோ! அப்பப்பா! எத்தனை வகையான சிறப்புகள் விக்கியண்ணனுக்கு வழங்கப்பட்டன! தவிசும் சிவிகையும் திமிசும் கோயிலும் இறையிலி நிலமும் எக்காளமும் களிற்று நிரையும் எல்லையின்றி அளித்துக் களித்துச் சிறப்பித்தனரே, அது வேறு யாருக்கும் கிட்டாத பேறுதான்!

அதைத்தான் சேரநாட்டு மக்கள் விழாவாகச் சிறப்பாக அன்று கொண்டாடிக் கொண்டிருந்தனர். செம்பியன் தமிழவேளின் வீரவாழ்வே அன்றைய குரவைக் கூத்தின் கருப்பொருளாய் அமைந்தது. பிறகு கேட்கவேண்டுமா மக்கள் கூட்டத்தின் எழுச்சிக்கு!

ஊரே அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் ஓர்உயிர் மட்டும் எதையும் உணராமல் தனித்து அமர்ந்திருந்தது.

குழிவிழுந்த கண்கள்; ஒட்டி உலர்ந்த கன்னங்கள்; ஒளியிழந்து மங்கிய எஞ்சிய ஒன்றிரண்டு காவிப்பற்கள்; கருமையின் சாயலைக் காணாத வெண்கூந்தல்; வில்போல் வளைந்த உடம்பு; எலும்பன்றித் தசையறியாக் குச்சியுடல்; இன்றோ நாளையோ என்று நாளை எண்ணிக் கொண்டிருக்கும் வயது! இத்தனைக்கும் சொந்தக்காரிதான் இன்று எல்லோரும் போற்றும் ஒப்பற்ற வீரன் விக்கியண்ணனை ஈன்றெடுத்த தாய்!

பார்வை பழுதடைந்த நிலையிலும் அந்தத் தாயின் செவியுணர்வு பாதிக்கப் படவில்லை போலும். ஒலிகேட்டுத் தலையைத் திருப்பினாள். அங்கேயார்? அவளுக்குச் சரியாகப் புலப்படவில்லை. தூணைப் பிடித்துக் கொண்டு நிற்கும் அவள் யாராக இருக்கக்கூடும்?

"யார் அங்கே நிற்பது?"

"தெரியவில்லையா, பாட்டி? நான்தான்."

"வாடி, வாயாடிப் பெண்ணே; வல்லாளன் மகளே!"

"பார்த்தாயாடி கவிஞரின் தாயை?"

"யாரடி உடன் வந்திருப்பவர்?"

"அவள்தான்! உன் மருமகள் அறிவுக்கரசி!"

"அறிவுக்கரசியா? அவள் மட்டுந்தானா எனக்கு மருமகள்? எனக்குத்தான் எத்தனை மருமகள்கள்! வாருங்கள் பெண்களே. எங்கே இத்தனை காலமாக உங்களை இந்தப்பக்கம் காணோம்? அவனிருந்தவரை இந்தக் கிழவியை உங்களுக்கு நினைவிருந்தது; அடிக்கடி வந்து சென்றீர்கள். ஆமாம்; அவன்தான் இங்கில்லையே, எதற்குப்பின் நீங்கள் இங்கு வந்தீர்கள்?"

"போ, அத்தை! நீ பொல்லாதவள்!"

"ஆமாம்; நான் பொல்லாதவள்; ஆனால், என்மகனோ உங்கள் எல்லோருக்கும் பொருத்தமானவன்! கிடக்கட்டும்; இங்கே இந்த நேரத்தில் எங்கே வந்தீர்கள்?"

"ஒன்றுமில்லை, பாட்டி. உன்பிள்ளை இப்போது எங்கே இருக்கிறார்? தெரியுமா?"

"அத்தைக்கு எப்படியடி தெரியும்? அவர் எந்த ஊரில் எவள் மார்பில் விழுந்து கிடக்கிறாரோ?"

அந்தத் தாயின் கண்கள் குளமாயின. அவள் பேசியபோது உடலில் இல்லாத உறுதி பேச்சில் தெரிந்தது.

"இருக்கட்டுமே! அதனால் என்ன? அவன் குணம் அப்படி. அவன் எங்கே இருக்கிறான்? எப்படி இருக்கிறான்? எதையும் நான் அறியேன்; உண்மைதான். அவன் எங்கே எப்படி இருப்பினும் இருந்துவிட்டுப் போகட்டும். அடி, பெண்களே! இதோ, ஒட்டிப்போய் உணர்வற்றுக் கிடக்கிறதே இந்த வயிறு; இது எளிய இடமில்லை. புலி இருந்து போகிய கற்குகை! இந்த வயிற்றிடத்துப்

பிறந்தவன் நீங்கள் நினைப்பதைப்போல் எளிமையானவன் இல்லை. அவனை நீங்கள் எளிதில் கண்டுபிடிக்க வேண்டுமா? எங்கேனும் போர் நடைபெறுகிறதா; அங்கே செல்லுங்கள். பகைவர்கள் இடையே பகலவன் ஒப்பத் தனியொருவனாய்ச் சிரித்த முகத்தோடு வாளேந்தி நின்றிருப்பான் என் மகன்!"

பெருமை அந்தத் தாயின் குழிவிழுந்த கண்களினின்றும் ஒளிர்ந்தது. வில்போல் வளைந்திருந்த அவளுடல் அவள் மனங் கொண்ட உணர்ச்சியின் எழுச்சியால் சிறிது நிமிர்ந்தது.

"அத்தை, அவரைப்பற்றி நீ எதுவுமே அறியாயா?"

"ஏன்டி அறிவுக்கரசி? உனக்குத் தெரியாதா? என்றேனும் என்னிடம் எதையும் சொல்பவனா என் மகன்?"

"நீ பொய் சொல்கிறாய் பாட்டி."

"வாயாடிப் பெண்ணே, வாயை மூடடி. அவரேனும் எப்போதாவது சொல்லிவிட்டுச் செல்வதுண்டு; இந்தப்பிள்ளை என்னை என்னவென்றும் கேட்பதில்லை."

அவள் குரலில் தன்மகன்மேல் இருந்த ஆற்றாமை நன்கு வெளிப்பட்டது.

"அவரைப்பற்றி அறிந்துகொள்ள ஆசையா, அத்தை?"

"இருக்காதா, பெண்ணே? ஈன்ற வயிரடி இது."

"அப்படியாயின் சற்று வெளியே வந்து திண்ணையில் அமர்; அவரைப்பற்றிய அனைத்தையும் நீ அறிந்து கொள்ளலாம்."

ஆசையால் ஆர்த்தெழுந்த நெஞ்சிற்கு அணைப்போட ஆற்றலற்றவளாய் விரைவாக எழுந்த அம்முதிய தாயை விழாமல் அருகிருந்த இருபெண்களும் ஆதரவாய்த் தாங்கி வெளியே அழைத்துச் சென்றனர்; திண்ணைத் தூணோரம் அமரவைத்தனர்.

வானத்து வெண்ணிலவு வையகம் முழுதும் ஒளியால் நிறைத்திருந்தது. வெண்ணிலவின் இனிய தண்ணொளியால் வீதிகளெல்லாம் தனியழகைப் பெற்றன. தவழ்ந்து நடந்துவந்த தென்றல் காற்று எங்கிருந்தோ மகிழம்பூ மணத்தைத் தாங்கிவந்து இன்பத்தைத் தந்தது. அருகிருந்த மரத்திலுறைந்த கிள்ளைகளில் ஒன்று அந்த நேரத்தில் குரலெழுப்பி அமைதிக்கு மேலும் அழகைச் சேர்த்தது.

விக்கியண்ணனின் தாய் விளக்கமுடியா இன்ப எதிர்பார்ப்புகளோடு அந்த இரு பெண்களுடன் திண்ணையில் அமர்ந்திருந்தாள். அடங்கி ஒடுங்கிப்போன அவள் நெஞ்சம் இயங்கிக்கொண்டிருந்தது.

தொலைவில் ஒரே ஆரவாரம்! குரவைக்கூத்து முடிந்ததன் விளைவு அது.

"என்னடி அந்த அதிர்ஓசை?"

"பிறகு சொல்கிறேன். கொஞ்சம் பொறு, பாட்டி; நீயே பின்னர்த் தெரிந்துகொள்வாய்."

கூட்டங்கூட்டமாக மக்கள்வெள்ளம் தங்கள் இல்லம் நோக்கித் திரும்பிக்கொண்டிருந்தது.

"பாட்டி, கொஞ்சம் கூர்ந்து அவர்கள் பேசிக்கொண்டு போவதைக் கேள்."

விக்கியண்ணனின் தாய் கொஞ்சம் முன்னுக்கசைந்து அமர்ந்தாள். அவளின் செவிப்புலன் கூர்மையடைந்தது. வீதியில் சென்றோர்க்குத் திண்ணையில் இருளில் வீற்றிருந்தவர்கள் தெரியவில்லை. அவர்கள் பேசிக்கொண்டே சென்றனர்.

"இதுதான் விக்கியண்ணனின் வீடு."

"ஓகோ!"

காலடியோசையோடு அவர்கள்பேச்சும் கடந்து சென்று தேய்ந்தது. சில வினாடிகள் கழிந்தன. மீண்டும் ஆட்கள் நடந்துவரும் ஒலி. குடிமயக்கத்தில் குழறியபடி வந்தனர் சிலர்.

"சும்மா சொல்லக்கூடாது. வீரன் பெண்பித்தனாயினும் விக்கியண்ணனின் வீரமே வீரம்!"

"அதிலென்ன ஐயம்? இல்லையெனில் நம்மரசருக்கு அவரிடம் அத்துணை ஈடுபாடு இருக்கக்கூடுமா?"

பலகுரல்கள் ஒரே நேரத்தில் சேர்ந்து ஒலித்தன.

"என்ன இருப்பினும் சோழமன்னர் செய்ந்நன்றி மறவாதவர்."

"எப்படிச் சொல்கிறாய்?"

"தவிசும், சிவிகையும் ஊரும் கோயிலும் இறையிலி நிலமும் வழங்கிப் பெருமைப் படுத்தினாரே, அவை போதாவா?"

"நீ ஒருவன்! அதெல்லாம் விக்கியண்ணனுக்கு ஒரு பொருட்டா? ஆனால், 'செம்பியன் தமிழவேள்' என்ற சிறப்புப் பெயரை வழங்கிச் சிறப்புச்செய்தனரே, அதைவிடப் பெருஞ் சிறப்பாக வேறெதைச் சொல்லமுடியும்!"

விக்கியண்ணனின் தாய் அசையவில்லை; மெய்மறந்து அமர்ந்திருந்தாள்.

"முடியும்!"

"முடியுமா?"

"ஆமாம்; ஆனால் அந்தச் சிறப்பைச் செய்தவர் சோழமன்னரின் அன்புத் தமக்கையார் கடம்பமாதேவியார். அவர் தன்னையே விக்கியண்ணனிடம் ஒப்படைத்துவிட்டாராம்."

"நீ மதுவின் மயக்கத்தில் உளறுகிறாய். எழுந்திரு; செல்வோம்."

"நம்புவது கடினம்தான். திருமணத்தை இதுவரை வெறுத்து வந்த இளவரசியார் ஓர் எளிய வீரனை ஏற்றுக்கொண்டுள்ளார் என்பதை நம்புவது கடினம்தான். ஆனால், உண்மை அதுதான்!"

"கொடுத்துவைத்தவன் விக்கியண்ணன்! நட்புரிமை கொண்ட சேரமன்னரையும் ஏனென்று ஏறெடுத்துப்பார்க்காத இளவரசியை அடைவதினும் விக்கியண்ணனுக்கு வேறென்ன மகிழ்ச்சி இருக்கக்கூடும்!"

அமைதி. ஆட்கள் நடமாட்டம் கொஞ்சங்கொஞ்சமாகக் குறைந்து கொண்டிருந்தது.

"தோன்றிற் புகழொடு தோன்றுக என்பதற்கேற்பப் புகழோடு தோன்றியவன் விக்கியண்ணன்!"

"முற்றும் உண்மை. அவனைப் பெற அவனின் அன்னை பெருந்தவஞ் செய்திருக்க வேண்டும்."

எங்கும் அமைதி. மக்கள் நடமாட்டம் முற்றும் நீங்கி விட்டிருந்தது. விக்கியண்ணனின்தாய் இருந்த இடத்திலேயே அடித்துவைத்த கற்சிலைபோல அப்படியே சூழ்நிலைமறந்து அமர்ந்திருந்தாள். மகிழ்ச்சியின் உள்பெருக்கால் கண்கள் கண்ணீரைக் கொட்டின. அருகிருந்த பெண்களின் நினைவுகூட அந்தத் தாய்க்கு இருக்கவில்லை.

"பாட்டி?"

பதிலில்லை.

"அத்தை?"

உரக்க அழைத்தாள் அறிவுக்கரசி.

"உம்."

மெல்லவே பதில் வந்தது.

"நாங்கள் போய் வருகிறோம். நீ சென்று உள்ளே படு. என்ன?"

"உம்."

விடை அவ்வளவே.

தனியளாய்த் தொடர்ந்து அந்தத் திண்ணையிலேயே அமர்ந்திருந்தாள் அந்தத் தாய். நேரம் கடந்து கொண்டிருந்தது. அஃது அவள் நினைவிற்கு வரவில்லை. சில்லென்ற வாடைக்காற்று சீறி எழத்தொடங்கியது. அவள் அதைப் பொருட்படுத்தவில்லை. அவள் அப்படியே தொடர்ந்து அமர்ந்திருந்தாள்.

நாழிகை வேகமாய் நகர்ந்து நடுஇரவையும் கடந்து வெகுநேரமாகிவிட்டிருந்தது. எல்லா ஒலியும் அடங்கிவிட்டது. வாடைக் காற்றில் இலைகள் மட்டுமே மெல்ல அசைந்தன. இலைகள் அசையினும் எந்த ஒலியும் அங்கு எழவில்லை. அப்போதும் அவள் அங்கேயே அமர்ந்திருந்தாள்.

அசையாது அமர்ந்திருந்தாலும் அவளின் செவிகள் தங்கள் கடமையைச் செய்யக் கருத்தாய்க் காத்திருந்தன. அவளுடைய பழுதுடைய கண்கள் அடிக்கடி பாதையின் இருபக்கங்களிலும் மாறிமாறித் திரும்பி நோக்கின. அந்தக் கண்களின் செயல்களில் அவளுடைய அகத்தின் ஏக்கம் எதிரொலித்தது.

ஆம்; இனியும் யாரேனும் அந்தப் பக்கம் வரமாட்டார்களா? அவளின் மகன் விக்கியண்ணனின் வீரதீரச்செயல்களை வியந்து பேசமாட்டார்களா? அவற்றைக் கேட்டு அகமிக மகிழமாட்டோமா? என்ற ஏக்கத்தோடு வீரனைப் பெற்ற அந்தத் தாய் அமைதியோடு காத்திருந்தாள். அஃது இயல்புதான்! அவள் ஓர் உண்மை வீரனை உலகிற்குப் புறந்தந்த புறநானூற்றுக்காலத் தமிழத் தாயன்றோ!

*"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தம்மகனைச்*
*சான்றோன் எனக்கேட்ட தாய்."*

# புதினத்திற்கு வலுவூட்டும் வரலாற்று உண்மைகள்

**விசயலாய சோழன்:**

தஞ்சை மாநகரைக் கைப்பற்றி அதனைத் தலைநகராக வைத்துக் கொண்டான்.

(திருவாலங்காட்டுச் செப்பேடுகள், தெ.இ.க.தொ:III; எண்:205)

கடைச்சங்க காலத்திற் புகழுடன் விளங்கிய பெருநற்கிள்ளி, கரிகாலன், செங்கணான், நல்லடி என்ற சோழ மன்னர்களின் வழியில் தோன்றியவன்

(அன்பிற் செப்பேடுகள் - ஆனைமங்களச் செப்பேடுகள் - திருவாலங்காட்டுச் செப்பேடுகள் - கன்னியாகுமரிக் கல்வெட்டுகள்)

சற்றேறக்குறைய 35 ஆண்டுகள் அரசாண்ட இவன் தன் வாழ்நாள் முழுதும் பகைவர்களோடு போர்க்களங்களிலேயே கழித்துள்ளான்.

*"...................................................... மீதெல்லாம்*
*எண்கொண்ட தொண்ணூற்றின் மேலும் இருமூன்று*
*புண்கொண்ட வென்றிப் புரவலனும்...................."*

*(விக்கிரமசோழனுலா)*

**ஆதித்த சோழன்:**

விசயாலயன் இறப்பதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்னரே தன்மகன் ஆதித்தனுக்கு இளவரசுப்பட்டங்கட்டி அரசியலில் ஈடுபடும்படி செய்திருந்தான்.

(இந்தியக் கல்வெட்டாய்வறிக்கை XXVI பக் : 233)

**பராந்தகப்பாண்டியன்:**

சீமாறன் சீவல்லபனுடைய இரண்டாம் மகன். இவனுடைய தாய் மயிலை பொத்தப்பிச்சோழனின் மகள் அக்களநிம்மடி.

*"................................................ மயிலையர்கோன்*
*பொத்தப்பிக் குலச்சோழன் புகழ்தருசீர் கண்டராசன்*
*மத்தமா மலைவளவன் மதிமகள்அக் களநிம்மடி*
*திருவயிறு கருவுயிர்த்த ஸ்ரீபராந்தக மகராசன்"*

*(பராந்தகப் பாண்டியன் செப்பேடுகள்)*

**திருப்புறம்பியப் போர்:**

சோழமண்டலத்தில் பாண்டியர் ஆட்சியும் பல்லவர் ஆட்சியும் ஒருங்கே ஒழிவதற்கும் சோழரின் ஆட்சி மீண்டும் நிலைபெறு வதற்கும் காரணமாயிருந்த திருப்புறம்பியப்போர் தமிழக வரலாற்றில் குறித்தற்குரிய பெரிய நிகழ்ச்சியாகும்.

இப்போரில் இறந்த பிருதிவிபதியின் நடுகற்கோயில் ஒன்றும், உதிரப்பட்டி என்னும் பெயருடைய நிலப்பரப்பும், கச்சியாண்டன் கோயில் என்ற நடுகற்கோயிலும் திருப்புறம்பியத்தில் இன்றும் உள்ளன.

(''பாண்டியர் வரலாறு'' - சதாசிவப் பண்டாரத்தார்)

கும்பகோணத்திற்கு வடமேற்கே ஐந்து மைல் தூரத்தில் மண்ணியாற்றின் வடகரையிலுள்ள திருப்புறம்பியத்தில் பெரும் போர் நிகழ்ந்தது.

(தெ.இ.க.தொ: II. எண்: 76)

இருபக்கமும் பல்லாயிரவர் உயிர்துறந்தனர். முதலாம் பிருதிவிபதி வீரப்போர்புரிந்து இறந்தான். பாண்டியர் தோற்றனர். அபராசிதன் வென்றான்.

(தெ.இ.க.தொ:II பக்கம்: 387)

**கடம்பமாதேவி:**

விக்கியண்ணனின் தேவி.

(தெ.இ.க.தொ:III எண்: 89)

தந்திவர்மன் 'கதம்பர் மரபுக்கே சிரோமணியாக விளங்கிய அரசனின் மகளான அக்கள நிம்மதி என்பவளை மணந்து கொண்டான்' என்று பட்டயங்கள் பகர்கின்றன.

(பல்லவர் வரலாறு - மா. இராசமாணிக்கம் பிள்ளை)

**பராந்தகப் பள்ளிவேளான் நக்கம்புள்ளன்:**

வரகுண வர்மன் இடவைமீது படையெடுத்துச் சென்றபோது படைத்தலைவனாய் இருந்து போரில் வெற்றி கண்டவன்.

(கல்வெட்டு எண்: 609/1905)

**இடவை:**

வரகுணவர்மன் பெரும்படையுடன் சோணாட்டிற் புகுந்து காவிரி ஆற்றுக்கு வடக்கேயுள்ள மண்ணி நாட்டிலிருந்த இடவை என்ற நகரைக் கைப்பற்றினான்.

(கல்வெட்டு எண்: 690/1905)

**பிருதிவிபதி:**

மண்ணியாற்றங்கரையிலுள்ள திருப்புறம்பியத்தில் பெரும் போர் நடைபெற்றது. பல்லவ அரசனுக்கு உதவியாகப் படையுடன் வந்து போர்புரிந்த கங்க மன்னனாகிய பிருதிவிபதி என்பான் இப்போரில் கொல்லப்பட்டான்.

(தெ.இ.க.தொ: II, எண்:76, பாடல்:18)

**குடமூக்குப் போர்:**

(கும்பகோணம் எனும்) குடமூக்கில் நடைபெற்ற போரில் பாண்டியன் சீமாறன் சீவல்லபன் பரசக்கர கோலாகலன் என்பான் சோழர், பல்லவர், கங்கர் முதலானவரைப் போரில் வென்று புறங் காட்டி ஓடச் செய்தான்.

*"கொங்கலரும் பொழிற் குடமூக்கிற் போர்குறித்து*
*வந்தெதிர்த்த கங்கபல்லவ சோழகாலிங்க மாகதாதிகள்*
*குருதிப்பெரும் புனற்குளிப்பக் கூர்வெங்கணை*
*தொடைநெகிழ்த்தும்*
*பருதியாற்றலொடு விளங்கின பரசக்கர கோலாகலனும்..."*

*(சின்னமனூர்ச் செப்பேடுகள் - தெ.இ.க.தொ.III எண்:206)*

**முத்தரையர்:**

தஞ்சைக்கு வடமேற்கே இந்நாளில் செந்தலை என்று வழங்கும் சந்திரலேகைச் சதுர்வேதிமங்கலத்திலிருந்து ஆண்டுவந்த குறுநில மன்னராவர். தஞ்சைக்கு அண்மையிலுள்ள வல்லமும் அவர்கட்குத் தலைநகராக இருந்திருக்கவேண்டும்.

'தஞ்சைக்கோன்', 'தஞ்சை நற்புகழாளன்' என்று கல்வெட்டு களில் குறிக்கப்படுவதால், தஞ்சையும் முத்தரையருக்குரிய தலைநகராய் இருந்திருப்பது தெரிகிறது.

பழந்தமிழ்க்குடியினரான முத்தரையர் வரையா வண்மைக்குப் பெயர் பெற்றவர்.

''பெருமுத்தரையர் பெரிதுவந்து ஈயும் கருணைச்சோறு''

(நாலடியார் - 200)

**அரிசிலாற்றங்கரைப் போர்:**

பல்லவமன்னன் நிருபதுங்கவர்மனும் இலங்கை வேந்தன் இரண்டாம் சேனனும் ஒருங்குசேர்ந்து மாறவர்மன் சீமாற சீவல்லபனைத் தோற்றோடச் செய்தனர்.

(வாகூர் செப்பேடுகள்)

**வேளிர் மகட்கொடை:**

வேளாவிக்கோமான் பதுமன் என்ற வேளிர் குடித்தலைவனின் மகளிர் இருவர் நெடுஞ்சேரலாதன், செல்வக் கடுங்கோ வாழியா தான் என்ற சேர அரசர்களுக்கு முறையே வாழ்க்கைப்பட்டனர்.

(பதிற்றுப்பத்து - பதிகங்கள், 4, 6, 8)

*''உருவப்பல்தேர் இளஞ்சேட்சென்னி அழுந்தூர்வேளிடை*
*மகட்கோடலும்*
*அவன்மகனான கரிகாற் பெருவளத்தான் நாங்கூர் வேளிடை*
*மகட்கோடலும்''*

*(நச்சினார்க்கினியர் உரை - தொல். அகத் - சூ. 30)*

**மாதேவி:**

அபராதிதனின் மனைவி, தமிழ்நாட்டுப் பெண்ணாதல் வேண்டும். இவர் திருவொற்றியூரில் உள்ள சிவன் கோவிலில் விளக்குவைக்க 31 கழஞ்சு பொன் கொடுத்தார்.

(கல்வெட்டு: 162/1912. பல்லவர் வரலாறு - மா. இராசமாணிக்கம்பிள்ளை)

**திருப்புறம்பியம்:**

கும்பகோணத்திற்கு வடமேற்கில் எட்டு கி.மீ. தூரத்தில் மண்ணியாற்றின் வடகரையில் உள்ளது.

**இடவை:**

மண்ணிநாட்டு நகரங்களுள் ஒன்று. காவிரியாற்றிற்கு வடக்கே உள்ளது.

**வல்லம்:**

தஞ்சைக்குத் தென்மேற்கே 11 கி.மீ. தொலைவில் உள்ளது.

**பழையாறை:**

சோழர்களின் தலைநகர்களில் ஒன்று. கும்பகோணத்திற்குத் தென்புறத்தில் இன்று எளிய சிற்றூராகப் பொலிவிழந்து நிற்கிறது. பழையாறை முற்காலத்தே முடிகொண்டான் ஆற்றுக்கும் அரிசிலாற்றுக்கும் இடையே அமைந்திருந்தது.

**திருவையாறு:**

தஞ்சைக்கு வடக்கே 10 கி.மீ. தொலைவில் உள்ளது. வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி, கொள்ளிடம் இவ்வூரருகே செல்கின்றன. இவ்வூர் இறைவனுக்கு ஐயாறப்பன் என்று பெயர்.

**செந்தலை:**

திருக்காட்டுப்பள்ளியிலிருந்து நேர்கிழக்கே 3 கி.மீ. தொலைவில் குடமுருட்டியாற்றின் தென்கரையில் உள்ளது.